# தன்வந்தரி வைத்தியம்

**பாகம் I**











தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்**

தஞ்சாவூர்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 332

# தன்வந்தரி வைத்தியம்

(முதல் பாகம்)

பதிப்பாசிரியர்:

**டாக்டர். S. வெங்கட்டராஜன்,** L.I.M.,

வைத்திய ஆராய்ச்சியாளர்,

சித்தவைத்திய வரலாற்று ஆராய்ச்சிக்கழகம்,

தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்,**

**தஞ்சாவூர்.**

2006 ]

[ விலை : ரூ. 100-00

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | |
|---|---|
| நூற்பெயர் | : தன்வந்தரி வைத்தியம் (முதல் பாகம்) |
| பதிப்பாசிரியர் | டாக்டர் எஸ். வெங்கட்டராஜன் |
| வெளியிடுபவர் | : இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண். | : 332 |
| மொழி | : தமிழ் |
| பதிப்பு | : மூன்றாம் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : 2006 |
| தாள் | : TNPL 18.6 கி. கி |
| நூல் அளவு | : 21 x 14 செ. மீ. |
| பக்கங்கள் | : 268 |
| படிகள் | : 500 |
| எழுத்து | : 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : ஒளி அச்சுக்கோப்பு மற்றும் ஒளி அச்சு, சரசுவதி மகால் நூலகம். |
| புத்தகக்கட்டு | : லேமினேசன் அட்டை |
| பொருள் | : மருத்துவம் |
| விலை | : ரூ.100-00 |

# வெளியீட்டாளர் முகவுரை

உலகம் முழுவதும் நோயற்ற ஒரு சமூகச்சூழல் திகழவேண்டும் என்பதற்காக நம் முன்னோர்கள் எண்ணற்ற மருத்துவ நூல்களை காலங்காலமாக நமக்கு வழங்கிச் சென்றிருக்கிறார்கள். அர்ப்பணிப்பு உணர்வோடு அவை யாக்கப்பெற்றமையால்தான் நூற்றாண்டுகள் பல கடந்தும் அவை நிலைத்திருக்கின்றன. அத்தகைய நூல்கள் வரிசையில் ஆயுர்வேத மருத்துவ அடிப்படையில் உதித்த ஒரு நூலே **தன்வந்தரி வைத்தியம்** எனும் ஏட்டுச்சுவடியாகும்.

அரிய களஞ்சியமாக விளங்கும் இச்சுவடியினை உடமையாகப் பெற்ற குடந்தை டாக்டர் எஸ்.மகாலிங்கஅய்யர் என்ற மாமனிதர் தனக்கோ அல்லது தன்வாரிசுகளுக்கோ இது உடைமையாக இருத்தல் கூடாது, மனிதகுலத்திற்கே உடைமையாக வேண்டும் என்ற தியாக உணர்வோடு சரசுவதி மகால் நூலகத்திற்கு வழங்கினார்.

திருவள்ளுவர்

> "*நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்*
> *வாய்நாடி வாய்ப்பச் செயல்*" என்றார்.

இந்த கருத்துவழி, நோய்களின் வகைகள், குறிகுணங்கள் ஆகியவற்றை மிகத்தெளிவாகவும், நுணுக்கமாகவும் விவரிக்கும் இந்நூல் நம் பாரம்பரிய மருத்துவத் திறனுக்கு ஒரு எடுத்துக்காட்டாக

விளங்குகின்றது. ஏட்டுச்சுவடியில் இருந்த இம்மருத்துவக் கருவூலத்தை செப்பமுற பதிப்பித்துத் தந்த பெருமை டாக்டர் எஸ். வெங்கட்ராஜன் அவர்களுக்கே உரியதாகும்.

முப்பத்தி நான்கு ஆண்டுகளுக்கு முன்பு முதல் அச்சுப்பதிப்பை கண்ட இந்நூல் தற்போது மூன்றாம் பதிப்பாக மீண்டும் மலர்ந்துள்ளது.

இதனைச் சிறப்பாக அச்சிடுவதற்கு உறுதுணையாகத் திகழ்ந்த நிருவாக அலுவலர் திரு. சாமி.சிவஞானம், வெளியீட்டு மேலாளர் முனைவர் குடவாயில் பாலசுப்ரமணியன் ஆகியோர்க்கும், பதிப்புத்துறை பணியாளர்களுக்கும் என் பாராட்டுக்கள்.

இந்நூலினை அச்சிட நிதி உதவி நல்கிய நடுவண் அரசுக்கு என்நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*மா. வீர சண்முக மணி*, இ.ஆ.ப.,

*மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் இயக்குநர்,*

*சரசுவதி மகால் நூலகம்.*

தஞ்சாவூர்,

*8 - 3 -2006*

# முன்னுரை

நம் புராதன வைத்திய முறைகளில் ஆயுர்வேத வைத்திய முறையில் காணப்படுவதைப் போன்று வியாதிகளின் குறிகுணங்கள், வகைகள் இவைகளைத் தெரிவிக்கும் நூற்கள் சித்த வைத்தியத்தில் அவ்வளவு அதிகமாகக் காணப்படவில்லை எனினும் யூகிமுனி வைத்திய சிந்தாமணி, அகஸ்தியர் 2000 முதலான முழுநூல்கள் ரோகங்களின் நிதானங்களைக் கூறுகின்றன. இதைத் தவிற பற்பல நூல்களிலும் அந்தந்த இடங்களில் வியாதிகளின் லக்ஷணங்களை விளக்கித் தக்க மருந்து முறைகளையும் கூறியிருக்கின்றனர் நம்முன்னோர். பொதுவாகக் கூறுமிடத்து ஆயுர்வேத சாஸ்திரத்திலோ வியாதியின் லக்ஷணங்கள் முற்றிலும் திரிதோஷங்களை அடிப்படையாகக் கொண்டவை. ஆகவே வியாதியின் பெயரைத் தெரிந்துகொள்ள முடியவில்லையே என்று கூச்சப்படாமல் அந்தந்த வியாதிகளில் எந்தந்த தோஷங்கள் பிரதானமாக இருக்கின்றனவோ அவைகளுக்குத் தக்க சிகிச்சை அளித்துவிட்டால், அந்நோய்ப் படிப்படியாகக் குறைந்துவிடுகிறது என்ற உண்மையைக் கண்டறிந்துள்ளனர்.

நம் தமிழ் முறையில் 4448 வியாதிகள் சரீரத்தை வாட்டுகின்றன என்றும், அவை பாணாஸுர யுத்த காலத்தில் பரமசிவனிடமிருந்தும், மஹாவிஷ்ணுவிடமிருந்தும் உண்டாயின என்றும் புராண வரலாறு இருந்தபோதிலும், இந்த வியாதிகளைப்பற்றிய பூரா விபரமும் நமக்குத் தெளிவாகக்கிடைக்கவில்லை.

இந்நூல் அக்குறைவை ஓரளவு நீக்கி நமக்கு வியாதிகளின் குறிகுணங்களையும், வகைகளையும் தெளிவாக்குகின்றது. இச்சுவடியில் முன்பாகம் முழுவதும் வியாதிகளின் நிதானத்தையே கூறுகின்றது. பின்பாகத்தில் வியாதி நிதானத்துடன் ஓரிரு மருந்துகளையும் கூறுகின்றார். இதனால் இந்நூலில் காணும் விஷயங்கள் எவ்வளவு முக்கியமானவை என்பது சொல்லாமலே விளங்கும்.

இச்சுவடி இந்நூல் நிலையத்திற்கு அன்பளிப்பாகக் கும்பகோணம் டாக்டர் எஸ். மகாலிங்க அய்யர் அவர்களால் கொடுக்கப்பட்டதாகும். இந்நூல் மிகவும் பழமையாகக் காணப்பட்டதாலும், விஷயங்கள் கோர்வையாக விளக்கப்பட்டிருந்ததாலும், வைத்தியர்களுக்கும், ஏனையோர்க்கும் அதிக உபயோகம் என்றெண்ணி சரஸ்வதி மகால் நூல்நிலைய வெளியீட்டின் மூலம் இதனைப்

பதிப்பிக்க முற்பட்டோம். அதற்கு இந்நூல் நிலைய கௌரவ காரியதரிசி ஸ்ரீ கோபாலன் பி.ஏ., பி.எல், அவர்களுக்கு நன்றி உரித்தாகும். மற்றும் இதில் காணப்படும் தலையங்கங்கள் நூலின் உபயோகத்தையும் அதிகமாக்கும் என்று எண்ணுகிறேன். புரியாத இடங்களுக்கு வேறு இடங்களிலிருந்து சேகரிக்கப்பட்டடிப்பணியும், குறிப்புகளும் அங்கங்கே கொடுக்கப் பட்டிருக்கின்றன. இந்நூலைத் திறம்பட அச்சிட்டு உதவிய "ஸ்ரீவாணீ விலாஸ்" அச்சகத்திற்கும் நன்றி உரித்தாகும்.

தஞ்சாவூர்,
28-2-62

**டாக்டர் எஸ். வெங்கட்டராஜன்,**
*வைத்திய ஆராய்ச்சியாளர்.*

# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள் அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும் பனை ஓலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப்புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம்பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம் என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்

**மாவட்ட ஆட்சித்தலைவர்**
**மற்றும் இயக்குநர்**
சரசுவதி மகால் நூலகம்.

# தன்வந்தரி வைத்தியம்

## நாடி பரீக்ஷை

### காப்பு

*செக்கர் மதிப் பிறைமௌலித் தவளமேனித்*
*திகம்பரர் பொன் மாமேருச் சிலையார் செம்பொன்*
*முக்கணுடைக் கடவுளொரு பாகம் நீங்கா*
*முதல்வியணி பவளவிதழ் முத்தமூரல்*
*மைக்கயற்கட் சிறுவனுதை தனத்துத் தீம்பால்*
*மருவிநுகர் அருவிமத மொழுகி நீண்ட*
*கைக்கரட மாலியானை முகத்தோனாதி*
*கற்பகக்கன் றிருசரணங் கருத்துள் வைப்பாம். (1)*

**(இதன் பொருள்)** சிவந்த அந்திவானத்தில் தோன்றும் இளம்பிறைச் சந்திரனைத் தரிப்பவரும், வெண்ணிறமான (திருநீறு பூசிய) தேகத்தையுடையவரும், திக்குகளையே வஸ்திரமாகத் தரித்தவரும், பொன்மயமான மேரு பர்வதத்தையே வில்லாகக் கொண்டவரும், ஆகிய சிவபெருமானுடைய புதல்வரும், மூன்று கண்களையுடைய பரமசிவனின் இடப்பாகத்தினின்று பிரியாதவளும், பவளம் போன்ற உதடுகளையும், முத்துக்களையொத்த பல்வரிசை களையும், கரிய நீலோத்பலம் போன்ற கண்களையும் உடைய பார்வதியின் தனங்களில் உதைத்து இனிய பாலினைப் பருகுபவரும், அருவியைப்போல் மதஜலத்தைச் சொரியும் நீண்ட துதிக்கையையுடைய யானை முகத்தோனான கற்பக விநாயகரின் இரு பாதங்களையும் நாம் மனதில் எண்ணுவோமாக.

### ஆயுர்வேதத்தின் வரலாறு

செய்ய மாதுக் கிறையவன் செப்பிய
துய்ய வாயுள் மறையிற் றுலங்கிய
மெய்யை மாதவன் மேதினி வாழ்வுற
ஐயன் தன்வந் திரிக்கருள் கூறினான். (2)

(இ-ள்.) பரமசிவன் சொன்ன ஆயுர்வேதத்தின் உண்மைக் கருத்தை மஹாவிஷ்ணு உலகம் உய்யவேண்டித் தன்வந்தரிக்கு உபதேசித்தார்.

### சாஸ்திர விஷயங்கள்

ஓதுநாடித் தொகையு மதிலுறு
வாத பித்துச் சிலேற்பன வன்மையும்
பேத மான வியாதியின் பெயர்களும்
ஆதியான அருந்தவன் ஓதினான். (3)

(இ-ள்.) நாடிகளின் எண்ணிக்கையும், அதிலிருக்கும் வாத, பித்த, கபம் இவற்றின் வலிமை, வியாதிகளின் பெயர்கள் இவைகளை முனிவன் நன்றாகத் தெரிந்து கொண்டான்.

### வியாதிகளை அறியும் விதம்

திருமறை முனிவன் கூறும் வாகடச் செய்கைதன்னில்
வருபல வியாதியான வகையறி குவதே தென்னில்
உருவுறு நாடி யாலு மொண்முக மலநீ ராலும்
தெரிவிழி நாவி னாலுந் தந்தலக் கணத்தி னாலும். (4)

(இ-ள்.) தன்வந்தரி கூறிய ஆயுர்வேத சாஸ்திரத்தில் கூறிய வியாதி வகைகளை அறியும் வழியென்னவென்றால், 1. நாடிகள், 2. மலம், 3. மூத்திரம், 4. விழி, 5. நாக்கு, 6. பற்கள், 7. முகம் இவைகளின் பேதங்களிலிருந்து அறிந்துகொள்ளவும்.

## நாடி லக்ஷணங்கள்

உரைத்திடுந் தானமேழில் உறுகுறியுரைக்குங் காலை
வருத்திய நாடிச்செய்கை மங்கையே வகுக்கக் கேளாய் !
பெருந்தெழும் உந்திக்கீழே ஓமெனும் பிரண வத்தே
பருத்தகுண் டலியேமூல மாயெழு நாடிபத்தே. (5)

*(இ-ள்.)* முற்கூரிய ஏழுவகை பரீக்ஷைக் கிரமங்களைக் கூறுமிடத்து, முதலில் நாடியை எடுத்துக்கொள்வோம். தொப்புளுக்குக் கீழே மூலாதாரத்தில் "ஓம்" எனப்படும் பிரணவஸ்வரூபமான குண்டலியிலிருந்து எழும் நாடிகள் பத்தாகும்.

## நாடிகளின் பெயர்

பத்தின்பே ரிடையினோடு பிங்கலை சுழுனை பார்க்கில்
அத்திசிங் குவைகாந் தாரி யலம்புடை புருடனோடு
வைத்திடு குகுவும் மற்றை சங்கினி வகுத்த நாடித்
தெத்தினில் எழுபத்தீரா யிரம்நரம் பென்று செப்பே. (6)

*(இ-ள்.)* 1. இடை, 2. பிங்கலை, 3. சுழுமுனை, 4. அத்திசிங்கு, 5. காந்தாரி, 6. அலம்புடை, 7. புருடன், 8. குஹு, 9. சங்கினி.

இவைகளிலிருந்து பிரியும் நரம்புகள் எழுபத்தீராயிரமாகும்.

## தேகத்தில் நரம்புகள் பரவிநிற்கும் விதம்

செப்பிய யெழுபத் தீரா யிரநரம் புடலில் சேர்தல்
எப்படி யெண்ணவேண்டாம் எழுவட விழுதுபோல
மைப்படு விழியின் மானே! வளர்சிர மடியீறாக
ஒப்பரு நாடி நிற்கும் அடைவினை யுணர்ந்து கொள்ளே. (7)

*(இ-ள்.)* எவ்வாறு மேற்கூறிய எழுபத்தீராயிரம் நரம்புகள் தேகத்தில் பரவிநிற்கும் என்று கருதவேண்டாம்.

ஓங்கி வளரும் ஆலமரத்தில் காணப்படும் விழுதுகளைப் போலத் தலை முதல் பாதம் முடிய தேகத்தில் விஸ்தாரமாகப் பரவி நிற்கின்றன என்று தெரிந்துகொள்வாயாக.

**நாடிகளின் எண்ணிக்கை**

உந்தியே மூலமாக வுரிபோன்று கீழுமேலும்
வந்துறு நாடிதன்னை வகையுடன் வகுக்கக்கேளாய்
அந்தமாஞ் சென்னிமீது ஏழாயிரத் தறுநூறாகும்
பைந்தொடி செவியிரண்டிற் பார்மூவா யிரத்துப்பத்தே. *(8)*

*(இ-ள்.)* உந்தி (அதாவது) தொப்புளிலிருந்து உரியைப் போல மேலேயும் கீழேயும் பரவிநிற்கும் நாடிகளைக் கூறுமிடத்து, தலையில் 7600 நாடிகளும், 2 காதுகளிலும் 3010 நாடிகளும் உள்ளன.

**இதுவுமது**

வரிவிழியிரண்டில் நாலா யிரமதா மானே மூக்கில்
அரியமூ வாயிரத்து முந்நூற்று முப்பதாகும்
பொருவிய வலகு கன்னம் பொருந்தையா யிரமதாகும்
உருவுறஉ பிடர்கீழ்த் தோள்மே லுரையாறா
யிரத்தெண்ணூறே.*(9)*

*(இ-ள்.)* இருவிழிகளிலும் 4000 நாடிகளும், மூக்கில் 3330 நாடிகளும், கன்னப்பிரதேசங்களில் 5000 நாடிகளும், பிடரி, கீழ்த்தோள் முதலான இடங்களில் 6800 நாடிகளும் வியாபிக்கின்றன.

**இதுவுமது**

கண்டத்தா யிரமதாகும் கைமூவா யிரமதாகும்
தொண்டைக்கீ ழாகத்தானே சுழி தொப்புள் மேலதாக
வொண்டொடி கேளா யொன்பத் தாறாயிரத் தொருபத்தாகும்
அண்டத்துள் முனிவர் கூறும் ஆயுரு வேதமாமே. *(10)*

(இ-ள்) கழுத்தில் 1,000 நரம்புகளும், கைகளில் 3,000 நாடிகளும், தொண்டைக்குக் கீழே தொப்புளுக்கு மேலாக 9,610 நாடிகளும் இருக்கின்றன.

**இதுவுமது**

குறுக்கின்மேற் பிடரிக்கீழே கூரெண்ணா யிரத்தொண்ணூறா
மறுத்திரு விலாவில் நாடி வளர்நாலா யிரத்து நாற்பன்
உறுப்பிடை யிலிங்கம் யோனி யடிவயி றுற்றநாடித்
திறத்தவேல் விழியாய்! யேழா யிரத்தெழு நூறாஞ்
செப்பே.(11)

(இ-ள்.) முதுகின்மேல் பிடரிக்குக் கீழே 8,800 நாடிகளும், விலாப்பக்கங்களில் 4,040 நரம்புகளும், ஆண்குறி அல்லது பெண்குறி, அடிவயிறு முதலான இடங்களில் 7,700 நரம்புகளும் உள்ளன.

**இதுவுமது**

பேசிய மூலநாடி பெயரய்யாயிரத் தைந்நூறுங்
காசணி முலையாய்! சந்திலிரண்டாயிரத் திருநூறு காணும்
வீசிய பாதந்தன்னில் விளம்புமா யிரத்தினோடு
மோசைசே ரெழுநூற் றன்பத் தாறென வோதுநூலே. (12)

(இ-ள்.) மூலநாடிகள் 5,500ம், சந்து (தொடையிடுக்கு) களில் 2,200 நாடிகளும், இரு கால்களிலும் 1,756 நரம்புகளும் இருக்கின்றன.

**குறிப்பு:** - மேற்கூறிய செய்யுட்களிலிருந்து நாடிகளைக் கணக்கிட்டால் 72,126 வருகிறது. அதிகப்படியாக 126 நரம்புகள் உள்ளன.

**நாடி முடிச்சுகளின் இருப்பிடம்**

மொய்குழல் மானேநாடி முடிச்சுடன் றலங்கள் கூறி
லெய்திய கோசமுந்தி யிதயமோ டின்னங் கேளாய்
பையர வல்குல் மூலம் பகர்பிடர் முடிச்சோடுச்சி
வைகுறு மெழுபத்திரா யிரமதாய் வகுக்கலாமே. (13)

(இ-ள்.) நாடி முடிச்சுகள்: 1. கோசம், 2. தொப்புள், 3. இருதயம், 4. ஆண் அல்லது பெண்குறி, 5. மூலாதாரம், 6. பிடரி, 7. தலையின் உச்சிபாகம் இவைகளில் காணப்படும். ஆக இவை 72,000 நரம்புகளாகக் கூறப்படுகின்றது.

### தேகத்தில் நாடி பார்க்கும் விதம்

*இப்படி யெழுபத்தீரா யிரநரம் பென்று கண்டு*
*ஒப்புறு நாடிபார்க்கு மடைவினை யுரைக்கக் கேளாய்*
*வெப்புறு வாதபித்தச் சிலேத்மன மிக்கமூன்றுந்*
*தப்பிலா தறிந்து கொள்ளுங் குறிகுணஞ் சாற்றுவோமே. (14)*

(இ-ள்.) இவ்வாறாக 72,000 நரம்புகளையும் அறிந்த பின்னர், நாடிகளை அறிந்துகொள்ளும் விதத்திற்கு சாதகமாக வாதம், பித்தம், சிலேத்மம் இம்மூன்று தோஷங்களின் குறிகளைச் சொல்லுவோம்.

### ஸ்திரீ புருஷர்களுக்கு நாடி பார்க்கும் விதம்

*இயம்பிய புருடருக்கு வலக்கர நாடியெல்லை*
*வயங்கிளை மின்னினாருக் கிடக்கர மானே கேளாய்*
*நயம்பெற நெட்டிவாங்கி நலங்குமங் குட்டமூலம்*
*தயங்கிடு மசைவைத்தள்ளிப் பார்ப்பது நாடிதானே. (15)*

(இ-ள்.) புருஷர்களுக்கு வலக்கையிலுள்ள நாடியையும், ஸ்திரீகளுக்கு இடக்கை நாடியையும் பிடித்துப் பார்க்கவும். கைகளைப் பிடித்து நெட்டிவாங்கிக் (சொடுக்கி) கட்டை விரலுக்குக் கீழே துடிக்கும் இடத்தையும் நீக்கிவிட்டுப் பின்னர் பார்க்கவும்.

### நாடிகளையறியும் விதம்

*செந்திரு வளையாய் கேளாய்! (சேர்) வாத பித்த சிலேத்மம்*
*அந்தமில் விரல்கள் மூன்று மடைவினில் வைத்தபோது*
*முந்து தர்ச்சனியே வாத மொழிந்த மத்திமையே பித்தம்*
*பைந்தொடியநாமி சேத்ம மென்றுதான் பகரலாமே. (16)*

(இ-ள்.) வைத்தியர் நோயாளியின் கைகளில் தனது ஆள்காட்டி விரல், நடுவிரல், மோதிரவிரல் இவைகளை வைத்துப் பார்க்கையில் ஆள்காட்டி விரலில் வாதமும், நடுவிரலில் பித்தநாடியும், மோதிரவிரலில் கப நாடியும் ஓடும்.

### வாதநாடி லக்ஷணம்

தந்திரமாக மூன்று தானமு மறிந்து கொண்டால்
முந்திய வாதநாடிக் குணந்தனை மொழியக் கேளாய்
கொந்துறு குயிலே யன்னங் குக்குட மயிலே போல
வுந்திய நாடிகண்டால் வாதமென் றுரைக்கலாமே. *(17)*

(இ-ள்.) வாதநாடியின் நடை குயிலைப்போலவும், அன்னம், கோழி, மயில் இவைகளையொத்த நடையைப் போலவும் காணும்.

### பித்தநாடி, கபநாடி லக்ஷணங்கள்

தாக்கிய பித்தநாடி தான்செய்யுங் குறிகுணங்கேள்
வீக்குவர் முலையா யட்டை யாமைபோல் நடக்கு மென்க
வீக்கமாஞ் சிலேத்மநாடி யூர்ந்திடுந் தவளை பாம்பு
போக்குறு நடையதாகு மெனமுனி புகன்றவாறே. *(18)*

(இ-ள்.) பித்தநாடி அட்டை, ஆமை முதலான ஜந்துக்களின் நடையையொத்திருக்கும். கபநாடி தவளை, பாம்பு இவைகளைப்போல் ஊர்ந்து செல்லும்.

### வாதம் இரண்டு, பித்தம் ஒன்றுமாயுள்ள நாடிகளின் லக்ஷணம்

வாழ்விழி மானே! ரண்டு வாதமும் பித்தமொன்றும்
கோளுற நடக்கும் வன்மை கொடுஞ்சுமை சிரமேற்கொண்டு
நாளுற நடப்போனாக நடுவினிற் சலியா தோடு
மூளுறப் பித்தம் ரண்டுஞ் சிலேத்மமொன்
றுரைக்கக்கேளே. *(19)*

*(இ-ள்.)* தலையில் சுமையைத் தூக்கிக்கொண்டு நடந்து செல்லும் மனிதனைப் போல நாடியின் நடை தென்படும்.

**பித்தம் 2, கபம் 1மாக இருக்கும் நாடிக்குறிகளும் சிலேத்மம் 2, வாதம் 1மாக இருக்கும் நாடிக்குறிகளும்**

கடுவிழி மானேபிள்ளைக் கண்வளர் தொட்டில் போல
நடுவிர லசைத்தலாகும் நாடுஞ்சிலேத் துமமிரண்டு
மிடறுறு வாதமொன்று மெழும்பிடிற் பிணையில் நாகங்
கடுகிய புணர்ச்சிபோல நடப்பது கண்டுகொள்ளே. *(20)*

*(இ-ள்.)* தூங்கும் குழந்தையின் தொட்டில் ஆடுவதைப் போல நடுவிரலில் நாடி அசைந்து அசைந்து ஆடும்.

கபம் இரு பங்கும் வாதம் ஒரு பங்குமாக நாடி ஓடும்போது, பிணையலில் உள்ள நாகங்களை ஒத்திருக்கும்.

**வாதம் 2 , கபம் 1 ஓடும் நாடிகளின் லக்ஷணங்கள்**

கொள்ளுக வாதம் ரண்டு மொன்றுசிலேத் பனமுங்கூடில்
அள்ளிலை நடுவேற்கண்ணா யரணைவால் முறிந்து வீழ்ந்து
துள்ளியே சுழல்தல் போலாஞ் சோர்வுறு பித்தம் ரண்டு
மொள்ளிய வாதமொன்றுங் கூடிலோ வுரைக்ககேளே. *(21)*

*(இ-ள்.)* அரணைவால் முறிந்து விழுந்தால் அது எவ்வாறு துள்ளித்துள்ளி சுழன்று வருமோ அவ்வாறு நாடியும் சுழன்று சுழன்று துள்ளியோடும்.

**பித்தம் 2, வாதம் 1 ஓடும் நாடிகளின் குறிகளும், சிலேத்மம் 2, பித்தம் 1ம் ஓடும் நாடிகளின் குறிகளும்**

துடியினை யடித்தாபோலத் துடித்திடும் சிலேத்மம் ரண்டுஞ்
கடுகிய பித்தமொன்றும் நடப்பது காணவேண்டிற்
படவர வல்குல் மானே! மஞ்ஞைபாம் பென்னவோடு
மடவிலே யறிந்துகொள்ள ஓதிய யாயுள்வேதம். *(22)*

(இ-ள்.) அடித்தால் துள்ளிவிழுவதைப் போன்று நாடிகளின் நடை காணும். சிலேத்மபித்த நாடி இரையெடுத்த பாம்பைப் போன்ற கதியை அடைந்திருக்கும்.

**தேகத்தில் வாதபித்த கபதோஷங்களின் இருப்பிடம்**

வேதமேயுரைத்த வாதத்தின் வீடு பாயு தொப்புள்
ளோதிய பித்தத்தின் வீடுதாமே சிலேத்மனத்துக்
காதியா மிதயமே வீடாகு மீதென்று தானே
தீதில்லா முன்னோர் பேசும் வாகடச் செய்கைதானே. (23)

(இ-ள்.) குதப்பிரதேசம், வாதத்தின் ஸ்தானமாகும். பித்தம் தொப்புளிலும், கபம் இருதயத்திலும் இருந்து வருகிறது.

**வாத தோஷம் அதிகரித்ததின் லக்ஷணங்கள்**

மேவிய வாதஞ்செய்யுங் குணந்தனை விளம்பக் கேளாய்
தாவிய வயிறுமந்தஞ் சந்துகால் பொருந்து நோவாஞ்
சேவிய தாதுநாசஞ் சேர்த்துநீர்க் கடுத்து வீழும்
ஆதியா னுரைத்த பான்மை ஆயுருவேதமாமே. (24)

(இ-ள்.) வயிறு மந்தமாகும். மூட்டுகள், கால்கள் முதலான இடங்களில் வலியுண்டாகும். தாது நஷ்ட முண்டாகும். சிறுநீர் கடுத்து இறங்கும்.

**பித்த தோஷம் அதிகரித்ததின் குறிகள்**

ஏலவார் குழலாய்! பித்தஞ் செய்குண மியம்பக் கேளாய்
கோலவேல் விழிசிவந்து குழிந்திருண் டிருக்கு மல்லாற்
சீலநீர் கடுத்து நொந்து சுறுக்கென சிவந்து வீழும்
ஞாலமேசு கிறுகிறுத்து நாவுலர்ந்திருக்குங் காணே. (25)

(இ-ள்.) விழிகள் சிவந்து காணும். கண்கள் குழிவிழும். பார்வைக்குறைவுமேற்படும். சிறுநீர் கடுத்துச் சிவந்த நிறத்துடன் வீழும். தலைச்சுற்றல் நாவறட்சி இவைகளும் ஏற்படும்.

**கபக்குறிகள்**

சேத்துமஞ் செய்குணங்கேள் சில்லென வுடம்பு வேர்க்கும்
மேற்றமாய் மிகநீரூறி யினித்துநா வழுவழுக்கும்
நாற்றநீர் மாய்ந்துவீழும் நலம்பெற வெளுக்குமேனி
தோற்றுமிக் குணங்கள் கண்டாற்
சிலேத்பனத்தொகுதியாமே. *(26)*

*(இ-ள்.)* உடம்பு வியர்த்துச் சில்லிட்டுவிடும். வாயில் அதிகமாய் உமிழ்நீர் ஊறும். நாக்கில் தித்திப்புச் சுவையும், வழவழப்பும் உண்டாகும். உடம்பு வெளுத்துப்போகும். இவைகள் கபம் அதிகரித்தலால் ஏற்படும் குறிகள்.

**வாத பித்தக் குறிகள் (வாதம் 2 + பித்தம் 1)**

அந்த வாதங்கள் ரண்டு மடுத்திடும் பித்தமொன்றுந்
தொந்தித்து நடக்குமாகிற் றோன்றிடுங் குணத்தைக் கேளாய்
வந்துநொந் ததுதான்விம்மி வலித்திடும் தாகமோகஞ்
சிந்தனை மிகவுண்டாகும் புசிப்பையுஞ் செரியாதாக்கும்
பைந்தொடி வாதபித்த மென்றுதான் பகரலாமே. *(27)*

*(இ-ள்.)* உடம்பில் வலி, தாகம், மயக்கம், தீராத மனக்கவலை, உணவு செரியாமை இவைகளேற்படும்.

**பித்தச் சிலேத்மக் குறிகள் (பித்தம் 2 + கபம் 1 )**

ஏய்ந்ததோர் பித்தம்ரெண்டுஞ் சிலேத்மமொன்
றெழுந்ததாகில்
லாய்ந்ததோர் பசியுமில்லை யடிக்கடி யுதரம் விம்முந்
தோய்ந்ததோர் நயனநீருஞ் சுத்தமா மஞ்சள் போலாம்
பேய்ந்தபேய் போற்பிதற்றும் பித்தச்லேத் மங்களாமே. *(28)*

*(இ-ள்.)* பசி எடுக்காது, அடிக்கடி வயிறு உப்பும், கண்கள் மஞ்சள் நிறமாகும். சிறுநீரும் மஞ்சள் நிறத்துடன் இறங்கும். பிதற்றலேற்படும். இவைகள் பித்த கபக்குறிகள்.

### கபவாதக் குறிகுணங்கள் (சிலேத்மம் 2 + வாதம் 1)

சேப்பிய சேத்மம் ரண்டும் வாதமு மொன்று சேரில்
வெப்புறு கபமேலிட்டு இனிப்பையே மிகவும் வேண்டும்
தப்பிலாப் பசியுமுண்டாந் தபனமே பற்றிநிற்கும்
இப்படிக் குணங்கள் கண்டால் சிலேத்தும
வாதமென்னே. *(29)*

*(இ-ள்.) நோயாளி இனிப்பை அதிகம் விரும்புவான். பசி அதிகமாயிருக்கும். உடலில் காங்கையேற்படும். இவை கபவாதக் குறிகளாகும்.*

### பித்தவாதக் குறிகள் (பித்தம் 2 + பித்தம் 1)

எண்ணிய வாதமொன்றும் பித்தமிரண் டெழுந்துதாகில்
புண்ணென வுடம்புநோவாம் புகையெழ யெரியும் நெஞ்சு
திண்ணமாய் நாவரண்டு சிறுத்தநீர்க் கடுத்துவிழும்
அண்ணலார் உரைத்தவுண்மை யாயுரு வேதந்தானே. *(30)*

*(இ-ள்.)* உடம்பில் குடைச்சல் வலியேற்படும். புகைச்சல் உண்டாவது போல் நெஞ்செரிச்சலுண்டாகும். நாவறட்சியுடன் மூத்திரமும் கடுத்து இறங்கும். இவை பித்தவாதக் குறிகளாகும்.

### கப பித்தக் குறிகள் (கபம் 2 + பித்தம் 1 )

ஓங்கிய சேத்மம் ரண்டும் பித்தமொன் றெழுந்துதானா
லோங்கிய சன்னியுண்டா முச்சிநோஞ் செவியுங்கேளாப்
பாங்குட நாவினித்துப் பத்தியஞ் செரியதாகும்
பூங்கொடி யணையாய்! பித்தச் சிலேத்மனம்
புகலுங்காலே. *(31)*

*(இ-ள்.)* சன்னி உண்டாகும் (உடல் குளிர்ச்சி யுண்டாகும்) தலையுச்சியில் வலியேற்படும். காது கேளாது. நாக்கில் தித்திப்புச் சுவை இருக்கும். ஆகாரம் சீரணியாது. இவை கப பித்தக் குறிகளாகும்.

### வாத கபக் குறிகள் (வாதம் 2 + கபம் 1)

மானனாய் வாதம் ரண்டுஞ் சிலேத்ம மொன் றெழுந்த தாகி
லானதோர் சரீரம் நோவாம் அங்கைகால் திமிர்த்துக் காட்டு
மூனமா முதரத்துள்ளே வூதையு மிகுந்து விம்மும்
பானலங் கண்ணாய்! வாத சிலேத்பனம் பரிந்துபாரே. (32)

(இ-ள்.) சரீரத்தில் வலியுண்டாகும். கை, கால்கள் இவைகளில் மத மதப்பு ஏற்படும். வயிற்றுவலியுண்டாகிப் பொருமலும் உண்டாகும். இவை "வாத கபங்" குறிகள்.

### வாத பித்த கபக் குறிகளும், மரண லக்ஷணமும்

பார்க்கினில் வாதபித்தம் பரிந்தசிலேத் மனங்கள் மூன்றுந்
தோற்றிடு மரணைவால்போற் றுடித்திடு மசைவை நோவாம்
வேற்றுடற் பட்டுத்தானே மெய்யெல்லாங் குளிர்ந்ததாகிற்
காற்றொடி வளைக்கை நல்லாய் மரணமாங்
குறியிதாமே. (33)

(இ-ள்.) நாடிகள் அரணைவால் துண்டித்துப் போனால் அது எவ்வாறு துடிக்குமோ அவ்வாறு துடிக்கும். உடலில் கையை வைத்தால் உடல் முழுவதும் குளிர்ந்து கூசும். இவை மரணக்குறிகளாகும்.

### மரணக் குறிகள்

மேவிய அகங்கையாலே மிக்கதோர் முகத்தை (நீவும்)
ஆவலாய் மனிதர்தன்பா லன்புகள் பேசி நோக்கும்
பூவையே பெருமூச்செய்தும் போனகந்தேடுமென்னிற்
காவியங் கண்ணினாளே! மரணமாங் காலந்தானே. (34)

(இ-ள்.) வாத பித்த கப நாடியோடுகையில் அந்நோயாளி தன் கைகளினால் முகத்தைத் தடவிக்கொண்டு தன் பக்கத்திலுள்ள மனிதர்களுடன் அன்பாகப் பேசுவான். பெருமூச்சு உண்டாகும். இவைகளும் மரணக்குறிகளாகும்.

**இதுவுமது**

எடுபிடி யென்றுவீழ மெழுமுடல் மயங்கிக்காட்டும்
புடையுறு மூக்கி நீரும் பொசித்திடும் வியர்வையுண்டாம்
வடுவிழிசிவப்பதாகும் வாங்கிடும் விலாவிரண்டுங்
கடுக்குமிக் குணங்களானால் மரணமாங் காலந்தானே. (35)

(இ-ள்.) "எடு," "பிடி" என்று கத்திக்கொண்டு எழும்பிப் பின்னர் படுக்கையில் மயங்கி விழுவான். மூக்கிலிருந்து நீர் பொசியும். வியர்வையரும்பும். விழிகள் சிவப்பாகும். விலாப்பக்கங்களில் கடுப்பு வலியுண்டாகும். இவைகளும் மரணக் குறிகளாகும்.

**இதுவுமது**

இயம்பிய விலாவிரண்டு பூருபூரென வெடுத்துத்
தயங்கிய தொண்டைக்குள்ளே சலதியொத் திரையுங்
கண்டாய்
வயங்கிழை மின்னே கண்ணில் மாற்று ... ... நீருமோடிற்
றியங்கிட வேண்டாமிங்கண் செய்குண மரணமென்னே. (36)

(இ-ள்.) இரு விலாப் பக்கங்களிலும் புர்புரென்று அரிப்புண்டாகும். தொண்டைக்குள் கபம் விருத்தியாகி அடைக்கும். கண்கள் பஞ்சடைந்து நீரைப்பொசியும். இவைகளும் மரண லக்ஷணங்களாகும்.

**அவஸ்தைக்குறி**

கொண்டிடு மவத்தைக் கேளாய் கூர்விழி மூக்குக்காது
திண்டிற் லுந்திமார்பு செய்யத்தாள் குளிர்ந்து தாழ்ந்து
மண்டையி லனல்போல் காந்தி மயக்கமுங் கபமுங்காணி
லண்டரு மறியச்சொன்னோ மரணமாந் தகையுமஞ்சே. (37)

(இ-ள்.) விழிகள், மூக்கு, காதுகள், வயிறு, மார்பு, கால்கள் முதலான இடங்கள் குளிர்ந்துவிடும். மண்டையில் சூடேறும். மயக்கம், கபம் இவைகளுமேற்படும். இக்குறிகள் கண்டால் மரணமென்று கூறவும்.

## 90 நாழிகைக்குள்ளேற்படும் மரண லக்ஷணம்

உண்மையாய் வாதபித்த நாடிகளுடனே மாய்ந்து
வண்மையாஞ் சிலேத்பனந்தான் வளர்துடியடியே போலய்த்
திண்மையா யுடல்வெளுத்து மார்பது குளிர்ந்த தென்னி
லண்ணலா ராணைசாவுக் கடிகைத்தொண் ணூறதாமே. *(38)*

*(இ-ள்.)* வாத பித்த நாடிகள் குறைவடைந்து கபம் மேலிட்டு, உடல் வெளுத்து, மார்பு குளிர்ந்துவிட்டால் 90 நாழிகைக்குள் நோயாளி இறப்பது நிச்சயம் என்று அறிந்துகொள்ளவும்.

## 2 நாட்களுள் ஏற்படும் மரணக் குறிகள்

மேதினியுள்ளோர்க்கெல்லா மெய்யுட னுரைக்கலுற்றேன்
ஓதியு வுழலைத்தாக முலர்ந்து நாவறண்டு காணுந்
தீதுறுச் சிலேத்மநாடிச் செருமிடு மெழுந்து வீழும்
ஆதியானுரைத்த வுண்மை யடுத்தநா ளிரண்டிற் சாவே. *(39)*

*(இ-ள்.)* உடம்பில் அழற்சி, தாகம், நாவறட்சி இவைகளும் கபநாடி அதிகமாகிப் பின்னர் தாழும். இக்குறிகள் உண்டானால் 2 நாட்களுள் நோயாளி இறப்பான்.

வையதோர் பித்தம் நீங்கி வாயுவு மிகுந்து காட்டி
லய்யமே லிட்டுக்கண்ட மடைத்திடு மிளைப்பு மாகும்
துய்யசெவ் விழியுந்தாழுஞ் சோருநீ ரிடமே சுற்றும்
அய்யனா ருரைத்த வுண்மை கண்பஞ்சா
மவத்தையொண்பான். *(40)*

*(இ-ள்.)* பித்தநாடி மிகக்குறைந்து, வாயுவும் கபமும் அதிகரித்துச் சளி தொண்டையை அடைத்து மூச்சுத்திணரலை யுண்டாக்கும். கண்விழிகள் தாழும், சோர்வையடையும். இவைகள் *பஞ்சாவத்தைக்குறிகளாகும்.

---

* கண்கள் பஞ்சடைத்துப் போகக்கூடிய அவஸ்தையின் குறிகள். அதாவது 9ஆவது அவஸ்தைக் குறிகளாம்.

### சீவன் சாக்கிரம் முதலான அவஸ்தைகளில் இருக்கும் நிலைமை

சாக்கிர அவத்தைத்தானே பிணவெடி சார்ந்து நாறு
மேக்குறுஞ் சொப்பனத்தி லெய்திடு முடிச்சுவீழும்
நோக்கருஞ் சுழுத்தியாகி நுவன்றிடும் பலபேச்சாகத்
தாக்கியத் துரியந்தானே தம்பிதம மயங்குஞ் சீவன். *(41)*

*(இச்செய்யுளின் பொருள் விளங்கவில்லை.)*

### முதல் 4 அவஸ்தைகளின் குறிகள்

சாவுநு முதலவத்தைத் தக்கங்கள் பேசுமிரண்டில்
மேவிய வுடம்பு நாறு மிக்கமூன் றாமவத்தைப்
பாகவத் தெளிவுநீங்கிப் பதறும்நா லாமவத்தை
ஆவலாய் வெற்றிபேசி யரற்றியே சீதமாமே. *(42)*

*(இ-ள்.)* முதல் அவஸ்தையில் தர்க்கங்கள் பேசுவான். 2-ம் அவஸ்தையில் உடம்பு நாற்றமெடுக்கும். 3-ம் அவஸ்தையில் மனதில் தெளிவு இராது. பதட்டமுண்டாகும். 4-ம் அவஸ்தையில் வெற்றி பேசிக்கொண்டு அரற்றிக் கொள்வான்.

### 5ஆ வது முதல் 8ஆவது அவஸ்தைகளின் குறிகள்

சீதமஞ் சாமவத்தைத் தெளிவுற முகடுபார்க்கும்
ஓதுமா றாமவத்தை யுடலது குளிர்ந்து காட்டும்
பேதமே ழாமவத்தைப் பேதித்துப் புசிப்பு வேண்டு
மாதியா னுரைத்த யெட்டிற் கண்பஞ்சா மவத்தை
யொண்பான். *(43)*

*(இ-ள்.)* 5ஆவது அவஸ்தையில் முகம் தெளிவாகக் காட்டும். 6ஆவது அவஸ்தையில் உடல் குளிர்ச்சியாகும். 7ஆவது அவஸ்தையில் பேதியுடன் ஆகாரத்தில் இச்சை யுண்டாகும். 8ஆவது அவஸ்தையில் கண்கள் பஞ்சடையும்.

தீதிலா வுடல்வெளுக்குஞ் சீதமாஞ் சரீரம்பற்றி
லாதிய யாயுள் வேதத் துரைவிதிப் படியேமுன்னோர்
பேதமாய்ப் புகலும்நீதிப் பெருமையை யறிந்துகொண்டு
ஓதும்வா கடத்தினோர்க்கு முறையிதென் றோதுநூலே. *(44)*

## காலமறிதல்

முன்னோருரைத்தார் மானிடர்க்கு மொழிந்த வயது
நூறொன்றே
இன்னே மூன்று பங்காக மியம்பு மிளமை சிலேத்மமென
அன்ன நடுவிற் பித்தமென அப்பால் வாத மதுவாகும்
பொன்னே யிந்தக் காலத்தில் மக்கள் ரோகம் பொல்லாதே.

*(இ-ள்.)* மனிதர்கள் ஆயுளான 100வயதில் மூன்றிலொரு பங்கு அதாவது 33 1/2 வயது வரை கபத்தின் காலமாகும். நடுப்பங்கு அதாவது 66 2/3 வரை பித்தம் அதிகரித்திருக்கும்காலமாகும். கடைசி மூன்றிலொரு பங்கான 66 2/3 முதல் 100வரை வாதத்தின் காலமென அறிந்துகொள்ளவும்.

## தினத்தில் தோஷங்கள் பிரகோபிக்கும் விதம்

உதயத்தில் வாதம் பத்தா முச்சியில் பித்தம் பத்தாம்
பதியினிற் சாயங்காலம் பத்துமே சிலேத்மமாகும்
விதிபெரு வரோகிக் கேலகை வியாதிகொண்டுடையயோர்க்
கன்று
மதியுடன் வைத்தியர்க்கு முரைத்தவா கடங்களாமே. (46)

*(இ-ள்.)* காலையில் உதயம் முதல் 10 நாழிகை வரை கபம் மேலிட்டிருக்கும். நடுப்பகல் 10 நாழிகைவரை பித்தத்தின் காலமாகும். சாயங்காலம் 10 நாழிகைகள் கபத்தின் காலமாகும். ஆனால் இது ரோகமில்லாத சாதாரண மனிதர்களுக்காகும். வியாதி உள்ளவர்களுக்குக்கன்று.

***குறிப்பு:-*** ஆயுர்வேத சாஸ்திரங்கள் காலையில் கபம் அதிகரித்தும், சாயங்காலம் வாதம் அதிகரிக்கும் காலமாகவும் கூறப்பட்டிருக்கிறது.

## தோஷங்களும், சுவைகளும்

வாதமே புளிப்பு வேண்டும் வருபித்தம் கசப்பு வேண்டும்
தீதில்லாச் சேத்மனந்தான் சேர்ந்திடு மினிப்பை வேண்டு
மோதிய வாதபித்த சிலேற்பனத் தொந்தத் தோர்க்கே
காதலாய் துவர்த்தல் கார்த்த லுவர்ப்பொடு நுகருங்காணே.

(இ-ள்.) வாததோஷம் மேலிட்டிருந்தால் புளிப்பில் இச்சையுண்டாகும். பித்தம் அதிகரித்தால் கசப்பில் ப்ரீதியேற்படும். கபம் அதிகரித்தால் தித்திப்புச் சுவையில் இஷ்டமதிகமாகும். வாதம், பித்தம், கபம் இவைகள் தொந்தித்திருந்தால் துவர்ப்பு, கார்ப்பு, உப்பு முதலான சுவைகளில் இச்சையுண்டாகும்.

### முகக்குறி

வாதரோக மனிதர்கள் மாமுக
மோதிலோ கருப்பாகிடு முண்மையே
வேதநீதி விளம்பிய பித்தத்தோர்க்
கேதுவாய் முகம் மஞ்சளென் றெய்துமே. (48)

(இ-ள்.) வாதம் அதிகரித்தால் நோயாளியின் முகம் கருநிறத்தையடையும். பித்தம் அதிகரித்தால் முகம் மஞ்சளாகும்.

### கபம் அதிகரித்தாலுண்டாகும் குறி

எய்து சிலேத்ம மெழுந்தவர் மாமுகம்
மெய்யதாகக் கருகி வெளுத்திடும்
அய்யனா ருரை செய்தவரும் பொருள்
செய்தியான வயித்தியச் சிரேட்டரே. (49)

(இ-ள்.) கபம் அதிகரித்ததெனில் நோயாளியின் முகம் முதலில் கருநிறமடைந்து பின்னர் வெண்ணிறமாகும். இவற்றைக்கொண்டு தோஷங்களை அறிந்தவர்கள் வைத்யச்ரேஷ்டராவார்கள்.

## மலக்குறி

### வாதபித்த மலக்குறிகள்

மேவும் வாத முடையவர் மெய்மலஞ்
சீவிதாகக் கருகிடுஞ் செம்மியே
பாவையே பித்தத் தோர்மலம் பார்த்திடி
லாவியே யெழு மன்னிற மஞ்சளே. (50)

(இ-ள்.) வாதம் அதிகரித்தால் மலம் கருநிறமடையும். பித்தம் அதிகரித்தால் மலத்திலிருந்து ஆவியெழும்புவதுடன் நிறமும் மஞ்சள் நிறத்தையடையும்.

### கபம் அதிகரித்தால் மலத்தின் குறிகள்

மன்னு சேத்மனத் தோர் மலம் வீழ்குறி
உன்னல் தீர விழும் வெளுப் போங்கியே
சொன்ன விக்குண மன்றிமுத் தொந்தத்தோர்
யென்னில் மூன்று நிறமல மெய்துமே. (51)

(இ-ள்.) கபம் மேலிட்டால் மலம் வெண்ணிறமாகும். தொந்த தோஷமுள்ளவர்களுக்கு அந்தந்த தோஷங்களுக்குள்ள நிறங்களுடன் மலம் காணும்.

## நீர்க்குறி

### வாத, பித்த தோஷங்கள் அதிகரித்தவர்களின் குறிகள்

ஓங்கிய வாதத்தோர்க்கு நீர்விழுங் குணமுரைக்கிற்
பூங்கொடி கடுத்துநொந்து சிறுத்துடன் பொருமி வீழும்
பாங்குடன் பித்தத்தோர்க்குப் பொசிய நீர் சிவந்துகாட்டி
யேங்கவே சுறுக்கதாக யெரித்துடன் கடுத்து வீழும். (52)

(இ-ள்.) வாதம் அதிகரித்தவர்களுக்கு மூத்திரம் கடுப்புடன் கொஞ்சமாக நுரையுடன் வெளிவரும்.

பித்த தோஷம் மேலிட்டவர்களுக்குச் சிறுநீர், சிவந்து எரிச்சலுடனும் கடுப்புடனும் வெளியாகும்.

### கபதோஷம் அதிகரித்த நீரின் குணம்

வீழுமே சிலேத்மத்தோர்கள் நீர்க்குணம் விளம்பக் கேளாய்
நாளுமே வெளுத்திலாய்ந்து நலம்பெற வீழுங் கண்டாய்
வாள் விழி மானே! தொந்த ரோகிமா னிடர்க்குத்தானே
தாழுநீர் பலநிறந்தா னென்னவே சாற்றினோமே. (53)

(இ-ள்.) நீர் வெண்மையாக இறங்கும். வாதம், பித்தம், கபம் இவைகள் தொந்தமாக அதிகரித்தால் சிறுநீர் பல நிறமாகக் காணும்.

### விழிக்குறிகள்

வாதத்தால் விழி கறுத்து வளரிமை தாழ்ந்திருக்கும்
தீதற்ற பித்தத்தார்க்கு செலவிழி மஞ்சணிக்கும்
கோதற்றச் சிலேத்மத்தார்க்குக் கூர்விழி வெளுத்திருக்குந்
தீதுற்ற தொந்தரோகி விழிபல நிறமதென்னே. (54)

(இ-ள்.) வாதம் அதிகமானால் கண்விழிகள் கறுநிறமாகும். இமைகள் தாழும். பித்தம் அதிகரித்தவர்களுக்கு விழிகள் மஞ்சள் நிறத்தையடையும். கபம் மேலிட்டவர்களுக்கு விழிகள் அதிவெண்மையாயிருக்கும். கபம், பித்தம், வாதம் இவைகள் சேர்ந்திருப்பவர்களுக்கு விழிகள் பற்பல நிறமடையும். அதாவது அந்தந்த தோஷங்களின் நிறங்களும் காணும்.

### நாவின் குறி

ஊதை மிகுந்து வாதநா வுயரம்போலு முன்னிதமாம்
நாதமில்லாப் பித்தத்தோர் நாவுகசந்து மஞ்சணிக்கும்
கோதில் சிலேத்மரோகிக்குக் குணங்கேள் நாவுவெளுப்பாகி
ஓத வரிதாய் வழுவழுத்து நோயதாயிருக்கு மொண்ணுதலே.

(இ-ள்.) வாயில் அழுக்கு அதிகம் சேர்ந்து தடிப்பாகும். இவை வாதநோய்க் குறிகளாகும். பித்தம் அதிகரித்தால் நாக்கு மஞ்சள் நிறமாகிக் கசப்புச் சுவையுடனிருக்கும். கபம் மேலிட்டால் நாக்கு வெளுப்புநிறமாகி, வழவழப்புள்ளதாக ஆகும்.

### தந்தக்குறிகள்

விளம்பிய வாதரோகி தந்தமே மிகக் கறுக்கும்
பழம்படு பித்தரோகி பல்லுமஞ் சணித்திருக்கும்

முழங்கொள சிலேத்மரோகிக்குப் பல்வெளுப்பாகு
முண்மை
துளங்கிடா தொந்தரோகிக் குணமிதிற் றொகுத்துச்
சொல்லே. (56)

(இ-ள்.) வாதரோகம் உள்ளவர்களின் பற்கள் மிகவும் கறுமை நிறமாக இருக்கும். பித்தரோகிக்குப் பற்கள் மஞ்சளாக இருக்கும். கபம் அதிகரித்தால் பற்கள் வெண்ணிறமாகும். தொந்தரோகமுள்ளவர்களுக்கு அந்தந்த தோஷ நிறங்களைக் கொண்டிருக்கும்.

**வாத சரீர குணம்**

வாத தேகந் தடித்திருக்கும் வாயுவளருங் குளிர்ந்திருக்கும்
போதஞ்சிறக்கும் பசிபொறுக்கும் புசிப்போதெனினு
மிகவருத்துஞ்
தாது சிறுக்குமுடல் கடுக்குஞ் சாருஞ்
சஞ்சலமில்லையென்று
மோது மெரிப்பு ருசிவேண்டு முபாயஞ்செலுத்து
மெனலாமே. (57)

★உடல் பருத்திருக்கும். வாயு அடிக்கடிப் பிரியும். உடலில் குளிர்ச்சியுண்டாகும். பசி நன்றாக இருக்கும். உடலில் கடுப்புவலியேற்படும். கார்ப்பில் அதிக இச்சையுண்டாகும்.

**பித்த தேக லக்ஷணம்**

பித்ததேக மெலிந்திருக்கும் பெருகவெயிலிற் சஞ்சரியா
தொத்த உறக்கங் கனவுபெறு முள்ளே வெதும்புங் காமமிகும்
புத்தி கலங்கி யொருமிக்கும் புளிப்பு விரும்பி சிறு
புசிப்பாஞ்
சித்தஞ் சினம் போய் பசிபொறுத்தே
தேறாதிவைகண்டறிவீரே. (58)

---

★ ஆயுர்வேதக் கிரந்தத்தில் வாதப்பிரகிருதியுள்ளவர் மெலிவடைந்திருப்பார் என்று கூறப்படுகிறது.

(இ-ள்.) பித்ததேகமுள்ளவர் இளைத்திருப்பார்கள். வெயிலில் சஞ்சரிக்கமாட்டார்கள். அடிக்கடி தூங்குகையில் ஸ்வப்னம் காணுவார்கள். உடம்பில் காங்கையுண்டாகும். ஸ்திரீகளிடத்தில் அதிக இச்சையுண்டாகும். அடிக்கடி புத்தி தடுமாறும். புளிப்புச் சுவையில் ஆசையுண்டாகும். கொஞ்சமாகச் சாப்பிடுவான். அடிக்கடிக் கோபம் உண்டாகும்.

## கபப்பிரக்ருதி லக்ஷணம்

செய்யுஞ் சிலேத்மச் சரீர குணந் திடாரித்திருக்குமனம் பலக்கும்
பொய்யு மெய்யதாயுரைக்கும் போதப் பொசுக்கு மங்கையர்க்கு
மய்யல் வருத்து முடல் வியர்க்கும் வாரம்பொருந்தி யுபசரிக்கும்
கையுங் காலுங் கசிந்திருக்குங் காசங்சுக்கலுண்டாமே. (59)

(இ-ள்.) உடல் திமிர்ந்து விடும். மனோதிடம் உண்டு. பொய்யை மெய்போலுரைப்பான். ஸ்திரீகளிடத்தில் ஆசையதிகரிக்கும். உடலில் அடிக்கடி வியர்வையுண்டாகும். வந்தவர்களை உபசரிக்கும் இயல்பைப் பெற்றவன். கை, கால் முதலான இடங்களில் வியர்வையரும்பி நிற்கும். சிறு இருமலும், கோழை வெளிப்படுதலும் ஏற்படும்.

## வாதபித்தப் பிரக்ருதி முதலானவர்களின் குணங்கள்

வாதபித்தத் தேககுணம் வகுக்கி லிரண்டுங் கலந்திருக்கும்
வாதசிலேற்பக் குணமுமதாம் வளரும் பித்தச்சிலேற்பனத்தின்
பேதகுணமுமதுவேயாம் பிறழா தரிந்தத்தீத்தகத்தி
லோதும் வியாதி கலந்திருக்கு முபாயமறிந்து செய்வீரே. (60)

(இ-ள்.) வாத பித்தம், வாத கபம், பித்தச்சிலேத்மம் இவைகளுள்ள பிரக்ருதிகள் அந்தந்தப் பிரகிருதிகளின்

குறிகளைப் பெற்றிருப்பார்கள். அது வித்யாஸப்படில் வியாதியுள்ளவர்கள் என்று தெரிந்துகொள்ளவும்.

## தேசக்குணம்

மேருவாதிக் குமரியந்தம் விரியுந் தேசந்திரிபாகஞ்
சாரும் பிரதமம் வாதமதாந் தரிக்குந் துதியம் பித்தமதாம்
பாரிலந்தஞ் சிலேற்பனமாம் பகருந் தேசக்குணமறிந்து
சேரும் வியாதிக் கவுடதங்கள் செய்வானவனே
வைத்தியனே. *(61)*

*(இ-ள்.)* மேருமுதல் குமரிவரையுள்ள தேசத்தை மூன்று பாகங்களாக்கி இமாசலம் முதல் மத்யபாகம்வரை வாததேசமாகவும், மத்திய பாகத்தை பித்த தேசமாகவும் கடைசியான தக்ஷிணபாகம் கப தேசமாகவும் அறிந்து கொள்ளவும். இவைகளுக்குத் தக்கபடி ஔஷதங்களும் நல்கவும்.

## நிலங்களும் தோஷங்களும்

குறிஞ்சிநிலமே வாதமதாங் கூறும்பாலை பித்தமதாஞ்
செறிந்த மருதஞ் சிலேத்மமதாஞ் சிலேத்மவாத
முல்லையதாம்
நிறைந்த நெய்தல் வாதபித்தம் நிலங்களதனை மயக்காயி
லுறைந்த வியாதி கலந்திருக்கு முபாயமறிந்து செய்வீரே. *(62)*

*(இ-ள்.)* குறிஞ்சி நிலம் (அதாவது மலைப் பிரதேசங்கள்) வாதத்தை அதிகரிக்கச்செய்யும். பாலை (மணல் பிரதேசங்கள்) நிலம் பித்த தேசமாகும். மருதம் (வயல் பிரதேசங்கள்) கபத்தையதிகரிக்கச் செய்யும் தேசமாகும். முல்லைப் பிரதேசங்கள் (காட்டுப்பிரதேசம்) கபத்தையும் வாதத்தையும் பிரகோபிக்கச் செய்யும். நெய்தல் (கடற்கரை) பிரதேசம் வாதம், பித்தம் இவைகளை அதிகமாக்கும். அந்தந்த பிரதேசங்களுக்குத் தக்கவாறு மருந்துகள் கொடுக்கவும்.

## தோஷங்கள் அதிகரிக்கும் மாதங்கள்

மார்கழி முதல் நான்கு மாதமும் வாதமாகும்
போமரி முதல் நான்கு மாதமும் பித்தமாகும்
சேரரி முதல் நான்கு மாதமும் சிலேத்மமாகும்
பார்மிசை யறிந்து செய்ய ஆயுள் நூல் ஓதும்வாரே. (63)

(இ-ள்.) மார்கழி, தை, மாசி, பங்குனி இந்நான்கு மாதங்களும் வாதம் அதிகரிக்கும் காலமாகும். சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி முதலான மாதங்களில் பித்தம் அதிகரிக்கும். ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை மாதங்கள் கபத்தை விருத்தி செய்யும் மாதங்களாகும்.

## வியாதிக்குக் காரணங்கள்

வாதமடாதே மேனிகடாதே வளர்பித்தம்
தீதுகொடாதே சத்தியெடாதே சிலேத்மத்தின்
கோதமடாதே இருமலெடாதே குடர்தண்ணிற்
சீதமடாதே சுரமும் விடாதே திறமாமே. (64)

மந்தம் வராதே சுரமும் வராதே சுரம்வந்தால்
மந்தமறாதே சுரமுமறாதே மலசீத
முந்தியுறாதே வாயுவுறாதே வுயர்வாயுவுத்
தொந்தமெடாதே விக்கலெடாதே சொலுவாமே. (65)

(இ-ள்.) வாதப்பிரகோபம் இல்லாமல் உடம்பு வாட்டமடையாது. பித்தம் உடம்பைக் கெடுக்காமல் வாந்தியும் உண்டாகாது. கபப்பிரகோபம் இல்லாமல் இருமல் இல்லை. குடலில் குளிர்ச்சி ஏற்படாமல் சுரம் தீராது. மந்தம் ஏற்படாமல் சுரம் உண்டாகாது. மந்தம் மாறாமல் ஜ்வரமும் மாறாது. வாயு அதிகரித்தால் விக்கலும் அதிகரிக்கும்.

## இதுவுமது

சீரணமன்றிச் சுரமும் விடாதே திரிதோஷக்
காரணமன்றிச் சந்நிவராதே கபமான
நீரதுவன்றிச் சோகைவராதே நெடுமேகச்
சார்வதுவன்றிச் சூலைவராதே தவறாதே. (66)

அபத்யமன்றித் தோஷவிகார மணையாதே
அபத்தியமன்றி யவுஷத யீன மணுகாதே
கபத்தினையன்றிக் காசச்சுவாசங் கலவாதே
கபத்தினையன்றி வியர்வை குளிர்ச்சிகள்
காணாதே.(67)

(இ-ள்.) சீரணம் ஏற்படாமல் சுரம் விடாது. (ஆமம் பக்குவமானால்தான் ஜ்வரம் விடும்) திரிதோஷக் காரணங் களில்லாமல் சந்நி உண்டாகாது. நீர் இல்லாமல் சோகையேற்படாது. (இரத்தம் முறிந்து நீராகிச் சோகையை உண்டாக்கும்) மேகரோகம் இல்லாமல் சூலை ரோகம் ஏற்படாது. (பிரமேகம், நீரிழிவு முதலான ரோகங்களிலிருந்து சூலைநோய் (கீல்வாயு) ஏற்படுகிறது என்று புலப்படுகிறது.

அபத்தியமில்லாமல் தோஷப் பிரகோபங்கள் குறைவடையாது. (தோஷங்களுக்கு சமான குணமான வஸ்துக்களால் தோஷம் அதிகரிக்கும். தோஷப் பிரகோபத்திற்கு எதிரிடையான குணமுள்ள வஸ்துக்களின் உபயோகத்தால் தோஷங்கள் குறைவடையும்) அபத்தியமில்லாமல் ஔஷதங்களின் குணம் குறை வடையாது. (அதாவது அபத்தியம் செய்தால் மருந்துகளின் வீர்யம் குறையும்) கபப்பிரகோபமன்றி காசரோகம், சுவாசரோகம் இவைகள் ஏற்படாது. கபமில்லாமல் வியர்வையும் குளிர்ச்சியும் உண்டாகாது.

**குறிப்பு:-** முற்கூறிய செய்யுட்களிலிருந்து பொருள்கள் ஊகித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

**நாடி பரீக்ஷை முற்றும்.**

## தசவாயு நிதானம்

என்புதோ லிறைச்சி மேதை மயிரிவை யைந்து மண்ணாந்
துன்சி லேற் பனநீர் பித்தஞ் சுக்கில மிரத்த நீராம்
வன்பசி யுறக்கஞ் சோம்பல் (சொப்)னங் கோபந் தீயாம்
நன்கிட யிருத்தல் நிற்றல் நடத்தலோ டுதல் காற்றாமே. *(68)*

ஆகிய குரோதங் காம மத மோகம் கோபமைந்தும்
வேகவீண் கூறாம் பத்து வாயுவின் விபரம் சொல்வா
மோகவுந் தியிலெழுந்துச் சிரசினை முட்டி முன்னான்
நேகி நால்கன் றோரெட்டு முட்புகல் பிராணனென்னே. *(69)*

*(இ-ள்.)* எலும்பு, தோல், மாம்ஸம், கொழுப்பு, மயிர் இவ்வைந்தும் பிருதிவியின் அம்சங்களாகும். கபம், நீர், பித்தம், சுக்ரம், இரத்தம் முதலானவைகள் அப்பின் (தண்ணீர்) அம்சங்களாகக் கூறப்பட்டிருக்கிறது. பசி, தூக்கம், சோம்பல், சொப்பனம், கோபம், போகம் முதலான குணங்கள் அக்னியின் அம்சங்களாகும். இருத்தல், நிற்றல், நடத்தல், ஓடுதல், (கிடத்தல்) முதலான செய்கைகள் வாயுவிலிருந்து உண்டாகின்றன. வஞ்சனை, காமம், திமிர், மயக்கம், கோபம் இவைகள் ஆகாசத்தின் தத்வங்களாகும். (அம்சமாகும்)

வாயுவானது உந்தியாகிய தொப்புளிலிருந்து உண்டாகிச் சிரஸில் முட்டிப் பின்னர் தேகத்தில் சஞ்சரிக்கும். இது பிராணவாயுவாகும்.

## அபானவாயு முதலான வாயுக்களின் குணங்கள்

என்னுமுந் தியினில் நின்று மலசல மிறக்கி விக்கு
முன்னிய வபானனன்ன சாரத்தை நாடியூடே
துன்னிடும் வியானன் சோற்றைச் செரிப்பிக்கு முதனான் சொல்லி
லன்னிய வாயுவெல்லாஞ் சமன் செயுஞ் சமானனாமே. *(70)*

(இ-ள்.) வயிற்றில் இருந்துகொண்டு மூத்திரம், மலம் இவைகளை வெளித்தள்ளும் இயல்புடையது அபானவாயு வாகும். வியானவாயு ஆகார ரஸத்தை நாடிகளின் மூலம் தேகமெங்கும் வியாபிக்கச்செய்யும். உதானவாயு ஆகாரத்தைச் சீரணம் செய்யும், சமானவாயு இதர வாயுக்களையெல்லாம் சமநிலையாக்கும்.

### நாகன், முதலான வாயுக்களின் குறிகள்

ஏவிய விக்கல் கக்கலிவை நாகன் றகுவன் கண்ணில்
மேவியே நிமைக்கும் கூர்மன் மிகமுக மலர்ச்சிமூறி
தாவிய நகை கொட்டாவி தருங்கிரு கரன்தானாமே
(பா)வகக் கோபதேவ தத்துவனாகும் பாரே. (71)

பார்த்திடி னுச்சிதன்னிற் பதைத்திடிற் றனஞ்செயன்தான்
போர்த்திடும் வாயுவெல்லாம் போகினுமுடல் பொருந்தி
வேர்த்துடல் விரிந்து வீங்கி விம்மி... ... ... ...ன்னைக்
காத்திருந் தடுத்தோர் மூன்றிற் கபாலத்தைப்
பிளந்துபோமே. (72)

(இ-ள்.) நாகன் என்ற வாயு விக்கல், வாந்தி செய்தல் முதலான செயல்களைச் செய்யும். கூர்மன் என்ற வாயு கண்களில் நின்று இமைத்தலைச் செய்கிறது. சிரிப்பு, கொட்டாவி இவைகளைக் கிரிகரன் என்ற வாயு உண்டாக்குகிறது. தேவதத்தன் என்று கூறப்படும் வாயு கோபத்தை ஏற்படுத்தும். தனஞ்சயன் என்று சொல்லப்படும் வாயு மண்டையுச்சியில் தங்கிநின்று சாகுங்காலத்தில் தேகத்திலுள்ள வாயுக்கள் சென்றபின்னரும் உடலில் 1/3 சாமம் சூக்ஷ்மமாக இருந்து வியர்வை, வீக்கம் இவைகளை உண்டாக்கிப் பின்னர் கபாலத்தின் வழியாக வெளியேறும்.

## இடை, பிங்கலை முதலான நாடிகளின் லக்ஷணம்

இடையது வலதுகாலிற் பெருவிர லெழுந்திடத்தி
லுடைதரு நாசிமட்டா முயர்ந்தபிங் கலையிடக்கா
லடுபெரு விரலைப்பற்றி வலநாசி யளவாய் நிற்குந்
தொடுசுழி முனை மூலத்தைத் துடங்கியே
சிரஸுமட்டாம்.(73)

மட்டிடுஞ் சிங்குவை நாவை வளைந்த புசிப்புக்கொள்ளுங்
கட்டிய புருடன் கண்ணிலலம்புழை காதிலாகுந்
தட்டு சங் குனி வினாத்தண் டளவதாகுங் குதந்தான்
விட்டிடு மபானமட்டாய் மேவிடும் வாயுப்பத்தே. (74)

(இ-ள்.) இடை என்ற நாடியானது வலது கால் பெருவிரலில் ஆரம்பித்து இடது நாசியில் முடியும். பிங்கலையென்ற நாடியோவெனில் வலது கால் கட்டை விரலில் ஆரம்பித்து இடது நாசிப்புழையின் நுனியில் நிற்கும். சுழிமுனை என்ற நாடி மூலாதாரத்திலாரம்பித்து சிரஸ் வரையில் நிற்கும் கிங்குவை நாடி நாக்கிலிருந்துகொண்டு ரஸத்தை அறியவைக்கும். புருடன் என்ற நாடி கண்களில் நிற்கும். அலம்புஷா என்ற நாடி காதுகளில் இருக்கும். சங்கினி என்ற நாடி ஸ்திரீ, புருஷர்களின் குறிகளில் நிற்கும். குதம் என்ற நாடி அபானத்தளவிலே நிற்கும்.

**குறிப்பு:-** இந்நூலில் காந்தாரி நாடியைப் பற்றியும், அஸ்திபிங்கு என்ற நாடியைப் பற்றியும் கூறப்படவில்லை. காந்தாரி இடது கண்ணிலும், அஸ்திபிங்கு என்ற நாடி வலது காதிலும் நிற்கும். "குதம்" என்று இங்கே கூறப்படும் நாடியானது சில கிரந்தங்களில் "குரு" என்று கூறப்பட்டிருக்கிறது.

## வாத நிதானம்

1. பக்வாசய வாதம்
2. ஆமாசய வாதம்
3. உதிர வாதம்
4. மாங்கிஷ வாதம்
5. மேதஸ் வாதம்
6. அஸ்தி வாதம்
7. மஜ்ஜை வாதம்
8. சுக்கில வாதம்
9. ஸந்திகத வாதம்
10. ஆக்ஷேபக வாதம்
11. அபதந்திரிக வாதம்
12. அந்திராயாம வாதம்
13. பாஹ்யாயாம வாதம்
14. பிராணாயாம வாதம்
15. அனுசிராங்க வாதம்
16. சீவுகத்தம்ப வாதம்
17. அர்தித வாதம்
18. சிரோக்ரஹ வாதம்
19. பக்ஷ வாதம்
20. சர்வாங்க வாதம்
21. தண்டக வாதம்
22. அபபாஹுக வாதம்
23. விச்வபி வாதம்
24. கஞ்ச வாதம்
25. பங்கு வாதம்
26. கலாயகஞ்ச வாதம்
27. ஊருகம்ப வாதம்
28. ஆட்டிய வாதம்
29. கொட்டுச்சீ வாதம்
30. வாதகண்டக வாதம்
31. க்ருத்ரஸீ வாதம்
32. பாதார்ச வாதம்
33. பாததாக வாதம்
34. கரதாக வாதம்
35. கரபாததாக வாதம்
36. அர்த்தாங்கதாகவாதம்
37. ஏகாங்கதாக வாதம்
38. சித்திராங்கதாக வாதம்
39. சுரோணித வாதம்
40. வாதசோணித வாதம்
41. பித்தசோணித வாதம்
42. சிலேற்பனச்சோணிதவாதம்
43. பிராண வாதம்
44. உதான வாதம்
45. வியான வாதம்
46. சமான வாதம்
47. அபான வாதம்
48. சாம வாதம்
49. நிராம வாதம்
50. பித்தாவரண வாதம்
51. வாதாவரணவாதம்
52. சிலேத்மாவரண வாதம்
53. இரத்தாவரண வாதம்
54. மாம்ஸாவரண வாதம்
55. மேதாவரண வாதம்
56. அஸ்த்யாவர ணவாதம்
57. மஜ்ஜாவரண வாதம்
58. சுக்லாவரண வாதம்

59. அன்னாவரண வாதம்
60. மூத்ராவரண வாதம்
61. மலாவரண வாதம்
62. சர்வாதாவரண வாதம்
63. பிராணபித்தாவரண வாதம்
64. உதானபித்தாவரண வாதம்
65. வியானபித்தாவரணவாதம்
66. சமானபித்தாவரண வாதம்
67. அபான பித்தாவரணவாதம்
68. சுரபித்தாவரண வாதம்
69. உதானாபித்தாவரணவாதம்
70. வியானாவரண வாதம்
71. சமானாவரண வாதம்
72. சிலேற்பணாவரண வாதம்
73. பிராணவுதானாவரணவாதம்
74. ஆமாவரண வாதம்
75. அனலெரி வாதம்
76. விரண வாதம்
77. சுடக்கு வாதம்
78. அண்ட வாதம்
79. குடல் வாதம்
80. கழல் வாதம்

**ஆக வாதம் 80 முற்றும்.**

# வாத நிதானம்

### பக்வாசய வாத குணம்

ஓதிய துவர்களான வுறுபண்டம் புசிக்கலாலுங்
கோதறு ரூட்சமான பதார்த்தங்கள் கொள்கையாலுந்
தாதுக்கள் கெட்டுநாடி தாழ்ந்த்தில் வாயுசேர்ந்த
போததி லுபத்ரவங்கள் பொருந்திய வாதமாமே. (1)

காலத்தில் மலம்விடாது குறிப்பிடுங் குடல்கமெங்கு
மாலித்த வயிரேவூது மசுமரி கல்லடைப்பு
மூலத்தில் வியாதியுண்டா முதுகரை பிடிநோவாம்
பாலித்த வுந்திக்கீழ்னோய் பக்குவா சயமாமென்னே. (2)

(இ-ள்.) துவர்ப்பான பதார்த்தங்களை அதிகமாகச் சாப்பிடுவதனாலும், வரட்சியான ஆகாராதிகளையும் உட்கொள்வதாலும் உடம்பிலுள்ள தாதுக்கள் கெட்டு நாடிகள் தாழ்ந்து, வாயுவும் சேர்ந்து பலவித உபத்ரவங்களை உண்டாக்கும்.

காலத்தில் மலம் போகாது. குடலில் வாயுசேர்ந்து பொருமலுண்டாகும். அச்மரி (கல்லடைப்பு) மூலவியாதி, பிடரிநோய், வயிற்று நோய் முதலான வியாதிகளை ஏற்படுத்தும். இவை பக்வாசய 'வாதக்குறி' குணங்கள்.

**ஆமாசய வாத குணம்**

தண்ணீர் தவிக்கும் வாந்திக்கும் சரீரந்துடிக்குந் தொண்டை
கட்டுங்
கண்ணோடிடிக்கும் காதடைக்குங் காசசுவாச முண்டாக்கும்
வெண்ணோய் கொண்டுவுடல் திமிர்க்கும் விஷூசிபிறக்கும்
நாபியின்மேல்
மண்ணோரிறங்க வலியுண்டா மாமாசயத்தில்
வாதமென்னே. *(3)*

*(இ-ள்.)* தண்ணீர் தாகமுண்டாகும். வாந்தி, சரீரத்தில் துடிப்பு, தொண்டைக் கட்டல், கண்துடிப்பு, காதடைப்பு, இருமல், மேல்மூச்சு இவைகளுண்டாகும். மேலும் உடம்பில் மதமதப்புமுண்டாகும். விஷூசி (காலரா) உண்டாகும். வயிற்றுவலியுமதிகமாயிருக்கும். இவை ஆமாசயவாத லெட்சணங்களாகும்.

**உதிரவாத குணம்**

உடம்பெல்லாங் கடுத்துநோவா மொய்வில்நித்
திரையுமுண்டாம்
உடம்பெல்லா மெரிவுமுண்டா மோங்கிய திமிருங்காணும்
உடம்பெல்லா முலர்ந்து வற்று மோங்கார மருசியுண்டா
முடம்பெல்லா மிவ்வண்ணமாகும் உதிரத்தில்
வாதமாமே. *(4)*

*(இ-ள்.)* தேகத்தில் கடுப்பு வலியுண்டாகும். அதிகத் தூக்கமேற்படும். உடம்பில் எரிச்சல், மதமதப்பு, வரட்சியுடன் இளைப்பு, ஓக்காளம், அரோசகம் முதலான குறிகள் உண்டாகும். இவைகள் 'உதிரவாத' லெக்ஷணங் களாகும்.

### மாங்கிஷ வாத குணம்

அங்கமெங்கும் கனக்கு மதிகவே தனையுமுண்டாம்
சங்கையி லடிபட்டாற்போற் சரீரம்நொந் திமிருமுண்டாம்
பொங்கிடுஞ் சிலந்தி குத்தும் வலிகளும்
பொருந்துமென்னில்
அங்கமாங் கிஷத்தில்வாத மிதுவெனச் சொல்லலாமே. (5)

(இ-ள்.) உடம்பில் பாரமுண்டாம். வேதனையும் அளிக்கும். அடிபட்டால் எவ்வாறு தேகத்தில் வலி யுண்டாகுமோ அவ்வாறு வலியேற்படும். மத மதப்பும் உண்டாகும். இவைகளேற்படில் இது மாங்கிஷ வாதம் (அதாவது மாம்ஸ வாதம்) என்று கூறப்படும்.

### மேதோவாதக் குறிகள்

தூங்கியே வுடல் குளிர்ந்து தூலமாய் மிகக் கனத்துப்
பாங்குறுப் பசியுமின்றிப் பலப்பட மலஞ் சிறுத்துத்
தாங்கிய சரீரந்தன்னிற் றடியடிப் படுகை போல
வீங்கிவே தனையுங் காணில் மேதஸ¬ வாதமென்ன. (6)

(இ-ள்.) தூக்கமுண்டாகும். உடல் குளிர்ந்து கனமுண்டாகும். பசியிராது. மலம் கொஞ்சமாக வெளியாகும். அதாவது மலச்சிக்கலுண்டாகும். தடியினால் அடியுண்டவன்போலத் தேகத்தில் வீக்கமும் வேதனையும் உண்டாகும். இவை மேதோவாதக் குறிகுணங்கள்.

### அஸ்திவாதக் குறிகுணங்கள்

சந்திகள் பொருந்துந் தோறுந் தளர்வுறக் குத்துண்டாகும்
நொந்திடுந் துடையிரண்டும் நோமிகுந் தெலும்பிற்குற்றி
முந்திய பலமுங்கெட்டு முளைக்குமிக் குணங்கள் கண்டால்
அந்தமா முலையாயத்தி வாதமென் றுரைக்கலாமே. (7)

(இ-ள்.) மூட்டுக்கு மூட்டு வலியேற்படும். துடையிரண்டிலும் வலியுடன் எலும்பிலும் குத்தலுண் டாகும். இதனால் தேகத்திலுள்ள பலம் குறைவடையும். இது அஸ்திவாத லெக்ஷணங்கள்.

### மச்சை வாத குணம்

அங்கத்தி லெலும்பு தன்னை யழிவுறக் குழியப் பண்ணும்
சங்கத்தில் சுக்கிலந்தான் சணைந்தரியாதே போகு
மங்குற்ற சுக்கிலந்தான் வாராமற் போகிலுங் கண்ணிற்
பொங்குற்ற வுறக்கம்நீங்கும் புகன்றிடும் மஜ்ஜைவாதம். (8)

(இ-ள்.) தேகத்திலுள்ள எலும்புகளையரித்து வளையும்படி செய்யும். ஸ்திரீபோகம் செய்கையில் சுக்ரம் உடனே வீழ்ந்துவிடும் அல்லது வராமல் போனாலும் போகும். தூக்கம் வராது. இவை மஜ்ஜைவாதக் குறிகள்.

### சுக்கிலவாதக் குறிகள்

நரம்புகள் பொருமிக் காணும் நல்லசுக் கிலங்கேடாகும்
விரும்பிய கர்பந்தன்னில் வீழ்ந்துபோ துடலந் தன்னைக்
குறும்பைசேர் முலையாய்! நெட்டை குட்டையு
மாகப்பண்ணு
மரும்பிய சுக்கிலத்தில் வாதமென் றறியலாமே. (9)

(இ-ள்.) நரம்புகள் உப்பிசமாகும். சுக்கிலமும் கெடும். அதனாலேற்பட்ட குழந்தைகள் அதிக நெட்டையாகவோ அல்லது குட்டையாகவோ ஆகும். இவைகள் சுக்கிலவாத குணங்களாகும்.

### பைத்திகசு வாதத்தின் குணம்

துருத்திபோ லூதி வீங்கும் துடித்துடல் மாத்தித் குத்தும்
பெருத்ததோ ரங்கமெங்கும் பிளந்துபோம் போலிருக்கும்
மிருத்தியே முடக்குஞ் சந்தோடிடுப்பது நடுநடுக்கும்
கருத்திலே காணுஞ் சந்தி கதவாதமென்னலாமே. (10)

(இ-ள்.) உடல் ஊதிய துருத்திபோல் வீங்கும் (உப்பும்). தேகத்தில் குத்துவலியும் ஏற்படும். கைகள், கால்கள் முதலான உறுப்புகள் பிளந்து போவதைப்போன்ற வலி, கைகால்களையும் முடக்கிவிடும். இடுப்பு நிற்காமல் நடுங்கும். இவை ஸந்திகதவாதக் குணங்கள்.

### ஆட்சேபக வாதக் குணங்கள்

நடப்பிலே வாதமுண்டாய் நாடிகடோறுந் தங்கித்
தடப்பாவுபயவங்கஞ் சேர்ந்துடல் முடக்கிக் கொள்ளு
மடக்கொடி யணையாய்! யிங்ஙண் வருங்குணங் காண்பீராகி
லடர்ப்படு கொடுமையான ஆட்சேப வாதமென்னே. (11)

(இ-ள்.) தேகத்தில் வாதம் அதிகரித்து நாடிகள் தோறும் தங்கி மூட்டுகளை முடக்கும். இது "ஆட்சேபக வாதம்" ஆகும்.

### அபதந்திர வாத குணம்

வாயுகீழ் நோக்காமல் மார்பிலேகி
வளர் நரம்புதோறும் பரந்துடலாஞ் சென்னி
யேயுரப்பிக்க வெலும்பு நோவா
யேகமாயுடம் புழுங்கித் தனுஸ-போன்று
காயுரா மூச்சுவிட அரிதேயாகிக்
கண்ணில் குத்தித் தண்ணீர் ததும்பிமூடி
ஆயுற்ற புறாப்போற் கூப்பிடுமேயென்னில்
அபதந்திர வாதமென அறிகுவீரே. (12)

(இ-ள்.) வாயு தன் ஸ்வபாவமான நிலையிலிருந்து (கீழ்நோக்கிய பாதையிலிருந்து) விலகி மேல்நோக்கி மார்பில் தங்கி, உடல்தோறும் பரவும். தலைவலியுண்டாகும். எலும்புகளிலும் வலியேற்படும். மூச்சுத் திணறலும் ஏற்படும். கண்களில் குத்துவலி உண்டாகிக் கண்ணீர் ததும்பும். புறா சப்தமிடுவதைப் போன்று "குர் குர்" என்று சப்த மிடுவான். இவை அபதந்திர வாத லக்ஷணங்கள் என்று தெரிந்துகொள்ளவும்.

### இதுவுமது அசாத்ய குணம்

ஆன அபரதந்திக மோகமுண்டாய்
அதுசமிக்கும் போதுவெகு சோகமுண்டா
யீனமுர யீண்டுயீண் டெய்து மானு
மிவைகர்ப்பம் பிறந்தபிற கெய்து மானுஞ்
சோதனை போவுதிடு போவுதிடுமதொன்று மாலுஞ்
சொல்லும்பின்னபிகாதமே துலங்கு மாலுந்
தானிதனை சாஸ்திரமென் றுரைக்கலாமே
தரணமிசை யாயுள் முறை சாற்றினோமே. (13)

(இ-ள்.) அபதந்திரக வாதம் ஏற்படும்போது மயக்கமுண்டாகும். அது நீங்கியபின் வருத்தம் உண்டாகும். இந்நோய் அடிக்கடி ஏற்பட்டு வாதனை செய்யும்.

### அந்திராயாம வாதம்

அங்கு கட்டி நரம்புதோறும் பரந்துதேக
மடங்கலுமே வியாபித்துப் பல்லுக்கிட்டி
யிங்குமிகக் காரையெலும் பதுவளைந்தே
யிசைந்தவுடல் வில்லதுபோ லுள்வணங்கி
யுலவியகண் ணில்குத்தி விலாவில் நொந்தே
யுயர் முதுகு தலைகோணி கைகாலோய்ந்தாற்
சொலுமிதனை யந்தரா யாமமென்றே
துலங்கியவுள் வீச்செனவுஞ் சொல்லலாமே. (14)

(இ-ள்.) வாயு, நரம்புகள் மூலமாகத் தேகம் முழுவதையும் வியாபிக்கும். பற்கள் கிட்டிவிடும். காரையெலும்புகளை வளைத்து (கழுத்துக்கீழுள்ள எலும்பு) உடலை வில்லுப்போலாக்கும். (முன்பக்கம் வளைக்கும்) கண்களில் குத்துவலி, விலாப் புறங்களில் வலி, முதுகு, தலை முதலான இடங்களில் கோணல், கை கால்களில் சோர்வு முதலான குறிகளும் காணும். இவை அந்தராயாமக் குறிகளாகும்.

### பாஹ்யயாயாமக் குறிகள்

ஆகமே வில்லென வளைந்து அம்பகம்
வேகமே நிலை குத்தி விலாவு நோகவு
மோகயுந் தலை கோலு முள் வீச்சைப்போல்
பாகியா யாமக் குணமும் பகருவாம். (15)

(இ-ள்.) தேகம் வில்போன்று வெளிப்புறமாக வளையும். விலாவில் வலியுண்டாகும். மயக்கம், தலைவலி இவைகளும் ஏற்படும். உள்வீச்சில் காணப்படும் குறிகளும் காணும்.

### பிராணாயாம வாதக்குணம்

தாகஞ்சேருஞ் சரீரம் வளைந்திடும்
தேகம் நோகும் விரணங்கள் சேர்ந்திடும்
வேகவாயுவுண் டாகும் வெளுக்குமே
லாகும் வாதப் பிராணய மாமதே. (16)

(இ-ள்.) நாவறட்சி உண்டாகும். சரீரம் கூனிவிடும். உடம்பு வலியும் ஏற்படும். இரணங்கள் உண்டாகும். வாயு தேகத்திலதிகரித்துச் சரீரம் வெளுத்துவிடும். இவை பிராணாயாம வாதக்குறிகள்.

### அனுசிராங்கிஷ வாதக் குறிகள்

வருந்தி நாநீட்டும்போதும் வருத்தமாய்க் கடிக்கும் போதும்
திருந்துகொட் டாவிப்போதும் செவிக்கன்னத் தடிக்கும்
போதும்
பொருந்திடும் வாயு வாயைப் புதைக்குமன்றிப்பிளக்கும்
அருந்தல்போம் பேச்சுமுண்டாம் அனுசிராங்
கிசமிதாமே. (17)

(இ-ள்.) நாக்கை வெளியே நீட்டும்போதும், கஷ்டப்பட்டு கடிக்கும்போதும், கொட்டாவி விடும்போதும், காது, கன்னம் முதலான இடங்களில் அடிக்கும்போதும், வாயு வாயைக் கிட்டும்படியாகவோ அல்லது பிளர்ந்தவண்ணம் இருக்கும்படியாகவோ செய்யும். தண்ணீர் முதலானவை களைக் குடிக்கமுடியாது. பேசுவதற்கு இயலும்.

**சிகுவாத்தம்ப வாதக்குணம்**

நாவினிலிருந்து பேசுந் தாதுகள் நலிந்து சேராத்
தாவியே வாயுச் சேர்ந்து நாக்கைத்தம் பிக்கச் செய்யும்
ஆவலாய்ச் சோறுதண்ணீ ரருந்தவு மரிதேயாகுஞ்
சேவையாங் குணங்கள் கண்டால் சிக்குவாத்
தம்பமென்னே. *(18)*

(இ-ள்.) நாக்கில் பேச்சுக்குக் காரணமான நரம்புகள் பலஹீனமடைந்து வாயுவும் சேர்ந்து நாக்கை ஸ்தம்பிக்கச் செய்துவிடும். சோறு, தண்ணீர் இவைகளை உட்கொள்ளவும் இயலாது. இவை சிகுவாத்தம்பம் (ஜிஹ்வாஸ்தம்பம்) என்ற நோயின் குறிகளாகும்.

**அர்த்தித வாதக்குணங்கள்** (Facial Paralysis)

மூக்கொடு கண்ணும்வாயு முகமுஞ்செம் பாகிக் கோணும்
நாக்கது குளறுஞ்சென்னி நடுங்கிடுங் காதடைக்குந்
தூக்கமும் பயமு முண்டாந் தும்மலு மறிவு நீங்கும்
ஆக்கமு மழகுங் குன்றும் அர்த்தித வாதமாமே. *(19)*

(இ-ள்.) மூக்கு, கண்கள், வாய், முகம் இவைகள் சிவந்து கோணிவிடும். பேசும்போது நாக்குக்குளறும். தலை நடுங்கும். காதடைக்கும், தூக்கம், பயம், தும்மல் முதலானவைகளுண்டாகும். மூளை சரியாக வேலை செய்யாது. அழகு குறையும். இவை அர்த்தித வாத லக்ஷணங்களாம்.

### சிரோக்ரஹ வாதக்குறிகள்

*கதித்திடு மிரத்தந் தன்னைக் கலந்திடும் வாயுச்சென்னி*
*பதித்திடும் நரம்பிலேறிப் பதித்திடச் செவிகண்மூக்கு*
*விதித்தபல் பிடரிகுத்தி வேகமாய் நெற்றியுச்சி*
*யதிர்த்தியாய்த் தலைவலிக்குஞ் சிரோக்ரஹ வாதமாமே. (20)*

(இ-ள்.) வாயு இரத்தத்துடன் கலந்து மண்டையிலுள்ள நரம்புகளிலேறிக் காதுகள், கண்கள், மூக்கு, பற்கள், பிடரி முதலான இடங்களில் தாங்கமுடியாத குத்துவலியை உண்டாக்கும். நெற்றி, உச்சி, தலை முதலான இடங்களிலும் வலியேற்படும். இது சிரோக்ரஹ வாதமாகும்.

### பக்கவாதக் குணம்

*ஒரு புறம் வாயுத்தானே வுயரந்தப் புறத்திலுள்ள*
*சிரை குடற் வற்றியிந்தப் பாகத்தை யயரச் செய்து*
*தருவிழி மூக்குக் காது சரணம் நாத் தாழ்ந்தயர்ந்து*
*மருவிய குணங்கள் பக்க வாதத்தின் மகிமைதானே. (21)*

(இ-ள்.) தேகம் முழுவதிலும் வாதம் வியாபித்துத் தோல் நரம்புகள் இவைகளைப் பீடித்துச் சோர்வையுண்டாக்கி வேலைகளைச் செய்யமுடியாமல் ஆக்கிவிடும். இவை ஸர்வாங்கவாத இலக்ஷணங்கள்.

### சருவாங்க வாத குணம்

*மிக்குள சரீமெல்லாம் வாதமே விரவிநின்று*
*தொக்குடனரம்பைப் பற்றிச் சோரவே அயதிசெய்து*
*புக்கிய யபயயங்கெட்டுப் போகமு மீனமாகும்*
*இக்குணஞ் சொன்னேன் சொன்னேன்*
*சர்வாங்கவாதமென்னே. (22)*

(இ-ள்.) தேகம் முழுவதிலும் வாதம் வியாபித்துத் தோல் நரம்புகள் இவைகளைப் பீடித்துச் சோர்வையுண்டாக்கி வேலைகளைச் செய்யமுடியாமல் ஆக்கிவிடும். இவை சர்வாங்க வாத இலக்ஷணங்களாகும்.

### பக்கவாதம், ஸர்வாங்கவாதம் இவைகளின் அஸாத்ய குணம்

வரும்பக்க வாதமெனுஞ் சர்வாங்க வாதமெனுங்
கரும்பித்த வாயுவாலே கண்டிடிங் கட்டசாத்யம்
தரும்பித்தனாசி லேர்பஞ் சேர்ந்த சரீரத்தோர்
கயார்வமியந்தன்
அரும்பித்த வெட்டுப்பட்டோர்க் கசாத்திய
மென்னலாமே. (23)

(இ-ள்.) சர்வாங்கவாதமோ, பக்கவாதமோ, பித்தம் வாயு இவைகளோடு சேர்ந்திருந்தால் அது கஷ்டஸாத்யமாகும். பித்தம், கபம் முதலான பிரக்ருதிகளுக்கும், வெட்டுப்பட்டோர்களுக்கும் உண்டாகும் பக்கவாதம் அஸாத்யமாகும்.

### தண்டகவாத குணம்

ஆமகட்டதானால் வாயு வதிகமாய்ச் சிலேற்பனத்தைத்
தாமகட்டாகச் சேர்த்துத் தடித்திடுஞ் சரீமெல்லாம்
நோமக்கட்டான மேனி நுவலிளைப்பெயர்புத்தோன்றுந்
தாமக்கட்டான ரோகந் தண்டக வாதமாமே. (24)

(இ-ள்.) ஆமத்துடன் (அபக்வமான அன்ன ரஸத்துடன்) வாயு அதிகரித்துக் கபத்துடன் சேர்ந்து, சரீரத்தை ஸ்தூலிக்கச் செய்யும். சரீரம் வாட்டமடையும்.

### ★அவசர குகவாதக் குணங்கள்

தருமசைவாகிய தக்கந் தன்னிலே
பெருகி வாயுவால் நரம்பு பேதமாக
யிருகர மசைவா யிழுத்து நொந்திடில்
வரும் அவசர குகவாத மகாகுமே. (25)

(இ-ள்.) அசையும் மூட்டுகளில் வாயு அதிகரித்து நரம்புகளையும் கெடுத்து முக்கியமாக இருகைகளையும் அசைக்கமுடியாமல் செய்யும். அதிக வலியுமுண்டாகும். இது ★அவசர குகவாதம் (அபபாஹுகம்) என்ற வாயுவாகும்.

## விச்வபி வாதக்குறிகள்

உள்ளங்கை விரல் கழுத்துச் சிகை முதுகுடந்தையான
தள்ளரும் வாயு வந்த நரம்பினைச் சார்ந்திழுத்துக்
கொள்ளவே யவயவங்கள் முடங்கிடும் குத்திநோகும்
யெள்ளருஞ் சரீர மெய்க்கும் விச்வபி வாதமென்னே. (26)

(இ-ள்.) உள்ளங்கை, விரல், கழுத்து, மயிர், முதுகு முதலான இடங்களிலிருக்கும் நரம்புகளை வாயுபற்றி யிழுத்துக்கொள்ளும். அப்போது அவயவங்கள் முடங்கி விடும். சரீரத்தில் குத்துவலியுமுண்டாகும். இவை விச்வபி வாத லக்ஷணங்களாகும்.

## கஞ்சவாத லக்ஷணங்கள்

சொல்லிய அரையில் நின்ற வாயுதான் துடையில் சேர்ந்தால்
ஒல்லிய லொருகால்மொண்டி யாயிடுமுரைத்தவாயுப்
புல்லிய துடையிரண்டும் பொருந்திற்சப் பாணியாகு
மெல்லிய கஞ்சவாத மிதுவென விளம்பலாமே. (27)

(இ-ள்.) விலாப்புறங்களில் இருக்கும் வாயு துடையில் சேர்ந்து ஒருகாலை முடமாகச்செய்யும். இரு துடைகளிலும் சேர்ந்து சப்பாணியாகவும் செய்யும். இதனையே கஞ்சவாதம் என்று கூறுவர்.

## பங்குவாத லக்ஷணம்

அரையினில் நின்றவாயு வதிகமாய்பிரகோ பித்தே
யிருதுடை நரம்பைப்பற்றி யிழுத்திடு மவதிகாணுந்
தரைமிசை நடக்கவெண்ணிற் றள்ளிடுந் துடைநடுக்கும்
பரிவுட னுழையுங் குத்தும் பங்குவா தந்தானென்னே. (28)

(இ-ள்.) விலாப்புறங்களிலுள்ள வாயு அதிகமாய் பிரகோபமடைந்து இரு துடை நரம்புகளையும் பற்றி இழுக்கும். தாங்கவொண்ணாவலியும் உண்டாகும். நடக்கவாரம்பித்தால் கீழே தள்ளும். துடை நடுங்கும்.

துடையில் குத்துவலியுண்டாகும். இவை பங்குவாத லக்ஷணங்கள்.

**கலாய கஞ்ச லக்ஷணங்கள்**

*தரைமிசை நடக்கிலங்கம் நடுங்கிடுஞ் சந்துநோவாம்*
*பரிவுற நடக்கிற் கோணும் பரிந்தமெய் குளிர்ந்துளைந்து*
*திரிவுறக் கெடுக்கும் வாய்வுச் சிக்கியே மலத்தைக் கட்டுங்*
*கறிவுறு குணங்களாய கஞ்ச வாதமென்னே. (29)*

*(இ-ள்.)* தரையில் நடக்கும்போது தேகத்தில் நடுக்கம் உண்டாகும். மூட்டுகளில் வலியுண்டாகும். தாங்கித்தாங்கி நடப்பான். உடலில் குளிர்ச்சியேற்பட்டு வலியுண்டாகும். மலச்சிக்கலுண்டாகும். இவைகள் "கலாயகஞ்சக்" குறிகள்.

**ஊறுஸ்தம்ப வாதக்குணம்**

தாக்கிய துடையிரண்டுங் குளிர்ந்துதம் பித்துநொந்து
பார்க்கி வன்னிதாமொன்றைச் சுமந்திடும் பரிவுபோன்று
வீக்கம் வேதனையுமுண்டாய் விம்மியே மேதையென்பு
சேர்க்கையா மூறுஸ்தம்ப வாதத்தின் செய்திதானே. *(30)*

*(இ-ள்.)* இரண்டு துடைகளும் குளிர்ந்து அசைக்க முடியாமல் போய் வலியுடன் இருக்கும். தேகத்தைச் சிரமத்துடன் சுமப்பான். வீக்கம், வேதனை, கொழுப்பு, எலும்பு இவைகளின் உள்ளே குத்துவலி முதலானவைகளேற்படும். இவை ஊருஸ்தம்பக் குறிகளாகும்.

**அண்டிய [ஆட்டிய] வாதக்குணங்கள்**

வெய்யதோர் வாதஞ்சோப மேதையைச்சார்ந்து நின்று
நய்யவே கெடுத்திரண்டு துடையெலும் பூடு நண்ணித்
தொய்யவே கணத்து நொந்து வேதனை தோன்றுமாகில்
அய்யகோ சொன்னேன் சொன்னேன் அண்டிய (ஆட்டிய)
வாதமென்னே. *(31)*

(இ-ள்.) வாதம் தொடையிலுள்ள கொழுப்பைச் சேர்ந்து அதைக்கெடுத்துப் பின் இரு துடையெலும்பிற்குள்ளும் பார உணர்ச்சியைக் கொடுத்து வலியையுண்டாக்கும். இது "ஆட்டிய வாதக்" குறிகளாகும்.

### கொட்டுச்சீட வாதகுணம் [நரித்தலை வாயு]

*இரத்தத்தில் வாயுச்சேர்ந்து வேதனைமிகயெழுப்பி*
*நரித்தலைப் போல் முழங்கால் நலிவுற வீங்கிக் கொள்ளும்*
*பரித்தகால் மடக்கிநீட்டப் படர்ந்துளைந் தயர்ந்து தாழு*
*முரைத்திடுங் கொட்டுச்சீட வாதமொன்றுரைக்கலாமே. (32)*

(இ-ள்.) வாயு இரத்தத்துடன் கலந்து முழங்காலில் வேனையுடன் நரித்தலையைப் போன்ற வீக்கத்தை யுண்டாக்கும். நீட்டி, மடக்கமுடியாது. கால் பலஹீன மடையும். இவை கொட்டுச்சீட (க்ரோஷ்டக சீர்ஷம்) நரித்தலை வாயு என்ற நோயின் குறிகளாகும்.

### கண்டக வாதக்குறிகள்

*நடந்துலைந் துதிரந் தொய்யும் நாளினில் வாயுச்சேர்ந்து*
*துடர்ந்துளைந் திடுங் காண்டை சூலைபோல்*
*கட்டிக்கொள்ளுந்*
*தடந்திரும்பிட வொட்டாது சரீரத்தைத் தளர்ச்சி செய்யும்*
*மடந்தையே! கேளாய் வாத கண்டக வாதமாமே. (33)*

(இ-ள்.) இரத்தக் குழாயில் வாயு அதிகரித்து கெண்டைச் சதையில் சூலையைப்போல் கட்டிக்கொள்ளும். முன்பின் திரும்பமுடியாது. சரீரத்தில் அயர்ச்சியைத்தரும். இது வாதகண்டக ரோகமாகும்.

### கிரத்தசி வாதக்குணம்

*நீட்டிடுங் கைகால் தன்னில் நிலவிய விரல்கள் கோணு*
*மாட்டிடுங் கழுத்துச்சாயு மதிகவே தனையுண்டாகுந்*
*தாட்டிகந் தவிருமேனி தளர்ந்திடுங் குணங்கள் கண்டாற்*
*கேட்டமர் மானே! சொன்னேன் கிரத்தசி வாதமென்றே.(34)*

(இ-ள்.) கைகால்களிலுள்ள விரல்கள் கோணும். கழுத்து ஒருபக்கம் சாய்ந்துவிடும். அதிகமான குத்துவலியுண்டாகும். உடலில் பலம் குறையும். தளர்ச்சியும் உண்டாகும். இவை கிருத்தசி (க்ருத்ரஸீ) வாதக்குறிகளாகும்.

**பாதார்ச வாதக் குறிகள்**

*செயல்பெரு சிலேற்பம் வாதம் உள்ளங்காலதனில் சேர்ந்து*
*பயம் வரக் கூசிக்கூசிப் பத்தியிற்றுணர்ச்சியன்றி*
*சுயகுணங் கெட்டுக்காலைச் சூழ்ந்துகீ றினுந்தோன் றாதே*
*யியல்பெரு மாகிற்பாதா ரிசவாத மென்னலாமே. (35)*

(இ-ள்.) வாதமும் கபமும் உள்ளங்கால்களைப் பற்றி நடக்கையில், பயமும் கூச்சமும் உண்டாகும். உணர்ச்சி குன்றி காலில் மதமதப்பு ஏற்படும். கத்தியினால் கீறினாலும் தெரியாது. இவை பாதார்ச வாதக்குறிகளாகும்.

**பாத தாகக் குறிகள்**

*பித்தத்திலேனு மற்றப் பெருகிய விரத்தத்தேனு*
*நத்தியவாயுச் சேர்ந்து தழலென யெரிவுகாணுங்*
*குத்திரஞ் செய்கைபோன்றுங் குமுறிடுங் குணங்களாகி*
*வித்தைநீ பாததாக வாதமென் றிசைக்கலாமே. (36)*

(இ-ள்.) பித்தம் அல்லது இரத்தம் இவைகளுடன் வாயு சேர்ந்து, கால்களைப்பற்றித் தாங்கமுடியாத எரிச்சலை யுண்டாக்கும். நடக்கமுடியாது. இவை பாததாகக் குறிகள்.

**கரதாகக் வாதக் குணங்கள்**

*அனலென யெரிவுண்டாகு மருந்தோலி பொரிந்து போகுங்*
*கனமிகுமகங்கை ரண்டுங் கருநிறங் கன்றிக் காணும்*
*புனலெனக் குளிருமோர் கைப் பொங்கிய வேகமாகக்*
*கனலென யெரியு மோர்கை கரதாகவாதமென்னே. (37)*

(இ-ள்.) உடலில் அனல்பட்டாப்போற் எரிச்சல் ஏற்படும். தோல் பொரிந்து போகும். கைகள் இரண்டும் கருநிறமாகி அழன்றுபோம். ஒருகையில் தண்ணீரில் நனைத்தாப்போல் குளிர்ச்சியும் மற்றொரு கையில்

நெருப்பைத் ததொட்டாப் போல் எரிச்சலும் உண்டாகும். இவை கரதாக வாத லட்சணங்கள்.

### கரபாத தாக லெட்சணங்கள்

கையுள்ளுங் காலினுள்ளுங் கனலெனவெரிந்து காந்தும்
பொய்கைநீ ரதனீர் கால்கைப் புகுத்தினும்
பொறாமையாகும்.
மெய்யது சோர்வுகாணு விழிதுயிலாது வேர்வை
செய்கர பாததாக வாதத்தின் செயலிதாமே. (38)

(இ-ள்.) கை, கால் முதலான இடங்கள் நெருப்பிலிட்டாப்போல் எரிச்சலுடன் அழற்சியுண்டாகும். கால் கைகளைத் தண்ணீருக்குள் வைத்திருந்தாலும் குளிர்ச்சியிராது. உடல் சோர்வடையும். தூக்கம் வராது. வியர்வை அதிகரிக்கும். இவை கரபாத தாகக் குறிகள்.

### அத்தாங்க தாக வாதக்குணங்கள்

சினமுறு வாயு சோபஞ் சீறியே யிரத்தந்தன்னைக்
கனமுற வோர்புறத்தி லொதுக்கியே காந்தலுண்டாய்
மனமது கலங்கச்செய்து வகிர்ந்துடல் பகிர்ந்தெரிந்தே
யனலுமத் தாங்கமான வாதமென் றறிகுவீரே. (39)

(இ-ள்.) வாயு பிரகோபித்து இரத்தத்தைத் தேகத்தினொருபுறத்திலே ஒதுக்கி அழற்சியையுண்டாக்கும். மனம் கலக்கமடையும். உடலில் பாதிபாகம் எரிச்சலுடன் இருக்கும். இவை அத்தாங்க வாதக் (அர்த்தாங்கவாதக்) குறிகளாகும்.

### ஏகாங்க வாதக்குறிகள்

ஏகாங்கஞ் சென்னியாதி சரணமீ றாகவாயுப்
பாகாங்க மாகத்தானே பரந்துடல் வேர்த்துக்குத்தி
நோகாங்க மெங்குங் காந்தல் மெலிந்துடல் துடங்கச்செய்யி
லேகாங்க்த தாகவாதக் குணமென வியம்புவீரே. (40)

(இ-ள்.) தலை முதல் கால்கள் வரை ஒவ்வொரு பாகமாக வாயு பரவி நின்று, உடலில் வியர்வை, வலி, எரிச்சல் இவைகளை ஏற்படுத்தும். உடல் மெலிவடையும். இவை ஏகாங்க வாதக்குறிகள்.

***குறிப்பு:-*** ஒரு சமயத்தில் ஒரு இடத்தில்தான் வலி, எரிச்சல், அழற்சி இவைகள் உண்டாகும்.

### சித்ராங்க தாகவாதக் குணங்கள்

*வாரும்பொற்பான தேகம் வட்டம் வட்டங்களாகச்*
*சாருமே காந்தல் காந்தி தணிந்துபின் காந்தலுண்டாம்*
*பாருந்து கனவு காணும் பங்கமே சங்கையாகச்*
*சேருஞ்சித் ராங்கதாக வாதத்தின் செய்திதானே.* (41)

(இ-ள்.) தேகத்தில் வட்டம் வட்டமாக எரிச்சல் ஏற்பட்டுக் குறைவடையும். மறுபடியும் எரிச்சலுண்டாகும். தூக்கம் வராது. கனவு காண்பான் இவை சித்ராங்கவாத லக்ஷணக்ஷங்கள்.

### சுரோணித வாதம் ஏற்படக் காரணங்கள்

*கொண்டிடிற் சரீரங் காந்தும் பதார்த்தங்கள் கொள்கையாலு*
*முண்டிடிலிரத்தந் தன்னை யுருஞ்சிடும் பதார்த்தத்தாலும்*
*மிண்டிய சாக்கிரத்தில் விருத்திநித் திரைகளாலும்*
*மண்டுமை துனங்களாலும் வாதள பத்தைத்தாலும்.* (42)

*ஆகிய செல்வமிஞ்சி நடவாம விருக்கையாலும்*
*பாகமாங் குதிரையானை பலப்பட வேறலாலும்*
*பேகமாய் வாயுவுண்டாய் விபரீதமா யிரத்தஞ்*
*சோகமாய் வாங்கிச் சோர்ந்து சுரோணித வாதமுண்டாம்.* (43)

(இ-ள்.) சரீரத்தில் உஷ்ணத்தையதிகரிக்கும் பதார்த்தங்களை உட்கொள்வதாலும், இரத்தத்தை உறிஞ்சும் பண்டங்களைச் சாப்பிடுவதாலும் பகலில் தூங்குவதாலும், அதிகமான ஸ்திரீபோகத்தாலும், (வாதத்தையதிகரிக்கும்

பதார்த்தங்களாலும்) அதிக செல்வத்தினால் நடக்காமலிருந்தாலும், குதிரை, யானை முதலான மிருகங்களின் மேல் அதிகமாகச் சவாரிசெய்வதாலும், தேகத்திலுள்ள வாயு கெட்டுப்போய் இரத்தத்துடன் கலந்து சோணித வாதத்தையுண்டாக்கும்.

### சோணிதவாதக் குறிகள்

காணுமே யெலிவிஷம் போல் கனப்புடன் றடிப்புமாகப்
பூணுடம் புளையுங் குத்தும் பொருந்திய சொறி கனப்புந்
தோணிடுந் துடிப்புத் தேகங் கிள்ளினாற் சோதியாது
மானிள முலையாய்! வாத சுரோணித வாதமாமே. *(44)*

கையினிற் கறண்டை தன்னிற் கட்டிடுஞ் சதைத்தோல் வீங்கு
மையுறு கருமை செம்மை யடுத்தெறிந் தழலும் வீக்கம்
மெய்யினைப் பிளக்கும் வாதம் வியாபிக்கு முடம்பதாக்கு
மையலர் உடல்தம்பிக்கும் வாதசுரோ ணிதமிதென்னே. (45)

சிலுசிலென்றெரியுந் தேகந் தினவுநீர் பொசியும் வீங்கும்
பலபல வர்ணங்காணும் நிலைநடு நடுங்குஞ்சீதஞ்
... ... ... ... ... ... ... ... செறியநெட் டூரமாகு
மலமது செறுக்குங் குத்தும் வாதசுரோ ணிதமென்னே. *(46)*

(இ-ள்.) எலிவிஷம் போல் எரிச்சலுடன், தடிப்பு ஏற்பட்டு உடம்பில் உளைச்சலும் குத்துவலியும் உண்டாகும். சொறி, தேகத்தில் நடுக்கம், கிள்ளினால் உணர்ச்சியின்மை முதலான குறிகளும் காணும்.

கையிலும், கெண்டைச்சதையிலும் வீக்கம் உண்டாக்கிக் கருமைநிறமாகவோ, செந்நிறமாகவோ எரிச்சலுடன் இருக்கும். வாயு தேகத்திலதிகரித்து உடலை நீட்டி மடக்கமுடியாமல் செய்யும்.

தேகத்தில் எரிச்சலுடன், வியர்வையரும்பும், வீக்கம் உண்டாகும். பல பல வர்ணங்களும் காணும். நடுக்க

மேற்படும். மிகவும் வேதனையைத்தரும். மலச்சிக்கலேற்படும். இவை சோணிதவாதத்தின் குறிகளாகும்.

**பித்த சோணிதவாத லெட்சணங்கள்**

*தேகமெரி மதமூர்ச்சை செய்யவியர்வை சிலதாக*
*மோகவீக்க முண்டாகு முதிர்ந்தவீக்கந் தொடில்நோவாம்*
*பாகம்படச்சீக் கிரம்பழுக்கும் பகருஞ் சுரமுஞ்*
*சூடுமுண்டாம்*
*ஆகும் பித்தசோணிதத்தில் வாதமீதென் றறிவீரே.* *(47)*

*(இ-ள்.)* தேகத்தில் எரிச்சல், மதமதப்பு இவைகளுடன் மூர்ச்சையுமுண்டாகும். வியர்வை கொஞ்சமாக இருக்கும். வீக்கம் ஏற்படும். தொட்டால் வலியுண்டாகும். வீக்கம் பழுக்கவுமாரம்பிக்கும்.சுரம், சூடு இவைகளும் ஏற்படும்.

**சிலேற்ப சோணித வாத லக்ஷணங்கள்**

*வீங்கும் வாதம் வியாதியைப்போல் மேவிமேற்கொண்*
*டெழும்பாது*
*தாங்கு கனத்துக் குள்ளிலது தன்னிலுறைப்பொன் றில்லாம*
*லோங்கிக் கொஞ்சம் வேதனையா யுயர்ந்து முகமாய்*
*மினுமினுத்து*
*வாங்குந் தினவுமுண்டாகில் சிலேற்பச் சோணித வாதமிதே.*

*(இ-ள்.)* தேகத்தில் வீக்கமுண்டாகும். ஆனால் மேற்கொண்டெழும்பாது அதாவது பக்குவமடையாது. வேதனையதிகமாகயிராது. மினுமினுப்புத் தோன்றும். அரிப்பும் ஏற்படும்.

**திரிதோஷ சோணித வாத லட்சணங்கள்**

*வாதசோணித வாதத்தில் வந்தகுணமும் பித்தத்தி*
*லோதுகுணமுஞ் சிலேற்பனத்தி லூறாகுணமுமொன்றாகி*
*வீது திரிதோஷங்களினாலெழுந்த சோணித வாதமென்ன*
*தாதுகுணத்தால் வியாதியினால் சார்ந்த குணங்கள்*
*கண்டறியே.* *(49)*

(இ-ள்.) வாதசோணித வாதத்தின் குறிகளும், பித்தசோணித வாதக்குறிகளும், கபசோணித வாதக்குறிகளும் ஒருங்கே காணப்பட்டால் இவை திரிதோஷ சோணித வாதம் என்ற ரோகம் எனத்தெரிந்துகொள்ளவும்.

**சோணித வாதத்தில் சாத்யாசாத்ய லக்ஷணம்**

இவ்வடவாகக் காணுஞ் சோணித வாதமீதில்
ஒவ்வொரு தோஷந்தன்னா லுதித்த நோய் தீருமென்க
வெவ்விரு தோஷஞ் சேர்ந்துமேவுநோய் யாப்பியந்தான்
கவ்வெயாய் மூன்று தோஷங் கலந்த நோய்
தீராதென்னே. (50)

(இ-ள்.) ஒவ்வொரு தோஷங்களின் பிரகோபத்தா லேற்படும் சோணிதவாத நோய்கள் தீரும். இருதோஷங்கள் சேர்ந்த சோணிதவாதமெனில் யாப்யம். (அதாவது கஷ்டப்பட்டு சொஸ்தம் செய்யக்கூடியவை) மூன்று தோஷங்களின் பிரகோபத்தினாலும் உண்டான ரோகம் தீராதென்றறியவும்.

**பிராணவாதம் அதிகரிக்கக் காரணம்**

பகரிலுஷ்ணமதான பதார்த்தத்தாலிங்கனத்தா
நிகரில்லாவாகாரத்தா நிறைந்திடு முரத்த சொல்லா
தகுமலமூத்திரங்கள் தெறிக் கையா விழுக்கையாலு
மிகவுமே பிராணவாயு மேற்கொள்ளுங் குணங்கள்
சொல்வாம். (51)

(இ-ள்.) உஷ்ணமான பதார்த்தங்களை உபயோகித்தாலும், அதிகமான ஸ்திரீ போகத்தாலும், அளவுமீறி ஆகாரதிகளைப் புசிப்பதாலும், உரக்கப்பேசுவதனாலும், மலமூத்திரங்கள் தேகத்தின்மேல் தெறித்தாலும் அல்லது விழுந்தாலும் பிராணவாயு அதிகரிக்கும்

### பிராணவாதக் குறிகள்

*பீனிசம் சுவாசகாசம் பெருகுமெய்யிழைப்புத் தும்மல்*
*தானிவையுண்டாந் தண்ணீர் தாகமாங் காதடைக்கும்*
*ஆனகண் மயங்கும் வாதம் அன்னங் கொளவைக்கு*
*மூனமில் பிராணவாத மிவையென வுரைக்கின்றோமே. (52)*

*(இ-ள்.)* பீனிசம், சுவாசகாசம், பெருமூச்சு, தும்மல் இவைகள் உண்டாகும். நாவறட்சியுண்டாகும். காதடைக்கும், கண்மயங்கும், சாப்பாடு இறங்காது. இவை பிராணவாதக்குறிகளாகும்.

### உதானவாயு மேற்கொள்ளக் காரணங்கள்

*ஆகிய தும்மல் சத்தி நித்திரை யடக்கலாலும்*
*வேகமாயழுகையாலு மிகமிகச் சிரிக்கையாலுந்*
*தாகமாய் வெகு பாரத்தைத் தரித்திடலாலுமங்கே*
*பாகமா யுதானவாயு மேற்கொள்ளும் பரிசு சொல்வாம். (53)*

*(இ-ள்.)* தும்மல், வாந்தி, தூக்கம் இவைகளை அடக்குவதனாலும் வேகமாக அழுவதாலும், அதிகமாகச் சிரிப்பதாலும், அதிகமாகப் பாரங்களைச் சுமப்பதாலும் உதானவாயு பிரகோபமடையும்.

### உதானவாயு பிரகோபித்த குறிகள்

*கண்டத்தைக் கட்டிக்கொள்ளுங் கவர்கண்ட*
*மாலையுண்டாந்*
*தொண்டைக்குள் வியாதியுண்டாஞ் சொல்லும்*
*பீனிசங்களுண்டாந்*
*கண்டித்த சத்தியுண்டாங் கபாலவே தனைகளுண்டாம்*
*பண்டுத்த புத்தி போகுமுதானவா தத்தின் பண்பே. (54)*

*(இ-ள்.)* தொண்டையைக் கட்டிக்கொள்ளும். கண்டமாலையுண்டாகும். தொண்டை வியாதிகளையும்

உண்டாக்கும். ஜலதோஷம், வாந்தி, தலைவலி முதலான நோய்களையும் ஏற்படுத்திப் புத்தியை மயங்கவைக்கும். இவை உதானவாயுப் பிரகோபத்தின் குறிகளாகும்.

### வியானவாயு அதிகரிக்கக் காரணங்கள்

*வெகு துக்கம் வெகு சந்தோஷம் வெகு விளையாட்டுச்*
*சேட்டை*
*வெகு நடை வெகு வாய்நீரால் வெகு பயம் விருத்தாகாரம்*
*பகையதாய் வியானன் மீறிப் பயித்தயச் சுரங்கள் வீக்க*
*மிகுதியா யங்கங்குத்துங் குடைவுமாய் வியாதியாமே. (55)*

*(இ-ள்.)* அதிகமான துக்கம், அதிகமான சந்தோஷம், அதிக விளையாட்டு அதிகமான நடை, அதிகமான நீர்விளையாட்டு, அதிகப் பயம், சேர்க்கக்கூடாத பொருள் களைச் சேர்த்துச் சாப்பிடுதல். இவைகளினால் வியானவாயு பிரகோபமடைந்து சுரம், வீக்கம், உடம்புவலி முதலானவைகளை உண்டாக்கும்.

### வியானவாயுப் பிரகோப லக்ஷணங்கள்

*என்னுமிக் குணத்தில் வீக்க மயிர்க்கூச்ச மிகலுங்குட்ட*
*முன்னுமே கிள்ளினாலு முறைப்பன்றித் திமிர்ப்புக் காணும்*
*பின்னுமூச் சாகப்பங்கம் பலஹீனம் விசர்பரோகஞ்*
*சன்னியா சுரங்கள்... .... சார்ந்திடும் வியானவாதம். (56)*

*(இ-ள்.)* தேகத்தில் வீக்கம் மயிர்க்கூச்சல், உடம்பைக் கிள்ளினாலும் அது தெரியாமல் மதமதப்பு, பெருமூச்சு, பலஹீனம், கரப்பான், சுரம் முதலானவைகளை உண்டாக்கும்.

### சமானவாயு அதிகரிக்கக் காரணங்கள்

*அகால நித் திரையினாலும் நித்திரையி லாமையாலும்*
*அகாரண பதார்த்தத்தாலும் அசீரணப் புசிப்பினாலுந்*

தகாத வுஷ்ணத்திற்சீதந் தான்கலந்தருந்தலாலு
மகாசமானன் கோபித்து வருத்திடும் வியாதி சொல்வாம்.(57)

(இ-ள்.) அகாலத்தில் தூங்குவதானாலும் அல்லது தூங்காமல், விழித்திருப்பதாலும், உடம்பிற்கு இதமில்லாத பதார்த்தங்களை உண்பதாலும், அஜீர்ணமிருக்கையில் சாப்பிடுவதாலும், உஷ்ணத்துடன் குளிர்ச்சியான வஸ்துக்களைச் சேர்த்தருந்துவதனாலும் சமான வாயு பிரகோபமடையும்.

### சமானவாயு பிரகோபித்த லக்ஷணம்

பக்குவாசயமே மாரா மாசயம் பதிந்த ரோகம்
மிக்கதாய்க் குன்மம் சூரை மிகுந்திடுங் கிராணியுண்டாம்
மைக்குழல் மடநல்லாய்கேள்! மானிலந் தனிலுள்ளோர்க்கு
இக்குணஞ் சமானவாத மென்னவே பேசலாமே. (58)

(இ-ள்.) பக்குவாசய ரோகங்களும், ஆமாசய ரோகங்களும் ஏற்படும். குன்மம், சூரை, கிராணி முதலான ரோகங்களும் சமானவாயு பிரகோபத்தால் சம்பவிக்கும்.

### அபானவாயு பிரகோபிக்கக் காரணமும், குறிகளும்

குருபதார்த்தத்தினாலுங் கொடிய சஞ்சாரத்தினாலும்
பெருரூட்ச பதார்த்தத்தாலும் பேச்சுமூச் சடக் கையாலும்
தருபூமி மிசை நடந்து சஞ்சரித்திடுதலன்றி
இரு நரவாகனத்தில் யென்னாளுமிருக்கையாலும். (59)

அபானனாம் வாயு மேற்கொண்டகுதினால் மூலரோகம்
அபானவாய் தன்னிலண்டி யடைத்திடு மதுவு மன்றி
சுபாமல மூத்திரத்தில் தோஷமுண் டாகுங் கண்டாய்
அபான வாதத்தின் செய்கை யிதுவென வறிகுவீரே. (60)

(இ-ள்.) குருவான (சீரணமாகாத) பதார்த்தங்களை உபயோகிப்பதாலும், அதிகமாக இங்குமங்கும் செல்வத

னாலும், வரட்சியான ஆகாரதிகளை உட்கொள்ளுவத னாலும், பேச்சு, மூச்சு இவைகளை அடக்குவதனாலும், பூமியில் நடக்காமல் எப்போதும் வேறொரு மனிதர்களைக்கொண்டு தூக்கச்சொல்வதாலும் அபானவாயுப் பிரகோபமடையும்.

இதனால் மூலரோகம், ஆஸனது வாரத்தில் அடைப்பு, மூத்திரம், மலம் இவைகளில் தோஷம் ஏற்படுதல் முதலான நோய்கள் சம்பவிக்கும்.

**சாம, நிராம வாதக்குறிகள்**

*உடம்பு கனத்துக் குளிர்ந்து தம்பி தோய்வில் சோம்பல்*
*முறித்திடுத*
*லடம்பு மக்கினி வீக்கமுண்டா யரோசித்திடுமே*
*யன்னந்தண்ணீர்*
*திடங்கொள்கசப்புத்துவர்ப்பெரிப்புத் தின்ன*
*விரும்புமேயெண்ணி*
*லடங்குஞ்சாம வாதமிதாம் நிராம வாதமு மப்படியே. (61)*

(இ-ள்.) தேகத்தில் பாரம் அதிகரித்துக் குளிர்ந்து, சோம்பல் அதிகரிக்கும். அக்கினி மந்தமாகும். வீக்கமேற்படும். அரோசகமும் ஏற்படும். கசப்பு, துவர்ப்பு, உரைப்பு இவற்றில் பிரீதி அதிகமாகும்.

இவை ஆமத்துடன் கூடிய வாதக்குறிகளாகும். இதற்கு எதிரிடையான குறிகளைப் பெற்றது நிராமக்குறிகள்.

**பித்தாவரண வாதக்குறிகள்**

*அங்கதாகஞ் சிவதாக மாகுங்குத்தும் பிரமையுண்டாம்*
*பொங்கு மிளகு புளிப்புப் போதப்புசிக்கி னுடலெரிவா*
*யெங்குங் குளிர்ந்த பதார்த்தத்தி*
*லிச்சையுண்டாமிக்குணங்கள்*
*தங்கும் பித்தாவரணத்தில் வாதமெனவே சாற்றிடுமே. (62)*

(இ-ள்.) உடம்பில் எரிச்சல், குத்துவலி, மயக்கம், புளிப்புச் சுவையுள்ள பதார்த்தங்கள், மிளகு முதலானவைகளைச் சாப்பிட்டால் வயிற்றில் எரிச்சல் முதலான குறிகள் ஏற்படும். குளிர்ச்சியான பண்டங்களில் ஆசை முதலான குறிகள் காணப்படில் பித்தாவரண வாதம் என்று தெரிந்துகொள்ளவும்.

### சிலேத்மாவரண வாதம்

உடம்பு குளிரு மிகக் கனக்கு முரத்துக்குத்துமிக் குணங்க
ளடங்கும் பொறுத்துத் தலங்கள் தோறுமதிகமாகு மாயாசந்
துடங்குஞ் சுடுநீர் சுடுசோறுஞ் சுகமென்றிசைக்கு மனசுவரு
மடங்குஞ் சிலேற்ப னாவரண வாதமிதுவென்றறிவீரே. *(63)*

(இ-ள்.) உடம்பில் குளிர்ச்சியுண்டாகும். தேகபாரமும் அதிகரிக்கும். குத்துவலியும் மாறிமாறி வரும். அதிகமான ஆயாசம், வெந்நீர், சுடும் அன்னத்தில் விருப்பம் இவைகளுண்டாகும். இவை கபாவரண வாதக்குறிகளாகும்.

### இரத்தாவரண வாதம்

உடம்பெல்லாஞ் சிவந்து வீங்குமுரத்த மாங்கிஷந்தோல் நோவா
மடுபெருந் தாகமுண்டா மடின் றுடல்விடும்போற் றோன்றுந்
திடங்கொள் மண்குட்டம் போலத் தேகத்தில் விசரிக்காணுங்
கொடுங்குண மிவையிரத்தா வரணவா தத்தின் கூறே. *(64)*

(இ-ள்.) உடம்பு சிவப்பாகி வீக்கமுண்டாகும். மாம்ஸம், தோல் இவைகளில் வலியேற்படும். தாகத்தினால் உயிர்போய்விடும் போன்ற தோற்றம். குட்டநோய் போலத் தேகத்தில் திட்டுத்திட்டாகத் தடித்தல் இவை ரத்தாவரணக் குறிகுணங்களாம்.

### மேதாவரணவாத லக்ஷணம்

உடம்பினில் வீங்கும் வீக்க மோரிடந் தனிலிராது
இடம்பெரு மினுமினுக்கு மிளகியே குளிர்ந்திருக்கும்

விடம் பெற வருசியுண்டா மிவைமேதா வரண வாதந்
தொடுங்குணம் பிராயசத்தாற் றீர்ந்திடு மென்று
சொல்லே. (65)

(இ-ள்.) உடம்பில் ஏற்படும் வீக்கம் ஓரிடத்திலேயே இராமல் மாறி மாறி வரும். தேகத்தில் மினுமினுப்பும், குளிர்ச்சியும் உண்டாகும். அருசி ஏற்படும். இவை மேதாவரண வாதம் என்று தெரிந்துகொள்ளவும்.

## மாங்கிஷாவரண வாதக்குறிகள்

வீங்கிடும் பிளவை காணும் விவர்ணவே தனைகளுண்டா
மோங்கிய சரீரமெல்லா மூர்ந்திடு மெறும்புபோலத்
தாங்கிய மயிர்க்கூச்சுண்டா மிக்குணந்தன்னைக் கண்டால்
மாங்கிஷாவரண வாத மிதுவென வகுக்கலாமே. (66)

(இ-ள்.) உடலில் வீக்கமுண்டாகும். பிளவைகளேற் படும். நிறம் மாறுபடும். அதிகமான வலியுமிருக்கும். சரீரத்தில் எறும்புகள் ஊருவதைப்போன்ற உணர்ச்சி, மயிர்க்கூச்சல் இவைகளேற்படில் அது "மாங்கிஷாவரண வாதம்" என்று தெரிந்துகொள்ளவும்.

## மச்சாவரண வாதக்குறிகள்

அடிக்கடியுடல் முறிக்கும் வெகுகொட்ட டாவிகொள்ளு
முடற்கடுப்பதனாற் கீழே யுருண்டிடச் செய்யும் தேகம்
பிடித்திடிற் சுகம் போற் காணும் பெருகவே கடுக்கும் தேகம்
மடக் கொடியனையாய்! மச்சா வரணமாம் வாதந்தானே. (67)

(இ-ள்.) சோம்பல் முறிப்பான். அதிகமாகக் கொட்டாவி விடுவான். உடல் வலியினால் கீழே விழுந்து புரளுவான். தேகத்தைப் பிடித்துவிட்டால் கொஞ்சம் சுகமாக இருக்கும். தேகத்தில் கடுப்புவலி இவைகளேற்படில் "மஜ்ஜாவரண வாதம்" என்று தெரிந்துகொள்ளவும்.

### சுக்கிலாவரண வாதக்குறிகள்

வீசுசுக்கிலஞ் சம்போக வேளையில் சீக்கிரம் போம்
நாசமாய்ப் போகினும்போம் நாடிகள் பலங்கெட்டுப் போங்
கோசமே சுருங்கிப் போகுங் குணமது கண்டபோது
வாசவன் குழலாய்! சுக்கிலா வரணவா தந்தானென்னே. *(68)*

(இ-ள்.) ஸ்திரீ சங்கமத்தின் போது விந்து வெகுசீக்கிரம் வெளியாகும். வீணாகிவிட்டாலும் விடும். நாடிகளின் பலம் குறைவடையும். மர்மஸ்தானங்கள் சுருங்கிவிடும். அப்போது இதனைச் சுக்கிலாவரண வாதம் என்று அறிந்துகொள்ளவும்.

### அன்னாவரண வாதம்

அருந்திய வன்னந் தண்ணீ ரமுந்திய வலியினாலே
செருந்திடும் வயிறு விம்முந் தியங்கவே யேறிக் குத்தும்
வருத்தமாஞ் சமயந் தன்னில் புசித்திடில் விதனமாறுந்
தரித்திடுங் குறிகளன்னா வரணவா தந்தான் சாற்றே. *(69)*

(இ-ள்.) சாப்பிட்ட அன்னம், தண்ணீர் முதலானவை வயிற்றில் சென்றபின் வலி அதிகரிக்கும். வயிறுப் பொருமலேற்படும். வயிற்றுக் குத்தலும் எடுக்கும். இம்மாதிரி வேளைகளில் ஆகாரம் உட்கொண்டால் சிறிது குணமுண்டாகும். இவை அன்னாவரண வாதத்தின் குறிகள்.

### மூத்திராவரண வாதம்

காத்திரங் கடுக்கு முந்தி கனத்து நீர்க் கடுத்தடைக்குஞ்
சூத்திர நீராழத்திற் சுருக்கென விதனமுண்டாஞ்
சாத்திரம் வயிறேயூதுஞ் சஞ்சல மிஞ்சக் காணு
மூத்திரா வரணவாத மிதுவென மொழியலாமே. *(70)*

(இ-ள்.) உடம்பில் கடுப்பு வலியுண்டாகும். வயிறு கனமாகி நீர்க்குத்தலுமேற்படும். சிறுநீர் விடுகையில் சுறுக்கென்று குத்தல் வலியேற்படும். வயிறு உப்பும். மிகவும் வேதனையைத் தரும். இவை மூத்திராவரண வாத லக்ஷணங்களாகும்.

### மலாவரண வாதம்

குலவிய மலஞ் சிறுத்துக் கொண்டறிந் தறிந்து நோவாந்
தலைமயிர் நரைக்கு மன்னங்கொளில் மல முலர்ந்து தள்ளும்
பலமது ... ... ... ... ... ... குணங்கள் கண்டாற்
சொலுமலாவரண வாத மிதுவெனத் தொகையன் னீரே. (71)

(இ-ள்.) மலம் குறைவடையும். அடிக்கடி வலியுண்டாகும். தலைமயிர் சீக்கிரம் நரைத்துப்போம். சாப்பிட்டால் ஆகாரம் நன்றாகச் சீரணியாமல் மலம் வறட்சியுடன் வெளியாகும். இவை மலாவரண வாதக்குறிகளாகும்.

### சர்வாதாவரண வாதக்குறிகள்

கது கடுப்பா மிலங்கிய பீஜந்தன்னிற்
பெறுமொரு வாயுச் சேர்ந்து பெருக வேதனைகள் செய்
கறுவுறு முதுகு மார்பு சிக்கென வலியுண்டாகுஞ்
சர்வாதாவரண வாதக் குணமிது சாற்றலாமே. (72)

(இ-ள்.) விரையில் வாயு தங்கி அதிகமான வேதனையைத் தரும். முதுகு, மார்பு முதலான இடங்களிலும் வலியேற்படும். இவை சறுவாதாவரண வாதம் எனத்தெரிந்து கொள்ளவும்.

### பிராண பித்தாவரண வாதம்

... ... ... ன்னங் கொண்டு செரித்த பின் சத்தி செய்யு
நொந்திடும் வயிறை யூது தணங்கவே பிரமை மூர்ச்சை
மந்தமாய் வந்து மாய்ந்து துயர்தரு மயக்கமாக
வந்திடும் பிராணபித்தா வரணவா தந்தான் மானே. (73)

(இ-ள்.) சாப்பிட்ட ஆகாரம் சீரணமான பின் வாந்தியேற்படும். வயிற்று வலியும் பொருமலும் உண்டாகும். மயக்கம், மூர்ச்சை இவைகளும் அதிகரிக்கும். இவை பிராண பித்தாவரண வாதக்குறிகளாகும்.

**உதானபித்தாவரண வாதம்**

அயர்ந்திடுங் கைகால் மூர்ச்சையாயிடும் பிரமையுண்டா
முயர்ந்திடும் உடம்பு நோவா முலைந்துமே லெரிந்து காணுந்
தியங்கிடும் பித்தமேகஞ் செய் குணங் கண்டபோதே
யியந்திடு முதான பித்தாவரண வாதந்தானென்னே. (74)

(இ-ள்.) கைகால்கள் பலஹீனமடைந்து, மூர்ச்சை யுண்டாகும். உடம்பில் குத்துவலியுடன் எரிச்சலும் தோன்றும். மேலும் பித்தமேகக்குறிகளும் உண்டாகும். இவை உதான பித்தாவரண வாத லக்ஷணங்களாம்.

**வியான பித்தாவரண வாதக்குறிகள்**

வெருவிய பித்தந்தன் னில் வியானவர் வான வாதம்
வரு குணங் கைகால் நீட்ட மடக்க வாராது நோவாம்
எரிவுறுஞ் சரீரமெல்லாம் யெரித்திடும் வியர்வை யுண்டாக்
தருமனத் தாபமுண்டா மென்னவே சாற்றினோமே. (75)

(இ-ள்.) கைகால்களை நீட்டி மடக்கமுடியாது. தாங்கமுடியாத வலியுண்டாகும். சரீரம் முழுவதிலும் தாங்கமுடியாத எரிச்சலுண்டாகும். வியர்வையும் அதிகமகாக இருக்கும். மனதிலும் வேதனையைத் தரும். இவை வியான பித்தாவரண வாதக்குறிகள்.

**சமான பித்தாவரண வாதம்**

வருபித்தந் தன்னில் சேர்ந்த சமான வாவரண வாதம்
வெருவுற்றே வுடலெரிந்து வியர்வையா யுடல் குளிர்ந்து
நிறுமித்த பதார்த்தமெல்லா மருசியாய்த் திகழுந் தாகந்
தருமிக்க சோகமுண்டா மிக்குணஞ் சாற்றினோமே. (76)

(இ-ள்.) உடலில் எரிச்சலும், வியர்வையும் உண்டாகும். சிற்சில சமயங்களில் குளிரும் காணும். எதைச் சாப்பிட்டாலும் ருசி இராது. மிகவும் வேதனையைத்தரும். இக்குறிகளால் சமான பித்தாவரண வாதம் எனத்தெரிந்து கொள்ளவும்.

### அபான பித்தாவரண வாத லக்ஷணங்கள்

புருடர்க்கு லிங்கம் காந்தல் பூவைக்கு மதுவே யாகும்
வருமஞ்சள் வன்னமாக மலமது வீழும் பின்னை
யுர மிஞ்சு லிங்கந்தான் முபாதியுண்டாகுமென்னி
வருமந்தப் பித்தஞ் சேர்ந்த வபானவாவரண வாதம். (77)

(இ-ள்.) ஸ்திரீ புருடர்களுக்கு மர்மஸ்தானத்தில் எரிச்சல், மலம் மஞ்சள் நிறமாக வீழல், மர்மஸ்தானத்தில் வேதனை இவைகளுமுண்டானால் அது அபான பித்தாவரண வாதம் என்று தெரிந்துகொள்ளவும்.

### உதானாவாரண வாதக்குறிகள்

அக்கினி மந்தமாகுமா கந்தான் கனக்கும் வியர்க்கு
முக்கிடுஞ் சேர்ப்பனந்தா னுதானாவா வரண வாத
மிக்குணம் வியானனுக்கு மியல் பெரு சமானனுக்கும்
புக்கிடுமென்ன முன்னூல் புகன்றது புவியின் மீதே. (78)

(இ-ள்.) பசி மந்தப்படும். உடலில் பாரம் உண்டாகும். வியர்வையும் ஏற்படும். கோழையும் வெளியாகும். இவை உதானாவரணவாதம், வியானாவரண வாதம், சமானாவரண வாதம் இவைகளிலும் ஏற்படும்.

### ஆமாவரண வாதக்குறிகள்

இடுப்புக் கடுக்கு வயிறுளையு மிசைந்த வுதரந் தடிப்பேறுங்
கொடுக்கு மசனங் குறைந்துவரு கோவ மலத்தில் சீதம்விழுங்
கடுக்குமுடம்பு கனத்திருக்குங் கண்ணுமுகமும் வெளுப்பேறும்
அடுக்குங் குணங்க ளிவைகாணி லாமாவரண வாதமிதே. (79)

(இ-ள்.) இடுப்பில் கடுப்பு, வயிற்றில் வலி, வயிறு தடித்துப்போதல் சாப்பிடும் ஆகாரம் குறைவடைதல்,

மலத்தில் சீதம் விழுதல், உடம்பு கனத்துப் போதல், கண்கள், முகம் இவைகள் வெளுத்துப் போதல் முதலான குறிகள் காணப்படில் அது ஆமாவரண வாதக்குறிகளாகும்.

### அனலெரி வாதம்

*உள்ளடி யெரித்துக் குத்தி யூர்ந்து மேல்நோக்கியேறி*
*மெள்ளவே விறுவிறுத்து மேனியும் மெலிந்து தோன்றிக்*
*கள்ளமாய் மயக்கமுண்டாக் கடுத்துடல் வியர்க்குமாகில்*
*வள்ளிலை நடுவேற் கண்ணா! யனலெரி வாதமாமே. (80)*

*(இ-ள்.)* தேகத்தினுள் எரிச்சலுடன் குத்துவலியுண்டாகி அது தலையை நோக்கி ஏறும். உடலில் விறுவிறுப்பு, இளைப்பு, மயக்கம், உடலில் கடுப்புவலி, வியர்வை முதலான குறிகளும் காணும். இவை அனலெரி வாதக்குறிகளாகும்.

### துடிப்பு வாதக்குறிகள்

*ஓடுந்துடிக்கு உடலேறவும் பார்க்கும்*
*நீடுஞ் செறிந்துடலினின் றடங்கும் - ஆடும்*
*துடிப்புடைய வாதமெனத் தொல்முனிவர் சொன்னார்*
*படித்தறிவீர் நூலின் பயன். (81)*

*(இ-ள்.)* உடலில் வாயுவானது ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு மாறி மாறி வரும். அவயவங்களில் நடுக்கலுண்டாகும். பின்னர் அது தானாகவே குறையும். இவை துடிப்புவாத லக்ஷணங்களாகும்.

### நடுக்குவாதக் குறிகள்

*நடுக்குஞ் சுழற்று முயர்நா வறட்சியாகு*
*மடுக்குஞ் சரீர மசையு - முடுக்கிக்*
*கிடுகி டெனக்கொண்டே கெடியி(ல்கீழ்)தள்ளும்*
*நடையிறுமே நடுக்கு வாதம். (82)*

(இ-ள்.) தேகம் முழுவதுதில் நடுக்கமுண்டாகும். தலைச்சுழற்றலும் ஏற்படும். நாவறட்சியதிகரிக்கும். சரீரம் தானாகவே இயங்கும். கிடு கிடு என்று ஆட்டம் ஏற்படும். நிற்க முடியாமல் கீழே விழுவான். இவை நடுக்குவாதக் குறிகளாகும்.

**கடிவாதம் [சொடக்குவாத] லக்ஷணங்கள்**

நடக்கிலெலும்புதனைப் பிசகில் நாடிநரம்புடன் பிடித்துத்
துடங்குங் கனத்துமிகத்தடித்துச் சொறியும்
வியர்வையுண்டாகுங்
கடுக்குங்..................மிக்குணங்கள் காண்பீராகில்
கடிவாதஞ்
சொடக்குவாத மெனவுமொரு பேராஞ்சொன்னோந்
தோகையரே. *(83)*

(இ-ள்.) நடக்கும்போது எலும்புகள் பிசகி, நாடி நரம்புகளை இழுத்துப் பிடிக்கும். துடை கனக்கும். சொறி, வியர்வை முதலியவைகளுமுண்டாகும். இதற்குக் கடிவாதம் அல்லது சொடக்குவாதம் எனப்பெயர்.

**அண்டவாதக் குறிகள்**

கொண்டங் குடலிற்றங்கிக் குறைந்தொரு விதையிற்
றோன்றி
மண்டியே வலித்துக் குத்தி வருத்தமாய் வீக்கமுண்டாம்
அண்டையில் விரையுமீதே யாகினு மாகுமென்னிற்
றெண்டினைக்குறிய வண்ட வாதத்தின் செய்திதானே. *(84)*

(இ-ள்.) குடல் ஒருபக்கத்து விரையில் இறங்கிக் குத்துவலி, வீக்கம் இவைகளைத்தரும். இவை அண்டவாதச் குறிகளாகும்.

**குடல்வாதம், கழல்வாதக்குறிகள்**

பீசத்தைத் துருத்திபோலப் பெருக்கவே பொருமி
நொந்தால்
மாசற்ற குடல்வாதத்தின் குணமென வகுக்கலாகும்
பீசத்தி லிறங்கும் வாய்வுப் பிடித்திடி லேறுமாகில்
மோசித்த கழல்வாதத்தின் குணமென மொழியலாமே. (85)

(இ-ள்.) விதையைத் துருத்திக்கொண்டு ஊதினாப் போல் பொருமச்செய்யும். வலியும் ஏற்படும். பீசத்தில் வாயுச்சேர்ந்து மேலேயேறினால் அது கழல்வாதம் எனப்படுவதாகும்.

**வாதநிதானம் முற்றும்.**

# பித்த நிதானம்

***பித்தம் 40க்கு விபரம்***

1. பிரதான பித்தம்
2. பக்குவாசய பித்தம்
3. ஆமாசய பித்தம்
4. மலாசய பித்தம்
5. சய பித்தம்
6. ரத்த பித்தம்
7. மாங்கிஷ பித்தம்
8. மேதோபித்தம்
9. அஸ்தி பித்தம்
10. மச்சை பித்தம்
11. சுக்கில பித்தம்
12. சுரோணித பித்தம்
13. சந்திகத பித்தம்
14. உதர பித்தம்
15. வாத பித்தம்
16. சிலேற்பன பித்தம்
17. வாத சிலேற்ப பித்தம்
18. பிராணபயித்திய பித்தம்
19. பயித்திய பித்தம்
20. வீரானபயித்தியம்
21. மார்பாமயபித்தியம்
22. அன்னபித்தம்
23. ஆம பித்தம்
24. குண்டலி பித்தம்
25. கபால பித்தம்
26. அம்ருதபித்தம்
27. நேத்திர பித்தம்
28. மச்ச பித்தம்
29. மலத்தில் ரத்த பித்தம்
30. இக்கு பித்தம்
31. அம்லபித்தம்
32. பத்தியவவன பித்தம்
33. இருதய பித்தம்
34. மூல பித்தம்
35. சர்வாங்க பித்தம்
36. உன்மத்தப் பித்தம்
37. மோக பித்தம்
38. வாசய பித்தம்
39. மோக பித்தம்
40. .........

### பித்தம் சேரக் காரணங்கள்

அகலாநித் திரையினாலும் அதிசங்க மோகத்தாலுந்
தகாதவெம் பசியினாலுந் தருவிட மேற்கையாலும்
பகாதவன் கிலேசத்தாலும் பயித்திய பதார்த்தத்தாலும்
சிகரதாங் காய்கையாலுஞ் சேர்ந்திடும் பித்தந்தானே. *(1)*

இருமல மடக்கையாலு மொருமல மிழைக்கையாலும்
வரும் வெயிற் பெருக்கையாலு மனமுறு கோபத்தாலுஞ்
சுரமது தரிக்கையாலுஞ் சுடுபிண நாற்றத்தாலுந்
திரவியங் கெடுகையாலுஞ் சேர்ந்திடும் பித்தந்தானே. *(2)*

*(இ-ள்.)* தீராத தூக்கத்தாலும், அதிகமான ஸ்திரீ போகத்தாலும், ஆசையினாலும், அதிகமான பசியினாலும், விஷபதார்த்தங்களை உட்கொள்வதாலும், மனதில் ஏற்படும் சஞ்சலத்தாலும், பித்தத்தை அதிகரிக்கும் வஸ்துக்களைச் சாப்பிடுவதானாலும், வெய்யிலில் காய்வதனாலும் பித்தம் தேகத்தில் சேரும்.

மலத்தையடக்கினாலும் அல்லது அதிகமாக மலம் கழிந்தாலும், வெய்யிலில் உட்காருவதானாலும், கோபத்தினாலும், சுரம் இருக்கும்போதும், எரியும் பிணத்திலிருந்து எழும்பும் புகையைச் சுவாசிப்பதாலும், பணநஷ்டம் உண்டானாலும் அவை தேகத்திலுள்ள பித்தத்தை அதிகரிக்கச் செய்யவும்.

### பித்தம் பிரகோபிக்கக் காரணங்கள்

நித்திரை தவிர்தலாலும் நெடுநேரம் நிற்கையாலும்
குத்திர விதத்தினாலுங் கொம்பனார் மருந்தீட்டாலும்
சுத்தியில் லாதேகொண்ட அவுஷத தோஷத்தாலும்
பித்தமே பிரகோபித்துப் பெருந்துயர் செய்யுங்காணே. *(3)*

*(இ-ள்.)* தூக்கமின்மையாலும், வெகுநேரம் நின்று கொண்டிருப்பதாலும், ஸ்திரீகளின் கைவிஷத்தினாலும்,

சுத்திசெய்யாத மருந்துச் சரக்குகளைக்கொண்டு மருந்துகள் செய்து உபயோகிப்பதாலும், தேகத்தில் பித்தம் பிரகோபித்து இடையூறை விளைவிக்கும்.

### பிரதான பித்தத்தின் குணங்கள்

பித்தத்தின் குணங்கடன்னிற் பிரதான பித்தமாகில்
மெத்தவே கடுத்துளைத்து மேனியுங் கருகிக் காட்டும்
பத்தியமாகக் கொண்ட அன்னமும் பகையதாகும்
குத்தியே யழன்று நொந்து குணயீன மாகுந்தானே. (4)

(இ-ள்.) உடலில் கடுப்புவலி ஏற்பட்டுக் கருநிற மடையும். பத்தியமாகச் சாப்பிட்ட ஆகாரமும் சீரணமாகாது. வயிற்றில் குத்துவலி, அழற்சி, வேதனை முதலியவைகளை யளிக்கும். இவை பிரதான பித்தத்தின் குறிகளாகும்.

### பக்குவாசய பித்தம்

நொந்திடுமீரல் தன்னில் நோவுடன் குடல் புரட்டும்
வந்திடு மலமிற்றிற்று வீழ்ந்திடு வாய்வுமுண்டாந்
தந்திடு மன்னந் தண்ணீர் சார்ந்திடவரிதேயாகு
மந்திரமான பக்கு வாசய பித்தமாமே. (5)

(இ-ள்.) ஈரல் பக்கத்தில் வலியுண்டாகும். குடல் புரட்டல் உண்டாகும். மலம் கொஞ்சம் கொஞ்சமாக வெளியாகும். வாயு அதிகரிக்கும். சாப்பிட்ட ஆகாரம் உடலில் சேராது. இவை பக்குவாசய பித்த லக்ஷணங்கள்.

### ஆமாசய பித்தம்

தொடுத்திடு கொப்புளமேலாய்ச் சுழன்றழந்
தெரித்துக்காட்டும்
குடித்திடு மன்னந் தண்ணீர் குமட்டியேயெடுத்துக்கொட்டும்
கடுத்திடு மிளைப்புண்டாகுங் காதுசில் லெனவடைக்கும்
எடுத்திடுங் குணங்களாமா சயபித்த மென்னலாமே. (6)

(இ-ள்.) வயிற்றின் மேல் சிறு சிறு கொப்புளங்க ளேற்பட்டு எரிச்சலும் உண்டாகும். சாப்பிட்ட சோறு தண்ணீர் முதலியனவைகளை வாந்தி செய்விக்கும். உடலில் கடுப்பு வலியேற்படும். தேஹம் இளைத்துவிடும். காது சில்லிட்டுப் போம். இவை ஆமாசய பித்தக்குறிகளாகும்.

## மலாசய பித்தம்

மிகக்கனத் துதரம் நொந்து மேனியுங்கருகிவாடி
யிகற்படும் புசிப்புறாமல் மலத்தினோ டிறுக்கிக்காட்டும்
தகைப்பொடு தாகமுண்டாஞ் சரீரத்திற் சூடுமுண்டாம்
வகைப்படு குணங்கள் கண்டால் மலாசய பித்தமென்னே.(7)

(இ-ள்.) வயிறு மிகவும் கனத்து, வலியும் உண்டாகும். உடல் கருமை நிறத்துடன் சோர்வடையும். சாப்பாடு உட்செல்லாமல் மலச்சிக்கலுண்டாகும். தாங்கமுடியாத தாகமேற்படும். தேகத்தில் சூடு மதிகரிக்கும். இவை மலாசய பித்தக்குறிகளாகும்.

## சய பித்தம்

ஓர்ந்திடுஞ் சரீரம் காந்தும் உழன் றழன் றருவிநீர்போல்
வார்ந்திடு மூத்திரந்தான் மஞ்சளின் வண்ணமாகுஞ்
சேர்ந்தரு கிலையா லெண்ணத் துளிவிடிற்சிதறிப்பாயுஞ்
சோர்ந்தவிக் குணங்களெல்லாஞ் சயபித்த... ...மென்னே.(8)

(இ-ள்.) சரீரத்தில் எரிச்சலும் அருவித்தண்ணீர்போல வியர்வையும் உண்டாகும். மூத்திரம் மஞ்சள் நிறமாக இறங்கும். ஒரு அருகு இலையினால் நல்லெண்ணெயைச் சிறுநீரில் விட்டால் எண்ணெய் சிதறிவிடும். இவை சய பித்தக்குறிகளாகும்.

## இரத்தப் பித்தக் குறிகள்

*சலத்துவா ரத்தினாலே தருமலத் துவாரத்தாலே*
*வலுத்த நீண் மூக்கினாலே வறிவிழி வாயினாலே*
*பெலத்துவா ரத்தினீர்போற் பெருகிடுமிரத்த மென்னிற்*
*சொலத்தகா விரத்த பித்த மிதுவெனச் சொல்லலாமே. (9)*

(இ-ள்.) மூத்திர த்வாரத்தின் மூலமாகவும், மல த்வாரத்தின் மூலமாகவும், மூக்கு, கண்கள், வாய் முதலான உறுப்புகளின் மூலமாகவும், அருவிநீர்போல் இரத்தம் தாரையாகப் பொழியும். இவை இரத்தப் பித்த நோயின் குறிகளாகும்.

## மாங்கிஷ பித்தம்

*தாங்கிடுஞ் சூடுதானே சரீரத்திற் சதையைத் தாவி*
*வீங்கிடும் வற்றுந் தேகம் வளர்நிறம் வேறுகாணும்*
*பாங்குறு நகங்கண்ணாவு பசுநிறம் பெறுமேயாகில்*
*மாங்கிஷ பித்தமென்றே வகுத்தனர் மருத்துநூலோர். (10)*

(இ-ள்.) தேகத்திலுள்ள சூடு சதையை ஆக்ரமித்து வீக்கத்தை உண்டாக்கிப் பின்னர் வற்றவைக்கும். நிறம் வேறுபாடும் உண்டாகும். நகம், கண்கள், நாக்கு முதலான உறுப்புகள் பச்சை நிறமாகும். இவை மாங்கிஷ பித்தக் குறிகளாகும்.

## மேதோ பித்தக்குறிகள்

*ஒருபாதி யுலர்ந்தரைக்கீ ழொருபாதி பொருமிக்காணும்*
*தருபீதவன்னமாகச் சாருங்கா மாலைபாண்டு*
*உருவாகுந் தாதுமாயும் உறுபலந் தருகுமாகில்*
*வருமேத பித்தமென்றே வகுத்தனர் ஆயுள் நூலோர். (11)*

(இ-ள்.) உடலின் கீழ்பாகம் (தொப்புள்முதல் கணுக்கால் வரை) வீக்கத்துடனும், மேல்பாதி இளைத்தும்

காணும். உடல் பச்சை நிறமாகத் தோன்றும். காமாலை, பாண்டு முதலான நோய்களுக்குக் காரணமாகும். தாது க்ஷீணமுண்டாகும். இவை மேதோபித்தக் குறிகளாகும்.

### அஸ்தி பித்தக் குறிகுணங்கள்

பத்திரமாகச் சந்திற் றுடையினி லென்பிற் பற்றித்
தத்திறமாக் காந்துஞ் சரீரமுந் தளர்ச்சி யாகுஞ்
சித்திரமாகத் தண்ணீர் உழலையாய் நீர் சிவக்கும்
அத்தியிற் பித்தரோக மிதுவென ஆயுள்நூலே. (12)

(இ-ள்.) மூட்டுகள், துடையெலும்பு இவைகளை பித்தம் பற்றி எரிச்சலையும், தளர்ச்சியையும் கொடுக்கும். தண்ணீர்தாகமுண்டாகும். சிறுநீர் சிவந்து இறங்கும். இவை அஸ்திபித்தத்தின் குறிகள்.

### மச்சைப் பித்தம்

இச்சையிற் சுக்கிலங்கெட் டியல்பெறு முடம்புவற்றி
அச்சமாய்த் துயிலும்போது கனவுக்கண் டரற்றலாகுந்
துச்சமாங் கர்ப்பந் தங்கிற் றுயரமா யழியுமென்னில்
மச்சையின் பித்தமென்றே வகுத்தனர் மறைவல்லோரே. (13)

(இ-ள்.) அதிகமாகக் சுக்கிலம் வெளியாகி உடம்பு இளைக்கும். தூங்கும்போது கெட்ட ஸ்வப்னங்கள் கண்டு உளருவான். ஸ்திரீகளுக்கெனில் கர்ப்பம் சிறிது காலந்தரித்துப் பின்னர் அழியும். இவை மச்சை பித்தரோகக் குறிகளாகும்.

### சுக்கில பித்தம்

தக்கதாங் கர்ப்பந்தன்னைத் தவிர்த்திடுங் கனவு தன்னிற்
சுக்கிடுஞ் சுக்கிலத்தைச் சுக்கில நாளங் காந்தும்
மிக்கக் கிலம்போல்நீரில் வெள்ளையுங் காணுங்கண்டாற்
சுக்கிலபித்தமென்றே சொல்லினர் சுருதிவல்லோர். (14)

(இ-ள்.) கர்ப்பம் தரிக்க இயலாது. தூக்கத்தில் சுக்கிலம் வெளியாகும். சுக்கில நாளத்தில் எரிச்சலெடுக்கும். சுக்கிலத்தை நீரில்விட்டால் அது வெண்மையாக மிதக்கும். இவை சுக்கிலபித்த லக்ஷணங்களாகும்.

### சுரோணித பித்தம்

மெல்லியல் முழுக்குநாளில் விதனமுமெரிவுமுண்டாம்
புல்லிய சங்கத்தன்னிற் பொறாமையாய் மயக்கமுண்டா
மல்லிய கர்ப்பந்தன்னை யழித்திடுமுடம்புவற்றுஞ்
சொல்லிய குணங்கள் கண்டாற் சோணித பித்தமாமே. (15)

(இ-ள்.) தீட்டாகி ஸ்நானம் செய்யும் தினங்களில் வலியும் எரிச்சலுமுண்டாகும். சங்கமத்தின்போது மயக்கமுண்டாகும். கர்ப்பத்தை அழித்துவிடும். உடம்பு இளைக்கும். இவைகள் சோணித பித்தக் குறிகளாகும்.

### சந்திகத பித்தம்

மிக்குள பொறுத்துத் தோறும் வீதனமுங் கடுப்புமுண்டாம்
தொக்கினில் நிறமுங்கெட்டு நடந்திடிற் றுயரமாகுஞ்
சிக்கிடு மலசலங்கள் சிந்திடிற் சிவந்துகாணு
மிக்குண மாகிற்சந்தி சுதபித்த மென்னலாமே. (16)

(இ-ள்.) ஒவ்வொரு மூட்டுகளிலும் கடுப்பும் எரிச்சலும் உண்டாகும். தோலின் நிறம் வேறுபாட்டையும் நடந்தால் வேதனையுண்டாகும். மலம், மூத்திரம் இவை செந்நிறமாக இறங்கும். இவை ஸந்திகத பித்த லக்ஷணங்களாகும்.

### உதர பித்தம்

தீதறக் கொண்ட வன்னஞ் செரித்துடல் தரித்திடாது
வாதையாய் வயிறு நொந்து பொருமியே மயக்கங்காணும்
போதவே தண்ணீர் வாங்கும் பொருந்துடல் கரிந்துவாடு
மோதிய குணங்களாகி லுதரத்திற் பித்தமென்னே. (17)

(இ-ள்.) கெடுதலில்லாத ஆகாரத்தை உட்கொண்டாலும் அது செரித்து உடலில் சேராது. வயிற்றில் வலியுண்டாகும். பொருமல், மயக்கம், அடிக்கடி தண்ணீர் தாகம், உடலில் கருநிறம், வாட்டம் முதலான குறிகளும் உண்டாகும். இவை உதரபித்தக் குறிகளாகும்.

### வாத பித்தம்

சொலற்கரி தானமேனி சுரங்குளிர் துயரமுண்டாம்
விலக்கரி தானவன்னம் வெறுத்திடும் அருசியுண்டாம்
சலித்துட லயர்ந்து நொந்து தளர்ச்சியாயுதரந்தன்னை
வலித்தழன் றெரித்துக் காந்தி வாதத்திற் பித்தமாமே. *(18)*

(இ-ள்.) உடலில் குளிர்சுரம், வேதனை இவைகளுண்டாகும். ஆகாரத்தைத் தள்ளும். அருசியேற்படும். உடல் வாட்டம் அடையும். வயிற்றில் வலி, எரிச்சல் முதலானவைகளும் உண்டாகும். இவை வாதபித்தக் குறிகளாகும்.

### சிலேற்ப பித்தம்

சீற்றமாய்க் கபமேலிட்டுத் தியங்கிவாய் நீர்சுழற்றி
வேற்றுடல் பட்டு நெஞ்சு வெதும்பியே யறுவருக்கும்
மாற்றமா முடம்பதெல்லா மஞ்சணித் திளைப்புமுண்டாந்
தோற்றிய குணஞ்சிலேற்ப பித்தமாம் தோகைநல்லாய். *(19)*

(இ-ள்.) கபம் அதிகரித்து வாயில் உமிழ்நீர் ஊறும். மனவருத்தம், அருவருப்பு, உடலில் மஞ்சள்நிறம், இளைப்பு முதலான குறிகளும் காணும். இவை சிலேத்ம பித்தக்குறிகள்.

### வாதச் சிலேத்ம பித்தம்

கோதில்லா வுதரந்தன்னிற் கொடியதோர் வாயுவுண்டாங்
காதில் நெஞ்சடைக்குங் சுக்குங் கருகிய மயக்கமுண்டாஞ்
சேதமாந் தாதுவன்னஞ் சிறுத்துநாச் செறுக்கு மாகில்
வாதசிலேற் பனபித்தத்தின் குணமென வகுக்கலாமே. *(20)*

(இ-ள்.) வயிற்றில் வாயு சேர்ந்துவிடும். காது நெஞ்சு முதலான உறுப்புகள் அடைத்துப்போம். வாந்தியுண்டாகும். மயக்கமுண்டாகும். தாது க்ஷீணமடையும். ஆகாரம் குறைந்துவிடும். நாக்கிலும் ருசியிராது. இவை வாத சிலேத்ம பித்தக்குறிகள்.

### பிராணப் பித்தக் குறிகள்

பிரமை மூர்ச்சை பெருகும் பெருகவே
வருதும் வாந்தி யனஞ்செரித் தால்வரு
மொரு பிராண னுலையும் படிசெய்யத்
தரு பிராணப் பயித்தியந் தானிதே. *(21)*

(இ-ள்.) மயக்கம், மூர்ச்சை இவைகளுண்டாகும். ஆகாரம் செரித்த போதிலும் வாந்தியெடுக்கும். பிராணன் போய்விடும்போலக் கஷ்டம் தரும். இவை பிராண பித்தக் குறிகளாகும்.

### உதான பித்தம்

வாரமான வுடம்பு மயங்கிடும்
பார மோகம் பிரமை பரிந்துவஞ்
சாரமான உணவைத் தவிர்த்திடுஞ்
சேருதானப் பயித்தியச் செய்கையே. *(22)*

(இ-ள்.) மயக்கம், உடம்பில் பார உணர்ச்சி, ஆகாரம் உட்செல்லாமை இவை உதான பித்தக்குறிகளாகும்.

### வியான பித்தம்

சுழலுந் தேக மெரியுந் துணுக்கிடுந்
தளறுங் கால்கை தத்தினைப் பெய்திடு
மொழுகு மன்ன மரும்வயி றூதிடும்
அழல் வியான பயித்திய மாகுமே. *(23)*

(இ-ள்.) சரீரத்தில் மயக்கம், எரிச்சல், திடீரெனத் திடுக்கிடுதல், கை, கால்களில் தளர்ச்சி, உடல் இளைப்பு, சாப்பிட்ட ஆகாரம் சீரணமடையாமல் வயிறு உப்புதல் இவை வியான பித்தக் குறிகளாம்.

### ஸமான பித்தக் குறிகள்

வருதும் வியர்வையுந் தாகமும் வாந்தியு
மெரிவுந் தேகங் குளிர்ச்சியு மெய்திடும்
பரியும் நாடிகள் வாய்விற் றியங்குமாம்
பொரியும்சமான பயித்தியம் பூவையே. (24)

(இ-ள்.) அதிகமான வியர்வை, தாகம், வாந்தி, தேகத்தில் எரிச்ச, தொட்டால் குளிர்ச்சி முதலான குறிகள் காணும். வாதநாடி அதிகரிக்கும். இவை சமான பித்தக் குறிகள் ஆகும்.

### அபான பித்தக்குறிகள்

சோறும் நீர்மலம் மஞ்சளிற் றோன்றிடும்
மாறுங் கோசம் பகமெறி வாயிரஞ்
சாறுமன் னத்தைத் தள்ளிச் செரித்திடு
மாறபான பயித்திய மாகுமே. (25)

(இ-ள்.) மூத்திரம், மலம் முதலானவைகள் மஞ்சளாக இறங்கும். மர்மஸ்தானங்களில் எரிச்சலுண்டாகும். ஆகாரத்தில் வெறுப்பு ஏற்படும். ஆனால் செரிமான முண்டாகும். இவை அபான பித்தக் குறிகளாகும்.

### அன்ன பித்தக் குறிகள்

கங்குற் கண் ணுறக்கமின்றிக் கடும்பகற் றூக்கமுண்டாய்
தங்குற்ற புசிப்பேதேனுங் கொண்டிடிற் சாருதாக
நுங்குற்றுத் தானேமேலாய் வேதனை நோவுஞ் செய்யில்
அங்கத்தை மெலிக்குஞ் சொன்னேன் அன்னபித்
தந்தானென்னே. (26)

(இ-ள்.) இரவு நேரங்களில் தூக்கம் இராது. பகலில் தூங்கிவிழுவாள். ஏதேனும் ஆகாரங்களை உட்கொண்டால் அது உடலில் தங்காது வெளியாகும். மிக்க வேதனையைத் தரும். தேகம் மெலிவடையும். இவை அன்ன பித்தக் குறிகளாகும்.

### ஆம பித்தக் குறிகள்

பிசைந்திடும் வயிறுதன்னைப் பிசைந்துழைந் தாமந்தானே
தசைந்திடு மலத்தில் வீழு முதரமுந் தடித்து நோவாங்
கசந்திடு மருசிகாணுங் கக்கிடும் ஆமந்தானே
இசைந்திடு மாமபித்த மிதுவென வியம்பலாமே. (27)

(இ-ள்.) வயிற்றில் உளைச்சல் ஏற்பட்டு வலியும் உண்டாகும். ஆமம் (சீரணிக்காத பதார்த்தங்கள்) மலத்துடன் விழும். வயிறு வீங்கும். வாயில் கைப்புச்சுவை ஏற்பட்டுச் சாப்பாட்டில் ருசி இருக்காது. வாந்தியிலும் செரிக்காத பதார்த்தங்கள் விழும். இவை ஆமபித்தக் குறிகளாகும்.

### குண்டல பித்தக் குறிகள்

மண்டலமாக உந்திக் கீழ்நின்ற வாயு மேலாய்
பண்டுள்ளசுவாசந் தப்பிப் பதறவே யிளைப்புமுண்டாந்
தண்டனை யோகியோர்க்குத் தீருவ தரிதேயாகுங்
குண்டலி பித்தஞ் செய்யுங் குணமெனக் கூறினோமே. (28)

(இ-ள்.) அடி வயிறுப் பக்கங்களிலுள்ள வாயு மேல்நோக்கி வந்து சுவாசத்தையடைக்கும். மேல்மூச்சு வாங்கும். இந்த நோய் தீருவது அரிதாகும். இவை குண்டலி பித்தக் குறிகளாகும்.

### கபால பித்தக் குறிகள்

உச்சியில் காந்தலுண்டா மொளிவிழி மயங்கிக்காணு
மிச்சைசேர் நாவும் வாயுங் கசந்திடு மிடிக்குஞ்சென்னி

அச்சமாய்த் துயிலும் போதில் நித்திரை வாராதாகுங்
கச்சிள முலையாய்ச் சொன்னேன் கபாலபித்
தந்தானென்னே. (29)

(இ-ள்.) தலையுச்சியில் எரிச்சலுண்டாகும். விழிகள் மயங்கும். நாக்கு, வாய் முதலான இடங்கள் கசக்கும். தலைவலி ஏற்படும். படுத்தால் தூக்கம் வாராது. இவை கபால பித்தக் குறிகள்.

### இரத்த பித்தக் குறிகள்

வாய்ந்ததோர் வார்த்தைதப்ப வசனிக்கு மரமேபோல
வேய்ந்திடுஞ் சரீரமன்ன மிறங்குவ தரிதேயாகுந்
தோய்ந்திடும் புத்தியீனந் தோன்றிடுங் கண்தூங்காது
காந்திடு மிரத்தபித்த மிதுவெனக் கருதுவீரே. (30)

(இ-ள்.) வார்த்தைகளைத் தப்பாக உச்சரிப்பான். சரீரம் மரம்போலாகும். ஆகாரம் உட்செல்லாது. புத்தி தடுமாறும். தூக்கம் வாராது. உடலில் எரிசசலுண்டாகும். இவைகளும் இரத்த பித்தக் குறிகளாகும்.

### நேத்திரப் பித்தக் குறிகள்

சூத்திர விழிபுகைந்து துலங்கிய கண்ணெரிந்து
பார்த்திடும் பொழுதில் கண்ணில் மின்மினி பறந்துகாட்டிக்
கூர்த்திடிற் பிறை விளக்குக் கூறிடுங் கவராய்த் தோன்றில்
நேத்திர பித்தமென்றே நிமலனாருரைத்தவாறே. (31)

(இ-ள்.) கண்களில் புகைச்சலுண்டாகும். கண்களில் எரிச்சலேற்படும். கூர்ந்துபார்த்தால் மின்மினிப்பூச்சி பறப்பதைப்போல் தோன்றும். இவை நேத்திர பித்தக் குறிகள்.

### மஞ்சள் பித்தக் குறிகள்

வாய்நீர் சுழற்றும் வெயில் கண்டால் மருகியுடலை
யெரிவெடுக்குந்
தானே பலகாற் றலைசுழற்றுந் தறுகிநடக்குங் கிறுகிறுக்கும்
தேனேமஞ்சள் குளித்தவர் போற் தேகமுழுதும் நிறமாகு
மானே செங்கா மாறியிது மஞ்சள் பித்தமெனலாமே. *(32)*

(இ-ள்.) வாயில் உமிழ்நீர் ஊறும். வெயில் ஏற ஏற உடலில் எரிச்சல் அதிகமாகும். தலைச்சுற்றலேற்படும். நடந்தால் ஒருபக்கமாகத் தள்ளும். மஞ்சள் தேய்த்து ஸ்நானம் செய்தவர்போல் உடல் மஞ்சளாகும். இது மஞ்சள் பித்தம் என்ற ரோகத்தின் குறிகளாகும்.

### தித்த பித்தத்தின் குறிகள்

தித்தப்பித்தத்தின் செய்கை தெரிந்திடில் வேப்பங்காய்போல்
ஒத்தநா வதுகசக்கு முண்பதெல்லாங் கசக்குஞ்
சத்தியா யுரைநீர் வாயில் சார்ந்திடு முடல்வெதும்புஞ்
சித்தமாய் மலத்தில் ரத்தஞ் சேர்ந்திடுஞ் செப்பினோமே. *(33)*

(இ-ள்.) நாக்கு வேப்பங்காய் சாப்பிட்டாப்போல் கசக்கும். சாப்பிடும் ஆகாரங்களும் கைக்கும். வாயில் உமிழ்நீர் அதிகரிக்கும். உடலில் எரிச்சலுண்டாகும். மலத்திலும் இரத்தம் வீழும். இவை தித்தப் பித்தக் குறிகள்.

### இக்கு பித்தக் குறிகள்

ஓதிய பகல் நடுப்பத் தோங்கியே மயக்கமுண்டாய்ச்
சோதனையாக நாவிற் சுகம்பெறு மினிப்புமுண்டாய்
போதவே யசனந் தண்ணீர் புசித்திடாதுலர்ந்து தேகம்
பேதமாயிருக்கும் இக்கு பித்தத்தின் குணமிதாமே. *(34)*

(இ-ள்.) பகலில் மயக்கம் அதிகமாகவிருக்கும். நாக்கில் இனிப்புச்சுவை ஏற்படும். ஆகாரம், தண்ணீர் இவைகள் பிடிக்காது. தேகம் இளைத்துப்போம். இவை இக்குபித்தக் குறிகள்.

## அம்லபித்தக் குறிகள்

செப்பும் அம்ல பித்தத்தின் செய்திகேள் நாவுதன்னில்
வெப்புடன் றுவர்ப்புப்போலப் புளிப்பது மேவிக்காணுந்
துப்பிதன் கறுக்கும் நெஞ்சு கரித்திடுந் துயரமுண்டாய்
இப்படிக் குணங்களென்றே யியம்பின ராயுள் நூலோர். (35)

(இ-ள்.) நாக்கில் துவர்ப்புச்சுவை அல்லது புளிப்புச் சுவையதிகரிக்கும். நாக்கு கருநிறமாகும். நெஞ்சுக்கரிப்பும் ஏற்படும். வேதனையைத்தரும். இக்குறிகள் அம்லபித்தக் குறிகளாகும்.

## லவண பித்தக் குறிகள்

பத்திய லவண பித்தஞ் செய்குணம் பகரக் கேளாய்
உத்ததோர் நாவுதொண்டை மட்டுமுப் புரைக்குந் தின்ற
வெற்றிலை பாக்குச்சோறு மப்படி விசேடமாகும்
புற்றில் வாழீசல் போலப் பதறிடும் பலமும் போமே. (36)

(இ-ள்.) நாக்கு, தொண்டை இவ்விடங்களில் உப்பு அல்லது உரைப்புச்சுவை அதிகரிக்கும். வெற்றிலைப் பாக்கு, சோறு இவைகளைத் தின்றாலும் அப்படியே உப்பு அல்லது உரைப்புச் சுவையே மேலிட்டிருக்கும். புற்றில் வாழுப ஈரல்போல (பாம்பைக் கண்டு பயப்படும்)பலம் பதறி ஓடும்

## இதய பித்தக்குறிகள்

இயம்பிடி லிருதயத்தை யெரித்துடன் புகைந்து காட்டி
மயங்கவே தலைகனக்கும் வாயினாலெடுக்கும் பித்தம்
தியங்கியே மலசலங்கள் சிவந்திடு முதரமூதுங்
கயம்படு மிதயபித்த மிதுவெனக் கருதுவீரே. (37)

(இ-ள்.) இருதயத்தில் எரிச்சலோடு புகைச்சல் (கமறல்) உண்டாகும். மயக்கமேற்படும். தலை கனக்கும். பித்தமாக வாந்தியெடுக்கும். மலம் மூத்திரம் இவைகள் செந்நிறமாக இறங்கும். வயிறுப் பொருமல் உண்டாகும். இவை இதயபித்தக்குறி குணங்களாகும்.

### மூலப் பித்தக் குறிகள்

குத்திடுங் குறுக்கில் நோவுங் குளிர்ந்துழைந் திருக்குந்தேகம்
பத்திய வசனங்கொண்டாற் பாகமாய்ச் செரியதாகும்
ஒத்ததோர் மூலந்தன்னி லுழைவுடன் கடுப்புத்தோன்றும்
புத்தியிலறிவீர் மூலப் பித்தத்தின் புதுமைதானே. *(38)*

(இ-ள்.) வயிற்றுப் பக்கங்களில் குத்துவலியுண்டாகும். உடலில் குளிர்ச்சியும், குடைச்சலும் அதிகரிக்கும். பத்தியமான ஆகாராதிகளை உட்கொண்டாலும் அது செரியாது. மூலாதாரத்தில் சூடும் கடுப்பும் தோன்றும். இவை மூல பித்தக் குறிகள்.

### சர்வாங்க பித்தக் குறிகள்

கருதிய சுரமே போலக் கழன்றழன் றெரித்துக் காந்தும்
புரிதரு முடம்பதெல்லாம் புண்ணென நோவுண்டாகுந்
தருமிகு புயங்கள் சந்து நொந்திடும் தளர்வுண்டாகும்
வருசரு வாங்கபித்தம் போசனமறுக்கு மென்றே. *(39)*

(இ-ள்.) உடலில் சுரம்போல் சூடும், எரிச்சலும் ஏற்படும். உடம்பில் புண்போல் வலியேற்படும். கைகள், மூட்டுகள் முதலான இடங்களில் தளர்ச்சி உண்டாகும். இவை ஸர்வாங்க பித்தக் குறிகளாகும். ஆகாரம் தள்ளிப்போம்.

### கன்ம பித்தக் குறிகள்

கன்மத்த பித்தமாகி லுண்டிடுங் கொடுத்த தெல்லாம்
பின்மத்த னாகவார்த்தை பேசரி தாக்கிவிக்கும்

*சென்மத்திற் சதை தடிக்குஞ் சிந்தனை மயக்கஞ் செய்யுங்*
*கன்மத்தின் பகுதி சேர்ந்த கட்டசாத் தியமென்றோதே. (40)*

(இ-ள்.) ஆகாரம் எவ்வளவு கொடுத்தாலும் உட்கொள்வான். பைத்தியம் பிடித்தவன்போல் பேசுவான். உடலில் சதை தடிக்கும். அறிவு பேதலிக்கும். இந்நோய் கஷ்ட சாத்யமானது.

**மோக பித்தக் குறிகள்**

*மோகபித தத்தின் செய்கை யலறிடு மோகமுண்டாம்*
*வேகம்வெப் பிரும லன்னம் வெறுத்தல் மூர்ச் சித்தலாகும்*
*பாகலின் பழம்போற் கண்ணில் நிறமவை பரிந்து தோன்று*
*தேகமெல் லாங்கடுக்கும் அரோசிக மறிகுவீரே. (41)*

(இ-ள்.) மயக்கமுண்டாகும். உடலில் எரிச்சல், ஆகாரத்தில் வெறுப்பும், மூர்ச்சை, கண்கள் பாகற்கனிபோல் சிவப்பாதல், தேகத்தில் கடுப்புவலி, அரோசகம் முதலான குறிகள் மோகபித்தம் என்ற நோயில் ஏற்படும்.

**பித்த நிதானம் முற்றும்.**

# கப நிதானம்

*சீர்பெரு மார்புதன்னிற் செறிந்திடுஞ்[1]சேற்பனந்தான்*
*சார்பெறு மினிப்பினாலுந் தாங்கிய சுமையினாலும்*
*நீர்மிகக் கொள்கையாலும் நிரம்புமுஷ் ணத்தினாலு*
*மேர்பெறு வியர்வையாலு மெழும்பிடு*
*மென்றுசொல்லே. (1)*

[2](இ-ள்.) கபத்தையதிகரிக்கச் செய்யும் பதார்த்தங்களை அதிகம் உட்கொள்ளுவதாலும், தித்திப்புச் சுவையுள்ள பண்டங்களைச் சாப்பிடுவதாலும், அதிகமாகச் சுமையைத்

1. சிலேஷ்மம் என்பதை சிலேற்பனம் என்று கூறப்பட்டுள்ளது.
2. இந்த உரைநடை மூலச்சுவடியிலுள்ளது.

தலையால் தாங்குவதாலும், தேசபேதங்களில் தண்ணீர் குடிப்பதனாலும் அல்லது மழை, பனிவாடை முதலான நீர் சரீரத்தில் ஏற்கையினாலும், சுரம் முதலான உஷ்ண வேகஞ் சரீரத்தில் தரிக்கையாலும் அல்லது மிக சம்போக சங்கத்தில் மிகுந்த நடையில் மிகுந்த வெயிலில் வெப்பமாக வியர்க்கையாலும் திருந்திய மார்பினிடமாக இருந்த கபம் பிரகோபமடையும்.

இது இருபது விதமாக சஞ்சரிக்கும். அவையாவன:-

1. பிரதானசிலேற்பனம்
2. வாதசிலேற்பனம்
3. பித்தசிலேற்பனம்
4. பக்குவாசயசிலேற்பனம்
5. ஆமாசயசிலேற்பனம்
6. இரத்தசிலேற்பனம்
7. மூலசிலேற்பனம்
8. சுக்கிலச்சிலேற்பனம்
9. கபாலச்சிலேற்பனம்
10. கண்டசிலேற்பனம்
11. இருதயச்சிலேற்பனம்
12. உதரச்லேஷ்மம்
13. வியானசிலேற்பனம்
14. ஸர்வாங்கசிலேற்பனம்
15. அதிஸாரசிலேற்பனம்
16. சுர சிலேற்பனம்
17. பிராணசிலேற்பனம்
18. உதானசிலேற்பனம்
19. சமானசிலேற்பனம்
20. அபானசிலேற்பனம்

ஆக 20 வகைப்படும்.

## கபத்தின் பொது லக்ஷணங்கள்

என்றிடுஞ் சிலேற்பனத்தி னியல்குண முடம்பு வியர்க்கும்
நன்றெனவுமிழ்நீரூறி நாவழுவழுத்திருக்கும்
ஒன்றிய மலநீர் தானு முண்மையாய் வெளுத்து வீழுந்
தின்றிடு முணவினுக்குந் தேகமுங் கனமுண்டாமே. (2)

(இ-ள்.) பொதுவாகக் கபம் அதிகரித்தால் உடம்பில் வியர்வை, உமிழ்நீரூறுதல், நாக்கில் வழவழப்புத் தோன்றல், மூத்திரம், மலம் முதலானவைகள் வெண்ணிறமடைதல், தேகத்தில் பாரம் முதலான குறிகள் காணும்.

### வாத சிலேற்பனம்

வாதசிலேற் பனத்தின் செய்கை மலசலம் வெளுத்துக்
காணும்
பாதமுங்கையுங் காந்தும் பருத்துடல் தடித்துக் காணும்
நாதமு மரையுங் குத்தும் நளிர் குளிர் சுரமுமுண்டாஞ்
சீதமா மங்கமெங்குஞ் செய்குண மறிகுவீரே. (3)

(இ-ள்.) மலமும், மூத்திரமும் வெண்ணிறமாக இறங்கும். பாதம், கைகள் முதலான உறுப்புகளில் எரிச்சலுண்டாகும். உடல் பருமனாகும். மர்மஸ்தானம், இடுப்பு முதலான இடங்களில் குத்துவலியுண்டாகும். குளிர் ஜ்வரமும் ஏற்படும். உடல் ஜில்லென இருக்கும். இவை வாதசிலேற்பனக் குறிகளாகும்.

### பித்தச் சிலேஷ்மக் குறிகள்

பித்தச்சி லேற்பனத்தின் செய்கை பேசுவன் கேளாய் நீயு
மொத்ததோ ருடல் வெளுக்கு முதரமு நோவு காட்டும்
நித்தமும் வாந்தி செய்யும் நெஞ்சமுங் கரித்துக் காணும்
குக்கியே குறுக்கு நொந்து குளிர்ந்துளைந் திருக்குங்
காணே. (4)

(இ-ள்.) உடல் வெளுக்கும், வயிற்றுவலியுண்டாகும். தினமும் வாந்தியுண்டாகும். நெஞ்சுக்கரிக்கும். வயிறு வலியுடன், குளிர்ந்து காணும்.

### பக்குவாசய சிலேற்பனம்

பக்குவா சயத்தைப்பற்றி பறந்திடுஞ் சிலேற்பனந்தான்
மிக்கமேல் வயிறுதன்னில் விதனமாய் கனத்துக்காணும்
தக்கியே மலசலங்கள் தவறியே வாயுவாகும்
புக்கியே நடுவயிற்றிற் றோன்றிடுந் திரட்சைதானே. (5)

(இ-ள்.) மேல்வயிற்றில் கனமுண்டாகும். மலசலங்கள் போகாது. ஆனால் வாயுப்பிரியும். நடுவயிற்றில் உருண்டையாகத் தோன்றும். இவை பக்குவாசய சிலேற்பனக் குறிகள்.

## ஆமாசய சிலேற்பனம்

ஆகுமா மாசயத்தி லடுத்திடுஞ் சிலேற்பனந்தான்
தோகையே நடுவயிற்றிற் றோன்றிடுந் திரட்சைதானே
நோகுமாந் திரட்சைதன்னை யதுக்கிடில்
நொதுநொதென்னுந்
தேகமே மெலியுமன்னஞ் செரிப்பது மரிதென்றோமே. (6)

(இ-ள்.) நடுவயிற்றில் உருண்டு திரண்டு வீக்கமுண்டாகும். அதில் குத்துவலியும் உண்டாகும். வீக்கத்தை அதுக்கிப்பார்த்தால் 'நொதுநொது' என்று இருக்கும். அதாவது கெட்டியாக இராது. உடல் இளைக்கும். ஆகாரம் சீரணிக்காது.

## இரக்தச்சிலேற்பனம்

கொண்டிடு மிரத்தந்தன்னிற் கூடிய சிலேற்பனந்தான்
மண்டிய விரத்தந்தானே வாயினாலெடுத்துத் தட்டுங்
கண்டிடும் வாந்திதன்னிற் சிலேற்பனங் கூடக்காணுந்
தொண்டையுங் கட்டும் நாவுந் தித்திக்கு மென்றுசொல்வே.

(இ-ள்.) வாந்தியில் கபமும், இரத்தமும் காணும். தொண்டைக் கம்மலுண்டாகும். நாக்கில் தித்திப்புச் சுவையும் உண்டாகும். இவை இரத்தச் சிலேற்பனக் குறிகளாகும்.

## சுக்கிலச்சிலேற்பனம்

கூறிய சுக்கிலத்திற் கூடிய சிலேற்பனந்தான்
மீதிய கருப்பப்பையில் வீழினுந் தரியாதாகு
மாறிய சுக்கிலம்போல் நீருடன் வந்துவீழுந்
தேறிய பலமுங்கெட்டித் தேகமுங் கடுக்குமென்றே. (8)

(இ-ள்.) சுக்கிலம் கருப்பையில் விழுந்தாலும் கருத்தரியாது. சுக்கிலம் நீர்போன்று விழும். தேகத்தில் பலம் குறைவடைந்து, குத்துவலி மேலிடும். இவை சுக்கிலச் சிலேற்பனக் குறிகள்.

## கபாலச் சிலேற்பனம்

சேர்ந்தெழு துயர்கபால சிலேற்பனக் குணத்தைக் கேளாய்
வாய்ந்த பீனிஸ ரோகத்தை வளர்த்திடுந் தலையிடிக்குங்
கூந்தலும் நரைக்குங்காதுங் கூப்பிடுஞ் சொரிவுண்டாகும்
பாய்ந்துநீர் கண்ணில் மூக்கில் பரிந்திடு மறிகுவீரே. (9)

(இ-ள்.) மூக்கிலிருந்து நீர் பொசியும், தலைவலியுண்டாகும். தலை நரைக்கும். காது கேளாது. கண்ணீர் பொசியும். இவை கபாலச் சிலேற்பனத்தின் குறிகள்.

## கண்டச் சிலேற்பனம்

கண்டத்திற் சிலேற்பனஞ் செய் குணமது கருகுரென்னத்
தொண்டைக்குள் ளிரையுங் காசந் தோன்றிடு
மிளைப்புக்காணும்
பண்டுற்ற வியாதியோர்க்குப் பற்றிடி லாகாதென்க
மிண்டுற்ற சரீரத்தோர்க்கு மருந்தினால் விலக்கலாமே. (10)

(இ-ள்.) தொண்டையில் கிர்புர் என்ற சத்தம் ஏற்படும். இருமல் உண்டாகும். தேகம் இளைக்கும். வியாதியுள்ளவர்களுக்கு இது ஏற்பட்டால் தீராது.

## இருதயச் சிலேற்பனம்

இயம்புவே னிருதயத்தி லியைந்திடுஞ் சிலேற்பனந்தான்
கயம்படு மார்புநோகுங் கக்கிடுங் சிலேற்பனத்தை
நயம்படச் சுரமுந் தோன்றும் நஞ்சுண்டார் போல்மயங்குந்
தயங்கிடு முணவு கொள்ளில் தித்திக்குஞ் செல்லாதென்னே.

(இ-ள்.) இருதயத்தில் கபம் சேர்ந்தால் மார்பில் வலியுண்டாகும். அடிக்கடி கோழை வெளிவரும். சுரம் உண்டாகும். விஷத்தை உட்கொண்டவர்போல் மயக்கம் ஏற்படும். ஆகாரத்தில் தித்திப்புச்சுவை காணும். இவை இருதய சிலேத்மக் குறிகளாகும்.

## உதரச் சிலேற்பனம்

உதரத்திற் சிலேற்பனஞ் செய் குணந்தனை யுரைக்கக்
கேளாய்
உதரத்திற் பிரம்புபோலத் தடித்திடு மூதையுண்டாம்
உதரத்திற் கிருமியுண்டா மோங்கிமே லேப்பமுண்டாம்
உதரத்திற் கவிகையாதி கனுபவ முண்டாமென்னே. *(12)*

*(இ-ள்.)* வயிற்றின் மேல் பிரம்பைப் போல் ஒரு தடிப்பு ஏற்படும். வலியுமுண்டாகும். வயிற்றில் கிருமிகளும் அதிகமேற்படும். ஏப்பமும் அதிகரிக்கும். இம்மாதிரியான அனுபவங்கள் உதரச்சிலேத்ம ரோகத்திலேற்படும்.

## மூலச் சிலேற்பனம்

மூலத்திற் சிலேற்பனஞ் செய் குணந்தனை மொழியக்
கேளாய்
காலத்தில் மலம் விடாது மலத்தினிற் சீதம் காணும்
தூலத்தை யடைக்குந் தேகம் அதிஸாரஞ் சோகை யுண்டாங்
கோலத்தை யழிக்கும் சந்து குறுக்கினிற்
குடைவுண்டாமே. *(13)*

*(இ-ள்.)* மலம் சரியாகக் கழியாது. சீதமும் போம். உடம்பு தடித்துப்போகும். சிற்சில சமயங்களில் அதிஸாரமும் காணும். இரத்தம் குறைந்து சோகையுண்டாகும். உடம்பில் வலியுமேற்படும். இவை மூலச்சிலேத்மக் குறிகளாகும்.

## சர்வாங்கச் சிலேத்மனம்

சருவாங்க சிலேற்பனத்தின் குணந்தனைச் சாற்றக் கேளாய்
சருவாங்க வியர்வையுண்டாந் தலைவலியிருமலுண்டாஞ்
சருவாங்கங் கடுப்பு முண்டாஞ் சஞ்சல மிகவு முண்டாஞ்
சருவாங்கஞ் சுரமுமுண்டாஞ் சத்தியு முண்டாமென்னே. *(14)*

*(இ-ள்.)* உடம்பு முழுவதும் வியர்வையரும்பும். தலைவலி, இருமல் முதலானவைகளேற்படும். தேகம்

பூராவிலும் கடுப்பு வலியுண்டாகும். மிகவும் வேதனையளிக்கும். சுரமும் காயும். வாந்தியும் ஏற்படும். இவை ஸர்வாங்கச் சிலேத்மக் குறிகள்.

## அதிஸாரக் சிலேத்மனம்

*அதிஸாரச் சிலேற்பனத்தின் குணந்தனை யறிய வேண்டி*
*மதிஸாரம் பிறக்குமுன்ன மாகிலு மதன் பின்னேனும்*
*விதிசாரு முடம்பைச்சார்ந்து விக்கலோ*
*டிளைப்புமுண்டாஞ்*
*சதிசாரு மிருமலுண்டாம் பாண்டுவுஞ் சாறுமன்றோ. (15)*

(இ-ள்.) அதிஸாரம் (வயிற்றுப்போக்கு) ஏற்படுவதற்கு முன்னாலேயோ அல்லது பின்போ விக்கல், தேக இளைப்பு, இருமல், பாண்டு முதலான ரோகங்களேற்படும். இவைகளைக்கொண்டு அதிஸார சிலேற்பனம் எனத்தெரிந்து கொள்ளவும்.

## சுரச் சிலேற்பனம்

*சுரசிலேத்ம னத்தின் செய்கை சுரமுண்டாம்*
*வியர்வையுண்டாம்*
*கரபாதங் குளிர்ந்திருக்கும் கக்கிடுஞ் சிலேற்பனத்தை*
*யுரமது துடிக்குங் கண்பஞ் சோவிடும் வாந்திசெய்யுஞ்*
*சிரமது கனக்குங் காது சில்லென வடைக்குந்தானே. (16)*

(இ-ள்.) ஜ்வரமடிக்கும். தேகத்தில் வியர்வை, கைகால்களில் குளிர்ச்சி, கோழை வெளியாதல், மார்பில் துடிப்பு, கண்கள் பஞ்சடைதல், அதிகமான வாந்தி, தலைவலி, காதடைப்பு முதலான குறிகளும் காணும்.

## பிராணச் சிலேற்பனம்

*கூடிய பிராணன் தன்னிற் குலவிய சிலேற்பனந்தான்*
*பீடுற வாந்திசெய்யுஞ் சிலேற்பனம் பெருகவீழும்*

வாடியே உடம்புநோகும் வாயுவு மிளைப்புமுண்டாஞ்
சூடிய குணங்கள் தன்னை தொகுத்துநீ ரறிகுவீரே. (17)

(இ-ள்.) வாந்தியில் கோழை விழும். உடம்பு வாட்டமடைந்து வலியெடுக்கும். வாயு அதிகரிக்கும். தேகம் இளைக்கும். இவை பிராணசிலேத்மக் குறிகளாகும்.

### உதானச் சிலேற்பனம்

மிஞ்சிய வுதானன் தன்னை மேவிய சிலேத்பனந்தான்
வஞ்சகமாகக்கொண்ட புசிப்பினை வாந்திசெய்யுஞ்
சஞ்சலமுண்டாம் வாந்தி தன்னிலே சிலேற்பமுண்டாம்
துஞ்சிய மலத்தில் சீதந்தோன்றிடு மறிகுவீரே. (18)

(இ-ள்.) உட்கொண்ட ஆகாரத்தை வாந்தி செய்விக்கும். வாந்தியில் கபம் விழும். மலத்திலும் சீதம் விழும். இவை உதானசிலேத்மக் குறிகளாகும்.

### வியானச் சிலேத்மனம்

மேவிய வியானன் தன்னில் விரவிய சிலேத்மனந்தான்
காவியங் கண்வெளுக்கு முடம்பது கனத்து வியர்க்குந்
தீவிரமாகக்கொண்ட புசிப்பது செரியாதாகும்
பாவகமான மேனி குளிர்ச்சியே பதியுங்காணே. (19)

(இ-ள்.) கண்கள் வெளுத்துப்போம். உடம்பில் பாரமுண்டாகும். வியர்வையரும்பும். சாப்பிட்ட ஆகாரம் சீரணிக்காது. உடலில் குளிர்ச்சியுண்டாகும்.

### சமானச் சிலேற்பனம்

பொங்கிய சமானன் தன்னில் பொருந்திய சிலேற்பனந்தான்
தங்கிய மலமறாதே தள்ளிடு மரைத்த மாப்போல
அங்கமுங் குளிர்ந்திளைக்கு மசனமுங் வெறுக்குந்தாது
மங்கிடுஞ் சொன்னேன் சொன்னேன் மனதினிலறிந்து
கொள்ளே. (20)

(இ-ள்.) மலம் அரைத்த மாவைப்போல வெளியாகும். அங்கங்கள் குளிர்ந்துபோம். சாப்பாடு வெறுத்துவிடும். தாது க்ஷீணமுண்டாகும். இவை சமான சிலேத்மக் குறிகளாகும்.

### அபானச் சிலேத்மனம்

சொல்லிய வபானன் தன்னைத் தோய்ந்திடுஞ்
சிலேற்பனந்தான்
கல்லென மலத்துவாரங் கட்டியே கழியுஞ்சீதம்
மெல்லிய மூலந்தன்னை வெளியினி லுழைந்துதள்ளும்
அல்லல் செய் சிறுநீர் கட்டும் அறிந்திடுங் குணங்கள்தானே.

### திரிதோஷ சங்கிரகம் 140 வரும்

வாதமென் பதனிலொன்றில் வாய்ந்திடுங் குணமும் பித்தம்
ஓதிய பத்துநான்கு வொன்றினிற் குணமுஞ் சேற்பங்
காகிய பதித்துரெண்டி லொன்றுமே கலந்து காணி
லாதியு மீறுமாக வதன்பெய ரறிகுவீரே. (22)

வாதத்தின் குணமே மிஞ்சி மற்றதன் குணமேதாழில்
வாதத்தை யாதியாக வைத்திராய் வகுக்க ரோகம்
வாதத்தின் குணமே தாழ்ந்து மற்றதின் குணமுயர்ந்தால்
வாதத்தை யீறாயாகி வைப்பது மற்றதாமே. (23)

திரிகுணஞ் சேர்க்கையன்றி யிருகுணஞ் சேருமேனும்
வருகுணங் கண்டு ரோகம் வகுப்பது முறைமையாகுந்
திரிகுணஞ் சேறிற் றீரா திருகுணம் நீளத்தீரு
மொருகுண மாகிற்றீரு மெனமுனி யுரைத்தவாறே. (24)

**இவற்றின் பொருள்கள் விளங்கவில்லை.**

### சுரலெட்சணம்

சுரு திநான் முகத் தோனரு டோன்ற லான்
பொரு விலாதப் பொதியப் பொருப்பினா
னுரி யயாயுள் மறை தெரிந் தோதிய
சுர நிதானம் புவிமிசை சொல்லுவாம். (1)

சந்தனப் பொதியத் தடவரை யமர்ந்த
செந்தமிழ் பரமா சாரியர் பதங்கள்
சிரமேற் கொள்வது திகழ்தமிழ் பொருட்டே. (2)

கயிலையங் கிரியில்வாழுங் கரைகண்டர் பண்டோர்கால
மெயிலுடைப் பிரசாபதிதன் னியற்கையை யழித்தஞான்றுந்
துயிலிடை யோகமெய்த் துரந்தர னாகுமெவ்வை
அயில்மதன் கணையால் நெற்றி வெடித்தழல் சுரமதாமே. (3)

(இ-ள்.) பிரும்மாவின் அருளினால் தோன்றிவரும், பொதிகைமலையில் வாழுபவருமான (அகஸ்தியர்) ஆயுர்வேத முறைகளைக் கற்றுச் சொன்னபடி சுரநிதானத்தைப் பகருவோம்.

சந்தனக் காடுகளடர்ந்த பொதிகைமலைச் சாறலையடைந்த செந்தமிழுக்கு ஆதியான ஆசாரியார் (அகஸ்தியர்) பாதங்களை சிரஸில்வைத்து வணங்குவோம்.

கைலாசபதியான பரமசிவன் முன்னம் தக்ஷப்பிரஜாபதி செய்த யாகத்தை அழிப்பதற்கும், தான் யோகம் (தபஸ்) செய்கையில் அழிக்கவந்த மன்மதனின் கணையை எரிப்பதற்கும் காரணமான மூன்றாவது நெற்றிக்கண்ணிலிருந்து தோன்றிய நெருப்பே சுரமாயிற்று.

## சுரம் வரக்காரணங்கள்

பண்டியில் மலத்தினாலும் பழகிய சீதத்தாலும்
உண்டியிற் பொல்லாங்காலு மொண்டொடி வருத்தத்தாலும்
கண்டுயி லிலாமையாலுங் கடுகிய நடையினாலு
மிண்டிய சுவையினாலும் வெதுப்புவந் தணுகுந்தானே. (4)

(இ-ள்.) மலச்சிக்கலாலும், குளிர்ச்சியினாலும், ஆகாரக் கோளாறுகளினாலும், ஸ்திரீகளின் வருத்தத்தாலும் (அதாவது போகத்தினாலும்) தூக்கம் இல்லாமையினாலும், அதிகமாக நடப்பதனாலும், நாக்கின் சபலத்தாலும் (கண்டவற்றைச் சாப்பிடுதல்) ஜ்வரம் சம்பவிக்கும்.

## இதுவுமது

கடுவெயில் மழைகளாலும் கதறிய குரலினாலும்
விடமது காந்தலாலும் வெருவிய வேகத்தாலும்
முடிமிசை யெண்ணெய் தேய்த்து முழுகியும் போகாதாலுந்
தடியடி படுகையாலும் வெதுப்பது சாருங் காணே. (5)

(இ-ள்.) கடுமையான வெய்யில், மழை இவைகளில் சஞ்சரிப்பதனாலும், தொண்டைக்கிழியக் கத்திப் பேசுவதாலும், விடங்களின் உஷ்ணத்தாலும், தலையில் எண்ணெய் தேய்த்துக்கொண்டு ஸ்நானம் செய்தும் எண்ணெய் போகாததாலும் தடியினால் அடிபடுவதாலும் சுரம் உண்டாகும்.

## சுரத்திற்கு வேறு பெயர்கள்

சுரமதே கனலதாகுஞ் சுரமதே தோஷமாகுஞ்
சுரமதே சோகமாகுஞ் சுரமதே மேகமாகுஞ்
சுரமதே கபமதாகுஞ் சுரமதே சாரமாகுஞ்
சுரமதே தாகமாகுஞ் சுரமதே வரட்சியாமே. (6)

சுரமதே இரத்தமாகுஞ் சுரமதே நீரதாகுஞ்
சுரமதே சீயுமாகுஞ் சுரமதே மச்சையாகுஞ்
சுரமதே கணமதாகுஞ் சுரமதே சீதமாகுஞ்
சுரமதே இருமலாகுஞ் சுரமதே சயமதாமே. (7)

சுரமதே பொருமலாகுஞ் சுரமதே சூலையாகுஞ்
சுரமதே சொரிவதாகுஞ் சுரமதே விரணமாகுஞ்
சுரமதே பித்தமாகுஞ் சுரமதே வாதமாகும்
சுரமதே யீளையாகுஞ் சுரமதே யிளைப்புமாமே. (8)

சுரமதே நடுக்காலத்தில் சுரமதே நாளின் மத்தி
சுரமதே (நடுவில்) நாடி சுரமதே பிறையின் மத்தி
சுரமதே வாதபித்தந் தோன்றிய சிலேத்மத்திற்கு
முறமதா மென்ன முன்னோர் வோதிய வேதந்தானே.

(இ-ள்.) கனல், தோஷம், சோகம், மேகம், கபம், சாரம், தாகம், வறட்சி, இரத்தம், நீர், சீழ், மச்சை, கணம், சீதம், இருமல், சயம், பொருமல், சூலை, சொறிவு, விரணம், பித்தம், வாதம், ஈளை, இளைப்பு, நடுக்காலம், நாளின் மத்தி, நடுவில் நாடி, பிறையின் மத்தி, வாத பித்த கபங்களுக்கு ஆதி எனப் பலவாறாகப் பெயர்பெறும். அதாவது எல்லா நோய்களிலும் ஜ்வரம் முக்யமாகக் காணும் என்று தெரிந்துகொள்ளவேண்டும்.

## *4448 வியாதிகளுக்கும் உஷ்ணமே காரணம்*

சொல்லிய வாதபித்தச் சிலேற்பனத் தொகுதியாலே
அல்லல்செய் வியாதிநாலா யிரத்துநா னூறுமப்பால்
எல்லையாம் நாற்பத்தெட்டு வியாதிக்கு மிறையேவெப்பு
நல்லியல் பாகமுன்னோர் நாடியே யுரைத்ததாமே. *(10)*

(இ-ள்.) வாத, பித்தம், கபம் முதலான தோஷங்களினாலுண்டாகும் 4448 வியாதிகட்கும் காரணமாகவுள்ளது உஷ்ணமேயாகும்.

## *சுரங்களின் பொதுப்பிரிவுகள்*

ஆகுமிச் சுரந்தான் வாத பித்தமை யதன்தோற் றத்தால்
மேவியே யெட் டெட்டாக்கி விரிந்திடு மென்பார்
முன்னோர்
வாகடமமைத்துச் சாத்தியா சாத்திய மறுங் குணங்கள்
பாகுடன் மருந்துதானும் பகர்ந்தனர் பரிந்து தானே. *(11)*

(இ-ள்.) வாத, பித்த கபம் இவைகளின் பேதத்தால் எட்டெட்டு வகையாகும். இவைகளின் சாத்தியா சாத்யங்களையும் கூறி மருந்துகளும் வாகடத்தில் கூறியிருக்கின்றனர்.

## *சுரங்களின் சாத்யா சாத்யம்*

தானமாம் வாதந்தன்னி லிருபது தழல்சேர் பித்த
மூனமி லறுநான்காகு மறுகப மிருபதாகும்

பானலங் கண்ணாய் கேளாய்! பரிந்துறு வாதந்தன்னி
லீனமா மெட்டுவெப்புச் சாத்திய மென்னலாமே. (12)

என்றிடும் பித்தந்தன்னி லியற்றிரு பத்துநான்கில்
ஒன்றிய பத்து வெப்பு மேவிய சிலேற்பனத்தில்
ஒன்று மொன் பதுவுந்தானே சாத்திய முண்மையென்று
மன்றலங் குழலிக் கீசன் வகுத்துரை செய்தவாறே. (13)

(இ-ள்.) வாதத்தில் 20 வகைச் சுரங்களும், பித்த தோஷத்தினால் 24 வகைச் சுரங்களும், கப தோஷத்தினால் 20 வகை சுரங்களும் ஏற்படுகின்றன. இவைகளுள் வாதத்தில் 8வகையும், பித்தத்தில் 10 வகையும், கபத்தில்9 வகைகளும் சாத்யமாகும். மற்றவை அஸாத்யம்.

## சுரம் 64க்கும் பெயர்கள்

சாற்றுமா யுள்மறையி றான்றெரிந்து முன்னுரைத்த
போற்றுசுர சங்கை புகல்வதே-தோற்றிய
வாதபித்த சிலேத்மசுரம் வாதப்ப யித்தியசுரந்
தீதறுவா தசிலேத்துமசுர-மோதரிய
பித்தச்சி லேத்மசுரம் பித்தத்தில் வாதசுரம்
ஒத்தகப வாதச்சுரமுடனே-பத்தியாஞ்
சேற்பன பித்தசுரஞ் சேர்சந்நி வாதசுரம்
மாற்றிய நான் கதீனோடுந்-தோற்றிய
பூதப் பிரேதசுரம் புகலறிய தாகசுர
மாதியி லமர்ந்த ஆசீர்ணசுரஞ்-சீத
வேயர்வையொரு மூன்றுவிர லத்தியிற் சுரமூன்று
வுறுசோக மதிநான்கு-பெயரும்
அதிகாரம் நான்கா மதில்மாற லோர்நான்கு
மானசீத மொரு நான்கும்-விதமான
ஆகீக விரணசுரம் ஆகிய மோகச்சுரம்
வேகசயங் கள்வித நான்கு-மோக
உதிரியொரு மூன்றுடன் கரபாத தாகம்
பெருகுபிர தரத்தின் பெயர்மூன்று-மருவும்
விடச்சுர மிரண்டு மிகுவாந்தி மேகச்

சுரங்கண்டு தன்னிற் சதுர்விதமாந்-திடப்பெரிய
தோடசுர மாந்த சுரமறுபத் துநான்கு
மேடனைய மூன்றி லியம்பக்கேள்-கொடிய
வாதத்தி நாலைந் தறுநான்கு பித்தத்தி
லோதுகப மைநான்கு ரைத்திடுகிற்-றீதகல.
வாதந்தீ ராறுமறு பித்தத்தோர் பத்துஞ்
சாதியசேத் மம்பத்துஞ் சாத்தியமாங்-காதிய
வூதையி லெட்டுமுறு பித்தம் பன் னான்கு
மேதமுறு கபத்தி லீரைந்து-மோதும்
சாத்திய மென்றே யறிந்துணர்ந்து கொண்டால்
விசித்திர மாமாயுள் மறைக்கு. (14)

(இ-ள்.) 1. வாதசுரம், 2. பித்தசுரம், 3. சிலேத்மசுரம், 4. வாதபித்த ஜ்வரம், 5. வாதகப ஜ்வரம், 6. பித்தகப ஜ்வரம், 7. பித்தவாத ஜ்வரம், 8. கபவாத ஜ்வரம், 9. கபபித்த ஜ்வரம், 10-13. சந்நிபாத ஜ்வரம்4, 14. பிரேத ஜ்வரம், 15. தாக ஜ்வரம், 16. அசீர்ண ஜ்வரம், 17-19. அத்தி ஜ்வரம் 3, 20-23. சோக ஜ்வரம்4, 24-27. அதிஸார ஜ்வரம் 4, 28-30. சீத வியர்வை ஜ்வரம்3, 31. விரண ஜ்வரம், 32-34. மோக ஜ்வரம் 3, 35. கரபாத தாக ஜ்வரம், 36-38. பிரதர ஜ்வரம் 3, 39-40. விஷ ஜ்வரம் 2, 41-44. வாந்தி மேக ஜ்வரம் 4, 45. தோஷ ஜ்வரம், 46. மாந்த ஜ்வரம், 47-50. மாறல் ஜ்வரம் 4, 51-54. சீத ஜ்வரம் 4, 55-58. சய ஜ்வரம் 4, 59-62. ஆகிகவிரண ஜ்வரம் 4, 63. பூத ஜ்வரம் 1, பொதுவாக வாதத்தினால் 20 வகைகளும், பித்தத்தினால் 24 வகைகளும், கபத்தினால் 20 வகைகளும் உண்டு. இவற்றுள் வாதத்தில் 12ம், பித்தத்தில் 10ம், கபத்தில் 10ம் ஆக 32வித ஜ்வரங்கள் சாத்யம் மற்ற வாதத்தில் 8 வகைகளும், பித்தம் 14வகைகளும், கபம் 10வகைகளும் அசாத்யமாகும்.

# சுரம் 64ன் குணாகுணங்கள்

## வாதஜ்வரக் குறிகள்

வாதசுரத்தின் குணங்கேளாய் மயிர்க்கூச்செரியு முடல்
குளிரும்
போதநடுக்குங் கைகால்கள் பொறுத்துத் தோறு
முளைழவாரும்
பேதமுகமு மினுமினுக்கும் புறந்தா ழதைத்து
வெளுத்திருக்கு
மூதைமிகுமே மலம்வாயு வுடனே நீருஞ் சிறுத்திடுமே. (1)

(இ-ள்.) தேகத்தில் மயிர்க்கூச்சலுண்டாகும். குளிரும் உண்டாகும். கைகால்கள் நடுக்கும். மூட்டுகள்தோறும் குடைச்சல் ஏற்படும். முகம் மினு மினுக்கும். புறந்தாள் வீங்கும். வெளுப்புமுண்டாகும். மலம், வாயு, சிறுநீர் இவைகள் குறைந்துவிடும்.

## வாத பித்தச்சுர லக்ஷணங்கள்

வாதபித்த ஜ்வரமானால் வருத்துங்குணத்தை மானே கேள்
நாதமடைத்தே இரைச்சலுமாம் நாவுங்கண்ணு மஞ்சணிக்கு
மூதை மிகுந்து விடாச்சுரமா மோங்காரிக்குங் கண்டூங்குஞ்
சீதமிகுந்து பிரமையுமாஞ் செய்யுங் குணத்தைத்
தேர்ந்தறியே. (2)

(இ-ள்.) காதில் இரைச்சலுண்டாகும். நாக்கு, கண்கள் இவை மஞ்சள் நிறமடையும். சுரமும் விடாமல் அடிக்கும். ஓக்காளம் உண்டாகும். கண்கள் தூங்கும். உடம்பில் குளிர்ச்சி ஏற்பட்டு மயக்கமும் உண்டாகும். இவைகள் வாதபித்த ஜ்வர லக்ஷணங்கள்.

## சீத வாதஜ்வர லக்ஷணங்கள்

சீதவாத சுரமானால் செய்யுங் குணத்தைச் செப்புவன் கேள்
மோதி நடுங்கும் விரைவிரைக்கு மூறிவிக்கல் நெட்டியுமாம்
பேதமலமுஞ் சலமடைத்துப் பிதறுமறிவாய்ப் பேசவருங்
காதுஞ்சுரமும் வியர்வையுமா மிந்தக்குணங்கள்
கண்டறியே. *(3)*

(இ-ள்.) உடலில் நடுக்கமேற்படும். ஆண்குறி எழும்பும், விக்கல் உண்டாகும். அடிக்கடி நெட்டி வாங்குவான். மலமும் மூத்திரமும் அடைத்துப்போம். வாய்க்குவந்தபடி பேசுவான். சுரம் அடிக்கும். வியர்வையும் அதிகமாக வெளியாகும். இவை சீதவாதக்குறிகளாகும்.

## வாத அத்திஜ்வர லக்ஷணங்கள்

அத்தியி லூதைவிம்மி யடிக்கடிசுரங் காயாது
பத்தியஞ் செரியாதாகும் பலபல தாகமுண்டாஞ்
சித்தமு மயங்கிக் கைகா லோய்ந்திடுந் தேய்ந்துகாட்டு
மொத்தவிக் குணங்கள் வாத அத்தியிற் சுரமென்றோதே. *(4)*

(இ-ள்.) எலும்புகளில் சிலுசிலுப்பு உண்டாகும். அடிக்கடி சுரம் அடிக்காது. தாகம் ஏற்படும். அறிவு மயங்கும். கை, கால்களில் ஓச்சலுண்டாகும். இளைத்துப்போம். இவை வாத அஸ்திஜ்வர லக்ஷணங்களாகும்.

## ஆகிக வாதஜ்வர லக்ஷணங்கள்

தாகமாய் மோகமுண்டாய் மலமொடு சலமுந் தங்கித்
தோகையே விரை விறைத்துத் துரப்புட னிளைப்புமாகி
வேகமாயெழுந்து வீழுஞ் சிரத்திடி மிகவும் காணும்
ஆகிக வாதந் தன்னிற் சுரமென வறிகுவீரே. *(5)*

(இ-ள்.) தாகம், மயக்கம் இவைளேற்படும். மலம், மூத்திரம் இவைகள் கட்டிவிடும். ஆண்குறி எழும்பும். தேகம்

இளைக்கும். நடமாடுவதற்கு இயலாது. தலைவலி யுண்டாகும். இவை ஆகிக வாதஜ்வர லக்ஷணங்களாகும்.

## வாத கணச்சுர லக்ஷணங்கள்

நீரிடுஞ் சுர மென்மேலும் நீரொடு மலமுஞ் சிக்கிக்
கூறிடும் நாக்குத் தொண்டை குதங்களும் விரிந்து புண்ணாம்
வேறுநீர்த் தாகந்த தாபம் வெப்புறு கழிச்சலுண்டாங்
கூறிய குணங்கள் வாத கணச்சுர மென்று சொல்லே. (6)

(இ-ள்.) சுரம் வரவர அதிகரிக்கும். சிறுநீர், மலம் இவை கட்டிவிடும். நாக்கு, தொண்டை, ஆசனவாய் இவைகள் விசாலித்துப் புண்போலவாகும். அதிகமான நாவறட்சி, தேகத்தில் எரிச்சல் இவைகளும் உண்டாகும். சிற்சில சமயங்களில் கழிச்சலும் உண்டாகும்.

## 4 நாள் மாறல் ஜ்வரம்

வாதத்திற் சீதஞ் சேர்ந்து குளிர்சுர மதிகமாகித்
தாதித்தே வுடம்பு நொந்து சந்துதா ழுளைந்து நைந்து
பேதத்தா லிருமிச் சீறி வாந்தியாய் பிரமையுண்டா
மீதுத்த நாலுநாளை மாறலென் றியம்பலாமே. (7)

(இ-ள்.) வாதமும் குளிர்ச்சியும் அதிகரித்துக் குளிருடன் ஜ்வரம் உண்டாகும். உடம்பில் குத்துவலியுண்டாகும். மூட்டுகள், தான் இவைகளில் குடைச்சலேற்படும். விட்டுப்போவதைப் போன்ற உணர்ச்சியும் உண்டாகும். இருமல், வாந்தி, மயக்கம் இவைகளும் ஏற்படும். இவைகள் நாலுநாள் மாறல் ஜ்வரம் என்று தெரிந்துகொள்ளவும்.

குறிப்பு:-- இந்த வகை குளிர் ஜ்வரம் நான்கு நாட்களுக்கொருமுறை வீசியடிக்கும். பின்னர் தானாகக் குறைந்துவிடும்.

## மாந்த ஜ்வரக் குறிகள்

*பொருமியே கழிச்சலுண்டா மலமது புளித்து நாறு*
*முறுகவே சுரமுங் காயும் வாந்தியு மூச்சுமுண்டாம்*
*பெருகவே தாகந் தாபம் மயக்குறும் பிரமையுண்டா*
*முருகவிழ் குழலாய்! மாந்தச் சுரமென மொழியலாமே. (8)*

*(இ-ள்.)* வயிறு பொருமும். கழிச்சலும் உண்டாகும். மலம் புளிப்பு வாடையடிக்கும். சுரம் காயும். வாந்தி, மேல்மூச்சு இவையதிகரிக்கும். தீராத தாகம், எரிச்சல், மயக்கம் இவைகளுமுண்டாகும். இவை மாந்த ஜ்வரக் குறிகளாகும்.

## மந்த ஜ்வரக் குறிகள்

*அக்கினி மந்தமாகு மலமொடு சலமடைக்கும்*
*விக்கலு முழலைவாந்தி யுடன்சுரம் விடாமற் காயும்*
*புக்கிய முகங் கனக்கும் வயிறது பொருமிக் காட்டு*
*மிக்குணம் வாதமந்தச் சுரமென விசைக்கலாமே. (9)*

*(இ-ள்.)* அக்கினி மாந்த்யம் உண்டாகும். மலம் மூத்திரம் இவைபோகாது. விக்கல், எரிசசல், வாந்தி இவைகளுடன் ஜ்வரம் விடாமற்காயும், முகத்தில் பாரவுணர்ச்சி உண்டாகும். வயிற்றுப் பொருமலும் காணும். இவை மந்த ஜ்வரக்குறிகளாம்.

## சுரவதிஸாரக் குறிகள்

*பொருமலு மிரைவுமாகி யேப்பமும் புளித்து நாறி*
*மெரிவுரு சுரமுங்காயு மிருகைகால் குளிர்ந்து காட்டும்*
*பருகிடுந் தண்ணீர் வாங்கும் வெளுத்திடு முகமும் பாண்டஞ்*
*சுரவதி ஸாரமென்று சொல்லலாஞ் சொல்லலாமே. (10)*

*(இ-ள்.)* வயிறு பொருமல், இரைச்சல், நாற்றத்துடன் புளித்து ஏப்பம், கைகால்களில் குளிர்ச்சி, விடாத ஜ்வரம்,

அடிக்கடி தண்ணீர் தாகம், முகம், தேகம் முதலானவைகள் வெளுத்துப் போதல் இவை அதிஸாரஜ்வர லக்ஷணங்களாம்.

***குறிப்பு:-*** வயிறு பேதியுடன் கூடிய ஜ்வரத்திற்குத்தான் இப்பெயர். ஆனால் மேற்கூறிய செய்யுளில் அதிஸாரத்தைக் குறிப்பிடவில்லை.

## அசீர்ணச்சுரக் குறிகள்

பசியின்றி மந்தமாகும் உதரமும் பலகால் விம்மும்
வசையறக் கனத்து நிற்கும் மந்தமே பற்றிக் காயுந்
தசையினை யுருக்குமூதை தங்குமிக் குணங்கள் கண்டால்
அசீரணச் சுரமிதென்று சொல்லலா மனங்க னாளே. *(11)*

(இ-ள்.) பசி இராது. வயிறு மந்தித்துப்போம். வயிற்றுப்பொருமலும் உண்டாகும். பார உணர்ச்சியும் உண்டாகும். உடலில் ஜ்வரம் காணும். தசைகளில் வலியுண்டாகும். இவை அசீர்ணஜ்வர லக்ஷணங்களாம்.

## உதிரிவாதச் சுர லக்ஷணங்கள்

உடம்பது மிகவும் வீங்கு மிடறடைத் தூதை விம்மும்
விடம் படு சுரமுங் காயும் விசிறிடுங் கரணம் போல
முடங்கிடும் பொறுத்துத் தோறு மூர்ச்சையோ
டிரத்தங்காணுந்
திடம்படு முதிரிவாதச் சுரமிதாமென்று செப்பே. *(12)*

(இ-ள்.) உடம்பு அதிகமாக வீங்கும். விடாத ஜ்வரமடிக்கும். சிற்சில சமயங்களில் ஜ்வரம் அதிகமாகும். மூட்டுகள் தோறும் வலியுண்டாகும். மயக்கம் ஏற்படும். சிற்சில சமயங்களில் இரத்தமும் வெளிவரும்.

## அசாத்யம் எட்டின் குணங்கள்

ஊதையும் கபமும் பொங்கி வாந்தியு மூச்சுமுண்டாய்
பாதமுங் கரமும் வீங்கி யிருமலே! டிளைப்பும் பற்றி

நாதமுமடைத்துக் காது நடுக்கலுஞ் சுரமுமாகில்
வாதை செய் வாதசிலேத்ம சுரமென வகுக்கலாமே. *(13)*

(இ-ள்.) கொழுப்பும், கபமும் அதிகரித்து வாந்தியும், பெருமூச்சும் ஏற்படும். கால்கள், கைகள் முதலான உறுப்புகள் வீங்கும். இருமல், தேக இளைப்பு, காது கேளாமை, நடுக்கல், ஜ்வரம் முதலான குறிகளும் காணும். இவைகள் வாதகபச்சுரத்தின் குறிகளாகும்.

## சந்நிபாத ஜ்வரக்குறிகள்

சிரமுமிடிக்கும் மலங்கடுக்கும் சீறுமிறுகும் வாந்திக்குங்
சுரமும் காலும் நிலத்தடிக்கும் கண்ணுமுகமு மினுமினுக்கு
முரமுந் துடிக்கும் நாவறளுமோய்வில் ஜ்வரமும்
பிரமையுமாஞ்
சரீரம் நடுங்கித் தளர்ச்சி யுண்டாஞ் சன்னிவாதச்
சுரமிதுவே. *(14)*

(இ-ள்.) தலைவலி, மலம் போகையில் கடுப்புவலி, இருமல், வாந்தி, கைகால்களை பூமியில் அடிக்கடி அடித்தல், கண்கள், முகம் முதலான உறுப்புகளில் மினுமினுப்பு, மார்பில் துடிப்பு, நாவறட்சி, ஜ்வரம், மயக்கம், சரீரத்தில் நடுக்கம், சரீரச் சோர்வு முதலான குறிகள் சந்நிபாத ஜ்வரத்தில் காணும்.

## பூதஜ்வரத்தின் குணங்கள்

பூதசுரத்தின் குணங் கேளாய் புலம்புங்கோபித் தேபேசும்
சீதத்துடனே சுரங்காயும் சீறு முகமுமுடல் கனக்கும்
பேதப்படவே வார்த்தையுமாய்ப் பெருமூச்சுடனே தலை
நடுக்கு
மூதை மிகுந்து சிரமிடிக்கு முணைவும் வெறுக்கு
மயங்கிடுமே. *(15)*

(இ-ள்.) தன்னையறியாமல் புலம்புவான், பேசுவான், குளிர் காய்ச்சல் உண்டாகும். முகம் கோபிக்கும், உடல் கனக்கும், வார்த்தைகள் வித்யாசமாகப் பேசுவான், அடிக்கடி பெருமூச்சுவிடுவான், தலை நடுங்கும், தலைவலி உண்டாகும், ஆகாரத்தில் வெறுப்பு உண்டாகும்.

## பிரேத ஜ்வரத்தின் குறிகள்

பிரேத ஜ்வரத்தின் குணந்தன்னைப் பேசக்கேளாய்
பேய்வளையே
சீறிச் சுரமாம் வயிறிழியுஞ் சிரமுமிடிக்கும் நடுக்கலுமா
மூறுமுடம்பு கனதண்டா யுளையுங் கைகால்
போட்டாப்போல்
மீறு மயக்க முடன்வியர்க்கு மேவுங்குணங்க ளறிவீரே. (16)

(இ-ள்.) அதிகமான ஜ்வரம் ஏற்படும். வயிறு கழிச்சலும் இருக்கும். தலைவலி, நடுக்கம், உடம்பில் பார உணர்ச்சி, தேகத்தில் உளைச்சல், கை கால் போட்டது போலாதல், மயக்கம் அதிகமான வியர்வை முதலான குறிகளும் காணப்படில் அது பிரேத ஜ்வரத்தின் குணங்களாகும்.

## மாங்கிஷப்பிரதான வாதத்தின் குறிகள்

கதித்திடுஞ் சுரமென்மேலுங் காந்திடு முகமுங் கண்ணும்
பிதிர்த்திடக் குத்தி நோவாம் பின்பிட்டி சந்து மட்டுங்
கொதித்திடுஞ் சதைதிரண்டு குருதியு மேகங் காலும்
விதிர்த்ததி மாங் கிஷப்பிரதா னவாதச் சுரமா மென்னே. (17)

(இ-ள்.) ஜ்வரம் மேலும் மேலும் அதிகமாகும். முகமும் கண்ணும் எரியும். உடலில் குத்துவலி உண்டாகும். மூட்டுகளிலும் வலியுண்டாகும். சதை திரண்டு, இரத்தமும் அதிகரிக்கும். இவை மாங்கிஷப் பிரதான வாதத்தின் குறிகள்.

## வைசூரி ஜ்வரத்தின் குறிகள்

குரலடைத் திருமலுண்டாங் குவளையு மிகுந்து காட்டுஞ்
சிரபத மட்டும்வீங்கித் தினவுறுந் துவரைக்காய் போ
லரமென வசடு (சேர்ந்து) யதுவுரிந் துரிந்து வீழும்
சுரமுறு மாங்கிஷ ரோக வைசூரியாஞ் சுரமிதென்னே. *(18)*

*(இ-ள்.)* குரல் கம்மும், இருமலேற்படும். குவளை வீங்கிப்போம் முகம் வீங்கும், அரிப்பு ஏற்படும். துவரங்காயைப் போன்ற தடிப்புகள் உடலில் காணும். சிறிது நாட்களில் அது உரிந்துபோம் இவை மாங்கிஷ ரோக வைசூரி ஜ்வரமாகும்.

## சோகஜ்வர லக்ஷணங்கள்

தாகமுந் தாபமுண்டாய் மலமொடு சலமுங் கட்டி
ஏகுநீர் சிவந்து வீழுஞ் சுரமிடை விடாமற்காயு
மோகமாய் புறந்தாள் வீங்கு முபாதியே காணும் வாதஞ்
சோகமாஞ் சுரமிதென்று சொல்லலாஞ் சொல்லலாமே. *(19)*

*(இ-ள்.)* நாவறட்சி, உஷ்ணம் இவைகளேற்படும். மலமும், மூத்திரமும் போகாது. சிறுநீர் இறங்கினாலும் சிவந்து வீழும். ஜ்வரம் இடைவிடாமற்காயும். புறந்தாள் வீங்கும். மயக்கமுண்டாகும். மிகவும் வேதனையளிக்கும். இவை சோக ஜ்வர லக்ஷணங்களாகும்.

## வீரணவாத ஜ்வரக் குறிகள்

பாரொரு விடங்களாலும் படுவனும் பருவினாலும்
மீறிடுஞ் சுர மென்மேலும் யெடுபிடியென்று வீழு
மாறிடா திடிக்கும் நெற்றி சுரம் பிடர்வளைய வாங்குங்
கூறிய விரண வாதச் சுரமிதா மென்று கூறே. *(20)*

*(இ-ள்.)* விஷங்கள் தேகத்தைத் தாக்குவதனாலும், படுவன், பரு முதலியவைகள் உண்டாவதனாலும், ஜ்வரம்

மேன்மேலும் அதிகரித்து "எடு, பிடி" என்று கூக்குரலிடுவான். இடைவிடாமல் பொட்டில் வலியுண்டாகும். ஜ்வரம், பிடரிவலி இவைகளும் காணும். இவை விரணவாதச் சுரக்குறிகள்.

## பித்த ஜ்வரம் 24ல் சாத்யம் 14ன் குணம்

பித்த ஜ்வரத்தின் குணங் கேளாய் பிதற்றிப் பேசும் வாய்
வெருவு
மொத்த நயனஞ் சிவந்திருக்கு மூடே வயிறு கழிந்து வரு
மெத்தத் தண்ணீர் தாகிக்கும் வெதும்பிநாவு தடுமாறுஞ்
சுத்தியடங்கு முகங் கறுக்குஞ் சொல்வாய் மிணரு
புண்ணாமே. *(21)*

(இ-ள்.) சுரவேகத்தினால் பிதற்றுவான். வாயைக் காரணமின்றி மெல்லுவான். கண்கள் சிவந்துபோம். வயிறு கழிச்சலேற்படும். அதிகமான நாவறட்சியுண்டாகும். நாக்கில் வேக்காளமுண்டாகும். பேச்சு தடுமாறும். முகம் கறுநிறமாகும். இவை பித்த ஜ்வரக் குறிகள்.

## பித்த கபச்சுரத்தின் குணங்கள்

பித்தச் சிலேற்பனத்தின் குணந்தன்னைப் பேசக்கேளாய்
புத்திமாறாட்டம்பண்ணிப் புகைந்திடு மிருமல் மென்மேற்
சத்திடை விடாமற்காயுஞ் சலமல மஞ்சணிக்கும்
நித்திரை தானும் வாரா உழலையும் நெருக்கமாமே. *(22)*

(இ-ள்.) புத்தி மாறாட்டம் உண்டாகும். புகைச்சலுடன் இருமலுண்டாகும். சுரம் இடைவிடாமற் காயும். மலமும், மூத்திரமும் மஞ்சள் நிறமாகும். தூக்கம் வாராது. உடலில் எரிச்சலுண்டாகும்.

## பித்தவாத ஜ்வரக் குறிகள்

அந்தப் பித்த மதுரண்டும் வாதமொன்றுஞ் சுரமானால்
முந்தக் காயும் பொருமலுமாய் மூக்கு மிகவு மஞ்சணிக்கும்

நொந்தக் குளையும் வாந்தி செய்யும் நோக்கிற் கண்ணும்
வெளுத்திருக்கும்
மந்தம் பற்று மூதை மிகு வருத்துங் குணங்க ளறிவீரே. (23)

(இ-ள்.) காய்ச்சலுடன் வயிறு பொருமலுண்டாகும். மூக்கு, முகம் இவை மஞ்சள் நிறமாகும். வாந்தி எடுக்கும். கண்கள் வெளிறிப்போம். மந்தம் உண்டாகும். இவை பித்தவாத ஜ்வரத்தின் குறிகள். (பித்தம் 2 +வாதம்1)

## பித்த ஜ்வர லக்ஷணம்

நாவது உலர்ந்து மேன்மேல் நையவே தண்ணீர் வாங்குங்
கோபமாய்ச் சுரமுங் காயுங் கூப்பிடிற் போதமில்லை
பாவையே மலசலங்கள் வெதும்பிடும் பரிதாபிக்கும்
காவியங் கண்ணாய்! பித்தத் தாகுமாஞ் சுரமாங்காணே. (24)

(இ-ள்.) நாக்கு உலர்ந்துபோம். அடிக்கடி தண்ணீர் உட்கொள்வான். சுரம் விடாமற் அடிக்கும். மலம் மூத்திரம் இவைகள் சிக்கலாகும். இவை பித்த ஜ்வரக் குறிகள்.

## விடமஜ்வர லக்ஷணம்

விடமச்சுரத்தின் குணங்கேளாய் வெதும்பு மோர்பால்
வியர்வையுமா
முடலை நடக்குஞ் சிமிடிக்கு மூதைமிகுந்து வாய்வறளுங்
குடலுள் ளிறையுங் கழிச்சலுமாங் கொள்ளானந்தல் பரதாக
மிடரே செய்யு மிக்குணங்க ளுமையாள் குரைத்தா
ரிறையவனே. (25)

(இ-ள்.) மோர், பால் இவைகளில் இச்சையுண்டாகும். வியர்வையதிகரிக்கும். தேகம் நடுங்கும். தலைவலி யுண்டாகும். வாயில் வறட்சியேற்படும். குடலில் இரைச்சலுடன் கழிச்சலும் உண்டாகும். அனத்தல் ஏற்படும்.

## அத்திச் சுரக்குறிகள்

பித்தமே கதித்துநின்று பலத்தையுங் குறைத்துக் கைகால்
குத்தி நொந்துறக்க மின்றிக் கொதித்திடு முதலெண்காணும்
நித்திய முலர்ந்து நாவு நீரன்றித் தண்ணீர் வாங்குஞ்
சித்தமு மயங்கு மத்திச் சுரமெனச் செப்பலாமே. *(26)*

(இ-ள்.) தேகத்தில் பித்தம் அதிகரித்துப் பலம் குன்றும். கைகால்களில் குடைச்சல் வலியுண்டாகும். தூக்கம் இராது. உடல் முழுவதும் அனத்தும். நாக்கு உலரும். அடிக்கடி தண்ணீர் பருகுவான். மனம் மயங்கும் இவை அத்தி ஜ்வரக் (அஸ்தி ஜ்வர) குறிகளாகும்.

## இதுவுமது

காந்திடு முகங்கண் ணுள்ளங் காலொடு கையு மெய்யுஞ்
சோர்ந்திடு நீர்சிவந்து சுறுக்கென வெரிந்து வீழு
ஏந்திள முலையாய்! கேளாய் இசைந்த வாய் கசக்குந் தேகம்
நேர்ந்திட நீருமத்திச் சுரமென நிகழ்த்தலாமே. *(27)*

(இ-ள்.) முகம் அனத்தும், கண்கள், மனது இவைகளில் எரிச்சலேற்படும். கைகளும், உடலும் சோர்ந்துபோம். சிறுநீர் சிவந்து எரிச்சலுடன் வெளியாகும். வாயில் கைப்புச்சுவை உண்டாகும். தேகம் இளைக்கும். இவை அஸ்தி ஜ்வரக் குறிகளாகும்.

## இதுவுமது

சாமத்தி லுவருநாவு தாகிக்கு முகங்கண் கைகால்
வேமிக்கக் கனல்போல் நெஞ்சுக் கரித்துமே
லேப்பமுண்டாம்
ஆமிக்கத் தாதுநாச மாகிடும் வியர்வை சோப
நேரமிக்கக் குன்மங் காச முடன் சுய நோவுண்டாமே. *(28)*

(இ-ள்.) இரவில் நாவறட்சியேற்பட்டுத் தாகமெடுக்கும். முகம், கண், கை, கால் இவைகள் நெருப்பைப்போல் தகிக்கும். நெஞ்சுக் கரிக்கும். ஏப்பமுண்டாகும். தாது க்ஷீணமுண்டாகும். அதிகமான வியர்வை, வீக்கம், வயிற்றுவலி, இருமல், க்ஷயம் முதலான நோய்களை நாளடைவில் உண்டாக்கும்.

## பித்தசோக ஜ்வரக் குணம்

புறங்கைகால் முகமும் வீங்கும் பெருமூச்சோ
டிளைப்புவிக்க
லறைந்திடுந் தமரகம்போல் நெஞ்சொடு விலாவடிக்கும்
பிறந்திடுஞ் சுரமென் மேலும் பிதற்றிடு தண்ணீர் வாங்குஞ்
சிறந்த விக் குணங்கள் பித்த சோகத்தின் சுரமாம் செப்பே.

(இ-ள்.) புறங்கை, புறங்கால், முகம் இவைகள் வீங்கும், பெருமூச்சுடன் இளைப்பும், விக்கலும் உண்டாகும். டமாரம் அடிப்பதுபோல் நெஞ்சுடன் விலாப்பக்கங்களும் "படபட" என்றடித்துக்கொள்ளும். ஜ்வரம் இருக்கவிருக்க அதிகமாகும். பிதற்றுவான். தண்ணீர்த்தாகம் உண்டாகும். இவை பிதத சோகச் சுரக்குணங்களாகும்.

## பித்தச்சுர லக்ஷணம்

கொதித்தெழுச் சுரத்தின் மேலே கொண்டிடும் புசிப்பறாதே
சதித்திட மந்தமாகித் தாகம்நா வரட்சி யுண்டாய்
விதித்திடு கரமும் பாதம் வெச்சன்றிக் குளிர்ந்திருக்கும்
கதித்ததி சாரபித்தச் சுரகுணங் கண்டி டாயே. (30)

(இ-ள்.) ஆகாரம் சீரணியாது, மந்தம் ஏற்பட்டுத் தாகம், நாவறட்சி இவைகளுண்டாகும். கையும் காலும் சில்லிட்டுப்போம். சுரமும் அடிக்கும். (வயிற்றுப்போக்கும் ஏற்படும்) இவை அதிஸார பித்தச்சுரக் குறிகள் ஆகும்.

## பித்த மாறல் ஜ்வரக் குறிகள்

ஒன்றைவிட் டொருநாள்சீத மெழுந்திடு முந்தக்காயுந்
துன்றிடு மிருமலூறதை துரப்பொடு வாந்தி விக்கல்
மன்றினி லெழுந்து வீழ்தல் மயக்கமும் புலப்பங்காணல்
துன்றிள முலையாய் பித்த மாறலின் சுரமிதாமே. (31)

(இ-ள்.) ஒருநாள்விட் டொருநாள் குளிருடன் காய்ச்சல் வரும். இருமல், கோழையுடன் வாந்தி, விக்கல் முதலியவைகளுண்டாகும். படுக்கையிலிருந்து தூக்கித் தூக்கிப்போடும். மயக்கம், உளரல் இவைகளும் ஏற்படும். இவை பித்த மாறல் ஜ்வர லக்ஷணங்கள்.

## அசீர்ணச் சுர லக்ஷணங்கள்

கொண்டதோ ரசனம் நின்று குமட்டியே மந்தமாகி
மண்டியே சுரமுங் காயும் வயிறு துங் கழிந்திருக்கும்
விண்டிட வலியுமுண்டாய்த் தாகமும் தாபம் விக்கல்
உண்டெனில் குணங்கள் பித்த வசிரணச் சுரமென்றோதே. (32)

(இ-ள்.) ஆகாரத்தில் வெறுப்பேற்படும். குமட்டும், மந்தம் உண்டாகும். ஜ்வரம் அடிக்கும். வயிறு ஊதும். வயிறு கழிச்சலேற்படும். வயிற்றுவலி, தாகம், காங்கை, விக்கல் இவைகளும் காணும். இவை அசீர்ண ஜ்வர லக்ஷணங்களாகும்.

## இரத்த பித்த ஜ்வரத்தின் குறிகள்

உரத்திடுஞ் சுரத்தின் மேலே யூதையு மிகுந்து விம்மும்
நெரித்திடக் குத்தி நோவாம் மேனியும் நெலிவு காட்டும்
இரத்தமா யிறங்கும் நீரும் மலஞ்சிவந் திளந்து நாறுஞ்
சுரப்பிர தரத்தின்ரத்தப் பித்தத்தின் சுரங்கள் தானே. (33)

(இ-ள்.) சுரத்துடன் நெஞ்சில் கோழை கட்டும். உடலில் குத்தல் வலியுண்டாகும். உடலும் சோர்ந்துபோம். சிறுநீர் சிவந்து இறங்கும். மலமும் சிவப்பாக வெளியாகும். நாற்றமுமடிக்கும். இவைகள் ரத்த பித்த ஜ்வர லக்ஷணங்களாகும்.

# அசாத்ய குணங்கள்

### பித்தசீத ஜ்வர லக்ஷணங்கள்

மத்தமே கொண்டுமெத்த மயங்கியே குளிர்ந்து காயும்
பத்தியாய் தாகந் தாபம் பயித்திய மோக மூர்ச்சை
நித்திரை யன்றிக் கைகால் நீட்டிடும் பிரமையாகும்
பித்தமேற் சீதஞ் சேருஞ் சுரமெனப் பேசலாமே. *(34)*

(இ-ள்.) மயக்கமுண்டாகும், உடல் சில்லிடும். ஆனால் உள்ளூற ஜ்வரம் அடிக்கும். தாகம், எரிச்சல், மயக்கம், மூர்ச்சை, தூக்கமின்மை, கைகால்களை நீட்டிவிடுதல், தலைக் கிறுகிறுப்பு முதலான குறிகளும் காணும். இவை பித்தசீத ஜ்வர லக்ஷணங்களாகும்.

### பித்தகப ஜ்வர லக்ஷணங்கள்

சேர்ந்திடும் பித்தசேற்பச் சுரத்தினிற் குணத்தைச் செப்பிற்
காந்திடுஞ் சுரமுந் தொண்டை கட்டியே டிருமலுண்டா
மாந்திடு மிளைப்பு நாவு வெளுப்புடன் வறட்சியாகும்
பாய்ந்திடும் வியர்வை மென்மேற் பகர்ந்தவிக் குணங்கள்
தானே. *(35)*

(இ-ள்.) உடல் காந்தும், தொண்டைக் கட்டுடன் இருமலுண்டாகும். தேகம் இளைக்கும். நாக்கு வெண்மையாகும். நாவறட்சியுமேற்படும். வியர்வை அதிகமாகப் பொழியும். இவை பித்தகப ஜ்வரக் குறிகளாகும்.

### பித்த சந்நி ஜ்வரக் குறிகள்

முகந்துறு குளிரும் பித்த மூர்ச்சையு மூமைபோல
மிகுந்துநா வறட்சி வெப்பு மேனிபுண் போலநோவாம்
பகுந்தநீர் மலஞ்சிவக்கும் பயித்தியம் பிரகோ பிக்கும்
சுகங்கெடும் பித்த சந்நிச் சுரமெனச் செப்பலாமே. *(36)*

(இ-ள்.) முகத்தில் சிலுசிலுப்பைக் காணும். மூர்ச்சையுண்டாகும். ஊமை போல் பேச முடியாது. நாவறட்சியுண்டாகும். காங்கையுடன், உடல் புண்போல் வலிக்கும், சிறுநீரும், மலமும் செந்நிறமாக வெளிப்படும். பித்தம் அதிகரிக்கும். தீங்கு விளைவிக்கும். இவை பித்த சந்நிச்சுரக் குறிகளாகும்.

### சயச்சுர லக்ஷணங்கள்

சுரமுட னிருமலுண்டாந் தொண்டையும் புகைந்து காட்டிக்
கரமொடு முகமுங் கண்ணும் வெளுத்ததிற் கருத்திருக்கு
மரமென விரிந்து நாவும் வெளுத்ததிலசடு நாறும்
புரமன லெரித்தோன் சொன்ன சயச்சுர மாகும்
சொன்னேன். *(37)*

(இ-ள்.) விடாமல் ஜ்வரம் அடிக்கும். இருமலும் தொண்டைப் புகைச்சலும் ஏற்படும். கைகள், முகம், கண்கள் இவைகள் வெண்மையாகும் அல்லது கருநிறமடையும். நாக்கு மறமறத்துப்போய், வெண்ணிறமான அசடும் உண்டாகி நாற்றமெடுக்கும். இவை க்ஷயச்சுர லக்ஷணங்களாகும்.

### வைசூரிச் சுர லக்ஷணங்கள்

வாந்தியுஞ் சுரமுமுண்டாய் மயக்கமோ டிருமலாகிப்
போந்தநல் லுடம்பு வீங்கி வயிறது பொருமிக்கொள்ளும்
மாந்தியே கிடக்கு மிக்க மலமொடு சலமுங் கட்டு
மாய்ந்து நீ யறிவாய் ரத்த வைசூரியன் சுரமிதாமே. *(38)*

(இ-ள்.) வாந்தி, ஜ்வரம், மயக்கம், இருமல் இவைகளுடன் உடம்பு வீங்கும். வயிற்றுப் பொருமலுண்டாகும். மலம், சிறுநீர் இவை கட்டிப்போம். இவை ரத்த வைசூரி லக்ஷணங்களாகும். (வைசூரி வருவதற்கு முன்னேற்படும் குறிகள்)

### சுரபாதச்சுர லக்ஷணங்கள்

எரித்திடுங் கையுங் காலு மிதழ் வெடித தசடுகாலும்
வருந்திட வனல்போல் காயும் வாந்தியு மூச்சுமுண்டாந்

திருந்திய மலநீர் மஞ்சள் செரிந்திடும் செவியிரைக்குங்
கரிந்திடும் பித்தம்,சேர்ந்த சுரபாதச்சுரமென் றோதே. *(39)*

*(இ-ள்.)* கை கால்களில் எரிச்சலுண்டாகும். சர்மம் வெடித்து நீர் வடியும். சுரம் அனல்போல் அடிக்கும். வாந்தி, மேல்மூச்சு இவைகளுண்டாகும். மலம், சிறுநீர் முதலானவைகள் மஞ்சள் நிறமாகும். காதிலிரைச்ச லுண்டாகும். இவைகள் பித்த கரபாதச் சுரத்தின் குறிகள் என்று தெரிந்துகொள்ளவும்.

### இரத்த பித்தச் சுரக் குறிகள்

நெஞ்சுமே லுடம் புளைந்து நீறிடும் நிறஞ் சிவக்கும்
பஞ்சென முகமுகங் கண்ணும் பாண்டமு மஞ்சள் போலாம்
வஞ்சியே இரத்தமாகி வாந்தியு மிளைப்பு முண்டா
மஞ்சிடு மிரத்தபித்தச் சுரமென வறிகு வீரே. *(40)*

*(இ-ள்.)* நெஞ்சு, உடம்பு இவைகளில் உளைச்சலுண்டாகும். சிறுநீர் சிவந்து இறங்கும். முகம், கண்கள், உடல் இவைகள் மஞ்சள் நிறமாகும். இரத்த வாந்தியும், மேல்மூச்சும் ஏற்படும். இவை இரத்த பித்த ஜ்வர லக்ஷணங்களாகும்.

### பித்தப் பிரதாபச் சுர லக்ஷணங்கள்

சுரத்துடன் தாகமோகஞ் சொலித்திடும் வறளுநாவு
புரைத்தநீர் கடுத்தினித்து மஞ்சளாய் புலவு நாறும்
வருத்திடு மனல்போல் காந்தும் வாயுவு மிகுந்தூண் வற்றுக்
தரித்திடுங் குணங்கள் பித்தப் பிரதாபச்சுரமாந்தானே. *(41)*

*(இ-ள்.)* அதிக நாவறட்சி, மயக்கம், மூத்திரம் கடுத்து, மஞ்சள் நிறமாக இறங்கி, புலால் நாற்றத்துடனிருக்கும், உடல் அனல்போல் வீசும். வாயு அதிகரித்துச் சாப்பாட்டைத் தள்ளும். இக்குறிகள் காணப்படில் அது பிரதாபச் சுரமாகும்.

# சிலேத்ம ஜ்வரத்தில் ஸாத்யம் பத்துக்கும் குணம்

### பித்தவிரண ஜ்வர லக்ஷணங்கள்

துடியென வடிக்கும் நெஞ்சு விலாவிலுந் துடித்துக் காட்டும்
கொடியதோர் ஜ்வரமுங் காயுங் கொண்டிடும் விரண மிஞ்சும்
பிடியெடு மெனவே வீழும் பிரமையாய்ப் புலம்ப லாகும்
கடியவிக் குணங்கள் பித்த விரணத்தின் சுரமாங் காணே. *(1)*

*(இ-ள்.)* நெஞ்சு, விலா முதலான இடங்கள் அடிக்கடி துடிக்கும். அதிகமான ஜ்வரம் உண்டாகும். விரணங்களும் உண்டாகும். 'பிடி' 'எடு' என்று அடிக்கடி கூறி மயங்கிப் புலம்புவான். இவை பித்தவிரண ஜ்வர லக்ஷணங்கள்.

### சிலேத்ம பித்தச் சுரக் குறிகள்

செப்பார் முலைமடவீர் சேற்பனபித் தச்சுரந்தான்
வெப்பாகி வியர்வையுமாய் வெய்துறுநா வும்வெளுக்கும்
துப்பா தடைத்திருமுந் தொண்டைகட்டும் நாக்கசக்கும்
அப்பாற் சடைமுடியா ராயுள் மறை யோதியதே. *(2)*

*(இ-ள்.)* உடலில் காங்கை, வியர்வை முதலியன உண்டாகும். நாக்கு வெளுப்பாகும். அடிக்கடி இருமல், தொண்டைக்கட்டு, நாக்கில் கசப்புச்சுவை முதலான குறிகளும் காணும். இவை சிலேத்ம பித்தச் சுரக்குறிகளாகும்.

### கபச்சுரத்தின் குறிகள்

ஊதைக் கபச்சுரத்தின் செய்குணத்தை யோதுவன்யான்
மோதித் தலைக்குலுக்கி மோகித்து டன்விரைத்துக்
காதுற் றிருமல்கர பாதமேகு ழைந்துழைதல்
பேதித் துறுங்குணங்கள் பேணி யறிந்து கொள்ளே. *(3)*

(இ-ள்.) தலைநடுக்கல், மயக்கம் முதலியன வுண்டாகும். இருமல், கால் கைகளில் சோர்வு முதலான குறிகளும் காணும்.

### சய சுரத்தின் குறிகள்

சென்னி கனத்திடித்துச் சீறி முகங்கனத்து
முன்னையனல் போல்சுரமு மேன்மேலு மேமுடுகி
மன்னு சிரத்தூடு வலியு மிடியு மாகுஞ்
சொன்ன சலசயத்திற் றோன்றுஞ் சுரமாமே. (4)

(இ-ள்.) தலையில் பாரத்துடன் கடுமையான வலியும் உண்டாகும். முகத்திலும் பார உணர்ச்சி ஏற்படும். உடலில் காங்கையுடன் ஜ்வரமும் அதிகரிக்கும். இவை சயத்தில் தோன்றும் சுரத்தின் குறிகளாகும்.

### மாங்கிஷ வைசூரிச் சுரக்குறிகள்

பொருத்துத் தோறு முளைந்துபுண் போலுடலும் (நொந்து)
வருத்துஞ் சுரமு மயக்கமொடு வாந்தியுமாய்ப்
பெருக்கம் பிரமை வியர்வை விக்கல் பேதமுமா
யிருக்கு மதி மாங்கிஷ வைசூரிச் சுரமிதுவே. (5)

(இ-ள்.) உடலில் உளைச்சலும், புண்போல் வலியும் உண்டாகும். சுரம் அடிக்கும். மயக்கம், வாந்தி, வியர்வை, விக்கல் இவைகள் ஏற்பட்டால் மாங்கிஷ வைசூரிச் சுரக்குறிகளாகும்.

***குறிப்பு:-*** இச்செய்யுளில் உடலில் வைசூரி உண்டாவதைப்பற்றிக் குறிப்பிடப்படவில்லை. இருந்தாலும் தேகத்திற்குள் மாம்ஸத்தில் வைசூரி ஏற்படுவதாகவே வைத்துக்கொள்ள வேண்டும் எனத்தோன்றுகிறது. ஆகவே உடல் வைசூரிக்கும் மாங்கிஷ வைசூரிக்கும் சம்பந்தம் இல்லை.

### சிலேத்ம ஜ்வர லக்ஷணங்கள்

காய்ந்து காய்ந்து வயிறிழியுங் கண்ணுந் தளர்ந்து
குளிர்ந்திருக்கும்
மாய்ந்த நாவு மிகவெடித்துப் புண்போல் நாறு மசறு கக்கும்
ஏந்து முலையாய்! கைகால்கண் வெச்சேன் றொருக்காற்
குளிர்ந்திருக்கும்
மாய்ந்து கொள்ளு மிக்குணங்கள் கணமாஞ் சிலேற்பச்
சுரமாமே. *(6)*

(இ-ள்.) வயிற்றை வலித்து வலித்து மலம்போகும். கண்கள், உடல் முதலானவை சோர்வடைந்து, சில்லிட்டுப் போம். நாக்கில் வெடிப்புகளேற்பட்டுப் புண்ணாகும். நாற்றமெடுக்கும் அசடு கக்கும். கைகள் கால்கள் முதலானவை அங்கங்களும் குளிர்ச்சியாகும்.

### கபதோஷச் சுர லக்ஷணங்கள்

தாகமு மோக முண்டாய் மலமொடு சலமுங் கட்டிப்
பாகுறு மொழியன்னாய் கேள் பாண்டமு முகமும் வீங்கு
மூகையா யூதை விம்மி மூசுமூ செள விளைக்கில்
வாகடம் விரித்தோர் சொன்னோர் கபதோஷச்
சுரமாம்மானே!. *(7)*

(இ-ள்.) நாவறட்சி, மயக்கம், மலச்சிக்கல், நீர்ச்சிக்கல் முதலான குறிகளுண்டாகும். உடலும், முகமும் வீங்கும். கபம் மேலிட்டு "மூசு மூசு" என்று இரைக்கவாரம்பிக்கும். இவை "கபதோஷ ஜ்வரக்" குறிகள்.

### அதிசார ஜ்வரக் குறிகள்

சுரத்திரை பொருமலாகி கழிச்சலுந் துடக்கமாகி
வருத்திடுந் தாகமென்மேல் நாவது வறட்சியாகு
முருக்கிதழ் மின்னே தாகந் தாபமு முறையே யெய்தி
இருக்குமிக் குணங்கள் சேற்ப வதிசாரச் சுரமிதென்னே. *(8)*

(இ-ள்.) வயிற்றுப் பொருமல், கழிச்சல் இவைகளேற்பட்டு நாவறட்சி அதிகரிக்கும். உடலில் காங்கையதிகரிகசும். இவை அதிசாரச் சுரக்குறிகளாம்.

### சிலேத்ம சீத ஜ்வரக் குறிகள்

மந்தமே கொண்டு தேகம் மயங்கியே குளிருண்டாகித்
தந்திடுஞ் சுரமென் மேலுந் தளர்ச்சியுந் தாகமுண்டாஞ்
சுந்திர வுடம்பு கைகால் கடுத்திடுந் துரப்புண்டாகு
மிந்த நோய் சிலேற்பசீதச் சுரமென வியம்பலாமே. (9)

(இ-ள்.) உடலில் மந்தமேற்பட்டு (பசிமந்தமடைந்து) மயக்கமும், குளிரும் அதிகரிக்கும். ஜ்வரமும் அதிகமாகும். உடலில் சோர்வு ஏற்படும். தண்ணீர் தாகம், உடம்பு, கை, கால் கடுப்பு இவைகளும் இருந்தால் இவை சிலேத்ம சீதச்சுர லக்ஷணங்களாகும்.

### சிலேத்ம ஜ்வர லக்ஷணங்கள்

உத்த ரோமஞ் சிலிர்த்திடு மூத்தி ராதி வெளுத்திடு
மொத்த மயக்க மேயுண்டா முதரங் காயு மூண் விரும்பு
மெத்தக் குளிர்தல் மூக்குடன்வா யிவைநீர் வருதலித
முண்ணாத்
தித்தித் திடுதலிக்குணங்கள் சிலேத்ம ஜ்வரமென்
றறிவீரே. (10)

(இ-ள்.) மயிர்க்கூச்சல் அடிக்கடி உண்டாகும். மூத்திரம் வெண்மையாக இறங்கும். அதிக மயக்கம் உண்டாகும். வயிற்றில் சூடு ஏற்படும். சாப்பாட்டில் இச்சையதிகரிக்கும். குளிர், மூக்கு, வாய் முதலான இடங்களில் நீர் சுரத்தல், உண்ணாக்கில் தித்திப்புச்சுவை முதலான குறிகள் ஏற்படில் அவை சிலேத்ம ஜ்வரத்தின் குறிகளாகும்.

### ஆமச் சிலேமத்மச்சுரக் குறிகள்

ஆமச்சிலேத்மச் சுரங்கேளா யதிகமாக வெதும்பாதே
சாமந்... ... ... வெதும்பிவிக்குந் தனியே யுறக்கந் தான்வந்து
சேமம் புக்கு முடம்புளையுஞ் சீறு மிருமும் பசியில்லை
நா... ... ... ... மிடுப்புளையும் நடுங்கி யிருக்கும்
நண்ணுதலே. *(11)*

(இ-ள்.) ஒவ்வொரு சாமத்திலும் காங்கை அதிகரிக்கும். உறக்கம் அதிகரிக்கும். உடம்பில் வலியுண்டாகும். இருமல் அதிகரிக்கும். பசியிராது. இடுப்பு கடுக்கும். நடுக்க லேற்படும். இவை ஆமச்சிலேத்ம ஜ்வரக் குறிகளாகும்.

### சிலேத்ம சந்நிக் குறிகள்

தலையது குத்தி நொந்து... ... ... காய்ச்சலுண்டாம்
அலை நுரைபோலே அய்யு மடர்ந்தடர்ந் திருமிக் கக்குஞ்
சிலைநுத லிடிக்கு ....... ...ணூந் திகழ்துயி லில்லைத் தேகம்
உலைமெழு காகுஞ் சேத்ம சந்நியின் சுரமென் றோதே. *(12)*

(இ-ள்.) தலைவலி ஏற்படும். சுரமும் காணும். கடல் நுரையைப்போல் கபம் இருமலுடன் வெளியாகும். தூக்கமிராது. உடம்பு அனலிட்ட மெழுகைப்போல் ஆகும். அதாவது வெதும்பிப்போம். இவை "சிலேத்மசந்நிச்சுரத்தின் குறிகளாகும். இது அசாத்யமாகும்".

### ஆகிக சிலேத்ம ஜ்வரத்தின் குறிகள்

ஆகிக சிலேத்மசுரங் குளிர்ந்துகாயு
மதிதாக முடன்றாபங் கண்ணோய்காணுந்
தேகமுகம் வயிறுபாதம் வீங்கி (ப்போகும்)
செறிந்தவுடல் வெளுப்பேறி யெரிந்துநொந்து
போகமது மிகவிரும்பித் துயிலேமீறும்
பொங்கிவரு மிளைப்புடனே இருமலுண்டா
மேகமுடல் வியர்வையுண்டா மானேகேளா
யிக்குணங்க ளசாத்தியமென் றியம்புவீரே. *(13)*

(இ-ள்.) உடலில் குளிர் உண்டாகும். அதிகமான வறட்சியும், காங்கையும், கண்களில் எரிச்சல் முதலானவைகளும் முகம், வயிறு, கால்கள் முதலான இடங்களில் வீக்கமும் உண்டாகும். உடல் வெளுத்துப்போம். எரிச்சலும், வலியும், ஸ்திரீ விஷயத்தில் பற்றுதல், தூக்கமின்மை, இளைப்பு, இருமல், உடலில் வியர்வை முதலான குறிகளும் ஏற்படும்.

### விஷச் சிலேத்மச் சுரக்குறிகள்

கையுங்காலுங் குளிர்ந்திருக்குங் கனக்க வுதரந் தனிற்காயு
மெய்யிற்பாதி வியர்விக்கும் விதமாய் வெதும்பு மொ... ...
செய்யிற் றாலஞ் சரசரக்குஞ் சிலேத்ம மடைக்கும்
பிடர்கனக்கும்
வெய்ய வங்கங் குளிர்ந்திருக்கும் விஷசிலேற்பச்
சுரமாமே. (14)

(இ-ள்.) கைகள், கால்கள் முதலான இடங்களில் குளிர்ச்சி . ஆனால் வயிற்றில் சூடு, உடம்பில் வியர்வை உண்டாகும். காங்கையும் அதிகரிக்கும். கபம் தொண்டையை அடைக்கும். பிடரியில் பார உணர்ச்சி ஏற்படும். இவை விஷ சிலேத்மச் சுரக்குறிகளாகும்.

### கப பஞ்சாகீகச் சுரத்தின் குறிகள்

தேகமும் முகமும் வீங்கித் திகழ்பத மண்டம் வீங்கி
யாகமும் வலித்து நோவா யசீர்ண வாயு வுண்டாய்
வேகமா யசனந் தன்னை வெறுத்திடுஞ் சுரமுமுண்டாந்
தோகையே சிலேத்மனத்திற் சுரபஞ்சா கீகமென்னே. (15)

(இ-ள்.) உடல், முகம் முதலான அவயவங்கள் வீங்கிப்போம். கால், விதை முதலான இடங்களில் வீக்கம் ஏற்படும். வலி காணும். அசீர்ணத்துடன், வாயு அதிகப்படும். சாப்பாட்டைத் தள்ளும். சுரம் உண்டாகும். இக்குறிகள் சிலேத்மபஞ்சகீகச் சுரத்தின் குறிகளாகும்.

### சிலேத்ம மாகீக ஜ்வரத்தின் குறிகள்

தேர்ந்திடும் விலாவிரண்டுந் தேகமுந் தினஞ்கு டுண்டாம்
பூந்தடங் கண்ணும் நாவும் பொருந்தியே வெளுத்துக் காணும்
ஏந்திள முலையா யன்ன மிறங்கிடிற் செரியாதாகும்
வாய்ந்திடுஞ் சிலேற்பனத்தில் மாகிகச்சுரமென்றாதே. *(16)*

(இ-ள்.) விலாப்பக்கங்களிலும், தேகத்திலும் காங்கை உண்டாகும். கண்கள், நாக்கு முதலான உறுப்புக்கள் வெளுத்துப்போம். உட்கொண்ட ஆகாரம் சீரணியாது. இவை கபத்திலுண்டாகும் மாகீகச்சுரத்தின் குறிகள் என்று அறியவும்.

### சிலேத்ம மோகச் சுரத்தின் குறிகள்

அங்கமே குளிருங் காயு மடிக்கடி வியர்க்குஞ் சேற்பந்
தங்கிய மார்படைக்குஞ் சஞ்சல மிகவுண்டாகுஞ்
செங்கைகால் பொருத்துத் தோறுஞ் சீதமாய்க் குளிர்ந்து
காணுந்
துங்கவேல் விழியாய்! சிலேற்ப மோகமாஞ்
சுரமிதென்னே. *(17)*

(இ-ள்.) கை கால்களில் அடிக்கடிக் குளிர்ச்சியும், சூடும் மாறி மாறி ஏற்படும். வியர்வையும் காணும். மார்பில் கபம் கட்டும். மூச்சு முட்டிச் சங்கடத்தைத் தரும். கை, கால், மூட்டுகள் இவைகளும் சில்லிட்டுப்போம். இவை கபமோகச்சுரத்தின் குறிகளாகும்.

### கபச் சுரத்தில் வேறு குறிகள்

அல்லும் பகலும் வயிறூதி யறாதே யன்ன மலத்தில் விழும்
நல்ல உடம்பு வெளுவெளுக்கும் நாக்கும் நீறி
வழுவழுக்கும்
புல்லுஞ் சீத மலர்ந்தன்னிற் பொருந்தி வீழ மிகநாறுஞ்
சொல்லுஞ் சிலேற்ப விகுதியினிற் சுரமொன்றோது
தோகையரே. *(18)*

(இ-ள்.) பகலிலும் இரவிலும் வயிறு ஊதிப்போய், சாப்பிட்ட ஆகாரம் சீரணிக்காமல் அப்படியே மலத்தில் போம். உடம்பு வெளுத்துப்போம். நாக்கில் வெளுப்பு அதிகரித்து வழவழப்பாகும். மலத்துடன் சீதம் விழும். நாற்றமெடுக்கும். இவைகளும் கபச்சுரத்தின் குறிகளாகும்.

### வாத சுரத்தின் குறிகள்

*வாதசுரம் குளிர் நடுக்கல் தலைச்சுழற்றல்*
*வாய்துவர்த்த விருமலுடன் குளிர்ந்து கூசல்*
*தாதுநிகழ் சந்நிகள்தோள் பட்டைசென்னி*
*சர்வாங்க முழளைய வல்குல்நோகப்*
*போதமலஞ் சலஞ்சிறுத்துக் கழிதல்மானே*
*பொருந்துமிது வாதசுர மறுநாள்தோஷ*
*மீதுகளித் தறிவுணர்ந்தோர் மருந்துசெய்தா*
*விதமாகு மெனமுனிவ னியம்புவாரே.* *(19)*

(இ-ள்.) உடலில் குளிர், நடுக்கல் தலைச்சுற்றல், வாயில் துவர்ப்புச்சுவை, இருமல், தேகத்தில் சிலுசிலுப்பு, மூட்டுகள், தோள்பட்டை, தலை, உடல், மர்மஸ்தானங்கள் முதலான இடங்களில் தாங்கமுடியாத வலி உண்டாகும். மலம், மூத்திரம் முதலியவைகள் குறைவடைதல் முதலான குறிகள் காணும். ஒருநாள் தோஷங்கள் பக்குவமடைந்த பின்னர் மறுநாள் மருந்து கொடுக்கவும்.

### பித்தச் சுரக்குறிகள்

*பித்தச்சுரங் கஞ்சித்தண்ணீர் வெறுத்தல்வார்த்தை*
*பிதற்றல் துண்ட மூடுலர்தல் தாகந்தாப*
*மெத்தவழ ரிக்கையுடன் மூர்ச்சைநாவு*
*மிகவுலர்தல் மிகக் காய்தல் கசப்புத்தோன்றல்*
*சித்தமுறக் குளிர்த்தியேயி ருமல்மஞ்சள்*
*செய்கையென வரோசித்தல் நகங்கண்காந்தல்*
*இத்தனையுஞ் செய்கிலிது பித்தமாகு*
*மெழுநாளுங் கழித்தமருந் தியல்பாய்ச் செய்யே.* *(20)*

(இ-ள்.) கஞ்சிபோன்ற ஆகாராதிகள் வெறுப்பு, வாய்க்கு வந்தபடி பிதற்றல், நாவறட்சி, தேகத்தில் காங்கை, மயக்கம், நாக்கு உலர்ந்துபோதல், நாக்கில் கசப்புச்சுவை, குத்திருமல், கோழை மஞ்சள் நிறத்துடன் வெளிவரல், ருசியின்மை, நகங்கள், கண்கள் முதலானவிடங்களில் எரிச்சல் முதலான குறிகளும் காணப்பட்டால் அது பித்த ஜ்வரக் குறிகளாகும்.

இதற்கு ஏழுநாள் சென்றபின் மருந்துகள் கொடுக்கவும். அதாவது தோஷங்கள் பக்குவமடைய அவ்வளவு நாட்கள் செல்லும்.

### கபச்சுரக் குறிகள்

சிலேத்மசுர மிருமல்சனி கொண்டதென்னத்
தியங்கவரோசிகம்வாய்தித் தித்தலாகுஞ்
சொல்பெரிய மூர்ச்சைவாய் பேசாதுற்றல்
சொல்லியவாய் நீரொழுகி வெளுத்தல் தேக
மலத்தினிடை வாய்வுறுதல் குடலில்தங்கி
வலித்திடுதல் வியாதியுடல் வலிக்குங்குத்துஞ்
செலுத்துவமை யெனத்தூங்கல் தசநாள் சென்றால்
சிகித்ஸையா முண்மைசொன்னோ
மிருபத்தேழே. (21)

(இ-ள்.) இருமல், தொண்டையில் சளி, சாப்பிட்ட ஆகாரம் செரியாமை, ருசியின்மை, வாயில் தித்திப்புச்சுவை, மயக்கம், பேசவியலாமை, வாயிலிருந்து நீரொழுகல், தேகம் வெளுத்துப்போதல், மலம் போகையில் வாயுப்பிரிதல் அல்லது குடலில் தங்கி வலிமையேற்படுதல், அதிகமான தூக்கம் முதலான குறிகள் காணும். 10 நாட்கள் சென்ற பின்னர் மருந்துகள் கொடுக்கவும்.

### வாதபித்தச் சுரக் குறிகள்

வாதபித்தச்சுரமூர்ச்சை வாய்கெந்திந்தல்
வயிறிழிதல் வாந்திசெய்தல் மயிர்சிலிர்த்தல்
காதலுறு சுரமுமில்லை யுண்டோவென்னக்
கசந்துவாயருவருத்தல் சரீரம் நோகல்

போகமுறு தாகதம்ப மாகுமாகிற்
பொற்கொடியே வாதபித்தம் பொருந்திவந்த
தீதுசுரம் பதிமூன்று நாளுந்தோஷ
மிதுகழித்தால் மருந்துசெய்ய வியம்பினோமே. (22)

(இ-ள்.) மயக்கம், வாயில் துர்நாற்றம் வீசல், வயிறு பேதி, தீராத வாந்தி, மயிர்க்கூச்சலேற்படுதல், சுரம் லேசாக அடித்தல், வாயில் கசப்புச்சுவை, அருவருப்பு, உடம்புவலி, அதிகமான நாவறட்சி இவை வாதபித்தச் சுரக்குறிகளாகும். 13நாட்கள் சென்றபின் மருந்துகள் கொடுக்கவும்.

### வாத கபச்சுரத்தின் குறிகள்

வாதசிலேற் பனசுரத்திற் புலம்பலுண்டாம்
வாதமுண்டா முடல்நோகத் தேகம்வீங்கச்
சாதுரிய மான தொண்டைக் கட்டுநாசி
தன்னிலே நீரொழுக விளைப்புண்டாகப்
பேதமுற விருமலெழ வாயினிக்கப்
பெரு வெய்யிலு மணலுமிக விரும்பக்காய
ஆதரவாய் மலஞ்சலமும் வெளுக்குமாகில்
... ... சிலேற் பனசுரமென் றறியலாமே. (23)

(இ-ள்.) தன்னையறியாமல் புலம்பல், வாயு தேகத்தில் அதிகரித்தல், உடம்பில் வலி, வீக்கம், தொண்டைக்கட்டு, மூக்கிலிருந்து நீர் ஒழுகல், மூச்சுத்திணறல், இருமல், வாயில் தித்திப்புச்சுவை, வெய்யில், அனல் இவைகளில் விருப்பம், மலம், மூத்திரம் இவை வெளுத்துப்போதல் முதலான குறிகள் காணப்படில் அது வாதசிலேத்மச் சுரத்தின் குறிகளாகும்.

### மூன்று தோஷச்சுரக் குறிகள்

மூன்று தோஷச்சுரமிருமு முன்னந் திகைக்குந் தலைநோவா
மேன்ற மூக்கு நாவுமிட்டு மரிப்பாம் வயிறு மிகக் கழியுந்
தான்ற தலையுந் தான்சுழலுந் தருகா கெந்த மிக நாறு
மேன்ற குணங்க ளிவையெல்லா மூன்றுதோஷச்
சுரமென்னே. (24)

(இ-ள்.) இருமல், பெருமூச்சு, தலைவலி, மூக்கையடிக்கடி சொறிந்துகொள்ளல், அதிகமான வயிறு பேதி, தலைமயக்கம், நோயாளியிடமிருந்து துர்நாற்றம் வீசல் முதலான குறிகள் காணப்படில் அது மூன்று தோஷங்களும் சேர்ந்த ஜ்வரத்தின் (ஸந்நிபாதம்) குறிகளாகும்.

### சுரத்தில் சுபகுணம்

கண்காவி யாகிமுக மதியே போன்று
கரநாடி வசுவமதாய்க் குயிலேவாக்காய்
பண்பாகத் தலைசொறியக் காது கேட்கப்
பல்லுமுல்லை யரும்பெனநா வமிர்தமூறு
உண்போது வியர்க்கவுகிர் சிவந்து தோன்ற
வுள்ளங்கா லுடனுளங்கைச் சூடதாக
நண்பான பரிமளங்க ளறியப் பத்து
நற்குணங்க ளிவை சுரத்தை நாடுங்காலே. (25)

(இ-ள்.) கண்களில் செந்நிறம், முகத்தில் சந்திரனின் சோபை, கையிலுள்ள நாடியின் நடை குதிரை போன்றும், வாக்குக் குயிலின் குரலைப் போலினிமை முதலான இவைகளும் உண்டாகும். காதுகள் சுத்தமாகக் கேட்கும். பற்கள் முல்லையரும்பைப்போல் வெண்மையாயிருத்தல், வாயில் சுத்தமான உமிழ்நீர் சுரத்தல், எகிர் சிவந்து இருத்தல், உள்ளங்கால், உள்ளங்கை இவைகளில் சூடு முதலான குறிகள் இருந்தாலும் நல்லது. வாஸனையை அறியும் சக்தியும் இருக்கவேண்டும். மேற்கூறிய குறிகளும் ஜ்வரம் அடித்தால் நோயாளி பிழைப்பான்.

### சுரத்தில் அவகுணம்

வாத பித்தச் சிலேத்மனமு மறிந்து நடக்கத் தலை நடுக்கக்
காதுள்ளிரையை முகங்கருக்கக் கைகால் முகங்கண்
வெளுப்பேற
(இந்திரன்)ரர் தனுப்போ லுடல்வளையத் தொப்புள்
கால்கை யுரங்குளிரத்
தாது சிறுக்க விக்கலெழச் சாற்றுஞ் சுரத்தி லவகுணமே. (26)

(இ-ள்.) வாதபித்தச் சிலேத்ம நாடிகள் நிதானமாகப் போகும். தலைநடுக்கும். காதுகளில் இரைச்சல் , முகத்தில் கருநிறம், கைகள், கால்கள், கண்கள் முதலான உறுப்புகள் வெளுத்துப்போதல், உடம்பு வில்லைப்போல் வளைதல், தொப்புள், கைகள், கால்கள், மார்பு முதலான இடங்களில் குளிர்ச்சி, தாதுக்கள் க்ஷீணமடைதல், விக்கல் முதலான குறிகள் ஜ்வரத்துடன் சேர்ந்து காணப்படில் அது கெட்டகுறிகளாகும். வியாதி தீராது.

**இதுவுமது**

*வாயும் பிதற்றக் களமிரைய மலர்போல் முகமுங்*
*கறுத்திருக்கத்*
*தேயு நுதலாய் வியர்வைமிகச்சிறிதும் வியராதுடம்புலர*
*மேயமலமும் பசந்திருக்க மேல்மூச்செரிய விக்கலெழ*
*வேயுங்குணங்க ளிவைசுரத்துக் கெழுந்தா லுயிரை*
*யிழந்தீரே. (27)*

(இ-ள்.) வாய் பிதற்றல், தொண்டையில் இரைச்சல், முகம் கறுத்துவிடுதல், வியர்வை அதிகமாதல் அல்லது வியர்வையே வியர்க்காது போதல், உடம்பு இளைத்தல், மலம் பசுமையாகப்போதல், மேல்மூச்சு, விக்கல் முதலானவை உண்டாதல் முதலான குறிகளேற்பட்டால் அவை உயிரைப் போக்கும்.

**சுரத்தில் தோஷம் வருங் காரணம்**

*பாகுபெரு பாகிலைச் சந்தனஞ் சவ்வாது*
*பரிமளங்கற்பூரம் பஞ்சுமெத்தை*
*வாகுபெரு நெய் யோடுசர்க் கரைநல் லெண்ணெய்*
*மலர்சிவந்த புடவை வெள்ளைப் புடவை தண்ணீர்*
*தோகையரை விரும்பல்காற் றடிக்கும் வீடு*
*துவர்ப்பினிப்புப் புளிப்புடனே கைப்புக்காரம்*
*வேகமுறு புத்தரிசி யன்னஞ் சோகம்*
*விசாரம் வழி நடைதோஷம் மேவுமென்னே. (28)*

(இ-ள்.) சந்தனம், சவ்வாது, கர்ப்பூரம் போன்ற பரிமளத் திரவியங்களின் உபயோகம், பஞ்சு மெத்தையில் சயனித்தல், சுத்தநெய், சர்க்கரை, நல்லெண்ணெய், சிவந்த புடவை, வெள்ளைப் புடவை முதலியவைகளைத் தரித்தல், ஸ்திரீ ஸம்போகம், காற்று அதிகமாக அடிக்கும் வீடு, துவர்ப்பான வஸ்துக்கள், தித்திப்புப் பதார்த்தங்கள், புளிப்புச்சுவை, கசப்புச் சுவையுள்ள பண்டங்கள், அதிக காரமான பதார்த்தங்கள் இவைகளை அதிகமாக உபயோகப் படுத்துவதானாலும், புத அரிசிச் சாதத்தையுண்பதாலும், வருத்தம், கவலை அதிகமாக நடப்பது முதலான ஆகார, விஹாரங்கள் சுரத்தையதிகரிக்கச் செய்யும்.

### இதுவுமது

அடிக்கடிதண் ணீர்குடித்தல் பெண்பாலாசை
யடுத்தணைத லனம்நிரப்ப வருந்தக்கள்ளுக்
குடித்திடல்நீர் விட்டசோ றுண்டல்காய்ந்து
கொதித்தநீர் குளிர்ந்தநீர் கூட்டி யுண்ணல்
கடித்த தயிர் மோர்பால்நொங் கிளநீரெங்க
கோளிசைத்த மாங்கிஷங்காடி யுளுந்தருந்தல்
துடித்தநிலாக் காந்திகுளிர் சரீரத்துற்றல்
சுரத்தின் மேல்தோஷமது துய்க்குங்காணே. (29)

(இ-ள்.) அடிக்கடி தண்ணீர்குடித்தல், பெண்களின்மேல் ஆசை, ஸ்திரீபோகம், கள் முதலான போதை வஸ்துக்களை யருந்துதல், தண்ணீர்விட்ட சாதம் (பழயமுது) உட்கொள்ளல், அதிகமாகச் சூடாக்கிய நீர், குளிர்ச்சியான நீர் இவைகளைச் சேர்த்து அன்னம் உட்கொள்ளல், கெட்டித்தயிர், மோர், பால், நொங்கு, இளநீர், மாம்ஸங்கள், காடி, உளுந்து முதலான பண்டங்களையும் நிதானமின்றி உபயோகித்தல், அதிகமாக நிலா வெளிச்சத்தில் இருத்தல் முதலானவைகளினால் சுரத்தில் தோஷங்கள் அதிகரிக்கும்.

## இவைகளினால் வருந்தோஷங்கள் ஏழாவன

நிறையபத் தியமாந்தோஷம் நிரம்பிய தருணதோஷஞ்
சரசமாஞ் சங்கதோஷஞ் சாற்றிய விடமதோஷந்
திரமுறு விடமசீத தோஷம்சிவ் வுகமாந்தோஷம்
பரவிய கிருஷ்ணசிவ்வு தோஷமும் படருங்காணே. (1)

(இ-ள்.) அபத்தியதோஷம் தருணதோஷம்
சங்கதோஷம் விடம தோஷம்
விடமசீத தோஷம் சீவக தோஷம்
கிருஷ்ண சீவக தோஷம் என்பன.

## அபத்திய தோஷக் குறிகள்

படர்ந்திடுந் தோஷமேழின் குணமது பகர்வேன் மூர்ச்சை
யடர்ந்ததந் திரையே தாகம் பரதாப மங்கமோகம்
துடர்ந்திடும் வாயு மாற்பிற் றோற்றுதல் சுரமே காய்தல்
நடத்திடில பத்தியத்தின் தோஷமின் னாமமாமே. (2)

(இ-ள்.) மயக்கம், சோம்பல், நாவறட்சி, தேகத்தில் எரிச்சல், வாயு மார்பில் பரவுதல், சுரமடித்தல் முதலான குறிகள் காணப்படில் அவை அபத்திய தோஷக் குறிகளாகும்.

## தருண தோஷத்தின் குணம்

ஆகிய வங்கங் கம்பம் மயிர்க்கூச்சு மழலும்வேக
மேகிய தாபங் கைகால் குளிர்த லேயத் தேய்த
தோகைசந் தாபமோடும் பிரலாப முதயமென்னில்
தாகிய பிரமை கொள்ளிற் றருணமாந் தோஷந்தானே. (3)

(இ-ள்.) கை, கால் முதலான உறுப்புக்களில் நடுக்கம், மயிர்க்கூச்சல், உடம்பில் எரிச்சல், அழற்சி, கை கால்களில் குளிர்ச்சி, காலை வேளைகளில் உளரல் முதலான குறிகள் காணும் இவைகள் தருண தோஷ லக்ஷணங்களாம்.

### சங்க தோஷத்தின் குறிகள்

தானமா முடம்புநோவா மெரிந்திடு தாடைக்கு
மானகால் குளிர்ந்திருக்கு மடிக்கடி யெழுந்திருக்கு
மீனமாம் பொய்யே சொல்லு மிருதய மிகவலிக்கு
மூனமாஞ் சங்கதோஷம் பிரமையு முண்டா மென்னே. (4)

(இ-ள்.) உடம்பில் கடுப்புவலி, எரிச்சல், கால்களில் குளிர்ச்சி முதலான குறிகள் காணும். பொய் பேசுவான், படுக்கையைவிட்டு அடிக்கடி எழுந்திருப்பான், இருதயத்தில் வலியுண்டாகும். மயக்கமும் வரும். இவை சங்கதோஷக் குறிகளாகும்.

### விடமதோஷக் குறிகள்

என்னுஞ்சந் தாபந்தாக மிவையுடன் மூர்ச்சையுண்டாம்
மின்னுந்தா னாடிமிஞ்சிக் குடிலமாய்ப் பிசகியோடு
மந்துந்தீ வரமதாகச் சுரங்காயும் வயிறு காந்துந்
துந்நூந்தான் விஷமதோஷ லக்ஷணஞ் சொல்லுங்காலே. (5)

(இ-ள்.) உடம்பில் எரிச்சல், நாவறட்சி, மூர்ச்சை, நாடிகள் வித்தியாசமாகத் துடித்தல், அதிகமாகச் சுரம் காய்தல், வயிறில் எரிச்சல் இவைகள் விடமதோஷக் குறிகளாகும்.

### விஷமசீத தோஷத்தின் குணம்

காலமில் லாமல்மாறிக் குளிருடன் காய்ச்சலுண்டா
மேலவே தாகமுண்டா மேதிலு மபேட்சையுண்டாஞ்
சாலவே தடித்தநாக்கு முள்ளுப்போற் றலைவலிக்கு
மூலமே விஷமசீத தோஷத்தின் முறமைதானே. (6)

(இ-ள்.) சாயங்காலத்திலோ அல்லது விடியற் காலையிலோ மாறிமாறிக் குளிருடன் சுரம் அடிக்கும். தாங்க முடியாத நாவறட்சியேற்படும். எந்தப் பொருளிலும் விருப்பம் இராது. நாக்கில் தடிப்பேற்பட்டு

முட்களைப்போல் குத்தும். தலைவலியேற்படும். இவை விஷமசீத தோஷத்தில் குறிகளாகும்.

### பித்த சிவ்வுக (ஜிஹ்வா) தோஷக் குறிகள்

மாதுகேள் மயக்கந் தாபம் வளருமெய் வியர்வையுண்டா
மோதிய நாக்கு வெண்மை யுறுந்தடித் துலர்ந்துமுள்ளங்
காதிய பிரமையுண்டாங் காய்ச்சலு முண்டா மென்னிற்
றீதளு பித்தசிவ்வுக தோஷத்தின் செயலிதென்னே. (7)

(இ-ள்.) மயக்கம், எரிச்சல், உடம்பில் வியர்வை நாக்கில் வெளுப்பு, தடிப்பு, உலர்தல், மனது பலஹீனம், சுரம் இவை பித்த ஜிஹ்வா தோஷத்தின் குறிகள்.

### கிருஷ்ண சிவ்வுக தோஷக் குறிகள்

செயலின்றிப் பிரமையுண்டாந் தினவுண்டாம்
வியர்வையுண்டா
மயலொன்றித் தாகமுண்டாம் வயிற்றிலுப் பிசமுமுண்டாம்
இயல் கொண்ட நாக்கில் முள்ளுங் கறுப்புமா
யெழுந்திருக்கும்
புடல்கொண்ட கிருஷ்ண சிவ்வுக தோஷத்தின் புதுமை
காணே. (8)

(இ-ள்.) காரணமில்லாமல் மயக்கமேற்படும். அரிப்பும் உண்டாகும். வியர்வை, நாவறட்சி, வயிற்றில் உப்பிசம், நாக்கில் முள்ளுப்போன்ற முளைகள், கருநிறத்துடன் காணும். இவை கிருஷ்ண சிவ்வுக (கிருஷ்ண ஜிஹ்வா) தோஷத்தின் குறிகள்.

### 7 வகை தோஷங்களிலும் சாத்யாசாத்யம்

புதுமையா மேழுதோஷம் புகன்றதிற பத்தியதோஷ
மிதமுறு தருணதோஷ மிவைதீருஞ் சங்கதோஷங்
கதுவிய விஷமதோஷங் கட்டசாத் தியமோர் மூன்றும்
பதியகல விக்குமென்றே பகர்ந்தன ராயுநூலோர். (9)

(இ-ள்.) பத்திய தோஷம், தருண தோஷம் இவ்விரண்டும் தீரக்கூடிய நோய்களாகும். சங்கதோஷம், விஷமதோஷம் இவ்விரண்டும் கஷ்ட சாத்யமானவை. பாக்கி 3 வகை தோஷங்களும் தீராதென்று அறிந்துகொள்ளவும்.

## சுரம் ஏற்படுவதற்கான குறிகள்

சுரத்தினி லாதமத்தி தோன்றிடுந் தோஷமாகும்
முரத்தெழு தோஷமுந்தா னுற்பவ குணமே தென்னில்
வருத்திடு மயக்க மூர்ச்சை மார்பு நோம் வாய் பிதற்று
மரத்தினை யொப்பு நாவு வறண்டிடு மறிகுவீரே. (10)

(இ-ள்.) மயக்கம், மூர்ச்சை, மார்பில் வலி, வாய் பிதற்றல், நாக்கு மரத்தைப்போல் வறண்டுபோம். இவைகள் சுரம் ஏற்படும்போது உண்டாகும். குறிகளாகும்.

## சுரம் அறுபத்து நான்கிற்கும் சாத்யா சாத்ய அட்டவணை

### வாதப்ரகோப ஜ்வரம் 20-ல் சாத்யா சாத்யம்

| | |
|---|---|
| வாதஜ்வரம் | வாத பித்த ஜ்வரம் |
| வாதசீத ஜ்வரம் | வாதவத்தி ஜ்வரம் |
| ஆசீகவாத ஜ்வரம் | வாதகணச்சுரம் |
| சாதுர்த்திக ஜ்வரம் | மாந்த ஜ்வரம் |
| வாத அதிசார ஜ்வரம் | வாத மாந்தச்சுரம் |
| அசீர்ணவாதச் சுரம் | உதிரிவாதச் சுரம் |

**இவை சாத்யம்**

| | |
|---|---|
| வாத சிலேற்பனச் சுரம் | சன்னிவாதச் சுரம் |
| பூதச்சுரம் | பிரேதச்சுரம் |
| பிரதாபவாதச் சுரம் | வாத வைசூரிச் சுரம் |
| வாத சோகச் சுரம் | விரணவாதச் சுரம் |

**இவை அசாத்யம்**

### பித்தத்தின் அசாத்யம் பதிநான்கின் வகை

பித்த ஜ்வரம்
பித்தச்சிலேத்ம ஜ்வரம்
பித்தவாத ஜ்வரம்
அஸ்தி ஜ்வரம்
சங்கிரக அஸ்தி ஜ்வரம்
பித்தசோகை ஜ்வரம்
பித்த அதிஸார ஜ்வரம்
பித்த தாக ஜ்வரம்
பித்த விஷம ஜ்வரம்
பித்த அஸ்தி ஜ்வரம்
பித்த மாறல் ஜ்வரம்
பித்தப்பிரதாப ஜ்வரம்
பித்த அசீர்ண ஜ்வரம்
பித்த சீத ஜ்வரம்

ஆக இவ்வகை அசாத்தியமானவை

### சிலேத்மத்தில் சாத்தியம் பத்தின் வகை

சிலேத்ம பித்த ஜ்வரம்
சிலேத்ம வாத சுரம்
சலாசயச் சுரம்
மாங்கிஷ வைசூரிச் சுரம்
சிலேத்ம கணச்சுரம்
சிலேத்ம தோஷ ஜ்வரம்
சிலேத்ம அதிசார ஜ்வரம்
சிலேத்ம சீத ஜ்வரம்
சிலேத்ம ஜ்வரம்
ஆம சிலேத்ம ஜ்வரம்

### சிலேத்மத்தில் அசாத்யம் பத்து

சிலேத்ம சந்நி ஜ்வரம்
ஆகீக சிலேத்ம ஜ்வரம்
விஷம சிலேத்ம ஜ்வரம்
சிலேத்ம பஞ்சாகீ ஜ்வரம்
சிலேத்ம மாகீக ஜ்வரம்
சிலேத்ம மோக ஜ்வரம்
சிலேத்ம விக்ருதிச் சுரம்
... .... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ....

### சிரரோக நிதானம்

கண்களிற் பீளைசாயுங் கால் கைகள் கடுத்துக் குத்து
மெண்படப் புகைந்து சற்றே யிருமிமே விளைப்புண்டாகும்
புண்பட நெஞ்சு நொந்து நாசியிற் பொய்நீர் பாயும்
வண்படும் நூலோர் சொன்ன வாதபீனிசமதென்ன. (1)

(இ-ள்.) கண்களில் பீளை சாறும்,கை கால்களில் கடுப்பு வலியேற்படும். புகைச்சலேற்படும். இருமல், மேல்மூச்சு, நெஞ்சில் வலி, மூக்கில் நீரொழுகல் முதலான குறிகளேற்படில் அது வாத பீனிசமாகும்.

### பித்த பீனஸக் குறிகள்

இருமிக் குவளை மிகுந்து விழு மீரவாடை யேற்குமென்னிற்
கருமேலேறும் நெஞ்சுதன்னிற் காசசுவாச
மிளைப்பெடுக்கும்
பொருமுமுதர மேப்பமிடிற் புலால்போல் நாறும்
பிடர்கனக்கும்
பெருகும் நாசி நீர் பெருகும் பித்த பீனிசக் குணமாமே. (2)

(இ-ள்.) இருமலுடன் கோழை அதிகமாக வெளியாகும். குளிர் வாடை பட்டால் நெஞ்சில் கபம் கட்டி இருமல், மேல் மூச்சு, இரைப்பு இவைகளை உண்டாக்கும். வயிறு பொருமும், ஏப்பம் விட்டால் மாம்ஸவாடை வீசும். பிடரி கனக்கும். மூக்கிலிருந்து சதா நீர் வடிந்து கொண்டிருக்கும். இவை பித்த பீனிஸக் குறிகளாகும்.

### சிலேத்ம பீனிசக் குறிகள்

தலையும் வலிக்கும் நாசிதன்னிற் சளிபோல் மாறாச்
சலமோடும்
அலையும் நாளே ழுசென்றால் வறண்டே யிறுகித்
திரண்டுவிழு
முலையும் மிகவே நாற்றமதா மூடே தண்ணீர் தாகிக்குஞ்
சிலமுஞ் சென்று மூக்கடைக்குஞ் சிலேத்ம பீனசமிதுவாமே.

(இ-ள்.) தலைவலியுண்டாகும் மூக்கிலிருந்து சளிபோல் நீர் சதா ஒழுகிக்கொண்டேயிருக்கும். 7 நாட்கள் சென்றபின் சளி இறுகிக் கெட்டியாக விழும் மூக்கிலிருந்து நாற்றம் வீசும். தண்ணீர் தாகமுண்டாகும். இன்னும் சில நாட்கள் சென்றால் மூக்கடைப்பு ஏற்படும்.

### வாதபித்த பீனிசக் குறிகள்

கருகிய நிறமதாக முகத்தினிற் கறுப்புக் காணும்
பருகிய பல்லுக்கூசும் படர்விழி நிறஞ் சிவக்கும்
செருகிய தலைகனக்கும் நாசியிற்சி ராய் சீவீழும்
பெருகிய வாதபித்தப் பீனிச மென்னலாமே. (4)

(இ-ள்.) முகத்தில் கறுப்புநிறப் புள்ளிகள் காணும். பற்கள்கூசும். விழியில் சிவப்புநிறம் காணும். தலை கனக்கும் மூக்கிலிருந்து சிராய்போலும் சீழ் போலும் சளி கொட்டும். இவை வாத பித்தப் பீனிசக் குறிகளாகும்.

### வாதகப பீனிசக் குறிகள்

தார்குழல் மானே! கேளாய் தலையிள மையில் நரைக்கும்
கூர்விழி யொளிவு மாறுங் குலைந்துலைந் தசையும் பல்லுச்
சீர் சிரங் கத்தி டிக்குஞ் சிந்திடும் நாசி நீறாய்
வார் தரும வாதசேத்ம பீனிச வளமை தானே. (5)

(இ-ள்.) தலை இளைமையிலேயே நரைக்கும். பார்வையும் குறையும். பற்கள் ஆட்டம் காணும். தலை, உடம்பு இவைகள் கனக்கும். மூக்கிலிருந்து சதா நீரொழுகும். இவை வாதசிலேத்ம பீனிசக் குறிகளாகும்.

### பித்த சேத்ம பீனிசக் குறிகள்

... ... ... சிராய் சீழ்விழும் நாவது கசந்தினிக்கும்
மோசையாஞ் சிரசிற் கொட்ட வோடுபோ லுணர்ச்சி மாறும்
வீசியே கிறுகிறென்னும் வெதும்பியே தலையிடிக்கும்
பேசிய குணங்கள் பித்த சேத்மபீ னிசமிதென்னே. (6)

(இ-ள்.) மூக்கிலிருந்து சிராய்போலும் சீழ்போலும் சளி வீழும். நாக்கில் கசப்பும், இனிப்புச் சுவையும் இருக்கும். சிரசில் (காதில்) சதா சப்தமுண்டாகும். தலையில் உணர்ச்சியிராது. தலை கிறு கிறு என்று சுழலும். மண்டையிடியும் உண்டாகும். இவை பித்த சேத்ம பீனிசக் குறிகள்.

### திரிதோஷ பீனிசத்தின் குறிகுணங்கள்

கான்றிடுஞ் சுவாசநாசி யடிக்கடி கனத்தடைக்கு
மென்றிடும் பனிநீர் வாடை யொத்திடுந் தலையிடிக்கு

மூன்றிடு மிருமல் காணு முடம்புலர்ந் தோய்வு காணுந்
தோன்றிய திரிதோஷத்திற் றொட்டபீ னிசமதாமே. (7)

(இ-ள்.) மூச்சுக்காற்று உஷ்ணமாக வெளிப்படும். மூக்கில் பார உணச்சியுடன் அடைப்புமுண்டாகும். பனித்துளியைப் போன்ற நீர் நாசியிலிருந்து வெளிப்படும். தலைவலியுண்டாகும். இருமல் ஏற்படும். உடம்பு மிகவும் மெலிவடைந்து ஓய்ச்சலுண்டாகும். இவைகள் திரிதோஷ பீனிஸ ரோகமாகும்.

### சலபீனிசக் குறிகள்

கலந்திடு சிரசிலேறிக் கழிக்குநீர் போகாதாகித்
துலங்கிய நெஞ்சில் வீழ்ந்து சுரமுட னிருமலுண்டா
மலங்கவே தும்மு மூக்கில் வழுவழுத் தோடுந் தண்ணீர்
நலங்கிளர் சலபீனிச மிதுவென நாட்டுவோமே. (8)

(இ-ள்.) சிறுநீர் வெளியாகாது. சிரசில் தண்ணீர் கோர்த்து நிற்கும். நெஞ்சும் அதைக்கும். சுரம், இருமல் இவைகளுடன் தும்மலும் உண்டாகும். மூக்கிலிருந்து நீர் வழ வழ எப்போதும் கசியும். இவை சல பீனிசக்குறிகளாகும்.

### இரத்த பீனிசக் குறிகள்

தலையது கனத்திருக்குந் தட விழி சிவந்திருக்கும்
நலமுறு நாசி தன்னில் நாடோறு மிரத்தம் வீழும்
குலவிய நாசி தாழுங் கூறிடிற் கிணுகிணென்னும்
பிலவிய குணவிரத்தப் பீனிச மென்னலாமே. (9)

(இ-ள்.) தலை கனக்கும். கண் விழிகள் சிவக்கும். மூக்கிலிருந்து தினந்தோறும் இரத்தம் வெளிவரும். மூக்கு சரியும். நோயாளி மூக்கினால் கிணு கிணு (ஞொண ஞொண) என்று பேசுவான். இவை இரத்த பீனிசக் குறிகளாகும்.

### வறட்சி பீனிசக் குறிகள்

துண்டமூ டுலருந் தொண்டை தினவுறுந் தும்மலின்றி
மண்டையுங் கனக்கும் வாசமூதெனும் வகைதோன்றாது
திண்டிடிற் தலை சொறிந்து பொடிவிழுஞ் செய்கைதானே
கொண்டிடிற் சிரவறட்சி பீனிசக் குணமி தென்ன. *(10)*

(இ-ள்.) தொண்டை உலர்ந்து போம். மூக்கில் அரிப்பு ஏற்படும். தும்மலிராது. மண்டை கனக்கும். வாசனைகளை அறியமுடியாது. தலையைச் சொறிந்தால் வெண்மை நிறமான பொடி உதிரும். இவை சிரோ வறட்சிப் பீனிசக் குறிகளாகும்.

### சிரோ பிரம லக்ஷணங்கள்

உச்சியிற் சூடுமுண்டா மொளிவிழி மயக்கமுண்டா
மெச்செணி முலையினாளே! வீரிட்டுத் தலை சுழற்று
மச்சமுங் கனவுங் காணும் அசதியுஞ் சிறிதுகாணும்
நிச்சயமாகச் சொன்னோம் நிலைச்சிரப் பிரமமாமே. *(11)*

(இ-ள்.) தலையுச்சியில் சூடு உண்டாகும். பார்வை மயக்கம் உண்டாகும். தலை சுழற்றும். அடிக்கடி பயம் ஏற்படும். அசதி, சொப்பனம் முதலானவைகளும் ஏற்படும். இவை சிரோ பிரமக்குறிகளாகும்.

## கபால ரோக நிதானம்

மண்டையிடிக்கும் பிடரிகனக்கு வலது புருவத்
திடைகுத்தும்
துண்டைமடைக்குஞ் செவியிரையுஞ் சொறியச் சிரசிற்
திமிர்தோன்றும்
கண்டந் தன்னிற் பரபரக்குங் கண்ணீர் மல்கிக் கசடு கக்குங்
கொண்ட லனைய குழலாளே! கூறுங் கபால ரோகமிதே. *(1)*

(இ-ள்.) தலைவலி அதிகரிக்கும். பிடரியில் பார உணர்ச்சி, வலது புருவத்தில் குத்தல், காது இரைச்சல்,

தலையைச் சொறிந்தால் ஒருவித மதமதப்பு, தொண்டையில் ஒருவிதமான அறுவல், கண்ணீர் வடிதல், பீளை சாறல் முதலான குறிகளேற்படில் அது கபால ரோக லக்ஷணங்களாகும்.

## கபால பித்தக் குறிகள்

உச்சியிடிக்கு மயிர்முறிவு முறக்கம் பெரிதாய் முகங்கனக்கு
மச்சத்தோன்றுங் கால்கைகள் அயரும் வியர்க்கும்
விழிசிவக்கும்
பச்சென்றிருக்கும் நாசியிற்சீழ் பாயும் நாறும் பறபரியுங்
கச்சின் கனகமுலையாளே! கபால பித்தமெனக் கருதே. (2)

(இ-ள்.) மண்டையுச்சியில் தாங்கமுடியாத வலி. மயிர் உதிர்தல், அதிகமான தூக்கம், முகத்தில் பார உணர்ச்சி, அடிக்கடி பயப்படுதல், கைகால்களில் பலஹீனம், வியர்வை, விழி சிவத்தல், மூக்கிலிருந்து சீழ்வடிதல், நாற்றம் இவைகள் உண்டானால் அவை கபால பித்தக் குறிகளாகும்.

## கபாலச் சிலேத்மக் குறிகள்

தேங்காய் போலத் தலைகுலுங்குஞ் சீறியிருமூஞ்
சிரசிடிக்கும்
பாங்காய் முகமு மினுமினுக்கும் பார்க்கிற் கண்ணும்
வெளுப்பேறும்
நீங்காதுடம்பு சிறுகூடாய் நிறைக்கும் வியர்வை யுண்டாகும்
மாங்காண் கபால சிலேத்மனமென் றறிவீ ரறிவீ ரறிவீரே. (3)

(இ-ள்.) தேங்காயில் இளநீர் குலுங்குவதைப்போல் கொட கொட என்று தலையை ஆட்டினால் குலுங்கும். அதிகமான இருமல், தலைவலி, முகத்தில் மினுமினுப்பு, கண்களில் அதிகமான வெண்மை, உடலில் காங்கை, அதிகமான வியர்வை முதலான குறிகளும் உண்டானால் கபால சிலேத்மம் என்று அறிந்துகொள்ளவும்.

## கபால வாயுக் குறிகள்

தலையுங் கனத்து வலித்துயர்ந்து தருகாதமுற்றி யுமுற்றுமுடல்
அலையும் நடக்குங் கிறுகிறுக்கும் மார்புச்
சிக்கண்ணெவையாவும்
முலையக் குத்தும் பிடரிநரம் புழையு மனத்தல் வாயூறுங்
கலையிற் பெரிய முனி சொன்னார் கதிக்குங் கபால
வாயுவென்றே. *(4)*

*(இ-ள்.)* தலையில் பார உணர்ச்சியுடன் வலியும் காணும். வீக்கமும் காணும். உடலில் அழற்சியும் உண்டாகும். மயக்கமேற்படும். மார்பு, உச்சிமண்டை, கண்கள் முதலான இடங்களில் குத்துவலி அதிகரிக்கும் பிடரி நரம்பிலும் வலியுண்டாகும். தேகத்தில் காங்கையேற்படும். காரணமில்லாமல் வாயில் உமிழ்நீர் ஊறும். இக்குறிகள் காணப்படில் அது கபால வாயு என்ற நோயாகும்.

## கபால வறட்சிக் குறிகள்

கண்டந்தன்னில் மேலாகக் கபால வறட்சியுண்டாகுந்
துண்டம் புருவங் கூடுதல் சுழியிற் கண்ணிற் குத்துண்டா
மண்டுந் துயர மிகவுண்டாம் வலைபோற் கண்ணுந்
தெரியாது
மண்டை முழுதும் பறந்து குத்தி வருத்துங் கபால
வறட்சியிதே. *(5)*

*(இ-ள்.)* தொண்டைக்குமேல் கபாலத்தில் வறட்சி யுண்டாகும். புருவத்தின் இடை, கண் முதலான இடங்களில் குத்துவலி ஏற்படும். கண்களில் பார்வை குறையும். வலைபோட்டு மறைத்தாப்போலிருக்கும். மண்டை முழுவதிலும் குத்துவலியுண்டாகும். இவைகள் கபால வறட்சியின் குறிகளாகும்.

## கபால கனப்பின் குறிகள்

*ஓடியுளைந்து கபாலத்தில் வொருக்கால் விடாமல்*
*மிகக்குத்தும்*
*நாடிக்கயாம் வறண்டுவரும் வலுவாய் பதறு முடம்*
*பெங்கும்*
*தேடிப் புணர்ச்சிதனைச் செய்யிற் சிறுநீர் கலங்கி சிவந்து*
*விழும்*
*நாடிக் கபாலக் கனப்பதென நவின்றார் முனிவர்*
*நவின்றாரே. (6)*

*(இ-ள்.)* மண்டையில் வாயு ஓடி ஓடிக்குத்தும். உடம்பு வறண்டு போம். உடம்பும் காரணமில்லாமல் நடுங்கும். ஸ்திரீபோகம் செய்தபின் சிறுநீர் கலக்கிச் சிவந்த நிறமாக இறங்கும். இவை கபாலக் கனப்பின் இலக்ஷணங்களாம்.

## கபாலக் குத்தின் குறிகள்

*புருவச்சுழியிற் முதற் குத்திப்பொருந்தும் பாம்பு*
*விடம்போல*
*உருவக்குத்து முச்சிதன்னி லோடியடங்குஞ் சிரந்தன்னில்*
*மருமொய்த் தருகால் வழிமிழற்று மலர்மைக் குழலின்*
*மடமானே*
*பெருகக் கபாலக் குத்தி தென்று பேசிப் பகர்வார்*
*பெரியாரே. (7)*

*(இ-ள்.)* ஆரம்பத்தில் புருவச்சுழியில் குத்துவலி யுண்டாகிப் பாம்பின் விஷம் ஏறுவதைப்போலத் தலையுச்சிவரைப் பாயும். பின்னர் சிறிது சிறிதாகக் குறைவடையும். இக்குறியினால் கபாலக்குத்து என்ற நோயெனத் தெரிந்துகொள்ளவும்.

## சத்தி கபாலக் குறிகள்

மெத்தத் துரத்திமிக மேதினியெல் லாஞ்சுழலு
குத்தக் கபால நோய் கொண்டதிருஞ் - சத்தி
எடுக்குங் கிறு கிறுக்கு மேந்திழையே பித்த
மடுக்குமே சத்தி கபாலம். *(8)*

(இ-ள்.) உடம்பை எங்கேயோ தூக்கிக்கொண்டு போவதைப் போன்ற உணர்ச்சி உண்டாகும். கபாலத்தில் குத்துவலி ஏற்படும். தீராத வாந்தி ஏற்படும். மயக்க முண்டாகும். இவை சத்தி கபாலக் குறிகளாகும்.

## கபாலக் கரப்பானின் குணம்

*காதுதனிலே பறபறென்னுங் கையிற் றுரும்பு மாங்காதும்*
*ஓதுங் கண்ணிற் பீளைதுன்னு மூக்குநாறி நீர்பரியு*
*மோது முழுக்குத் ... ... ... ன்றவரி லுற்ற சிரசில் வரட்சியதாய்*
*சேதம் வரவே தலையிடிக்குஞ் சீறு கபாலக் கரப்பனிதே. (9)*

(இ-ள்.) காதுகளில் பற பற என்று சப்தம் கொடுக்கும். கண்களில் பீளை சாறும். மூக்கிலிருந்து நாற்றம் வீசும். நீர்வடியும். சிரசில் வறட்சியேற்படும். தலைவலியும் உண்டாகும். இவை கபால கரப்பானின் லக்ஷணங்கள்.

## கபால வலிக்குறிகள்

*திருந்து நரம்பு தனில் வாயுச் சேர்ந்து மிகமெலிய*
*வருத்தும் வேதனை யுண்டாக்கும் வதனங் கறுக்கும் விழி மஞ்சள்*
*அருந்தும் புசிப்பு மருந்தரிதா மாகுமாகி லிக்குணங்கள்*
*பொருந்துங் கபால வலியிதனைப் புகலும் பொதிகைத் தமிழ் முனியே. (10)*

(இ-ள்.) நரம்பில் வாயு சேர்ந்து மிகவும் தேகத்தை மெலிவடையச் செய்யும். தலைவலியுண்டாக்கும். முகம் கறுத்துப்போம். விழி மஞ்சள் நிறமடையும். சாப்பாடு உட்செல்லாது. இக்குறிகள் காணப்படில் அது கபாலவலியின் லக்ஷணங்களாம்.

## கபால வாயுவின் குறிகள்

சேரு நரம்பு மோர்புறத்திற் றிருந்து வாயு வது பொருந்திச்
சாறுங் கபாலத் தோர் புறத்தைத் தளரயிடித்து மிகவலிக்குஞ்
சோறுமயக்கங் கண்மயக்குஞ் சுரமுங் குளிருமுண்டாகும்
பாருங் கபால பாரிசத்திற் றிருக்கும் வாயு வலியாமே. (11)

(இ-ள்.) கபாலத்தின் ஒரு புறத்தில் வாயு தங்கிநின்று அந்த ஒரு புறத்தில் குத்துவலியுண்டாக்கும். வயிறு மந்திக்கும். கண்களும் மயங்கும். ஜ்வரம், குளிர் இவைகளும் ஏற்படும். இவை கபால வாயுவின் குறிகுணங்களாகும்.

## மூளை குறைதலின் குறிகள்

புத்தியுங் கதுமை போகும் பொறவிழி யொளிவுமாறும்
நித்திரை வாராதாகும் நெஞ்சது பயமுமாகு
முத்தரம் பெருகப் பேசா னுரைத்தனம் புசிப்பறுந்தான்
பித்தனுமாவான் மூளை குறைந்திடுங் குணங்கள் பேசே. (12)

(இ-ள்.) புத்தி நிலை தடுமாறும். விழிகளில் ஒளிமாறும். தூக்கம் வாராது. மனதில் அடிக்கடி பயமேற்படும். கேள்விகளுக்கு பதில் சரியானபடி சொல்லமாட்டான். சாப்பாட்டை விரும்பான். பித்துப் பிடித்தவன் போலாவான். இவை மூளை குறைவடைதினா லுண்டான குறிகள்.

## மண்டைச் சூலைக் குறிகள்

நாசிதனிலே யசறுவிழும் நாற்றமெடுத்து நடுத்தாழும்
பேசிலல்கு தனைப்பிடிக்கும் பின்னுந் தலையில்
மயிர்கழியும்
ஆசையுடனே தயிர் பால் நெய் யருந்திற் பகையாமுகங்
கனக்கும்
வாசமிகுந்த குழலாளே! மண்டைச் சூலை யிதுவாமே. (13)

(இ-ள்.) மூக்கிலிருந்து அசடு (சளி) ஒழுகும். மூக்கிலிருந்து துர்நாற்றம் வீசும். மூக்கின் நடுபாகம் தாழ்ந்து போகும். பேசினால் மர்மஸ்தானத்தைப் பிடித்திழுக்கும். தலையிலிருந்து மயிர் அதிகமாகக்கொட்டும். தயிர், பால், நெய் இவைகளை பிரியத்துடன் உட்கொண்டால் அது உடம்பிற்கு ஆகாது. முகத்தில் பார உணர்ச்சி உண்டாகும். இவை மண்டைச்சூலைக் குறிகளாகும்.

## மண்டை வியாதிக் குறிகள்

தலையில் மயிருந்தானுதிருஞ் சத்தங் குறுகு மிகச் செவ்வே
யலகுதிறக்க வொட்டாது அங்கம் வறண்டு கடுப்புண்டாம்
நல்பற்கூசு மோர்போல நாசிதனிலே சீயொழுகும்
வலியுண்டாகு முகமெங்கும் மண்டை வியாதிக்
குணமாமே. (14)

(இ-ள்.) தலையில் மயிர் உதிரும். காது சரிவரக் கேட்காது. வாயை நன்றாகத் திறக்கமுடியாது. தேக உறுப்புக்கள் வறண்டு கடுப்பு வலியுண்டாகும். பற்கள் கூசும். மூக்கிலிருந்து சீழ் வெளிவரும். முகத்தில் குத்துவலி ஏற்படும். இவைகள் மண்டை வியாதியின் குறிகளாகும்.

## கர்ண ரோகம்

காதுதனிலே வண்டிருந்து கடிக்கும் போலச் சுருக்கென்னும்
நாதமடைக்கு முகங்கனக்கு நாடுங் கர்ண சூலமதாம்
ஓதுங் கடலில் அலையொலிபோல் முழங்குங்காது கேளாது
பேதமடுக்கும் வேதனையாம் பேசுங் கர்ண நாதமதே. (1)

(இ-ள்.) காதுகளில் வண்டு புகுந்து அது கடிப்பதைப்போல் சுறுக் சுறுக் என்று குத்தும். ஓசை கேட்காது. முகம் கனக்கும். இது கர்ணசூலை என்ற நோயாகும்.

கடலிலிருந்து எழும் அலைகளின் ஓசையைப்போல் சதா காதில் இரைச்சல் உண்டாகும். காது கேட்காது. அதிக வேதனையைத் தரும். இவை கர்ணநாதக் குறிகளாகும்.

## கண்டு, கரணக்கிருமி ரோக லக்ஷணம்

காது தனிலே பரபரென்னும் கையாற் றுரும்பிட்டே
குடையும்
ஓதுங்குறும்பி தானடைக்கும் ரோக கர்ணக் கண்டுவிதாம்
போதும் புருவுஞ் சலமுமிகப் பொருந்திப்
புரையுட்டினமெடுக்கி
லீது கர்ணக் கிருமியென்ன வியம்பும் பெரியோர்
யாவருமே. (2)

(இ-ள்.) காதுகளில் பர பர என்று அரிப்பு ஏற்படும். கையைக் கொண்டும் துரும்பைக்கொண்டும் காதுகளைக் குடைவான். குறும்பை அடைத்துக்கொள்ளும். இது கர்ண கண்டூ ரோகக் குறிகளாகும்.

முற்கூறிய குறிகளுடன் காதிலிருந்து புழுவும், நீரும் வெளியாகும். உஷ்ணமுமெடுக்கும். இவைகள் கிருமி கர்ண லக்ஷணங்களாகும்.

## கர்ண விப்புருதி, கர்ணசூலை இவைகளின் குறிகள்

காதடி தன்னிற் கோவைக் காயெனக் கனத்து வீங்கிக்
கோதற வெடிக்கிற் கன்ன விப்புருதிக் குணமதாகுந்
தீதுற வளையமாகச் சிக்கெனக் கனத்து வீங்கி
லோதிடுங் கர்ணசூலை யிதுவென வுரைக்கலாமே. (3)

(இ-ள்.) காதுகளின் அடிபாகத்தில் கோவைக்காயை ஒத்த வீக்கம் ஏற்பட்டு, அது உடைந்தால் கர்ண விப்புருதியாகும்.

அதைச்சுற்றி கனத்து, வீக்கமும், வலியும் உண்டானால் அது கர்ண சூலையென்ற ரோகமாகும்.

## விக்கல் நிதானம்

நின்றுநின் றெடுக்கும் விக்கல் நிறைந்தொரு காலிருக்கா
லொன்றவே யெடுத்துடம்பு நடுங்கிந் தலை நோயுண்டா
மன்றினில் மாந்தர் தம்மை வகுத்திய யமளவென்னக்
குன்றியல் முலையினளே! குருமுனி யுரைத்தவாறே. (1)

(இ-ள்.) விக்கல் திரும்பத் திரும்ப உண்டாகும். ஒன்றாகவும், இரண்டாகவும் சேர்ந்து வரும். சிற்சில சமயங்களில் உடம்பும் நடுங்கும். தலைவலி அதிகரிக்கும். இவை யமள விக்கலின் குறிகளாகும் என்று அகஸ்தியர் உரைக்கின்றார்.

## சூத்திர விக்கல் நிதானம்

வேகமாய் விக்கல் தோன்றில் மேலேப்பம் புளித்துக்காணும்
மோகையாம் வாயில் நீரு முப்புரைத் திருக்குங் கண்டாய்
பாகமாஞ் சூத்திரத்தின் படர்குண மிதுவேயாகுங்
கேகயத் தியல்பு வென்ற வஞ்சுகச் சொல்நல்மாதே. (2)

(இ-ள்.) வேகமாக விக்கலுண்டாகும். புளித்தேப்ப முண்டாகும். வாயில் நீரூறும். வாயில் உமிழ் நீர் உப்புக்கரிக்கும். இவை சூத்திர விக்கல் குறிகளாகும்.

## நேத்திர ரோக நிதானம்

மாதுமை பாகன் சொன்ன வடமொழி நூலையாய்ந்து
போதில்நான் முகத்தோனாயுள் வேதமாய்ப் புகன்றபின்னர்
மூதுரை யுணர்ந்து கும்ப முனியருந் தமிழாற் செய்தான்
(நாதனார்) விழியிலுள்ள தோஷத்தைத் தெரிந்து தானே. (1)

(இ-ள்.) பரமசிவன் உபதேசம் செய்த வடமொழிக் கிரந்தங்களை பார்த்தப் பிரமன் ஆயுர்வேதமாகச் செய்த பின்னர் அவைகளை அகஸ்தியர் தமிழில் அருளினார். அதிலிருந்து விழி நோய்களை விளக்குவோம்.

## கண்ணோய் வரக்காரணங்கள்

கண்ணிடை தோஷஞ் சேருங் காரண மேதோவென்னில்
நண்ணிய புனல்கடன்னை நசைமிகப் பருகையாலும்
திண்ணிய முடியிலங்கு தேய்த்தெண்ணெய் போகாதாலும்
பெண்ணன் மால் மிகுதியாலும் பெருத்திடும் விழிக்குள்
நோயே. (2)

கடுவெயில் தன்னினாலுங் கனன்றடி சுடுகையாலு
முடுகவே யெண்ணெய் தேய்த்து முறைகெட
விடுகையாலுந்
தடியடி படுகையாலுந் தலைவுறு சுமைகளாலும்
படியெழு கூர்மையாலும் பரிந்திடும் விழிக்குள் நோயே. (3)

(இ-ள்.) கண்களில் வியாதிவரக் காரணங்களாவன:- கண்ட தண்ணீரைப்பருகுவதாலும், தலையில் எண்ணெய் போகாமல் ஸ்நானம் செய்வதனாலும், ஸ்திரீகளிடத்தில் அதிகமாக இச்சைப்படுவதனாலும், கால்களில் சூடு உண்டாகும் வண்ணம் நடப்பதனாலும், எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்வதை விட்டு விடுவதனாலும், தடியடி படுவதனாலும், தலையில் சுமைகளைச் சுமப்பதனாலும், அதிகமாகக் கூர்ந்து பார்ப்பதானாலும் விழியில் நோய்கள் ஏற்படும்.

## இதுவுமது

செப்பிய வாதபித்த சிலேற்பன மமுத மீது
வெப்புறு கோபத்தாலே மிகுதியாய்க் குறைந்ததாலு
மைப்புறு குழலின் மாதே! தந்தை தாய் மருவும்போது
ஒப்புறு கலைகடிந்து விழிநில்லா தொதுங்கலாலும் (4)

கெற்பத்தில் வளரும்போது கிருமிக ளவருத்தினாலுஞ்
சொற்பெரு மன்னைக்கேழாந் திங்களிற் றுலங்குஞ்செங்க
ணற்புத விழிக்காகாத பதார்த்தமே புசிக்கலாலுங்
கற்பனையாகக் கண்ணில் வியாதிவந் தணுகுங்காணே. (5)

*(இ-ள்.)* வாத, பித்தச், சிலேத்ம தோஷங்கள் கோபத்தினால் அதிகமானாலும் அல்லது குறைவதானாலும், தாய், தந்தையர் சம்போகிக்கையில் ஏற்படும் கோளாறுகளாலும் விழிநோய்கள் உண்டாகின்றன.

கெற்பத்தில் சிசு வளரும்போது தாயாரின் குடலில் கிருமிகளதிகமாகச் சேர்வதனாலும், 7 மாதக் கர்ப்பிணி கண்களுக்கு ஹிதமில்லாத பதார்த்தங்களை விரும்பி உண்பதனாலும் பிறக்கும் குழந்தைக்குக் கண்ணில் ரோகங்கள் உண்டாகின்றன.

## அவையடக்கம்

கண்ணிமை தோன்றுந்தோஷம் பெயர்குணங் கருதிப்பின்னர்
நண்ணுறு சாத்தியத்தோ டசாத்தியம் நவில்மருந்து
பண்ணுறு கருவியாலே தீர்வது பகருஞ்சூடுந்
திண்ணமா யுரைக்கமானே... ... ...டிது தெளிந்திடாயே. (6)

*(இ-ள்.)* கண்களிலுள்ள இமையின் ரோகங்கள் முதலாரம்பித்து பெயர், குறிகள் முதலானவைகளைத் தெரிவித்துச் சாத்யம் அசாத்யம் முதலான குறிகளையும் சொல்லி, கருவியினால் (சஸ்திரத்தினால்) தீரும் ரோகங்கள், உஷ்ணரோகங்கள் முதலானவைகளையும் விளக்குகின்றேன்.

## கண்களில் சுத்த லட்சணம்

இந்துவையொத்த வண்ண மியல்பிது நயனங்கண்டாய்
முந்திய வொளியினுள்ளே யுன்முகம் விளங்கத்தோன்றில்
அந்தமி லொளியாய்நிற்கு மதனில்நோ யில்லையென்று
செந்திரு வுமையாள்கேட்கச் சிவனுமுன் னருளிச்செய்தான்.

*(இ-ள்.)* கண்கள் சந்திரனைப்போல் வெண்மையாக இருக்கவேண்டும். கருவிழியில் பார்ப்பவர்களின் முகம் பிரகாசமாக த் தோன்றவேண்டும். அப்போது கண்களில் நோய்களில்லை என்று தெரிந்துகொள்ளவும்.

## நோய்களின் விபரம்

கருவிழி தன்னில் நோய்கள் கலந்திடும் நாற்பத்தைந்து
மருவிய வெள்ளைதன்னில் வந்துறு மிருபதென்க
பெருகவே இமையிற் றோஷம் பெயர்பதி னாறதாகும்
பருவமாங் கடையினிற்கும் பதினைந்து தோஷந்தானே. (8)

(இ-ள்.) கருவிழியிலுள்ள நோய்கள் 45 ஆகும். வெள்ளை விழியில் உண்டாகும் நோய்கள் 20 ஆகும். இமையில் ஏற்படும் வியாதிகள் 16 ஆகும். கண் கோளத்திலுண்டாகும் நோய்கள் 15 ஆகும். ஆக நோய்கள் 96 என்று அறிந்துகொள்ளவும்.

### கருவிழியின் தோஷங்கள் 45ன் பெயர்

| | | | |
|---|---|---|---|
| காசம் | 8 | வரி | 3 |
| படலம் | 7 | குந்தம் | 3 |
| குமுதம் | 3 | திமிரம் | 7 |
| விழியுந்தல் | 3 | சுக்கிரன் | 5 |
| நெரிசல் | 3 | பூ | 3 |

### காசம் எட்டின் பெயர்

| | |
|---|---|
| வாதகாசம் | நீலகாசம் |
| பித்தகாசம் | மந்தாரகாசம் |
| சிலேத்மகாசம் | விரணகாசம் |
| பால காசம் | கர்ப்பகாசம் |

### காசம் எட்டில் சாத்யாசாத்யம்

| *சாத்யம்* | *அசாத்யம்* |
|---|---|
| பித்தகாசம் | கெர்ப்பகாசம் |
| நீலகாசம் | விரணகாசம் |
| மந்தாரகாசம் | வாதகாசம் |
| | சிலேத்மகாசம் |
| | வாலகாசம் |

சாத்யம் 3ம் கருவியினாலும் மருந்தினாலுந் தீருமாகையால் இதன்குணம்.

## காசரோக வகைகளும் அவைகளின் குறிகளும்

மனிதனில் வண்டுபோல வன்னங்கள் பலவுமுண்டாய்
தணிவிலா வாதகாசந் தரியாம லோடிநிற்கும்
பிணியெனும் பித்தகாசம் பிறங்கிய பச்சைபோல
மணிதனி லதிதி தியாக வந்துறுஞ் சிலேத்மகாசம். (9)

கூறிய வாலகாசம் கொளும்புகை யார்த்தல் போலா
மீறிடும் நீலகாசங் கருவிள மதின்பூ வன்னஞ்
சீறுமந் தாரகாசம் செம்பச்சை மேகம் போலாம்
வேறுள விரணகாச வெண்டமும் பாகுங் காணே. (10)

சொன்னதோர் கெர்ப்பகாசந் தோன்றிடுங் கடுமைபோல
மின்னனாய் பித்தகாசம் விளம்புமந் தாரகாசம்
பின்னுமோர் நீலகாசம் பேசிய ரோக மூன்றும்
அன்னது சாத்தி யங்கள் மற்றஞ்சு மசாத்தியமாமே. (11)

*(இ-ள்.)* வாதசக் குறிகள்:- கண்களில் வண்டுகள் பறப்பதைப் போன்று பல நிறங்கள் தென்படும். கண்களில் காணும் பாப்பாவும் அவ்வண்ணமாகவே இருக்கும்.

**பித்த காசம்**: பாப்பா பச்சை நிறமாக இருக்கும்.

**கபகாசம்**: கருவிழியிலுள்ள பாவை வெண்ணிறமாகும்.

**வால காசம்**: பாப்பா புகையடைந்தாப்போல காணப்படும்.

**நீலகாசம்**: மாதுளம்பூ வர்ணமாகக் கருவிழி தோன்றும்.

**மந்தார காசத்தில்**: பாப்பா செம்பச்சை நிறமாகவோ அல்லது மேகம் போலவோ காணப்படும்.

**விரணகாசம்**: வெண்மையாகவும், உயர்ந்தும் காணும்.

**கெர்ப்ப காசம்**: பாப்பா கருநிறமாகும்.

பித்தகாசம், நீலகாசம், மந்தாரகாசம் இம்மூன்று ரோக வகைகள் சாத்யமாகும். மற்றவை அசாத்யங்களாம்.

### படல ரோகத்தின் பெயர்கள்

சதைப்படலம்
மாசறுப்படலம்
நீரெழுச்சிப்படலம்
கருநாகப்படலம்
அதிமாங்கிஷப் படலம்
பசுவிழிப்படலம்
வரிப்படலம்

### படலரோகத்தின் குறிகுணங்கள்

பேசிய படல மேழின் பெய்வளை மானே கேளாய்
கூசிடும் விழி வெளுத்துக் கொள்சதைப் படலமற்ற
மாசறு படல நீரால் மயக்கிடும் படலத்தோடும்
வீசியே வரி படர்ந்த படலமோ நான்கு மின்னே
நாசமேயில்லை தீரும் நாட்டிடிற் சாத்ய மென்றே. (12)

(இ-ள்.) சதைப்படலம், மாசறுபடலம், வரிப்படலம், நீர்ப்படலம் இந் நான்குவிதப்படலங்களும் சாத்யமாகும்.

கார் குழல் மானே கேளாய் கருநாகப் படலமொடு
கூர்விழி மந்தமாகும் அதிமாங்கிஷப் படலங்கூறு
மேர்பசு விழிபடர்த்தி யென்றிவை மூன்றுந்தானே
நேரிய சாத்தியத்தின் குணமென நிகழ்த்தினாரே. (13)

(இ-ள்.) கருநாகப்படலம், அதிமாங்கிஷப்படலம் பசுவிழி படர்த்தி இம்மூன்றும் அசாத்ய ரோகங்களாகும்.

### சதைப்படலத்தின் குறிகள்

தெளிவுறு கருப்பினுள்ளே சிவந்து நின் றுறுத்தி நோவாய்
வெளியினி லடைத்துத் துன்றிப் படலைவீழ்ந் திடுமேயாகில்
அளிவுறு கோதாய் கேளா! யது சதைப் படலமென்று
மொழிவதா யுர்வேதத்தின் முறைமையை யறிந்து கொள்ளே. (14)

(இ-ள்.) கண்கள் சிவந்து உறுத்தலேற்படும். வெள்ளை விழியில் படல்போல் சதைவளர்த்தியுண்டாகும். இவை சதைப்படலத்தின் லக்ஷணங்களாகும்.

### இரத்தப்படலத்தின் குணம்

கரித்திடுங் குமுறுங் காந்தும் கனத்திடும் நிமையில் வீங்கும்
எரித்திடுங் கண்ணி லெங்கு மிரத்தமே யெழுந்து காட்டும்
நெரித்திடப் புருவம் நெற்றி பிடருச்சி நீங்கக் குத்தம்
இரத்தமாம் படலமென்று இயம்பினா ரியம்பினாரே. (15)

(இ-ள்.) கண்களில் கரிப்பு உண்டாகும். சிறு வீக்கமுண்டாகும். எரிச்சலுண்டாகும். இமை வீங்கும். கண்களில் சிவப்பு நிறமுண்டாகும். புருவநெற்றி, பிடரி, உச்சி முதலான இடங்களில் குத்துவலி முதலானவைகளும் ஏற்படும். இவை இரத்த படலத்தின் குறிகளாகும்.

### நீர்ப்படலத்தின் குறிகுணங்கள்

சாலவே சிரசிற் குத்தும் தாழுநீர் விழுங்கனக்கும்
மூலமாங் கறுப்பின் மீது முகில் போலு மயக்கமுண்டா
யாலவேல் விழியினாளே! யருவிநீர் மிகுந்து வீழு
மூலமாய் முனிவன் கூறு முண்மைநீர்ப் படலமென்றே. (16)

(இ-ள்.) தலையில் குத்துவலியுண்டாகும். கண்ணீர் மல்கும். இமையிலும் கண்களிலும் ஒருவித பார உணர்ச்சியுண்டாகும். கறுவிழி பாசி படர்ந்தாப்போலாகும். கண்ணீர் அதிகமாகப் பொசியும். இவைகள் நீர்ப்படலக் குறிகளாகும்.

### வரி எழுச்சிப் படலத்தின் குறிகள்

கருவிழி யதனின் மீது கவர் போல வலைந்து காட்டி
அருவியே பரந்தெரித்து சுழன்று நொந் துறுத்துங் கண்டாய்
முருகவிழ் குழலினாளே! முன்விழிப் புகைச்சலுண்டாய்
வருவதுமேதோ வென்னில் வரியெழுப் படலமாமே. (17)

(இ-ள்.) கருவிழியில் வலைபோல் மாசுபடியும். அதில் எரிச்சலுண்டாகும். அழன்றுபோம். உறுத்தலும் ஏற்படும். பார்வை மந்தமாகும். இவை வரியெழுப்படல லக்ஷணங்களாகும்.

### கருநாகப் படல லக்ஷணங்கள்

இந்திர தனுவே போல வியல்நிறம் பலவு முண்டாம்
அந்த மாஞ் சூட்சந்தானும் வருந்திடக் குத்தி நோவாம்
சிந்துநீர் மிகுந்து காட்டித் தேன்விழி யுந்துங் கண்டாய்
கந்தவார் குழலினாளே! கருநாகப் படலந்தானே. (18)

(இ-ள்.) வானவில்லில் காணப்படும் பற்பல நிறங்களும் கண்களில் காணும். கண்களில் குத்து வலியுண்டாகும். கண்ணீர் மல்கும். சதை வளர்ச்சி யேற்பட்டு விழிபிதுங்கும். இவை கருநாகப்படலத்தின் லக்ஷணங்களாகும்.

### அதிமாங்கிஷப் படலத்தின் குணம்

ஊச்சியின் சதையே போலக் கருவிழி யதனிலுறுங்
கூச்சமு மிடியு முண்டாங் கொதித்தநீர் மிகுந்து வீழுந்
தேச்சிடும் விழிநல்லாளே! சிரம்பிட ரிசைய வாங்கும்
வாச்சதிக் குணங்கள் கண்டா யதிமாங்கிஷப் படலமாமே.

(இ-ள்.) நத்தையின் சதையைப்போல் கருவிழியில் சதை வளர்ச்சியுண்டாகும். கண்களில் கூச்சம், குத்துவலி இவைகளேற்படும். கண்ணீர் சூடாக வெளியாகும். தலை, பிடரி முதலான இடங்களில் இசிவைப்போல் தாங்கமுடியாத வலியுண்டாகும். இவை அதிமாங்கிஷப் படலமாகும்.

குறிப்பு:- ஊமச்சி என்பது ஊச்சி என்று மருவியது.

### பசுவிழிப் படலத்தின் குறிகள்

வசியுறு கருப்பினுள்ளே மரகதம் போன்று காட்டித்
தசைபரந் திடியு நீருந் தழலது போலக் காய்ந்து
விசையவே யொளியுமந்த மிக்குணங் கண்டவாறே
பசையறு மசாத்தியத்திற் பசுவிழிப் படலமாமே. (20)

(இ-ள்.) கருவிழியின் மத்தியில் பச்சை நிறமாகத் தசை விலாசமாகக் காணப்படும். கண்களில் குத்துவலியும், எரிச்சலும் காணும். பார்வை குறைவடையும். இவை பசு விழிப்படலத்தின் குறிகளாகும்.

## குமுத★ மூன்றுக்கும் பெயர்

*கூறிய குமுதயத்தின் மூன்றின் பேர் குணத்தைக்கேளாய்*
*சீறுசெங் குமுதத்தோடு தெளிதருங் குமுத மற்று*
*மீறுவெண் குமுத மூன்றில் விளங்குசெங் குமுதமென்று*
*மாறிடு மற்றைரண்டு மசாத்தியங் காணுந்தானே. (21)*

(இ-ள்.) செங்குமுதம், கருங்குமுதம், வெண்குமுதம் என்று 3 வகைகளாகும். இவற்றுள் செங்குமுதம் மாத்திரம் சாத்யமாகும் மற்றவை அசாத்யமாகும்.

## செங்குமுதத்தின் பெயர்

*சிவந்திடுங் குமுதயத்தின் செய்குறி குணங்கள் கேளாய்*
*யுவந்த நற் கருப்பன் மீதே யுற்பவ மலர் போலுண்டாந்*
*தவழ்ந்திடுஞ் சதையி னீருந் தழலெழ வெரிக்குங் குத்துங்*
*குவிந்திடு முலைநன் மாதே! குறித்து நீயறிந்து*
*கொள்ளே. (22)*

(இ-ள்.) கருவிழியின் மத்தியில் சதை பிதுங்கும். கண்களிலிருந்து நீர் பொசியும். எரிச்சல் அதிகமாகும். கண்கள் சிவக்கும். குத்துவலியும் உண்டாகும். இவை செங்குமுதத்தின் குறிகளாகும்.

## கருங்குமுதயத்தின் குறிகள்

*கொள்கருங் குமுதயத்தின் குணமது கூறக் கேளாய்*
*தென்கரு விழியின் மீதே செறிந்திடுங் குவளைபோல*
*அள்ளிலை வேற்கண்மானே யாம்பொரு விரணமுண்டாய்*
*நள்ளிருள் போல மூடு மசாத்திய மென்று நாடே. (23)*

(இ-ள்.) கருவிழியில் குவளையைப் போலப் பெரும் விரணம் உண்டாகும். அதனால் பார்வை குறையும். இது கருங்குமுதயத்தின் குறிகளாகும். அசாத்யம்.

---

★ அகஸ்தியர் நயனவிதி 500ல் இந்நோய்க்குக் குந்தம் என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

## வெண் குமுதயத்தின் குறிகள்

மீறு வெண் குமுதயத்தின் குணத்தை நீ விளம்பக்கேளாய்
சீறிடும் பஞ்சுபோலச்சிதறியே புள்ளியாகும்
வீறெனக் கொதித்துக் குத்தி வேதனை மிகவுமுண்டாய்
மாறிடா திடிக்குஞ் சூட்சம் மழுங்கிடு மசாத்தியமாமே. (24)

(இ-ள்.) கருவிழியில் பஞ்சைப்போல் வெண்மையான புள்ளிகள் பல காணும். அதனால் தாங்கமுடியாத குத்துவலியுண்டாகும். இவை வெண்குமுதாயத்தின் குறிகள். இதுவும் அசாத்யம்.

## விழியுந்தலின் குறிகள் {பூ}

விழியெழு குமுதத்தாலும் வேறுள வியாதியாலுந்
தெளிகரு விழியினுள்ளே செறிந்திடு நீரினாலு
மொளியது மயக்கமுண்டா யுந்திடு மூன்றுரோக
மழியுறு குழலாய் கேளா யசாத்திய மூன்றுமாமே. (25)

(இ-ள்.) குமுத ரோகங்களாலும் மற்றும் இதர வியாதிகளினாலும் கருவிழியினுள் தங்கும் நீரினாலும் உந்தல் ரோகம் (பூ) ஏற்பட்டுப் பார்வை குறைந்து போய் 3 விதமான ரோகங்களையுண்டாக்கும். இவை அசாத்யம்.

## நெரிசல் நிதானம்

கண்ணிலுஷ்ணத்தினாலுங் கடுகிய மருந்தினாலு
முண்ணிறை சிவப்பினாலு மொதுங்கிய நீரினாலுந்
திண்ணமாய் நெரிசல் சோறை யுஷ்ண மிதன் பேர்
மூன்றே. (26)

(இ-ள்.) தேகத்தின் உஷ்ணத்தினாலும், உஷ்ணமான மருந்துகளைச் சாப்பிடுவதனாலும் இந்நோய் சம்பவிக்கிறது. இந்நோய் நீர் நெரிசல், உஷ்ணநெரிசல், இரத்த நெரிசல் என்று மூவகைப்படும்.

### உஷ்ண நெரிசல் குணம்

*உஷ்ண நெரிசல் தானே யுருண்டெழு மெழுந்து காட்டும்*
*மட்டுநீர் நெரிசல் மையங் குழிந்தெழ-ன் வடிவு போலாம்*
*கட்டமா மிரத்தத்தாலே கனத்திடும் நெரிசல் தானே*
*மட்டவிழ் குழலாய் கேளாய்! மஞ்சாடி வடிவதாமே. (27)*

*(இ-ள்.)* கண்களில் உருண்டையாக மாம்ஸப் புடைப்பு ஏற்படும். இது உஷ்ண நெரிசலாகும். கண்களிலிருந்து தண்ணீர் பொசியும். வீக்கத்தின் நடுபாகம் குழிவாகும். இது நீர்நெரிசலின் குறிகள். இரத்த நிறமாக கண்கள் ஆகும். சிற்சில சமயம் பார்வைக்கு குண்டுமணியைப் போன்றிருக்கும். இது இரத்த நெரிசலின் குறிகுணங்களாகும்.

### நெரிசலின் சாத்யாசாத்யங்கள்

*குருதியின் நெரிசல் தானே யசாத்திக மென்று கூறுந்*
*தெரியிரு நெரிசலுக்குச் செய்மருந்திதனைக் கேளாய்*
*உருகிய நறுநெய் தன்னி லூறுநீர் முருங்கைப் பூவு*
*மருவுநற் சீரங்காரம் மருந்துடன் றாரைவாரே. (28)*

*(இ-ள்.)* இரத்த நெரிசல் அசாத்யமாகும். மற்ற இருவித நெரிசலுக்கும் மருந்துகளாவன:- சுத்தமான நெய்யுடன் முருங்கைப்பூச்சாறு, நற்சீரகம், சீனாக்காரம் இவைகளைக் கூட்டி கண்களுள் தாரை வார்க்கவும். அதாவது பிழியவும்.

### வரி மூன்றின் குணம்

*கூர்கரு விழியின் மாதே! கொண்டெழு வரியின் செய்கை*
*நீரினாலிமையினுள்ளே நிகழ்த்திடு வடுவினாலும்*
*வார்முலை மானே! சோரி வைகியே செறிந்ததாலும்*
*நேர்வரி மூன்றுண்டாகும் இக்குணம் நிகழ்த்தக்கேளே. (29)*

*(இ-ள்.)* வ்ரி என்ற நோய் மூவகையாகும். அவை 1. நீர்வரி, 2. வடுவரி, 3. இரத்தவரி எனப்படும்.

### நீர்வரி இரத்தவரி இவைகளின் குறிகள்

*நீர்வரிக் குணங்கள் தாலே வெண்மையாய் நெடிகிக்காணுஞ்*
*சேரிவை வடிவினாலே செறிவரிப் பிறையே போலாங்*
*கார்குழல் மின்னே சோரி வரியிரு கடையுந்தாவும்*
*பாரிதின் குணங்கவெல்லாம் பலப்பட வறிந்து கொள்ளே.*

(இ-ள்.) கண்களில் வெண்மையாக நரம்பு புடைக்கும். இது பிறையைப்போலவும் காணும்.

**இரத்தவரி:** இரு கடைக்கண்களிலும் சிவப்பாக நரம்பு பரவ ஆரம்பிக்கும்.

### வரிநோயில் சாத்யா சாத்யம்

*சொல்லிமை வடிவினாலே தோன்றிடும் வரியும் நீரால்*
*புல்லிடு வரியிரண்டு புகலுங்கால் சாத்திய மென்க*
*வொல்லையில் லாததலே யுருவரி தீருமென்று*
*பலபல நூலுஞ் சொல்லும் பான்மையை யறிந்துகொள்ளே.*

(இ-ள்.) வடுவரியும், நீர் வரியும் அசாத்யம் என்றும், இரத்தவரி சாத்யம் என்றும் தெரிந்துகொள்ளவும்.

## சுக்கிர தோஷம் ஐந்தின் குணம்

### விரணசுக்கிரன், கருத்த சுக்கிர லக்ஷணங்கள்

*அள்ளிலை நடுவேற் கண்ணாய்! சுக்கிரனைந்தின் பேர்கேள்*
*ஒள்ளிய மணியின் மீதே யுறுவது விரணசுக்கிரன்*
*தெள்விழிச் சுற்றிற் றோன்றி திளத்திடு முளுந்துபோலும்*
*உள்ளது கண்டால் நன்று கருத்தசுக் கிரனென் றோதே. (32)*

(இ-ள்.) கருவிழியில் உண்டாவது விரணசுக்கிரனாகும். உளுந்துப் பிரமாணமுள்ள கொப்புளங்கள் கருவிழியைச் சுற்றிலும் உண்டானால் அது கருத்த சுக்கிரன் என்ற கண் சுக்கிரனாகும்.

### விழி முழுங்கின சுக்கிரன்

ஓதிய கருவிழிக்கீழ் வரியிடை யொள்ளிதாக
மோதிய வெள்ளுசீழ்போல் முழியது பொதிந்து மூடும்
வேதனை மிகுதியாக வெரித்திடு மிடியு மாறா
தீதினை விழிமுழுங்கி சுக்கிர னென்னப் பேசே. *(33)*

(இ-ள்.) கருவிழிக்கும் கீழ்பாகம் வெண்மையாகிக் கண்களை மூடித்திறக்க முடியாது. அதிகமான எரிச்சலுண்டாகும். மிகவும் கெடுதலையுண்டாக்கும். இதற்கு விழிமுழுங்கி சுக்ரன் எனப்பெயர்.

### வெள்ளைச் சுக்கிர லக்ஷணங்கள்

நடுவிழிப் பக்கத்தின்மேல் நனிபனிந்துளிபோலுந்திச்
சுடுமணல் போலக்காந்தித் தோன்றிடு மெழுச்சி போலக்
கடுகவே விரணமுற்றுக் கருவிழி மறைத்து தாகில்
விடர்செய்யும் வியாதிதானே வெளுத்தகக் கிரனாமென்றே.

(இ-ள்.) கருவிழியின் மத்தியில் பனித்துளிபோல் விரணமேற்பட்டு, சுடுகின்ற மணல் போலாகித் திரண்டு வளர்ந்து கருவிழியை முற்றும் மறைத்துவிட்டால் இது வெளுத்த சுக்கிரன் என்ற ரோகமாகும்.

### அனற் சுக்கிர லக்ஷணங்கள்

பானலங் கண்ணினுள்ளே பகர்கரு விழியை விட்டுத்
தானம்வெண் விழியின் மேல தாகவே தழல்போற்
றோன்றும்
ஊனமாயிடியுண்டாகு மொள்ளழல் போலக் காந்துந்
தேன் விழிக்குழலாய்! கேளாய்! அனற்சுக்கிரனென்றுசெப்பு.

(இ-ள்.) கருவிழியல்லாமல் வெள்விழிக்கு மேல் எரிச்சல் தோன்றும். குத்துவலி காணும். எரிகின்ற தணல்போல் காந்தும். இது அனல் சுக்கிர லக்ஷணங்களாகும்.

### சுக்கிர ரோகத்தின் சாத்யா சாத்யங்கள்

செப்பிய ரோகமஞ்சின் செய்குறி யறிந்துகொண்டு
தப்புறு சாத்தியங்க ளசாத்திய முரைப்பக் கேளா
ஓயாப்புறு மணியின் மீதே யுறவெழு விரண சுக்கிரன்
வெப்புறு கருத்தச் சுக்கிரன் விழியினை விழுங்கியாமே. (36)

ஆகிய மூன்றுந்தானே யசாத்திய மென்னலாகுந்
தோகையே வெள்ளைச் சுக்கிரன்றுளங்கண்ட
சுக்கிரனிரண்டும்
வேகவே தீருமென்று தானமாய் விளம்பலாகுந்
தோகையே யிதற்குச் செய்யு மருந்தினைச் சொல்லக்கேளே.

(இ-ள்.) விரணசுக்கிரன், கருத்தசுக்கிரன், விழிமுழுங்கி இம்மூன்றும் அசாத்யம். வெள்ளைச்சுக்கிரன், உளங்கண்ட (அனல்) சுக்கிரன் இவ்விரண்டும் தீரக்கூடியவை.

**திமிரரோக நிதானம்**

வெள்ளெழுத்து
மாலைக்கண்
அமுதவறட்சி
நீர்த்திமிரம்
வாததிமிரம்
சிலேத்மதிமிரம்
மேகத்திமிரம் என்று ஏழு வகைப்படும்.

## திமிரத்தின் வாக்கியம்

மின்னன்னாய்! திமிரம் ஏழும் விரித்து நான்
விளம்பக்கேளாய்
அன்னதோர் விழிமயக்கம் வெள்ளெழுத் ததுமாலைக்கண்
பின்னமோர் சிரத்தில் மூளை வறட்சி செய் பித்தச்சிலேத்மம்
அன்னநீர் வாயுவேழில் சாத்திய மூன்றதாமே. (38)

(இ-ள்.) விழிமயக்கம், வெள்ளெழுத்து, மாலைக்கண், சிரோவறட்சி, பித்தச்சிலேத்ம வறட்சி, அன்னவறட்சி, வாயுவறட்சி முதலியன.

## வெள்ளெழுத்தின் விபரம்

தெளிவுவொளியாய் நிற்குந் தீங்கில்லை முப்பத்தேழில்
ஒளிவுறப் புகைந்து சற்றே யொதுங்கிடும் நாற்பத்தைந்தில்
வெளிவுற விருளதாகும் மேவிய வன்பத்தொன்றில்
வளியுற விருளுங் கண்க ளாண்டுநூ றாகுமென்றே. *(39)*

(இ-ள்.) 37 வயதில் ஏற்படும் பார்வைக்குறைவு 45ல் குறைவடையும். 51ல் கண்கள் மறுபடியும் மங்கும். 100 வயதிலோவெனில் கண்கள் முழுதும் இருண்டுபோம்.

## வெள்ளெழுத்தின் குணம்

கூர்விழி மணியினுள்ளே குழம்புமை முகிலேபோலக்
கார்கிளர்ந் தொதுங்கி நிற்குங் காண்பது மஞ்சள்போலாம்
வார்முலை மானே! கொள்கை வைத்துநோ விதற்குக்காணும்
ஏற்குணங் கண்டவாறே வெள்ளெழுத் தென்னலாமே. *(40)*

(இ-ள்.) விழியின் நடுவிலுள்ள பாப்பா கருநிறமான குழம்பைப் போலவும், மையைப்போலவும் அல்லது மேகத்தைப்போன்ற நிறமாகவும் காணும். பார்வையும் மஞ்சணிக்கும். கண்களில் வலியும் ஏற்படும். இதுவும் வெள்ளெழுத்தாகும்.

## மந்தாரதிமிரத்தின் குணம்

சேர்கருமணியின் மீதே செறிந்திடு மஞ்சுபோலக்
கூரிருள் நேரமானாற் குழம்பியே வலிக்குங் கண்டாய்
சீரொரு சாமஞ் சென்றாற் றெளிவுறு மேதோவென்றும்
வார் முலைமானே! கோளாய்! மந்தாரத் திமிரமாமே. *(41)*

(இ-ள்.) கருவிழியில் பனிபடர்ந்தாற்போலாகும். இரவு நேரங்களில் பார்வை குறைந்து வலியும் உண்டாகும். ஒரு சாமங்கழித்து மறுபடியும் பார்வை தெளிவடையும். இவை மந்தாரத் திமிரத்தின் லக்ஷணங்களாகும்.

### அமுத வறட்சித் திமிரம்

மூளையிற் பித்தம் நின்று முதிரவே வறட்சியானால்
நாளிலே யவியுமந்தம் நடுகரம் புரளக் குந்தும்
பீளையும் நீருமாறா திக்குணம் பெருகக் கண்டால்
வாளினை வென்ற கண்ணாய்! வறட்சியாந் திமிரமென்னே.

(இ-ள்.) பித்தம் மூளையிலதிகரித்து வறட்சியை உண்டாக்கும். நாளாக ஆக பார்வை குறைவடையும். கண்களுக்குச் செல்லும் நரம்பில குத்துவலியேற்படும், பீளைசாறும், நீரும் பொசியும். இவை வறட்சித்திமிர லக்ஷணங்களாகும்.

### நீர்வாதத் திமிரம்

கபமது வமுதமீது கதித்து நீர் மிகுதியாகி
நவிலுமூக் கடைத்து அண்ணாக் கதுதனிற் புண்ணுநாடுங்
குவையிரு புறமுங் குத்துங் கூர்விழிப் புகைச்சலுண்டா
மவையினை நீரின் வாதத் திமிரமென் றறிந்து பாரே. (43)

(இ-ள்.) கண்களில் நீர்கோத்து மூக்கையும் அடைத்துக்கொள்ளும். அண்ணாக்கில் புண்களேற்படும். கண்களின் இரு புறங்களிலும் குத்துவலியுண்டாகும் விழிப்புகைச்சலும் உண்டாகும். இவை நீர்வாதத்திமிரத்தின் லக்ஷணங்களாகும்.

## பூ மூன்றுக்கும் பெயர்

பூவையே! பூ மூன்றென்று புகலும் பேரதனைக் கேளாய்
தாவுவை சூரியால் வெய்யத் தழலெழு வியாதியாலு
மேவிய நீரினாலும் விழியிடை மூன்று ரோகங்
கூவிய வாணியுந்தல் குழம்பிபு கைபோல் மூன்றே. (44)

(இ-ள்.) வைசூரியினாலும், உஷ்ணரோகங்களினாலுப் கண்களில் நீர் சேருவதனாலும் கண்களில் பூ விழுகிறது இவைகள் முறையே ஆணிப்பூ, உந்தல்பூ, புகைப்பூ என்பவைகளாகும்.

**பூவில் சாத்யாசாத்யம்**

மூன்றினிலாணி யுந்தல் சாத்திய மென்பார் முன்னோ
ரூன்று வெண் புகைபோலொன்று மொழியுமொன்
றுணர்ந்துகொள்நீ
கான்றெழு பூ மூன்றுக்குங் கருதிய குணத்தைக் கண்டு
சான்றிடு மருந்து தன்னைச் சாற்றக் கேள் தகவில் மானே. (45)

(இ-ள்.) அம்மூன்று வகைகளில் ஆணிப்பூவும், உந்தல்பூவும் அசாத்யமாகும். புகைப்பூ ஒன்றுதான் சாத்யமானது.

## குந்தரோக நிதானம்

குறித்திடுங் குந்த மூன்றின் குணமது கூறக்கேளா
யுறித்திய தசையுமென்று வுதிரமொன் றுடநீரொன்று
மருத்திடு ரோகமூன்றின் சாத்தியம் மானே! கேளாய்!
செரித்திடும் மணியை விட்டுத் திரண்டெழில் சதைநீர்தீரும்.

(இ-ள்.) தசைக்குந்தம், ரத்தக்குந்தம், நீர்க்குந்தம் என்று மூவகைப்படும். இவற்றுள் ரத்தக்குந்தம் தவிர மற்ற தசைக்குந்தம், நீர்க்குந்தம் என்ற இருவகைகளும் தீரும்.

**சாத்யாசாத்யக் குறிகள்**

ஒள்ளழல் போலெழுந்த வுதிரத்தின் குந்தந்தன்னைத்
தள்ளிடுமசாத்தியமென்று சதை நீறாங் குந்தந்திரு
மள்ளிலை நடுவேற் கண்ணாயசாத்தியஞ் சாத்தியத்தை
மெள்ளவே யறிந்துகொண்டு விதிமுறை யறிந்து செய்யே.

(இ-ள்.) ரத்தகுந்தத்தை அசாத்யமென்று நீக்கவும். மற்றபடி சதை குந்தத்திற்கும் நீர்க்குந்தத்திற்கும் தக்கபடி மருந்துகளைக்கொண்டு நிவர்த்தி செய்யவும்.

*குந்தரோக நிதானம் முற்றும்.*

*சாத்யம் இருபத்திரண்டு, அசாத்யம் இருபத்துமூன்று ஆக கருவிழிதோஷம் நாற்பத்தைந்தும் முற்றும்.*

# வெள்விழி தோஷ நிதானம்

## வெள்விழி தோஷம் 20-ன் பெயர்

1. **எழுச்சி வகைகள்**: *வரியெழுச்சி, விரணயெழுச்சி, குவையெழுச்சி, நீரெழுச்சி, உந்தெழுச்சி ஆக 5.*

2. **படர்த்தி வகைகள்**: *சதைப்படர்த்தி, வரிப்படர்த்தி, இரத்தப்படர்த்தி ஆக 3.*

3. **நெரிசல் வகைகள்**: *துளிநெரிசல், உந்து நெரிசல், விரண நெரிசல் ஆக 3.*

4. **புற்று வகைகள்**: *சதைப்புற்று, இரத்தப்புற்று, அனல் புற்று ஆக 3.*

5. **குமிழ் வகைகள்**: *நீர்க்குமிழ், இரத்தக்குமிழ், மாங்கிஷக்குமிழ் ஆக 3.*

6. **வரிவகைகள்**: *வெள்வரி, நீலவரி, சுரோணித வரி ஆக3. மொத்தம் 20.*

## வெள்ளை விழி தோஷத்திற்கு வாக்கியம்

*சொல்லிய வெழுச்சி யைந்துந் துலங்கிய படர்த்தி மூன்றும்*
*புல்லிய நெரிசல் மூன்று புற்றொடு குமிழ மூன்றும்*
*நல்வரி மூன்று மாக நாலைந்து தோஷப் பேர்கள்*
*வல்லிகே ளெழுச்சி யைந்தின் குணத்தினை வகுத்துச்*
*சொல்வார். (48)*

(இ-ள்.) எழுச்சி ரோகத்தில் 5 வகைகளும், படர்த்தி நெரிசல், புற்று, குமிழ், வரி முதலான ரோகங்களில் **தனித்தனியே 3 வகைகளும் உள்ளன.**

### நாகமுனிவர் கூறிய எழுச்சிகளின் லக்ஷணங்கள்

தோன்றிய வரியெழுச்சி சுணங்குபோ லுருண்டு காட்டும்
கான்றெழு விரணயெழுச்சிக் கருங்குன்றி போன்றுகாட்டு
மூன்றிய குவையெழுச்சி யுழுந்தது போலவாகு
மான்றநீ ரெழுச்சி காணே யம்பினிற் றுளிபோ லாமே. *(49)*

ஆகமுந் தெழுச்சி தானே யழன்றெழும் பருத்திக்காய் போற்
றோகையே யெழுச்சி யைந்திற்றோன்றுமுந் தெழுச்சி
யோடும்
வேகமாம் விரணயெழுச்சி யிரண்டுமே மீளாதாகும்
நாகமா முனிவன் சொன்ன நயனத்தின் விதியின் வாறே. *(50)*

(இ-ள்.) வரி எழுச்சியில் வெள்விழியில் தேமலைப் போன்ற நிறத்துடன் உருண்டையான வளர்ச்சி உண்டாகும். விரண எழுச்சியில் கருங்குன்றி போன்ற மாம்ஸ மூளை உண்டாகும். உழுந்தைப் போன்ற வளர்ச்சி வெள்விழியி லேற்பட்டால் அது குவையெழுச்சியாகும். நீரெழுச்சியில் நீர் துளியைப் போன்ற கொப்பளம் வெள்விழியில் ஏற்படும். உந்தெழுச்சியிலோ பருத்திக்காய் (விதை) போன்ற சதை வளர்ச்சி வெள்விழியிலேற்படும். அதில் எரிச்சலும் உண்டாகும். ஷை 5 வகைகளில் உந்தெழுச்சியும், விரணயெழுச்சியும் தீராது.

### சாத்தியமாகும் எழுச்சிகள்

ஓங்கிய வரியெழுச்சி வோயும்நீ ரெழுச்சி மற்றும்
வீங்கிய குவையெழுச்சி மூன்றுமே மீளு மென்க
வாங்கவிக் குணங்களெல்லா மடைவிலே யறிந்துகொண்டு
பூங்கொடி மயிலே! செய்யும் சிகிச்சையைப் பொருந்தச்
செய்யே. *(51)*

(இ-ள்.) வரி எழுச்சி, நீரெழுச்சி குவையெழுச்சி ஆகிய இம்மூன்று வகைகளே குணமாகும். ஆகவே மேற்கூறிய குறிகுணங்களை மனதில் வைத்துக்கொண்டு தக்கபடி சிகிச்சை செய்யவும்.

### புற்று மூன்றின் பெயரும் சாத்யா சாத்யமும்

அன்னமே★ சதையின் புற்று அரும்புநீர்ப் புற்றினோடு
வன்னமாங் கிஷத்தின் புற்று வருத்திடு ரோகமூன்றின்
முன்னமே யுரைத்த மாங்கிஷப் புற்றும்நீர் முந்துப் புற்று
அன்னது சாத்தியங்க ளதிலொன்ற சாத்தியமாமே. (52)

(இ-ள்.) சதைப்புற்று, நீர்ப்புற்று, அனல்புற்று என்று மூவகைப்படும். அதனுள் நீர்ப்புற்றும், அனல் புற்றும் சாத்தியமாகும். சதைப்புற்று அசாத்யமாகும்.

### புற்றுகளின் குறிகுணங்கள்

சதைவளர்ந் தெழுந்தபுற்று தடித்திடு மிரத்தம் போலாம்
பதையும் நீர்ப் புற்றின் செய்கை பகரில்நீர்க் குமிழி போலாம்
விதனமா மனலின் புற்று விம்பம்போன் றெழுந்து காட்டு
மதையுணர்ந் தார்க்குச் செய்யும் மருந்தினை
யறிந்துகொள்ளே. (53)

(இ-ள்.) சதைப்புற்று ரோகத்தில் கண்களில் சிவப்புநிறமுள்ள மாம்ச தடிப்பு உண்டாகும். நீர்ப்புற்றில் நீர்க்குமிழி போன்ற கொப்பளம் ஏற்படும். அனல்புற்று ரோகத்தில் பிம்பம் போன்ற எழுச்சியும் உண்டாகும்.

குறிப்பு:- பொதுவாக எழுச்சி ரோகத்தில் மாம்ச வளர்ச்சி ஒரே சீராக இருக்கும். ஆனால் புற்று நோயிலோ மாம்ச வளர்ச்சி ஒன்றன் மேலொன்றாக இருக்கும். வளர்ச்சியின்மேல் பல கண்களும் காணும்.

### குமிழரோகங்களின் வகைகளும் சாத்யா சாத்யமும்

கொடியிடைமானே! கேளாய்! குமிழமூன் றேதோவென்னில்
வடியுநீர்க் குமிழிரத்த மாங்கிஷ மென்னு மூன்றா
மடவிலே யறிந்து கொள்நீ யசாத்தியம் மாங்கிஷமற்று
மிடரில்லை நீரிரத்த மேகுமென் றியம்பினாரே. (54)

---

★மாங்கிஷப்புற்று என்பதும் சதைப்புற்று என்பதும் ஒன்றாகவே கொள்ளவேண்டும். ஆகவே அனல் புற்று என்று அடுத்தசெய்யுளில் கூறப்பட்டிருப்பதே சரியாகத் தோன்றுகிறது.

(இ-ள்.) நீர்குமிழ், இரத்தக்குமிழ், மாங்கிஷக்குமிழ் என்று மூவகைப்படும்.

### குமிழரோகங்களின் குறிகுணங்கள்

*நாரியே! நீரினாலே நயந்தெழு கொப்புளந்தான்*
*கூறிய சங்கங்காயின் பழம்போலக் குவியும் ரத்தஞ்*
*சேருமக் கொப்புளந்தான் செங்குன்றி வடிவதாகும்*
*பார்சதைக் கெழுந்த தாகிற் பணைத்தெழுங் கருமையாமே.*

(இ-ள்.) நீர்க்குமிழ் ரோகத்தில் சங்கம்பழம் போலக் குவிந்து கொப்புளமுண்டாகும். இரத்த குமிழ் ரோகத்திலுண்டாகும் கொப்புளம் சிவப்புக்குன்றிமணியை ஒத்திருக்கும். சதைக்குமிழ் ரோகமானால் கருமையான மூங்கிற் குருத்துப் போன்ற மாம்ச வளர்ச்சியுண்டாகும்.

## வரிரோக பேதங்கள்

*அம்புய வதனமானே! வரியதன் குணத்தைக் கேளாய்*
*பம்புவெள் வரியாமொன்று பகர்நீல வரியாமொன்று*
*வெம்பிய இரத்தமொன்று விளம்பிய மூன்று ரோகம்*
*நம்பிநீ யரிவைநீல வரியொன்று மசாத்தியம் நாடே.* **(56)**

(இ-ள்.) வெள்வரி, நீலவரி, இரத்தவரி என்று மூவகைப்படும். இவற்றுள் நீலவரி ஒன்றுதான் அசாத்யம்.

### வரிரோக★ லக்ஷணங்கள்

*விளம்புவெள் வரியின் செய்கை மீன்சிலாம் பெழுதல் போலாந்*
*துளங்கிள மயிலே நீல வரியது துருள போலாந்*
*தளங்கிய இரத்தத்தாலே சார்வரி சிவப்பதாமென்*
*றுளங்கொள நீயிதற்குச் செய்மருந் தறிந்து செய்யே.* **(57)**

---

★ வரி என்பதற்கு கோடு என்று பொருள். அதாவது கண்களில் மேற்கூறிய நிறங்களில் கோடுகள் உண்டாதல் என்று கூறுவதே பொருந்தும்.

(இ-ள்.) வெள்வரியில் கண்களின் வெள்விழியில் மீன் சிலம்பைப் போல வெள்ளை நிறமாக சதை துருத்தும். நீலவரி ரோகத்தின் துருசின் நிறமாக சதை வளரும். இரத்தவரி ரோகத்திலோ சிவப்பாகச் சதை வளரும்.

குறிப்பு:- வரி எழுச்சியில் மாம்ச வளர்ச்சி இருக்கும். ஆனால் வெள்வரியில் மாம்ச வளர்ச்சி கோடுபோல் காணப்படும். நெரிசல் ரோகத்தைப்பற்றி முன்னமேயே கூறப்பட்டுள்ளது. உஷ்ணநெரிசல் என்றும் இரத்த நெரிசல் என்றும் 2 வகையாகப் பிரிக்கப்பட்டு மருந்தும் கூறப்பட்டுள்ளன. அது அநேகமாக அகஸ்தியர் நயனவிதி முறைப்படியிருக்கலாம் என்று தோன்றுகிறது. இம்மாதிரியே வரிரோகத்தையும் நீர்வரி, வடுவரி, இரத்தவரி என்று 3 வகையாக முன்னமேயே பாகுபாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே தற்போது மேற்கூறிய ரோகங்களைக் கூறும் செய்யுட்கள் நாகமுனிவரின் அபிப்ராயம் என்று தெரிந்துகொள்ளவேண்டும். படர்த்தி ரோகத்தைப்பற்றி யாதொன்றும் கூறப்படவில்லை.

## இமைத்தோஷங்களின் 16ன் பெயர்

***பில்லம்***

நீர்ப்பில்லம்
அமரபில்லம்
குடருருப்பில்லம் ஆக 3

***பற்பம்***

நீர்ப்பற்ப ரோகம்
இரத்தபற்ப ரோகம்
மாங்கிஷபற்பரோகம் ஆக 3

***தடிப்பு***

இமைத்தடிப்பு
இழிசற்கண்
முடமயிர் ஆக 3

***கழல்***

நீர்க்கழல்
இரத்தக்கழல்
சதைக்கழல் ஆக 3

## பொது ரோகங்கள்

இமைநீர்ப்பாய்ச்சல்
இமைப்புழுக்கடி
சுற்றுக்குலவு
இமை வறட்சி ஆக 4

### நீர்ப்பில்லத்தின் குணம்

*மெல்லிய யிமையு மூர்ந்து வீழும் நீர் மிகுதியாகிக்*
*கல்லெனக் கனத்து விம்மிக் கண்சுற்றுப் புருவமுச்சி*
*சில்லென விடித்து நோவாய் திமிர்ந்திடு மிக்குணங்கள்*
*வல்லெனு முலையாய்! சொன்னேன் வருத்தநீர்ப்*
*பில்லமாமே. (58)*

(இ-ள்.) இமை கனத்துக் கண்ணீர் மிகுதியாகப் பொழியும். கண்களின் வெளிப்புறங்கள், புருவம், உச்சி முதலான இடங்களில் தாங்கமுடியாத வலியுண்டாகும். இவை நீர்ப்பில்லரோக லக்ஷணங்களாம்.

### அமர பில்லத்தின் குணம்

*சொல்லிய இமையினுள்ளே சோரிபோற் சதையுந்துன்றிப்*
*புல்லிடு மொளி மயங்கிப் பொசிந்துநீர் வடிந்து காட்டி*
*யொல்லையி னிமை மடிந்துக் கீழிமை யுறுத்து மாகில்*
*வல்லியங் கோதை நல்லாய் (அமரத்தின்) பில்லமாமே. (59)*

(இ-ள்.) இமையின் உட்புறங்களில் இரத்த நிறமாகச் சதை முளைகள் தோன்றும். கண்களில் பார்வை குறையும். கண்ணீரும் வடியும். இமையின் நுனிபாகம் உள்புறமாக வளைவதனால் இமைமயிர் கண்களில் உறுத்தும். இவை அமர பில்ல ரோக லக்ஷணங்களாம்.

### குடருருப்பில்ல ரோக லக்ஷணங்கள்

*இமையடிப் புருவமுற்றி யிளகிய நீருமாறி*
*யமை பசு நரம்பு துன்றி யதுகனத் திடுமே யாகிற்*
*குமுதமா விழியினாளே! குடருருப் பில்லமென்று*
*மிவையவ ரறியச்சொன்னோ மிதுபுறப் பில்லமாமே. (60)*

(இ-ள்.) இமையின் அடிப்புறத்தில் புருவத்தின் கீழே கண்களின் பச்சை நரம்புகள் தடித்துக் கனத்து நீர் விடாமல் பொசியும். இப்பேர்ப்பட்ட புறப்பில்ல ரோகத்தை குடருருப்பில்ல ரோகம் என்று கூறுவர்.

### பில்ல ரோகத்தில் சாத்யாசாத்யம்

இமையிநீர்ப் பில்லந்தானே யசாத்திய மென்னலாகு
மமையி லமரப் பில்ல முள்ளிமை சதை வளர்ந்து
திவளினு மருந்திற் றீருஞ் செப்பிய குடரின் பில்ல
முவளிமை தடித்து நான்கு குருவெனத் திமிர்க்குங்
காணே. (61)

(இ-ள்.) நீர்ப்பில்லம் அசாத்யம். அமரபில்லம் மருந்தினால் தீரும். குடருருப்பில்லமும் சாத்யம்.

### இமைத்தடிப்பின் குணம்

ஐயறி பரந்த கண்ணிற் பறபறப்பதிகமாகி
வெய்யநீர் ததும்பி விம்மித் திமிர்ந்திடும் விருவிருப்பா
ஓய்யிவை விழியில் மெத்த வுறுவிளிம் பதுகனக்குஞ்
செய்யிமைத் தடிப்புத்தானே யசாத்தியமென்று
செப்பே. (62)

(இ-ள்.) கண்களில் பறபறப்பு அதிகமாகும். கண்ணீர் ததும்பும். இமைகள் கனக்கும். மதமதப்பு உண்டாகும். இமைகளின் விளிம்புகள் வீங்கிக் கனக்கும். இவை இமைத்தடிப்பின் லக்ஷணங்களாகும். இது அசாத்யமாகும்.

### இழிசற்கண் குணம்

கூறிய இமைவிளிம்பு கொழுகொழுத் ததில் நீரோடி
ஊறிடும் புண்ணதாகி யொடுவது மாறாதாகும்
பார்விழி விழிக்கிற் கூசும் பலப்பட விதனமாகும்
வார்முலை மானே! கேளா யிழிசற்கண் சாத்யமாமே. (63)

(இ-ள்.) இமைகளின் விளும்பு தடித்துப்போய் நீர்கோர்த்துவிடும். சிறுசிறு புண்களும் உண்டாகும். கண்களில் கூச்சம் அதிகமாகும். இவைகள் இழிசற் கண்ணின் குறிகளாகும். சாத்யமானது.

### முடமயிரின் குணம்

பொருந்திய விமைமடிந்து நீரினாற் புண்ணேயாகுஞ்
சரிந்திமை ரோமமுள்ளே சார்ந்துறக் குத்திநோவாம்
தெரிந்திடு மணி வெளுத்துத் திமிரமே சேருங் கண்டாய்
அறிந்தியிவ்(வகையாம்) ரோக முடமயிர் சாத்யமாமே. *(64)*

(இ-ள்.) இமையின் ஓரங்கள் கண்களின் உட்புறமாக மடிந்து, கண்களில் இருந்து நீரை வருவித்துப் புண்களை யுண்டாக்கும். மேலும் இமையின் ரோமங்கள் கண்களைக் குத்தி வலியைக் கொடுக்கும். கண்களின் பார்வை வெளிறிப்போய், திமிர (பார்வைக் குறைவை) ரோகத்தை உண்டாக்கும். இது முடமயிர் ரோக லக்ஷணங்களாம். இந்நோய் தீரக்கூடியது.

### பற்ப ரோகத்தின் வகைகள்

சொல்லிய பற்பரோகம் நீரொன்று துளங்கி ரக்த
மல்லியங் கோதாய் நீகேள் சாற்றவுஞ் சதைநோயென்று
வல்லியே நீரிரத்தஞ் சாத்திய மாகு மீது
பல படத் தீருமென்று பகர்ந்தன மறிந்துகொள்ளே. *(65)*

(இ-ள்.) பற்பரோகம் நீர், இரத்தம், சதை என்று மூவகைப்படும். நீர் பற்பரோகமும், இரத்த பற்பரோகமும் சாத்யம். மருந்துகளினால் குணம் உண்டாகும். சதைப் பற்பநோய் அசாத்யமாகும்.

### பற்பரோகங்களின் குறிகுணங்கள்

நீருறு பற்ப ரோகக் குணங் கண்ணீர் மிகுதியாகிச்
சோருமீரிமை கனத்து சோர்ந்திடு மிரத்தத்தாலே
சேருமே ரோகச் செய்கை இமைகளுஞ் சிவந்து நெந்நீர்
வாரு மாங் கிஷமுந்தானே தடித்துள்ளே வளருங்காணே. *(66)*

(இ-ள்.) நீர் பற்பரோகத்தின் கண்ணீர் மிகுதியாகப் பொழியும். இரு இமைகளுங் கனத்துச் சோரும். இரத்த பற்பரோகமெனில் இமைகள் சிவந்து செந்நீர் வடியும். மாங்கிஷ பற்பரோகத்தில் சதைத் தடிப்பு உண்டாகும்.

### கழலைகளின்★ வகைகளும் சாத்யா சாத்யங்களும்

இயம்பிய கழலைநீரா லிரத்தத்தாற் சதையினாலே
வயங்கிமை மேலெழுந்து வளர்ந்திடும் ரோகந்தானே
தயங்கிய ரத்தத்தாலே சார்ந்திடுங் கழலை தீரா
தியங்கிய சதையுந் தீருந் தீர்ந்திடு மியல்பு சொல்வோம். (67)

(இ-ள்.) இமையின் மேலுண்டாகும் கழலை, நீர், இரத்தம், சதை என மூவகைப்படும். ரத்தக்கழலை ரோகம் மாத்திரம் தீராது. மற்ற வகைகள் தீரும்.

### இமை நீர்ப்பாய்ச்சல் குணம்

சிரமதிற் சிலேத்மம் நின்று சொரியும் நீர் விழிநரம்பில்
மருவியே கண்டாயூர்ந்து மதர்த்தது கனத்து வீங்கி
முருகவிழ் குழலினாளே! மொழியிமை நீரின் பாய்ச்சல்
விரவதின் குணங்கள் சொன்னோம் விரும்பியே
யறிந்துகொள்ளே. (68)

(இ-ள்.) சிரசில் கபம் சேர்ந்து, விழிநரம்பில் நீர் கோர்த்துக்கொள்ளும். பின்னர் கண்களின் இமைகள் திமிர்த்துக் கனமாகி, வீக்கம் உண்டாகிக் கண்ணீர் வடியும். இவை இமைநீர்ப் பாய்ச்சலின் குணங்களாகும்.

### சுற்றுக்குலைவின் குணம்

அன்னமே யிமையில் ரோம முதிர்ந்திடும் புண்ணேயாகும்
பன்னிய நீரும் பாயும் பலப்பட வலிக்குங் குத்தும்
கொன் விழி மயக்கமுண்டாங் கொழுத்து நீ ரோடும் பீளை
யின்னிவைக் குணங்கள் சுற்றுக் குலைவென
யிசைக்கலாமே. (69)

(இ-ள்.) கண்களின் இமைமயிர் உதிர்ந்து புண்களேற்படும். கண்ணீர் பொசியும். கண்களில்

---

★ உருண்டையான கட்டி இதனை Cyst என்று கூறுவர்.

குத்துவலியும் உண்டாகும். கண்கள் மயங்கும் பீளை அதிகமாகச் சாறும். இவை சுற்றுக் குலைவின் குணங்களாகும்.

**புழுக்கடிக் குணம்**

உள்ளிமை விளம்பி லூறு ரோமமு திர்ந்து புண்ணா
மொள்ளழல் போலக்காந்து மோடிடுஞ் சீயிரத்தம்
வெள்ளிடை சிவந்து வீங்கித் தடித்திடு மிக்குணங்கள்
அள்ளிலை நடுவேற் கண்ணாய்! புழுக்கடிக்
குணமிதாமே. (70)

(இ-ள்.) இமை விளிம்பிலுள்ள ரோமங்கள் சிற்சில இடங்களில் உதிர்ந்து புண்களேற்படும். அந்த இடம் அனல்போல் காந்தும். சீழ், இரத்தம் இவைகளுடன் சிவந்த நிறமாகப் புண்களுண்டாகி இமையும் வீங்கும். இவை புழுக்கடிக் குறிகளாகும்.

**இமை வறட்சிக் குறிகள்**

சீதஞ்சேரு மிவை வறட்சி செய்ய பில்லம் போலெழும்பு
மோது மிமையிற் றோஷமிவை யுற்ற நான்கு மறிந்தீரேல்
வாததோஷம் வசூரி தன்னில் மற்றும் விரண ரோகத்தி
லேதுவாக யிமை மருவி யெழும்பும் வியாதி
சாத்தியமே. (71)

(இ-ள்.) இமை வறட்சி ரோகத்தில் கண்களில் குளிர்ச்சி அதிகரித்து பில்ல ரோகத்திற்கான குறிகளையுண்டாக்கும். இமைகளிலுண்டாகும் நான்குவித வியாதிகளையும் தெரிந்துகொண்டு வாததோஷத்திற்கான சிகிச்சை, வசூரிக்கான சிகிச்சை முறைகள், விரண ரோகத்திற்கான சிகிச்சை முறைகள் இவைகளை அனுசரித்துத் தீர்த்துக்கொள்ளவேண்டும்.

**கண்ணொடுவின் குணம்**

மூக்கடி கடையினுள்ளே முளைத்தெழூங் குமிளமாகத்
தாக்கிய சவ்வுமூடி வெடித்ததில் சலமுமாறா
நோக்கிடி லசாத்தியந்தா நுவல்கின்ற வேதஞ் சொல்லும்
பார்படு முலையினாளே! கண்ணொடு வாகுமென்றே. (72)

(இ-ள்.) மூக்கின் சமீபத்திலுள்ள கடைக்கண்ணில் சிறிய குமிழ்போன்ற முளையெழும்பும. அதன்மேல் சவ்வு மூடும். அமுக்கினால் நீர் பொசியும். இந்நோய் அசாத்தியமாகும். இந்நோய்க்குக் கண்ணொடுவு என்று பெயர்.

**இதுவுமது**

இளகிய பீளைநிற்கும் இடம்பரந்தி தனின் மேலே
வளமுறு பருத்திபோலே யெழும்பிடு மானே கேளா
யுளைவுறு வோடும் பாயுஞ் சாத்திய முணர்ந்து கொள்நீ
விளைவினாற் கருவி சோத்தி வேதனைத் தீர்த்திடாயே. (73)

(இ-ள்.) கண்களிலிருந்து பீளைசாரும், கடைக் கண்ணில் சதை படர்ந்து அதன்மேல் பருத்தி விதையைப் போன்ற மாமிச வளர்ச்சியுண்டாகும். இது சாத்யமாகும். ஆயுதங்களை உபயோகித்து வேதனையைத் தீர்க்கவும்.

**படர்த்திகளின்★ சாத்யாசாத்யம்**

இளகிறு கடையினுள்ளே யெழும்புநீர் சதையிரத்தம்
அழலெழப் படகு மானே! யசாத்திய மல்ல மூன்றும்
வழுவற விதற்கு முன்சொல் பொடிமருந் ததனாற்றீரு
மழவிடை யுயர்ந்தோன் சொன்ன வாகடத்
தியல்புதானே. (74)

---

★ படர்த்தி ரோகத்தைக் கடைக்கண்களின் ரோகத்தில் சேர்க்கப்பட்டதால் இதனை இங்கு கூறுகிறார்.

(இ-ள்.) கண்கள் இரு புறங்களிலிருந்து வளரும் எரிச்சலோடு கூடிய நீர்ப்படர்த்தி, சதைப்படர்த்தி, இரத்தப்படர்த்தி இம்மூன்றும் பொடிகளில் உபயோகத்தால் தீரும்.

**நீர்க்குவையின் குணம்**

சொல்லுநீர்ச் சதையிரத்தந் துன்றிய குன்றிபோலக்
கல்லெனப் புடைத்தெழுந்துக் கடைவிழியிரண்டிற்
றோன்று
முல்லையொண் பல்லினாளே! யிக்குண முயலுமாகி
லெல்லையில் விதனஞ் செய்யு நீர்க்குவை யென்று
சொல்லே. (75)

(இ-ள்.) நீர்க்குவை, சதைக்குவை, ரத்தக்குவை என்று மூவகைப்படும். அதனுள் நீர்க்குவையில் இரு கடைக்கண்களிலும் குன்றிமணிபோன்று கடினமான வளர்ச்சி தோன்றும். மிகுந்த வேதனையையும் தரும்.

**பக்கவாத★ தோஷக் குறிகள்**

கண்ணிடை பக்கவாத தோஷங்கள் கதித்து நின்றால்
நண்ணிமை யயர்ந்து கொட்டி நடுங்கிடுங்
குறைக்கண்நாக்கு
மண்ணவா னுரைத்தசெய்கை சாத்யமதுவாதந்தான்
திண்ணமாய் புருவத்தின் மேலறிவு (லறுகு) செய்திடவே
தீரும். (76)

(இ-ள்.) இமைகள் கனத்து இமை மயிர்கள் விழுந்து அடிக்கடி நடுக்கம் உண்டாகும். (கண்களைச் சிமிட்டுவான்) இதுவும் சாத்யரோகமாகும். இந்நோய்க்குப் புருவத்திற்கு மேல் அறுகு செய்திடத்தீரும்.

★ பக்க என்பது பக்ஷ்ம என்பதின் திரிபு.

குறிப்பு:- அறுகிடுதல்: கண்களுக்குச் செல்லும் இரத்தக்குழாயின்மேல், மஞ்சளினால் சுட்டுப்புண்களுண்டாக்கிப் பின்னர் தக்க மருந்துகளை உபயோகித்து ஆறவைத்தல்.

**விரணப்பருவின் லக்ஷணம்**

கடைவிழியதனிற் றோன்றும் விரணம்பரு கடகடென்னும்
மிடருறு வியாதி வந்தா லிளகமா மருந்து செய்து
உடையவே நிதானத்தன்னா லோதிய நூலிற் கண்டு
அடவிலே செய்முன் சொன்னபருவொன்றும்
சாத்தியமாமே. (77)

(இ-ள்.) கடைக்கண்ணில் தோன்றும் விரணத்தின் மேல் பருவைப்போல் முளையுண்டாகும். நூல்களில் கூறப்பட்ட நிதானத்தையும் மருந்துகளையும் தெரிந்து கண்களில் இடவும். இதுவும் சாத்தியமாகும்.

**நயன வாயு லக்ஷணம்**

நயனத்தில் வாயுநின்று நவில்புரு வத்தில் குத்திச்
செயல்கெட விரண முண்டாய்த் திரண்டுநீர் மூக்கால் வீழு
மியல்பினை யறிந்து கொண்டு யிவ்வுரோகத்தை மாற்றப்
பயனுரை செய்த வுண்மை மருந்தினை யறிந்துகொள்ளே!

(இ-ள்.) கண்களில் வாயு அதிகரித்துப் புருவங்களில் குத்துவலியை உண்டாக்கும். பின்னர் கண்களில் சிறு சிறு விரணங்கள் ஏற்பட்டுக் கண்ணீர் மூக்கினால் பொசியும். இதற்குத் தக்க மருந்துகளை உபயோகிக்கவும்.

**கண்ணோய் வரக்காரணங்கள்**

உஷ்ண மதனினாலு முறுவெயிற் காற்றினாலுங்
கட்டமாஞ் சுமையினாலுங் கடுகிய நடையினாலும்
மட்டவிழ் குழலினாளே! வந்திடும் விழிக்குள் நோவாம்
இட்டமா யறிந்து கொண்டு யிதற்கிடு மருந்துகேளே. (79)

(இ-ள்.) உஷ்ணம் அதிகரித்தலாலும் வெய்யில், காற்று இவைகளில் அதிகமாகச் சஞ்சரிப்பதினாலும், தலையில் அதிகமாகச் சுமையைச் சுமப்பதினாலும் வேகமாக நடந்து செல்வதனாலும் கண்களில்ரோகங்கள் சம்பவிக்கும். இவைகளுக்குத் தக்க மருந்துகளை உபயோகித்துத் தீர்த்துக்கொள்ளவும்.

## சந்நி நிதானம்

சந்நியீ ராறாமொன்றிற் றாழ்ந்திரி தந்தரீக
மின்னிய சிவுகஞ் சித்தம் விப்புரு பிரலாபந்தான்
கன்னிக மிவையோ ராறும் சாத்திய மாகுங்
கண்டதாய்த்
துன்னிய குணமும் நாளுஞ் சங்கையுங்
சொல்லக்காணே. (1)

(இ-ள்.) சந்நி 13ல் 1. தாழ்ந்திரிகம்★, 2. தந்திரீகம், 3. சிவுகம், 4. சித்தவிப்புரு, 5. பிரலாபம், 6. கன்னிகம் என்று 6 வகைகளும் சாத்யம் ஆகும்.

## தந்திரீக சந்நி லக்ஷணங்கள்

காணுமே வீக்கம் காலிற் கடுக்குஞ்சந் துழைந் தனைக்கு
மூணவே யுறங்கும் சென்னி யுருட் டுந்தொண் டையினிற்
கட்டி
பூணுமே சிலேற்ப மென்னிற் பொருந்துதந் திரீக மாகுந்
தோணும்கா வேழுந் தோஷந் தோகையே யறிகுவாயே. (2)

(இ-ள்.) காலில் வீக்கம் ஏற்படும். கடுப்புவலி மேலிடும். தொடை இடுக்குகள் வீங்கும். கண்களில் உறக்கம் மேலிடும். தலையை அடிக்கடி உருட்டுவான். தொண்டை கட்டிப்போம். கபம் அதிகரிக்கும். இந்நோய் 7 நாட்கள் உடலை வருத்தும்.

★ தாந்திரீகம், 2. சந்திரிகம், 3. சீகுவிகன், 4. சித்தவிப்ரமம். 5.பிரலாபகன், 6. கர்ணக சந்நி என்றும் அகஸ்தியர் 2000ல் காண்க.

## தாந்திரிக சந்நிக் குறிகள்

அரிகுரல்நெரிதல் தூங்கல் அயர்ந்துநாத் தடித்து முள்ளுநப்
பெறல் வயிறழிதல் காத்தல் சொரிதல்மேல் மூச்சுக் கண்ணீர்
சோறவே மாறிப் பார்க்க.........................
றுகுணந் தாந்திரீக மோதுநா ளிருபத்தைந்தே. (3)

(இ-ள்.) குரல் மாறுபடுதல், உறக்கம், நாக்குத் தடித்து முட்கள் உண்டாகும். வயிற்றுளைவு, தேக எரிச்சல், அரிப்பு, மேல்மூச்சு, கண்ணீர் சோரல் முதலான குறிகளும் காணும். இந்நோய் 25 நாட்கள் உடலை வருத்தும்.

## சிவுக சந்நி லக்ஷணம்

அஞ்சியே ஊமைப்பித்தன் செவிடன்போல் மூச்சடக்கி
எஞ்சியே பிரலாபித்துக் கூப்பிடு மிருத்தி வைக்குஞ்
செஞ்சவே தலைநில்லாது வலித்தது நடுக்கல் தேகம்
வஞ்சியே! சிவுகசந்நி வருத்து நா★ ளீரெட்டாமே. (4)

(இ-ள்.) ஊமை, பித்துப்பிடித்தவன், செவிடன் முதலியோர்களைப்போல் மூச்சை அடக்ிக்கொண்டு பிதற்றுவான். சம்பந்தமில்லாது கூப்பிடுவான், நிறுத்தி வைப்பான். தலை ஒரே நிலையில் நில்லாது தேகத்தில் வலி, நடுக்கம் முதலியவைகளுண்டாகும். இச்சந்நி 16 நாட்கள் தேகத்தை வாட்டும்.

## சித்த விப்ரம சந்நிக்குறிகள்

ஆகிய வுடம்பிடுப்போ டலகது கடுக்கு மாடுந்
தேகமஞ் சணிக்கும் வாடுஞ் சிரித்தடிக் கடிமயக்கும்
சோகமாய் வாய்பேசாமற் கிடந்து பின் சோகம் நீங்கும்
வேகநாள் மூவேழ் சித்த விப்ரம மென்று சொல்லே. (5)

---

★ அகஸ்தியரில் இந்நோய் 7 நாட்கள் காணும் என்றிருக்கிறது.

(இ-ள்.) உடம்பு முழுவதிலுமோ அல்லது இடுப்பிலோ தாங்கமுடியாத கடுப்புவலியுண்டாகித் தன்னையறியாமல் ஆடும். தேகத்தில் மஞ்சள் நிறமதிகமாகும். தேகம் சோர்ந்து போம். காரணமில்லாமல் சிரிப்பான். அடிக்கடி மயங்கி விழுவான். வருத்தத்துடன் வாய்பேசாமற் கிடப்பான். சிறிது நேரஞ்சென்று எழுந்திருப்பான். இந்நோய் தீருவதற்கு 21 நாட்கள் ஆகும்.

**பிரலாப சந்நிக் குறிகள்**

சொல்பிர லாபம்விக்கல் சுவாசமோ டிளைப்புத்தாக
மேல்மிட ரதுசிலேற்ப மேவுதல் சுரமேகாய்தல்
அல்செறி குழலாயிந்தக் குணம்பிர லாபமாகும்
புல்லிய நாளீரேழும் பொருந்துமென் றறிந்துகொள்ளே. (6)

(இ-ள்.) பிதற்றல், விக்கல், மேல்மூச்சு, இளைப்பு, தாகம்,கபம் அதிகரித்தல், சுரமடித்தல் முதலான குறிகளேற்படும். இந்நோய்க்கு அதிகாரம் 14 நாட்களாகும்.

**கன்னிக சந்நியின் குறிகுணங்கள்**

மின்னிய நாவிரிந்து காதின்கீழ் வீக்கமாகி
துன்னிலே செவிகேளாமற் பிரபலாபஞ் சுவாசம் விக்கல்
மன்னிய வுடல்நடுக்கல் வந்திடில் மானே! கேளாய்!
கன்னிக சந்நிவேகம் தொண்ணூறு நாளுங் காணே. (7)

(இ-ள்.) நாக்கில் வெடிப்புகளுண்டாகும். காதிற்குக் கீழே வீக்கம் உண்டாகும். காது கேளாது. பிதற்றல், சுவாசம், விக்கல், உடல் நடுக்கல் முதலான குறிகளுமுண்டாகும். இவ்வகைச் சந்நி தீருவதற்கு 3 மாதங்களாகும்.

**அசாத்யம் ஏழு சந்நிகளின் பெயர்**

காணுமந்தக ருத்தாகஞ் சீதாங்கங் கண்டகுச்சந்
தோணிய ரத்தசாட்டிய பினியாசந் தோகைநல்லாய்!
நாநிலந் தன்னிற் புக்கு நேத்திர மிவையோரேழும்
பூணுமே லசாத்தியந்தா னென்னவே புகலுவாயே. (8)

(இ-ள்.) அந்தகம், ருத்தாகம்,★ சீதாங்கம், கண்டகுச்சம், ரத்த சாட்டியன், அபின்யாசன், புக்குநேத்திரன் ஆகிய ஏழு வகை சந்நிபாத ரோகங்களும் அசாத்யங்களாகும்.

## அந்தக சந்நியின் குறிகள்

ஆயதோர் தலைநடுக்கல் அதிதாக மயக்கம் வாந்தி
வாயது பிதற்றல் விக்கல் மருவிடுமுடம்பு காய்தல்
யோயபேய் போற்றுணுக்கிட் டெழுந்திருந் திடுதலென்னிற்
றீயவந் தகமாம் சந்நி தீது நாள் பத்ததாமே. (9)

(இ-ள்.) தலை நடுக்கல், தாங்கமுடியாத நாவறட்சி, மயக்கம், வாந்தி, வாய் பிதற்றல், விக்கல், ஜ்வரம், பேயைக் கண்டவன்போலத் திடுக்கிட்டு எழுந்திருந்து ஓடுதல் முதலான குறிகள் உண்டானால் அது அந்தக சந்நிபாதக் குறிகளாகும். இது பத்து நாட்களில் நோயாளியைக் கொன்றுவிடும்.

## ருத்திராக சந்நிக் குறிகள்

பத்திரமாக வார்த்தைப் பகர்ந்திட லுடல் நடுக்க
லத்ததாம் பிரலாபித்தல் மோகித்தல் பிதற்றல் சோம்பல்
குத்திடும் பிடர்கடுத்தல் கொளுங்களம் நெற்றிவேர்த்த
லித்திறம் பெருத்திராக சந்நிநா ளிருபதாமே. (10)

(இ-ள்.) மிகவும் மெதுவாகப் பேசுவான். உடலில் நடுக்கம் உண்டாகும். தன்னையறியாமல் பிதற்றல் மயங்கிவிழுதல், சோம்பல், பிடரியில் கடுப்புவலி, நெற்றியில் வியர்வை முதலான குறிகள் ருத்திராக சந்நியின் லக்ஷணங்களாம். இது 20 நாட்களில் உயிரைப்போக்கும்.

## சீதாங்க சந்நி லக்ஷணங்கள்

இரும்பொறுத்ததுகடுக்கு மிளைப்புமேல் மூச்சுவாந்தி
பொருந்து மெய்குளிர்ந்து வேர்க்கும் புகையடிக்கடிநடுக்கும்
வருந்தவே தாபமூர்ச்சை வயிறது கழிதல் விக்கல்
திருந்திடுங் குணஞ்சீதாங்கந் தீதுநாளொருபத்தஞ்சே. (11)

★ ருத்தாகம் என்பதை உருத்திரன் என்று அகஸ்தியர் கூறுகிறார்.

(இ-ள்.) உடலில் கடுப்புவலி ஏற்படும். மேல்மூச்சு மூச்சுதிணறல், வாந்தி, தேகத்தில் குளிர்ச்சி, (தொட்டால் வியர்வை, நடுக்கம், புகைச்சல், உள்காந்தல், மூர்ச்சை, வயிறு கழிச்சல், விக்கல் முதலான குறிகள் ஏற்பட்டால் அது சீதாங்க சந்நியின் லக்ஷணங்களாம். இது 15 நாட்களுள் நோயாளியைத் தீர்த்துவிடும்.

## கண்டகுச்ச சந்திக் குறிகள்

அஞ்சவே தாகமோகம் அழன்றுடல் கடுத்தெறித்து
மிஞ்சியே சொரிதல் வாந்தி விக்கல்கால் கையடித்தல்
செஞ்சவே தலைநில்லாது வலித்தது நடுக்கல் தேகம்
பஞ்சியாய் வளைத்தல் கண்ட குச்சம்நாள் பதிமூன்றாமே.

(இ-ள்.) தீராத தாகம், மயக்கம், உடலில் அழற்சி, கடுப்பு, எரிச்சல், வாந்தி அதிகமாக எடுத்தல், விக்கல், கால் கைகளை அடித்தல், தலையைத் தூக்கமுடியாமை, தலைவலி, தலை நடுக்கம், தேகம் வில்போல் வளைதல் முதலான குறிகள் காணப்படில் அது கண்டகுச்சசந்நியாம். இது 13 நாட்களுள் உயிரை நீக்கும்.

## இரத்த சாட்டியசந்நியின் லக்ஷணங்கள்

பதிந்திடு முதடும் நாவும் விரிந்தநி லிரத்தம் பாயு
மலர்ந்திடு நரம்பு காதின் கீழ்வீக்க மயக்க மூர்ச்சை
யதிர்ந்திடும் சுரம் சிலேற்ப மதிசாரந் தாக மோக
மெதிர்ந்திடும் பிரமை ரத்த சாட்டி நாள் பத்ததாமே. (13)

(இ-ள்.) உதட்டில் வெடிப்புகளுண்டாகும். நாக்கிலும் வெடிப்புகளேற்பட்டு அதிலிருந்து இரத்தம் வெளிவரும். நரம்புகளில் வலியேற்படும். காதின் கீழே வீக்கமும் உண்டாகும். மயக்கம், தீராத ஜ்வரம், கபக்கட்டாக மலம் வெளியாதல், நாவறட்சி, பிரமை முதலான குறிகளும் காணப்படில் இது ரத்த சாட்டிய சந்நியின் குறிகள். 10 நாட்களுள் நோயாளியைக் கொன்றுவிடும்.

## அபின்யாச சந்நிபாதக் குறிகள்

ஏய்ந்திடுந் திரிதோஷங்க ளெழுஞ்சுரஞ் சுவாசந்தாகம்
வாய்ந்தகை காலயர்ச்சி வாய்திறந் துறங்கல் தாபம்
ஓய்ந்திடும் பொறுத்துத் தோரும் முளைந்திடும் பயம்
வெருட்சி
ஆய்ந்திடு மபினியாச சந்நிநா ளிருபத் தஞ்சே. *(14)*

*(இ-ள்.)* ஜ்வரம், சுவாசம், தாகம், கைகால்களில் அயர்ச்சி, வாயைத் திறந்துகொண்டு தூங்குதல், உடலில் எரிச்சல், மூட்டுகள் தோறும் உளைச்சல், பயம், மருட்சி முதலான குறிகள் காணும். இந்நோய் கண்ட 25 நாட்களுள் நோயாளி உயிரிழப்பான்.

## புக்குநேத்திர சந்நியின் குறிகள்

சேர்ந்திருகண்ணும் மூடிச் செனித்துநீர் வடிந்திருக்கும்
வார்ந்துடல் நடுநடுக்கும் வாயது மிகப் புலம்பும்
பேர்ந்திடு மறிவுதானும் பேதமாங் குணங்களாகுஞ்
சோர்ந்திடும் புக்கு நேத்ரஞ் சொல்லிந்நா ளெட்டதாமே. *(15)*

*(இ-ள்.)*இரு கண்களும் மூடிப்போம். கண்களிலிருந்து [illegible] வடியும், உடலில் நடுக்கம் உண்டாகும். வாய் புலம்பும். சுய அறிவுடன் நோயாளி இருக்கமாட்டான். இவை புக்கு நேத்திரச்சந்நியின் லக்ஷணங்களாகும். 8 நாட்களில் கொல்லும்.

## ரோகங்களையனுசரித்து வரும் சந்நியின் குணங்கள்

வாதசந்நிக் குணமிருமும் வயிறு பொருமும்
இளைப்பெடுக்கும்
போதக்காயும் வியர்த்துவிடும் புரண்டு மருண்டு
பயந்தோன்றும்
வேதையுட நீர் கடுகடுக்கும் மேனிவெளுத்துக் கடுகடுக்கும்
சீதம் பிறக்கு மிடுப்புளையுஞ் செய்யுங் குணங்கள் கண்டீரே.

(இ-ள்.) இருமல், வயிற்றுப்பொருமல், மேல் சுவாசம், ஜ்வரம், அதிகமான வியர்வை, அடிக்கடி படுக்கையில் புரளுதல், மயக்கம், திடுக்கிடுதல், வேதனையுடன் நீர் கடுத்து இறங்குதல், உடல் வெளுத்துப் போதல், உடம்புவலி, இடுப்பிலும்வலி, தொட்டால் குளிர்ச்சி முதலான குறிகள் காணப்படில் அது வாத சந்நியாம்.

### பித்த சந்நிக் குறிகள்

பெருகும் பித்த சந்நியது பிதத்து மழத்து மெய்சுழிக்கும்
புருவ நெரித்து மோகிக்கும் போத மழிய வாய் புலம்பும்
மருகுங் கருகுங் கண்சிவக்கு மைந்த புலனும் வேறுபடுங்
கருகியுடம்பு மிகவாடிக் காணுங் குணங்க ளிறிவீரே. *(17)*

(இ-ள்.) பிதற்றல், உடலில் காங்கை, உடல் குன்றுதல், புருவத்தையடிக்கடி உயர்த்தல், மயக்கம், வாய் புலம்பல், கண்களில் சிவப்பு, ஐம்புலன்களும் தங்கள் தொழிலை செய்ய இயலாமை, உடம்பு கருநிறமடைந்து வாடுதல் முதலான குறிகளுண்டானால் அது பித்த சந்நியின் குறிகளாகும்.

### சிலேத்ம சந்நிக் குறிகள்

மார்பின் மிசையே குறுகுறென்று மலமூத்திரங்கள்
வெளுப்பெய்தும்
வேர்வை பெருக்கும் வெறுப்புண்டா மிக்கநாவு
வழுவழுக்கும்
சோருமயக்குங் கண்மயக்குந் தோன்றாதொன்றுந்
துணைதேடுஞ்
சேரவெறுக்கும் வண்டுறுக்குஞ் சிலேற்பன சந்நி
யிதுவாமே. *(18)*

(இ-ள்.) மார்பில் கபம் அடைத்துக்கொண்டு குர் குர் என்ற சப்தத்தை உண்டாக்கும். மூத்திரம், மலம் இவ்விரண்டும் வெளுப்பாகும். வியர்வை அதிகரிக்கும். தேகத்தில் காங்கையுண்டாகும். நாக்கில் வழுவழுப்புத் தோன்றும். சோர்வு, மயக்கம், கண்கள் மயங்குதல், பார்வை மந்தம், பீதியினால் துணையைத் தேடுதல் முதலான குறிகளும் காணப்படில் அது சிலேத்ம சந்நியாம்.

### திரிதோஷ சந்தி குறிகள்

மூன்றுங் கூடிக் கோபித்தால் முடுகிப் பிதற்றும தப்பியத்தைத்
தோன்றும் யானை மதப்பட்டாப்போலே கடிந்து
சொல்லுமுறுப்
பேன்று குத்துந் தெருத்தலையி னிடையேயோடும்
பித்தனென்னும்
ஞான்று நாணந் தனைக் கெடுக்கும் நாடுஞ்சிரத்தை
யில்லையென்னே. (19)

(இ-ள்.) வாதம், பித்தம், கபம் என்ற தோஷங்களும் ஒருமித்துக் கூடிய சந்நியில் பிதற்றல் அதிகரிக்கும். மதம்பிடித்த யானையைப் போல வெகுண்டு பொறுக்கமாட்டேன் என்று சொல்லி தலையில் குத்திக் கொண்டு தெருவில் ஓடவாரம்பிப்பேன். உடையும் தளரும் பித்தனைப் போலாவான். ஒரு காரியத்திலும் சிரத்தை வைக்கமாட்டான். வெட்கம் நீங்கும்.

### பித்தமோகச் சந்நியின் லக்ஷணங்கள்

அனலெழு மேனிதானும் அயர்ந்து நாவுலர்ந்துதாழு
மனமெலா மருவருக்கு மதமதா யுறக்கந் தோன்றுங்
கனவெலா மிகவுங் காணும் கரங்கள் கால் முடங்கவாங்கும்
நினைவிலாப் பித்தமோகச் சந்நியி னிலைமை தானே. (20)

(இ-ள்.) உடம்பு அனலைப்போல் சுடும். நாக்குத் தளர்ந்து உலர்ந்து, புரட்டமுடியாமல் போகும். மனதில் அருவருப்புத் தோன்றும். மதமதப்புடன் தூக்கம் உண்டாகும். தூங்குகையில் கனவுகள் காணுவான். கை கால்கள் முடங்கும். இவைகள் பித்தமோகச் சந்நியின் குறிகுணங்களாம்.

### முகவாத சந்நிக்குறிகள்

கண்ணிற் றலையிற் புருவத்திற் காதிலகிற் குத்துண்டாய்ப்
பண்ணிப் பதைக்கும் முகந்தன்னைப் பக்கம்
பரியத்திரிவிக்கு

மெண்ணிச் சொல்லு முகவாதத் தெழுந்தசந்நி யீதென்றே
நண்ணிச் சொன்னோஞ் சிலர் வாழ நாடுங்
குணங்களிவையென்றே. (22)

(இ-ள்.) கண்கள், தலை, புருவம், காது, பொட்டு முதலான இடங்களில் குத்துவலி உண்டாகும். பீதியையுண்டாக்கும். முகத்தை ஒரு பக்கமாக இழுத்துவிடும். இது முகவாதச் சந்நியின் குறிகளாகும்.

## முகவாத சந்நிக் குறிகள்

கண்ணிற் றலையிற் புருவத்திற் காதிலகிற் குத்துண்டாய்ப்
பண்ணிப் பதைக்கும் முகந்தன்னைப் பக்கம்
பரியத்திரிவிக்கு
மெண்ணிச் சொல்லு முகவாதத் தெழுந்தசந்நி யீதென்றே
நண்ணிச் சொன்னோஞ் சிலர் வாழ நாடுங்
குணங்களிவையென்றே. (22)

(இ-ள்.) கண்கள், தலை, புருவம், காது, பொட்டு முதலான இடங்களில் குத்துவலி உண்டாகும். பீதியையுண்டாக்கும். முகத்தை ஒரு பக்கமாக இழுத்துவிடும். இது முகவாதச் சந்நியின் குறிகளாகும்.

## கபாலச் சந்நிக் குறிகள்

உச்சியிடிக்கு மயிர்முறியு முறக்கம் பெரிதாமுகங்கனக்கும்
அச்சந் தோன்றுங் கால்கைக ளயரும் வேர்க்கும்
விழிசிவக்கும்
பச்சென்றிருக்கும் நாசியிற் சீழ் பாயும் நாறும் பறபறியும்
கச்சின் கனக முலையாளே! கபால சந்நியெனக்கருதே. (23)

(இ-ள்.) தலையுச்சியில் தீராதவலி ஏற்படும். மயிர் உதிரும். தூக்கமும் அதிகரிக்கும். ஆனால் முகம் கனக்கும். மனதில் பயம் உண்டாகும். கை, கால்கள் சோர்வடையும். வியர்வையும் உண்டாகும். விழிகள் சிவப்பாகும். நாசியிலிருந்து பச்சையாகச் சீழ், துர்நாற்றத்துடன் வெளியாகும். அது பட்ட இடங்களில் அரிப்பும் ஏற்படும். இவை கபாலச் சந்நியின் லக்ஷணங்களாகும்.

### பாரிசவாத சந்நிக் குறிகள்

கையுங் காலுமொருபக்கங் கனக்குந்திமிர்க்கு மயர்வாகும்
மெய்யு மறவேமே... வெதும்பும் நாவு தடுமாறுஞ்
செய்யுங் குணங்கள் பாரிசத்திற் சேரும் வாத சந்நிபாதா
முய்யும் படியே ஆயுள்மறை யுலகமறிய வுரைத்தோமே.

(இ-ள்.) ஒருபுறத்துக்கையும், காலும் கனக்கும். மதமதப்புடன், சோர்வும் உண்டாகும். நாக்குத்தடுமாறும். உடம்பில் எரிச்சலும் அதிகரிக்கும். இவைகள் பாரிச வாத சந்நிக்குறிகளாகும்.

### அயர் சந்நிக் குறிகள்

அம்மு மயக்கு மறிவை யறவழிக்கும்
விம்முஞ் சலம் போல் விறைப்பிக்குஞ்
மறைக்கு மயர்சந்நி யென மானிலத்திலாயுள்
முறைக ளுயர் முன்னோர் மொழி. (25)

(இ-ள்.) மயக்கம், அறிவு தடுமாற்றம், உடல் விறைப்பு முதலானவை அயர்சந்நிக் குறிகளாகும்.

### உட்குத்துச் சந்நிக்குறிகள்

வேர்த்து வெதும்பி பற்கிட்டி விறைத்துக் குத்திக் தாகித்துத்
தீர்த்த மருந்து மனந்தன்னைத் தேடிக்கொள்ள வொட்டாது
பார்த்து மனித ரிருந்தாலும் பரியும்வாயுக் கீணோக்கிப்
பேர்த்துப் பகராதுட் குத்துச் சந்நி யெனவே பேசுவரே. (26)

(இ-ள்.) வியர்வை அதிகரித்து பற்கள் கிட்டி உடல் விறைப்பாகும். அதிகமாகத் தாகவறட்சி ஏற்படும். மருந்துகள், ஆகாரம், தண்ணீர் இவைகளை உட் கொள்ள மாட்டான். பற்பல மனிதர்களிருந்தாலும் கூசாமல் அபானவாயுப் பிரியும்.

## *பிளவை நிதானம்*

நிலந்தனில் மாந்தர் செய்த நெறிவழு வியாதியாகிப்
பலந்தரு பிளவையென்னப் பெயரெட்டுங் கொண்டதம்மா
வெலுஞ்சரா விகந்தான் கச்ச விகங்க(பாவிக)மத்தி விதாரி
செலும்புத்தி ரிணிமசூரி சாலினி வித்துருத்தி. (1)

(இ-ள்.) சராவிகா, கச்சபிகா, பாவிகா, விதாரி, புத்திரிணீ, மஸுரிகா, சாலினி, வித்ருதி என்று எட்டு வகைப்படும்.

### சராவிகா பிளவையின் குணங்கள்.

சொல்லறு கினிலுயர்ந்து நடுத்தாழ்ந்து தொலைவிலாத
அல்லல்வே தனையுண்டாகி யகத்தில்நீர் பொசிந்துகாட்டி
நல்லுலை மூடிபோன்று நவில்நிறம் பச்சையாகப்
புல்லிடி லிவையேசாரா விகமெனப் புகலலாமே. (2)

(இ-ள்.) பிளவைப் புண்ணின் வரம்புகள் உயர்ந்து மத்திய பாகம் தாழ்ந்துபோம். தாங்கமுடியாத குத்துவலியுண்டாகும். புண்ணிலிருந்து சதா நீர் வடியும். உலையின் மூடியைப்போல் உட்குழிவாகும். நிறம் பச்சையாகும். இவைகள் சராவிகாப் பிளவையின் குறிகள்.

### கச்சபிகா, சாலினி, புத்திரிணி, விதாரி முதலான பிளவைகளின் குணங்கள்

புகல் கச்ச விகந்தானாமை கவிழ்ந்தது போலவாகும்
பகருஞ்சா லினிதிரண்டு வெருவலி காந்தல் பற்றுந்
தகுபுத்தி ரிணிசிறுத்துத் தான்வரும் விதாரியாதல்
வெகுகிழங் கீரல் போன்று கெட்டியாய் மேவுமென்னே. (3)

(இ-ள்.) கச்சபிகா என்ற பிளவை ஆமை முதுகை ஒத்து இருக்கும். சாலினியில் புண் திரண்டு, வலி, எரிச்சல் முதலானவைகளுடன் இருக்கும். புத்திரிணியில் புண் சிறுக்கும். பல கண்களும் உண்டாகும். விதாரிப் பிளவையோ வெனில் ஈரளைப் போலக் கெட்டியாய் இருக்கும்.

### வித்ருதி, பாவிக, மசூரி முதலான பிளவைகளின் குறிகள்

மேவிடும் வித்ருதியுந்தி முதுகினில் விளங்கிநோவு
தீவிர மாகிநீருஞ் சிறுத்ததிற் பொசிந்து காட்டிப்
பாவிகம் பவளம் போன்று பதிந்துகட்டியதாய்த் தோன்றுங்
கூவிட மசூரியாகில் வசூரிபோற் குணமதாமே. (4)

*(இ-ள்.)* வித்ருதிப் பிளவை, வயிறு, முதுகு முதலான இடங்களில் ஏற்பட்டு அதிக வலியைத்தரும். அதிலிருந்து துர்நீர்க் கசியும்.

**பாவிகப் பிளவை:-** பவளத்தைப்போல செந்நிறத்துடன் கட்டியாகத் தோன்றும்.

## *மசூரிப் பிளவை*

*குணங்கம கதியே நீல வண்ணமாய்க் கொப்பளிக்குஞ்*
*சணஞ்சிறு கடுகுபோன்று சலங்கொண்டு வலிக்குமென்க*
*வினங்கிய வியாதியெட்டு மிப்படிக் குணங்கள்*
*சொன்னோம்*
*பிணங்கிய வியாதித்தான மசாத்தியம் பேசுவோமே. (5)*

*(இ-ள்.)* மசூரிப்பிளவை ரோகத்திலோ, அம்மையைப் போன்று கடுகைப் போன்ற சிறு சிறு கொப்பளங்கள், நீல நிறமாய்க் கொப்பளிக்கும். அதில் நீர்கோர்த்து வலியையும் உண்டாக்கும். இவ்வாறு எட்டுவகைப் பிளவைகளின் குறிகள் மொழியப்பட்டன.

## *பிளவையின் ஸ்தானமும் சாத்யாசாத்யமும்*

*பேசுவோ அபான மார்பு புறங்காலு (முழங்) காலங்கை*
*தேசுசேர் புறங்கை கொங்கை சிரசுச்சி முதுகந் தண்டு*
*பூசியகழுத்தெருத்தம் பொருந்திடிற் பிரயாசத்தால்*
*வாசியாம் பிளவை மேகம் வந்திடிற் நீராதென்னே. (6)*

*(இ-ள்.)* குய்யம், மார்பு, புறங்கால், முழங்கால், புறங்கை, ஸ்தனம், சிரசின் உச்சி முதுகில் முள்ளந்தண்டுப் பிரதேசம், கழுத்து முதலான இடங்களில் பிளவை ஏற்பட்டால் கஷ்டப்பட்டுச் சிகிச்சை செய்யவேண்டும். நீர் ரோகத்தின் மேல் வந்த பிளவை தீராது.

*என்னுமித் தானமின்றி யிசைந்த மற்றிடங்கள் சேரி*
*லன்னவன் கரப்பன் மேக மணைந்துளோ னல்லனாகிற்*
*பின்னுமே ... ... ... ... பிரமையு மில்லாதாகிற்*
*பன்னுசென்றூர் கண்டோர்கள் பாபம்போற் நீருமென்னே.*

(இ-ள்.) மேற்கூறிய ஸ்தானங்களைத் தவிர மற்ற இடங்களில் பிளவை ஏற்பட்டாலும், கரப்பான், மேகரோகம் முதலான ரோகங்கள் இல்லாதவனுக்கு ஏற்பட்டாலும், மயக்கம் இல்லாதவனுக்கு இந்நோய் கண்டாலும் பற்பல ஊர்களைக் கண்டு தீர்த்தத்தில் நீராடி நீக்கிய பாபம்போலப் பிளவை குணமாகும்.

# காமாலை நிதானம்

### வாத காமாலைக் குணங்கள்

*மலசலம் நகங்கண் தேகம் வன்னமே கறுப்பதாகும்*
*இலகிய தாதுநாச மெய்திடு மிளைப்புண் டாகுங்*
*குலவிய சரீரந்தன்னிற் குத்துடன் வாயுவுண்டாங்*
*கலகவேல் விழியாய்! வாத காமாலை யென்னலாமே. (1)*

(இ-ள்.) மலம், சிறுநீர், நகம், கண்கள், தேகம் முதலானவை கறுநிறமடையும். சரீர தாதுக்களும் கெடும். தேகம் இளைக்கும். சரீரத்தில் குத்துவலியும், வாயுவும் அதிகரிக்கும். இவை வாதகாமாலைக் குறிகள்.

### பித்த காமாலைக் குறிகுணங்கள்

*இருமலே யிளைப்பு நெஞ்சி விடிப்புடன் துடிப்புமுண்டாய்*
*பெருகவே நடக்கும்போது பேச்சுமுட்டதுவேயாகும்*
*வெருவுறக் கிறுகிறுக்கும் மேனியும் வெளுத்திருக்கும்*
*பெருகிடும் பித்தரோகக் காமாலை யென்னப்பேசே. (2)*

(இ-ள்.) இருமல், மேல்மூச்சு, நெஞ்சில் வலி, நடக்கும்போது நெஞ்சுத்துடிப்பு, பேச்சு முட்டல், (பேச இயலாமை) மயக்கம், உடல் வெளுத்துப்போதல் முதலான குறிகள் பித்த காமாலையில் காணும்.

## சிலேத்ம காமாலைக் குறிகுணங்கள்

முகமும் வீங்கிக் கண்வெளுத்து மூச்சுத் துடிக்கில்
முட்டதுவா
யகமுந் துடித்து நாவறண்டே யணுகுந்தாது கெட்டிருக்கு
மிகவு மசனஞ் செல்லாது மேனிவறண்டு வெளுப்பேறுஞ்
சகமேற் சிலேற்ப காமாலை செய்யுங் குணங்களறிவீரே. (3)

(இ-ள்.) முகம் வீங்கும், கண்கள் வெளுத்துப்போம். மூச்சுத்திணறலும் அதிகமான படபடப்பும் ஏற்படும். நாவறண்டுபோம். தாதுக்கள் க்ஷீணமடையும். சாப்பாடு உட்செல்லாது. தேகம் வரண்டு வெளுத்துவிடும். இவை கப காமாலையின் இலக்ஷணங்களாகும்.

## திரிதோஷ காமாலைக் குறிகுணங்கள்

வாதகா மாலைதன்னில் வந்திடும் குணமும் பித்தத்
தோதிய குணமுஞ்சேற்ப முற்றிடும் குணமு மொன்றாய்
காணிடிற் திரிதோஷத்திற் காமாலை யாகுமென்கத்
தீதுறு மசாத்தி யந்தா னிவையெனச் செப்பலாமே. (4)

(இ-ள்.) வாதகாமாலை குறிகளும், பித்தகாமாலைக் குறிகளும், சிலேத்ம காமாலைக் குறிகளும் ஒருங்கே காணப்படில் அது திரிதோஷக்காமாலை என்று கண்டு கொள்ளவும். இது அசாத்ய ரோகமாகும்.

## கும்ப காமாலைக் குறிகள்

நகமூத் திரம்நேத் திரமலந்தா னல்லமஞ்சள் நிறமதுவாய்
மிகவே வீங்கி யிளைப்பு முண்டாய் விதனமிகுந்து
நீர்பிடித்துச்
சுகமா மசனந் தனைவெறுத்துத் தோன்றுங் குணங்க
ளிவைகண்டா
லீகமேற்கும்ப காமாலை யிதுதான் கட்ட சாத்யமே. (5)

(இ-ள்.) நகங்கள் மூத்திரம், நேத்திரம், மலம் முதலானவைகள் மஞ்சள் நிறமடையும், உடம்பு வீங்கும், மேல்மூச்சு அதிகரிக்கும். ஜலதோஷம் பிடிக்கும். சாப்பாட்டைத் தள்ளும். இக்குணங்கள் காணில் அவை கும்பகாமலையாம்.

## விசர்பரோக நிதானம்

வீங்கும் வற்று மொரு பக்கம் மேனிவறண்டு
வெளுப்பிடுங்கண்
டூங்குந் தலையுங் கனத்திருக்கும் துயரமிகுந்து தாகிக்கும்
வாங்கும் பொசிக்க வொட்டாது வாயுவிடலில்
விஷம்போல
யேங்கி யிளைக்கும் விஷபாக மிதுவே செய்யுங்குணமாமே.

(இ-ள்.) உடலலின் ஒருபக்கம் வீங்கும், மறுநாள் வடியும். உடலில் வரட்சி ஏற்படும். வெளுத்துப்போம். கண்கள் தூங்கும். தலைகனம் உண்டாகும். வேதனையும், அதிகமான நாவரட்சியும் ஏற்படும். ஆகாரங்கள் உட்செல்லாது. வாயு உடலில் விஷம்போல் அதிகரிக்கும். உடலும் இளைத்துப்போம். இவை விஷபாக ரோகக் குறிகளாகும்.

### வாத விசர்ப்பக் குறிகள்

தேசு சேர் சரீரமெல்லாஞ் சலமது பரந்து வீங்கும்
பேசும்நா வதுதடித்துப் பேச்சுமுட் டதுவே யாகும்
கூசுமே புசிப்புக் கொள்ளாக் கொண்டிடில் மலநீர் கட்டும்
வீசும்வாள் விழியின் மாதே! வாதத்தில் விசர்ப்பமாமே. (2)

(இ-ள்.) உடல் வீங்கும். நாக்குத்தடித்துப் பேசவியலாது. ஆகாரம் உட்கொள்ளமுடியாது. அப்படிச் சாப்பிட்டாலும் மலம், சிறுநீர் முதலானவை கட்டும். இவை வாத விசர்ப்பக் குறிகளாகும்.

### பித்த விசர்ப்பக் குறிகள்

பாண்டுவின் வன்னமாகப் பதிந்துடல் வெளுத்து வீங்கும்
நீண்டகண் வெளுத்துப் பொன்போல் நிறம்பெறு பி(டிப்பு)
முண்டாம்
பூண்டநித் திரைதவிர்ந்து பொசிப்பெல்லா மருவருப்போ
மீண்டிய பித்தரோக விசர்பக மென்னலாமே. (3)

(இ-ள்.) உடல் வெளுத்துப் போய் வீங்கும். அமுக்கினால் குழிவிழும். கண்களும் வெளுத்து மஞ்சள் நிறமடையும், கைகால்களில் பிடிப்பும் உண்டாகும். தூக்கம் வராது. ஆகாரத்தில் அருவருப்புத்தோன்றும். இவை பித்த விசர்ப்ப நோயின் குறிகளாகும்.

### சிலேத்ம விசபாக லக்ஷணங்கள்

இருமலே டிளைப்புமுண்டா மேகமாய் வீக்கமுண்டாய்
வருவிழி நாவுதேகம் மலசலம் வெளுப்புமுண்டாம்
பொருமல்நெஞ் சடைப்பு முண்டாம் போர்விழி
மயக்கமுண்டாஞ்
செருமிய சிலேற் பனத்தில் விஷபாகச் செய்திதானே. (4)

(இ-ள்.) இருமல், மேல்மூச்சு இவற்றுடன் உடல் முழுவதும் வீக்கம் உண்டாகும். விழி, நாக்கு, உடல் இவைகளும் வெண்ணிறமடையும். மலமும் மூத்திரமும் வெண்மையாக இறங்கும். வயிற்றுப்பொருமல், நெஞ்சடைப்பு, தலை மயக்கம் இவைகளும் உண்டாகும். இவை சிலேத்ம விஷபாகக் குறிகளாகும்.

## மூஷிகா ரோகங்கள்

திருந்திய சரீரந் தன்னிற் பதினெட்டு விதமாய்ச் சேர்ந்து
பொருந்திய யெலிவிஷத்தாற் பொங்கிடு மிரும வீளை
வருந்திய கிரந்தி சோகை வறட்சி மெய் மயக்கம் வெற்புப்
பெருஞ்சொறி கரப்பன் வாதம் பிறந்திடு மறிகுவீரே. (1)

(இ-ள்.) 18வித எலிகள் கடித்துச் சரீரத்தில் பதினெட்டு விதமான விஷங்களைச் சேர்க்கும். இதனால் இருமல், ஈளை, கிரந்தி, சோகை, நாவறட்சி, மயக்கம், தேக எரிச்சல், சொறி, கரப்பான், வாதம் முதலான ரோகங்களும் சம்பவிக்கும்.

### எந்தெந்த நாட்களில் எலிகடி விஷம் அதிகரிக்கும் என்ற விஷயம்

மந்தனாதித்தன் செவ்வாய் வருகுரு பகல் வருத்தந்
தந்திடு மிரவில் நன்று சௌம்யன்மத் திமமாம்வெள்ளி
யிந்திராப் பகலு நன்றா மெலியது கடிக்கு மாகில்
முந்திய வாரமேழு முறைமுறை யறிகுவீரே. (2)

(இ-ள்.) சனி, ஞாயிறு, செவ்வாய், வியாழன் இந்த நாட்களில் பகலில் எலி கடித்தால் வருத்தந்தரும். இரவில் கடித்தால் வருத்தமில்லை. புதன்கிழமையன்று எப்போது கடித்தாலும் வருத்தமாம். வெள்ளி, திங்கள் இவ்விரண்டு நாட்களிலும் எலி கடித்தால் வருத்தமில்லை.

### புங்கவன் என்ற எலிகடி விஷத்தின் குறிகள்

பரிவு சேரெலி யோர்பதி னெட்டினி
லரிய புங்கவ னாமெலி யின்குணம்
எரியுங் கால்கை யிருகண்க றுத்திடும்
வருமரோசகம் வஞ்சக மில்லையே. (3)

(இ-ள்.) கைகால்களில் எரிசசலுண்டாகும். இரு கண்களும் கறுத்துவிடும். அரோசகமுண்டாகும்.

### உத்தமன் என்ற எலிகடி விஷத்தின் குறிகள்

ஓது முத்தம னாமெலி யின்குணங்
காது மத்திம மாயிடுங் கண்ணொளி
சேத முற்றுக்க றுத்திடுந் தேகமு
மேத முற்றிட வீங்கிடு மென்னுமே. (4)

(இ-ள்.) காது மத்திமமாகும். கண்ணொளி மழுங்கும். உடலில் துன்பம் அதிகரித்துக் கறுநிறமாகும். பின்னர் வீங்கும்.

### புரந்தரி என்ற எலிகடி விஷக்குறிகள்

ஏர் புரந்தரி யென்னு மெலிகடி
சாரி லங்கங் கறுக்குந் தளர்ச்சியாங்
கார மொத்ததுக் கடுக்குங் கடித்தவாய்
வார மொக்கவென் னோய்கொண்டு மாயுமே. (5)

(இ-ள்.) தேகம் கறுநிறமடையும். தளர்ச்சியுண்டாகும். கடிவாயில் கடுப்புவலியுடன் காரத்தை வைத்தாற்போல எரிச்சல் ஒருவாரம் முழுவதும் இருக்கும்.

### சுண்டெலியின் விஷக்குறிகள்

சுண்டு சுட்டெலி யின்குணஞ் சொல்லுவோ
மண்டு நீரிலி ரத்தம் வருத்திடு
முண்டி டுங்கடி வாய்வட்ட முற்றிடுங்
கண்டு கண்டுகொள் வீர்நுங்க ருத்திலே. (6)

(இ-ள்.) கடிவாயிலிருந்து ஊன் தண்ணீரோ அல்லது இரத்தமோ விடாமல் பொசியும். கடிவாய் வட்டமாக ஆகும்.

### அருணன் விஷ லக்ஷணங்கள்

அருண னென்னுமெ லிகடி யாயிடி
லிரும வீளையி ளைப்புவந் தெய்திடுஞ்
சரணந் தேகந்த லையுங்க டுத்துடல்
வரணங் கெட்டுமெ யங்குவ தாகுமே. (7)

(இ-ள்.) இருமல், ஈளை, மேல்சுவாசம் முதலானவை உண்டாகும். கால்கள், உடல், தலை முதலான உறுப்புக்கள் கடுக்கும். உடலின் நிறம் மாறுதலடைந்து மயக்கமுண்டாகும்.

### குலமந்திரி என்ற எலிகடி விஷத்தின் குறிகள்

வாய்ந்தி டுங்குல மந்திரி யாமெலி
யாய்ந்தி டுங்கடி வாய்வட்ட மாயிடு
மேய்ந்த தேகமு கம்வியர் வெய்திடும்
பாய்ந்தி டுஞ்சொறி யெங்கும்ப ரக்குமே. *(8)*

*(இ-ள்.)* எலிகடியின் வாய் வட்டமாக இருக்கும். தேகம், முகம் முதலான இடங்களில் வியர்வை அரும்பும். சொறியும் உண்டாகும்.

### பாண்டு புத்திரி, விருங்கண் முதலான எலிகளின் விஷம்

பாண்டு புத்திரி யாமெலி பாய்ந்திடி
லீண்டு கொப்புள மெய்திடுந் தேகத்திற்
காண்டி டீர்விரிங் கன்கடித் தாற்செவி
யாண்டி வோசைய டைக்கும டைக்குமே. *(9)*

*(இ-ள்.)* பாண்டு புத்திரி என்ற எலி கடித்தால் உடலில் கொப்புளங்கள் உண்டாகும். விரிங்கன் என்ற எலி கடித்தால் காது செவிடாகும்.

### புண்ட்ரக எலிகடியின் விஷம்

மீறு புண்ட்ரக னாமெலி வீங்கிடுஞ்
சோறு சத்தியெ டுத்திடுஞ் சொல்லுவோஞ்
சீறு மாமுகஞ் செவ்விய நாவுலர்ந்
தேறு தேகங் கைகால்வ ழங்காதே. *(10)*

*(இ-ள்.)* புண்ட்ரகன் என்ற வகை எலிகள் கடித்தால் உடலில் வீக்கம், சாப்பிட்ட ஆகாரம் சீரணியாமல் வாந்தியெடுத்தல், முகம் சிவத்தல், நாக்கு உலர்தல், தேகம், கைகால்களை அசைக்கமுடியாமை முதலான குறிகள் காணும்.

### அரா என்ற எலிகடியின் குறிகள்

சீறரா வெனும் பேரெலி தீண்டிடில்
மீறி யுச்சி யெரித்துடல் வீங்கிடு
மூறும் வாயிலோ... ... ...து
கூறினோ மிக்குணங் குணங்கண் டறியே. (11)

(இ-ள்.) தலையுச்சியில் எரிச்சல் மிகவுண்டாகும். உடலும் வீங்கும். வாயிலிருந்து எச்சில் ஒழுகும். இவை அரா என்ற எலிகடி விஷத்தின் குறிகளாகும்.

### கடைப்பல்லின் கடிவிஷ லக்ஷணங்கள்

கூறு வோங்கடைப் பல்லெலி யின்குண
மீறு பல்லுக் குடைந்திதழ் வீங்கிடு
மேறு காலயர்ந் தேய்ந்திளைப் பாயிடுந்
தேறு தந்தமுங் கூசுந் தெரிந்திடே. (12)

(இ-ள்.) இவ்வித எலிகடியால் வாயிலுள்ள பற்கள் விழுந்து உதடு தடிக்கும். கால்கள் அயர்ந்து போய் தேகம் இளைக்கும். பற்களும் கூசும்.

### பன்றிமூக்கன் எலிகடி லக்ஷணங்கள்

பன்றி மூக்க னெலிவந்து பாய்ந்திடிற்
றுன்றி மூக்கிற் துளித்துளி நீர்விழுங்
கன்றி வேர்க்கு முகத்தினிற் கண்டிடி
லன்றி யேவிரல் வீங்கு மறியுமே. (13)

(இ-ள்.) பன்றிமூக்கன் என்ற எலி கடியின் விஷத்தில் மூக்கிலிருந்து நீர் துளித்துளியாகப் பொசியும், முகத்தில் வியர்வை அரும்பும். கைவிரல்களும் வீங்கும்.

### செங்கோடன் எலிகடி விஷ லக்ஷணங்கள்

கருதிக் காணிற் செங்கோட னெலிகடி
மருவு முந்தி வலித்துக் கழிந்திடு

மிகுகண் ணுஞ்சுழன் றெங்கும் பரந்திடுந்
தருப தமுழந் தாளது நோகுமே. (14)

(இ-ள்.) செங்கோடனென்னும் எலிகடித்தால் வயிற்றில் வலியுண்டாகும். பின்னர் கழிச்சல் எடுக்கும். இரு கண்களும் சுழன்று எங்கோ விழிக்கும். முழங்கால் நோகும்.

### கருவால் எலிகடியின் குணங்கள்

எதிரில் லாக்கரு வாலெலி யின்குண
முதடு கன்றி வுடம்புக றுத்திடு
மதுவு மன்றி நகங்கறுப் பாயிடும்
விதிமு றைப்படிச் சொல்லினர் மேன்மையோர். (15)

(இ-ள்.) கருவால் எலி கடித்தால் உதடு, தேகம், நகங்கள் முதலான இடங்கள் கருநிறமடையும்.

### சதங்கை வாயெலிக்கடிக் குறிகள்

சதங்கை வாயெலி தான்கடித் தாற்குண
மிதம்பெ ருக்குமு டம்பையெ ரித்திடும்
கதம்ப டக்குடை யும்பற்க டித்திடும்
[illegible]ப்பு ரண்டுநி லத்தைத் திருந்துவே. (16)

(இ-ள்.) உடம்பில் எரிச்சலுண்டாகும். வீங்கும், உடம்புக் கடுப்பு ஏற்படும். பற்களைக் கடிப்பான். மனது கலங்கி நிலத்தில் புரளுவான். இவை சதங்கைவாயெலிகடிக் குறிகளாகும்.

### அட்டை மூஷிகக்கடி குறிகள்

அட்டை யினிற மூஷிக மாகுமேல்
விட்டு டம்பு விரிந்துபுண் ணாகிடுந்
தட்டுஞ் சேற்பந் தலைமயிர் தள்ளிடு
மொட்டு மங்க முதிர்ந்தங் குதிருமே. (17)

(இ-ள்.) அட்டை நிறமுள்ள எலிகடித்தால் உடம்பில் வெடிப்புகளேற்பட்டுப் புண்ணாகும். கோழை கட்டும். தலைமயிர் உதிரும். உடம்பிலிருந்தும் செதில் செதிலாக உதிரும்.

### செந்தலை எலிகடிக் குறிகள்

சேந்த செந்தலைச் சீரெலி வெவ்விடங்
காந்தி டும்வெயில் காணப்ப யப்படுஞ்
சாந்த மேனி சொரிந்துத டித்திடும்
போந்து போயந் நீரும் பொசியுமே. *(18)*

(இ-ள்.) கடித்த இடத்தில் எரிச்சல் அதிகரிக்கும். வெயிலில் நோயாளி போகப் பயப்படுவான். உடம்பில் அரிப்பு அதிகரித்துத் தடிக்கும். பின்னர் துர்நீர் கசியும். இவை செந்தலை எலிகடிக் குறிகள்.

### அரணைவாலெலி கடிக்குறிகள்

அரணை வாலெலி யாகி லதன்குணம்
எரியுந் தேகஞ் சுள்ளெனுஞ் சொரிந்திடுஞ்
சரண மாதி பிரண்டையின் தண்டுபோ
லுருளும் வாயி லுமிழ்ந்திடும் நீரதே. *(19)*

(இ-ள்.) தேகத்தில் எரிச்சல், சுள் சுள்ளென்று அரிப்பெடுத்தல், கால் கைகள், பிரண்டையின் தண்டுபோல் சொறசொறப்பாதல், வாயிலிருந்து சதா உமிழ்நீர் சுரத்தல் ஆகிய இக்குறிகள் காணும். இவை அரணைவால் எலிகடிக்குறிகள்.

### சிங்கதந்தன் என்ற எலிகடிக் குறிகள்

சிங்க தந்த மெனுமெலி தீண்டிடில்
அங்கு தந்த முயர்ந்து கறுப்பதாம்
இங்கு தொண்டையு மூக்கும் வியர்ந்திடுஞ்
செங்கை காலும் வியர்வுட னெரியும். *(20)*

(இ-ள்.) பற்கள் உயர்ந்து நறுநிறமடையும். தொண்டைக்குழி, மூக்கு, கால்கள், கைகள் முதலான இடங்களில் வியர்வை அதிகரித்து எரிச்சலும் உண்டாகும். இவை சிங்கதந்த எலிகடியின் குறிகள்.

*18-வித எலிகடி ரோகம் முற்றும்.*

**18-வித எலிகளின் பெயர்**

| | |
|---|---|
| புங்கவன் | கடைப்பல்லன் |
| உத்தமன் | பன்றிமூக்கன் |
| புரந்தரி | செங்கோடன் |
| சுண்டெலி | கருவாலெலி |
| அருணன் | சதங்கைவாயெலி |
| குலமந்திரி | அட்டைமூஷிகம் |
| பாண்டுபுத்திரி | (ஜலூகா மேனியன்) |
| விருங்கன் | செந்தலையெலி |
| புண்டரகன் | அரணைவாலெலி |
| அரா | சிங்கதந்தன் |

***குறிப்பு:-*** பாண்டுபுத்திரி, விருங்கன் என்ற இரு எலிகளும் ஒரே ஜாதியைச் சேர்ந்தவை என வைத்துக்கொண்டால் 18-வகைகள் ஆகும்.

# ஸர்ப்ப விஷ நிதானம்

காசிபற் குற்றதேவி கத்துரு வினதை யென்போ
ரேசுகத் துருவின்மைந்த ரிருநூற்று நாற்பத்தெட்டாம்
வீசிய பெயர்கொள் பாம்பில் மிக்கதாந் தலைவ ரெண்மர்
மாசிலா வட்டநாக மென்றுரை வகுத்தவாறே. (1)

(இ-ள்.) காசியபருக்குக் கத்துரு, வினதை என்று பெயருள்ள இரு மனைவியர். அவர்களுள் கத்துருவிற்கு மைந்தர்களாக பாம்புகள் 248 பிறந்தன. இவர்கள் தலைவர் எட்டுப்பேர். இவர்களுக்கே அஷ்ட நாகங்கள் என்று வேறு பெயர் உண்டு.

### பாம்புகளின் உற்பத்தி

தேனமர் குழலி! கேளாய்! திண்ணமாய் மண்ணிலூறு
முனமி லரவின் தோற்ற முண்மையா யுரைக்குங் காலை
ஆனியா மாதந்தன்னி லருள்பெறப் புணருநாகம்
ஆனதோர் திங்களைந்தி லமைந்தவக் கருவு முற்றும். (2)

(இ-ள்.) ஆனி மாதத்தில் பாம்பு ஜாதிகள் புணரும். பின்னர் கரு வளர்ச்சியடைய 5 மாதங்களாகும்.

### இதுவுமது

ஆவணி★யாடி மாத மாடர விளைத்துச் சீறிக்
காவணி கார்த்தி கைக்கே காதலாய் முட்டையிட்டுப்
பூவணி யானார் தங்கள் பொற்பாதம் புரிந்து போற்றி
யீவன மடையி லேறி யேழுநாட் கிடக்குமென்றே. (3)

(இ-ள்.) ஆவணி, ஆடி முதலான மாதங்களிலும் இவை கருக்கொள்வதனால் அவைகள் இளைக்கும். கார்த்திகை மாதம் முட்டையிடும். பின்னர் 7 நாட்கள் அடைகாக்கும்.

### இதுவுமது

இருநூற்று நாற்பத்தெட்டு முட்டையிட்டதனில் முட்டை
இருநூற்றோ டிருபத்தெட்டு மேழு நாள் விழுங்கு மென்கப்
பரிமித்த நான்கு சாவாம் பதினாறும் நல்ல முட்டை
யொருமிக்கப் பத்துமாறு மொத்துடன் பொரித்துவூறும்.(4)

---

★ ஆனியு மாடி மாத மாடர வாய்ந் திழைந்து.
ஆவணியாடி மாதம் அருளுடனாந்தோ மைந்து - அகஸ்தியர் சர்ப்பாரூடம்.

(இ-ள்.) 248 முட்டைகளில் 228 முட்டைகளை அடைகாத்த ஏழுநாட்களுள் உண்டுவிடும். பாக்கி 4 முட்டைகள் அழிந்துபோகும். பாக்கி 16 முட்டைகளும் பொரித்துக் குட்டிகள் ஊறும்.

### இதுவுமது

நாலாறு காலுமுண்டாம் நவின்றனர் மயிரே போல
நாலேகு நாட்செல் காலம் ஞாயறு நோக்கி நஞ்ச
மேலேறு கொளுமரவம் வெவ்வேறு தோற்றமாகுஞ்
சூலேறு விரியன் பாம்பு தேள் முதற் பலவுந் தோன்றும். (5)

(இ-ள்.) அக்குட்டிகளுக்கு மயிரிழைபோல் 24 கால்கள் உண்டு. 28 நாட்கள் சென்றபின்னர் அவை சூரியனை நோக்கி ஆடி நஞ்சைப் பெற்றுக்கொள்ளும். விரியன் பாம்பினின்று தேள் முதலானவைகளும் ஜனிக்கும்.

**குறிப்பு:-** 20 நாள் சட்டை கழறும். அப்போது பாம்புகுத்தத்துண்டு விரியன் பாம்பு சூலேறினால் முதுகு விரிந்து குஞ்சு பொரிக்கும். இதிலே தேள் முதல் சிலந்தி பலவும் உண்டாயிருக்கும். (அகஸ்தியர் சித்ராரூடம்)

### பாம்பின் ஜாதிகள்

வேதிய னிரத்தமேனி வெந்நிற லரசன் பொன்னாம்
நீதி சேர் வணிகன் றானு நிறமது மணியின் மேனி
சோதிவெண்ணகையாய்! கேளாய்! சூத்திரன் கரியனாகும்
பூதலித் திவர்கள் சென்று பொருந்திடம் புகலலுற்றேன். (6)

(இ-ள்.) பிராமண சர்பங்கள் செந்நிறமாக இருக்கும். அரச ஜாதியெனில் மஞ்சள் நிறமாக (அதாவது பொன்) இருக்கும். வணிக ஜாதிப் பாம்புகள் வெண்ணிறமாக இருக்கும். சூத்திர ஜாதிகளோவெனில் கருநிறமாக இருக்கும்.

### சர்ப்பஜாதிகள் இருக்குமிடம்

மறையவன் தெய்வஞ்சேரும் வாய்புடை யரசன் சென்றாங்
குறி மலி விருட்சஞ்சேரு மூனமில் வணிகன் றானுந்
தரையினகர்ந்து சென்று தான் மனையேறி வாழும்
பொறையுடை சூத்திரந்தான் புற்றினி லடையு மென்றே. (7)

(இ-ள்.) பிராமணஜாதி சர்ப்பங்கள் தேவாலயங்களில் வாழும். க்ஷத்திரிய சாதிகள் மரங்களில் வாழும். வைசியசாதிப் பாம்புகள் வீடுகளில் வசிக்கும். சூத்திரஜாதி சர்ப்பங்கள் புற்றுகளில் தங்கும்.

### சர்ப்பங்களின் ஆகாரங்கள்

நலமலி வாயுந்தன்னை நான் மறையாள னுண்ணும்
மலர்மிகு பூவினல்லி யரசனே யமுது செய்யுங்
குலமலி வணிகனுண்ணுங் கொழுவிய வெலியோ
டோந்தில்
தலமிகு முழவ னுண்ணுந் தவளையு மீனுந் தானே. (8)

(இ-ள்.) மறையோன் ஜாதி சர்ப்பங்கள் காற்றையே புசிக்கும். அரச ஜாதிப்பாம்புகள் புஷ்பங்களின் வாசனை தாதுக்கள் முதலியவைகளை உண்ணும். வணிகஜாதிப் பாம்புகள் எலி, மூஞ்சூருகளை உட்கொள்ளும். உழவ ஜாதியோவெனில் தவளை, மீன் இவைகளைச் சாப்பிடும்.

### பாம்புகள் ஆடும் லக்ஷணமும், படங்களின் லக்ஷணமும்

பூசுரன் வானைநோக்கும் போர்புரியரசன் செவ்வே
யாசிலா வணிகராகி லணிந்திரு பாதம் நோக்குங்
கூசிய வுழவனாகிற் குவலையம் நோக்கி யாடும்
வீசிய படங்கள் சங்கு சக்கர வில் புட்காலே. (9)

(இ-ள்.) பிராமண★ ஜாதி சர்ப்பங்கள் வானை நோக்கி ஆடும். க்ஷத்திரிய சாதிப் பாம்புகள் பக்கங்களில் பார்த்து

★ க்ஷத்திரிய சர்ப்பங்கள் சம பார்வையாகவும், வைசியம் இருபுறங்களையும் பார்த்து ஆடும் என்று அகஸ்தியர் சர்ப்பாரூடத்தில் காண்கிறது.

ஆடும். வணிக சர்ப்பங்கள் எதிராளியின் பாதங்களை நோக்கி ஆடும். உழவச்சர்ப்பங்கள் பூமியைப் பார்த்துக்கொண்டு ஆடும்.

பாம்பின் படத்தில் சங்கு, சக்கரம், வில், பறவைகள் இவைகளைப் போன்ற உருவங்கள் முறையே, பிராமண, க்ஷத்திரிய, வைச்ய, சூத்திர ஜாதி சர்ப்பங்களில் காணும்.

## பாம்பில் விஷம் நிற்குமிடம்

விடநிலை நிற்கும்போது விரிதலை யடைந்து நிற்கும்
படம் விரித் தாடும்போது கண்ணின தாகுமப்பாற்
கடியுறிற் றொண்ணூற் றெட்டு மாத்திரை கடிவாய் நிற்கும்
விடநிலை சொன்னோமின்னம் வேறுள விஷங்கள்
சொல்வாம். (10)

(இ-ள்.) சாதாரணமாயிருக்கும்போது விஷம் தலையில் தங்கியிருக்கும். படமெடுத்தாடும்போது விஷம் கடைக்கண்களில் தங்கும். கடித்தால் அக்கடி வாயில் 98 மாத்திரை காலம் தங்கும்.

## விஷ ஜந்துக்களாவன

அரிக்கு நாகந் தேள் வழலை யணிநீர் பாம்பு மண்ணாக
மெரிக்கு மெலிவன் மண்டெலியு மெழில்கொள்
சாரையாடரவம்
புரிக்கு மெறும்போடறுபுள்ளி பூரமரணைச் சிறுபாம்பு
பெருத்த விருமண் சிலந்தியென்று பேணியறியும்
பெரியோரே. (11)

(இ-ள்.) நாகம், தேள், வழலை, நீர்ப்பாம்பு, மண்டெலி, மண்பாம்பு, சாரை, நல்ல பாம்பு, எறும்பு, அறுபுள்ளிப் பூரான், அரணை, சிறு பாம்பு, சிலந்தி முதலியன.

## தூதுவன் வரு லக்ஷணம்

பெரிதாகிய நீள்கொடி யானையோடும் பெரிதாகிய
சீயமதன்றிசைமேல்[1]
பரிவாலொரு தூதுவன் வந்திடுமே படநாகமதென்
பதறிந்துரை நீ
பெரியார் புகைமே[2] லொருவன் கொழுமே லெழிலார்
வழலைக் குலமென்றறி
இரையார்கொடு நாயறுதன்றிசைமேற்[3] கொடியதாகிய
மண்டெலி யென்றறிக. (12)

(இ-ள்.) பெரியதான கொடி, யானை இவைகளுடன் தெற்கு திசையைப் பார்த்துக்கொண்டு ஒரு தூதன் வந்தால் கருநாகம் தீண்டியிருக்கிறது எனத் தெரிந்துகொள்ளவும். தென்கிழக்கு திசையைப் பார்த்துச் சொல்லுவோனாகில் வழலை சர்ப்பம் கடித்திருக்கிறது என்றும், தென்மேற்குத் திசையைப் பார்த்து சொன்னேனாகில் மண்டெலி சர்ப்பம் தீண்டியதாகவும் தெரிந்துகொள்ளவும்.

## இதுவுமது ★

வரு வாயுவின்[4] வந்து விளம்பிடுமேல்
வலிகின்றவ ராவது வன்கழுதை
பெரிதாகிய காகம[5] தன்றிசைமேல்
பெராவிரு விரியன் மனதுபொறி மின்னிருளா
சரு செங்கதிர் சோமன் யமனெனி
லார்வரு ணன்னிவை தன்றிசைமேல்
மருளா தொரு தூதுவன் வந்திடுமேல்
மகனாமது வாய்த்த மா மகளே. (13)

(இ-ள்.) தூதன் வடமேற்கு மூலையைப் பார்த்துச் சொன்னானால் கழுதை விரியன் என்று தெரிந்து கொள்ளவும். வடகிழக்கு திசையைப் பார்த்துச் சொன்னால்

---

1. தென்திசை, 2. தென்கிழக்கு, 3. தென்மேற்கு, 4. வட மேற்கு, 5.வடகிழக்கு.

★ பொருள் சரியாக விளங்கவில்லை.

விரியன் பாம்பு என்று சொல்லவும். கிழக்கு, மேற்கு, வடக்கு அல்லது தெற்கு திசையையோ பார்த்துச் சொன்னால் நோயாளி பிழைப்பான்.

***குறிப்பு:-*** அகஸ்தியர் சித்ராரூடத்தில் மேற்கூறிய செய்யுட்கள் சிறிது வேறாகக் காணப்படுகிறது. அவற்றிலிருந்தும் பொருளைத்திட்டமாகச் சொல்ல இயலவில்லை. அவை வருமாறு.

பெரிதாகிய நீள் கொடியானை யொடும்
பலமாயினரிய மோர்டேரதன்னிற்
பரிவாலொரு தூதுவன் வந்திடுமேல்
படர்நாகமதென் பதறிந்துரைநீ
திரியாபுரமூன் றெரிசெய்தபிரான்
திருமா மென்னாவில் விழுத்தவ்னா
னரியார் வாதங்கள் முன்னாரை செய்த
அழகால் வருகின்றதோ ரற்புதமே. (56)

எரியாற் புகைமே லொருவன் வருமே
லெழிலாற் வழலைக் குலமென்றறி நீ
குரையாகிய ஞாயிறு தன் றிசைமேற்
கொடிதாகிய மண்டெலி யென்றறிநீ
வரையாநில வந்து விளம்பிடுமேல்
வலிகின்ற னவர் துவண் கழுதை
பெரிதாகிய கரமதன் றிசைமேல்
பெயரார் வரிமன் னினுபொறியே. (57)

இருளா சருசெங்கதிர் சோமனுடன்
எமனார் வருணன் றிசை மேல்
மருளாதொரு தூதுவன் வந்திடுமேல்
மதியாக மேல் வாரணமானென்றறி நீ
யிருளா சுருக்காக மொடங்கி சொன்னால்
லெழாய் வரு மாதரை யென்றறி நீ
யிருளா தொரு காயதத்தன் மேல் வருமே
லதுமாடன வோதின ராடரவே. (58)

### பாம்புகடி வகைகள்

அரவு கடித்த தென்றறிந்த வப்போ திடக்கை ரீங்காரம்
விரைய நிறுத்தி முகந்தாக்கால் தாழைநாறில் வெம்பரவம்
பரவுகின்ற பாதிரியே வழலை புளியேல் பகர் விரியன்
எரி மல்லிகை மண்டெலியாகும் மிலுப்பைச் சுக்குச்
சிறுபாம்பே. (14)

(இ-ள்.) பாம்பு கடியுண்டவனின் கடி வாயில் முகந்து பார்த்துத் தாழைமணம் வீசினால் நல்லபாம்பு என்று தெரிந்துகொள்ளவும். பாதிரிப் பூவின் மணம் வீசினால் வழலை என்றும், புளியம்பூவின் வாடை வீசினால் விரியன் என்றும் மல்லிகை மணம் வீசினால் மண்டெலி என்றும், இலுப்பைப் பூவின் மணமோ, சுக்கின் மணமோ வீசினால் சிறுபாம்பு என்று தெரிந்துகொள்ளவும்.

### தூதன் லக்ஷணம்

பாம்பு கடித்த தெனமுகந்தாற் பழையகையே நாறுமெனிற்
பாம்பினாலே விஷமில்லைப் பரிந்து தூத னாகவந்தான்
பாம்பின் பெயரை முன்சொல்லிற் பகரும் விஷத்தால்
மாண்டிடுவன்
பாம்பின் பெயரைப் பின் சொல்லிற்பகரும் விஷத்தாற்
பயமில்லையே. (15)

(இ-ள்.) பாம்பின் கடிவாயை முகரும்போது யாதொரு தனிப்பட்ட நாற்றமும் இல்லையெனில் பாம்பின் விஷம் இல்லை என்று தெரிந்துகொள்ளவும். வருகின்ற தூதன் பாம்பின் பெயரை முன்னால் சொல்லி வைத்தியரை அழைத்தால் கடியுண்டவன் விஷத்தினால் இறப்பான் என்று தெரிந்துகொள்ளவும். பாம்பின் பெயரைப் பின்னர் உரைத்தானாகில் விஷத்தினால் யாதொரு பயமும் இல்லை.

***குறிப்பு:***- இச்செய்யுள் அகஸ்தியர் சித்திராரூடத்தில் கீழ்க்கண்டபடி காணப்படுகிறது.

பாம்பு கடித்ததென மொழிந்தார் பழயகையதோனாநிற்
பாம்பின் விஷமோ வொன்றில்லை பரிந்து தூதனவன் வந்து
பாம்பின் பெயரை முன் சொல்லிற் பதருமவன்பேர்
பின்சொல்லில்
பாம்பின் விஷத்தால் சாவதெனப் பகர்ந்தார் சாலப்
படு(மு)தற்றார். (54)

### கடிவாயில் பற்கள் பதித்த லக்ஷணம்

அரவு கடித்த தென்றறிந்து அப்போதிடக்கை ரீங்காரம்
பரவநிறுத்தி நோக்கினாற் பழைய கையே விடமில்லை
விரைய வெளுக்கி லொன்றாய்ப்பல் மேவுஞ்
செம்பொன்னிரண்டாகும்
மருவுமிரத்த மூன்றாகும் வண்ணங் கருகில் நாலாமே. (16)

(இ-ள்.) கடிவாயில் கையை அழுத்திவைத்து முகந்து பார்க்கும்போது தனியான வாசனை இல்லாமலிருந்தால் விஷமில்லை எனத்தெரிந்து கொள்ளவும். கடிவாய் வெளுப்பாக இருந்தால் 1 பல் பட்டதாகவும், செம்பொன்னிறமானால் 2 பற்கள் பட்டதாகவும், 3 பற்கள் பதிந்தால் சிவப்பு நிறமாகவும், 4 பற்களும் ஒருங்கே பதிந்தால் கருநிறமாகவும் ஆகும் என்றும் அறியவும்.

### தூதனுடைய சொல்லின் லக்ஷணங்கள்

தூயதூதன் சொல்லதனைத் தொகுத்து மூன்று கூறாக்கி
•யாயுமளவி லங்கொக்கி லங்கு சற்றும் விடமில்லைப்
போயங் கிரண்டாமெழுத்தாகிற் போன்றுதலில்லை
விஷமுண்டு
மாயுமூன்றா மெழுத்தாகில் மாண்டாரென்று மதித்திடுமே.

(இ-ள்.) தூதன் உரைத்த சொற்களின் எழுத்துக்களைக் கூட்டி 3 கூறாக்கி பாக்கியுள்ள எழுத்து 1, ஆனால் விஷமில்லை. 2 ஆனால் விஷமுண்டு, ஆனால் பிழைத்து விடுவான். 3 எழுத்தானால் கடியுண்டவன் இறப்பான் என்று

ஊகித்துக்கொள்ளவும். உதாரணமாக பாம்பு கடித்துவிட்டது என்று சொன்னானானால் மொத்த எழுத்துக்கள் 11ஆன படியால் பாக்கி 2 ஆகவே விஷமுண்டு ஆனால் பிழைத்துவிடுவான். என்று அறிந்துகொள்ளவும்.

### தூதன் வரும் லக்ஷணம்

இயங்குந் திசைமேல் வருந்தூதன் யியங்காத்திசைமேல்
வருமாகில்
நயங் கொண்டொருவன் தடியுண்டு நடந்தேவரினும்
பிணந்தானே
இயங்காத் திசைமேல் வருந்தூதன் யியங்குந் திசைமேல்
வருமாகிற்
புயங் கொண்டொருவன் றாங்கிவரும் பிணந்தானென்று
முணர்ந்தானே. *(18)*

இயக்கமற்ற நாடியின்மே லீண்டு தூதனவன் வந்தா
லியற்ற ஆயுள் மிகவுண்டா மிவைகா லிரண்டு மொத்தோடி
லியக்கவேண்டாம் விடமில்லை யிடம் பின்னாகில்
விடம்பெரிதாம்
மயக்க மில்லை முன்வலமாம் வாயு நடப்பின்
வகையிதுவே. *(19)*

(இ-ள்.) வைத்தியர் தன்னுடைய சரம் நடக்கும் திசையிலிருந்து இடமோ அல்லது வலமோ தூதன் வந்து எதிர் திசையில் வந்து நின்றானாகில் பாம்பு கடியுண்டவன் இறப்பது நிச்சயம். அதேபோல் வைத்தியரின் சரம் (மூச்சுக்காற்று) நடப்பதின் எதிர்த்திசையிலிருந்து ஒரு தூதன் வந்து சரம் நடக்கும் திசையில் வந்து நின்றுகொண்டாலும் நோயாளி இறப்பான். வைத்தியருக்கு சுழுமுனை ஓடிக்கொண்டிருக்கையில் தூதன் வந்து கூப்பிட்டால் நோயாளி பிழைத்துவிடுவான்.

### விஷம் மிருதியாகும் சந்தர்பங்கள்

தெய்வத்தான மரசுபுளி சீர்முச்சந்தி சுடுகாடு
மையிற் குளத்திற் கரைமடையில் வகுத்த புற்றிற்
கிணத்தடியில்
மெய்யிலுறக்கந் துறந்து தரிலிலங்கு மிடத்திற் கடித்திடுமே
லுய்யக்கடித்தக் கடியல்ல வுறக்கக் கடித்த கடிதானே. *(20)*

(இ-ள்.) தெய்வசந்நிதி (கோவில்) அரசமரம், புளியமராம், முச்சந்தி, சுடுகாடு, குளத்தங்கரை, வாய்க்கால் கரைப்புற்று, கிணத்தடி முதலான இடங்களில் மிகச்சாதாரணமாகப் பாம்பு கடித்தால் கெடுதல் இல்லை. பாம்பு உறக்கக் கடித்தால்தான் அபாயமானது.

### பாம்பு கடிக்கக்கூடாத நக்ஷத்திரங்கள்

ஆதிரை பரணி யார லாயில்முப் பூரங்கேட்டை
தீதறு விசாகஞ் சோதி சித்திரை மகமீ ராறு
மாதனங் கொண்டார் தாரார் வழிநடைப்பட்டார் மீளார்
பாய்தனிற் சாய்ந்தார் சாவார் பாம்பின் வாய்ப்பட்டார்
கெட்டார். *(21)*

(இ-ள்.) திருவாதிரை, பரணி, ஆயில்யம், பூரம், பூராடம், பூரட்டாதி, கேட்டை, விசாகம், சோதி (சுவாதி) சித்திரை, மகம் முதலான நக்ஷத்திரங்களில் பணம் வாங்கியவர்கள் அதனைத் திருப்பித்தறார்கள். நீண்டவழி நடப்பவர்கள் திரும்புவது கடினம். வியாதியில் படுத்தவர்கள் மரணமடைவார். பாம்பினால் கடியுண்டவர் சாவது நிச்சயம்.

### பாம்பு கடிக்கக் கூடாத இடங்கள்

உள்ளங்கா லங்கைசந்து நெற்றிநாடி முலைக்கழுத்துத்
தெள்ளும் புருவ மூக்கினொடு செப்புகின்ற நவவாசல்
விள்ளுந்[1] தொப்புள் ளிவை யொன்றில் வெறியாலரவந்
தீண்டிடிலோ
புள்ளுக் கரசன் றான்வரினுந் தீராதென்று புகன்றனறே. *(22)*

---

1. வெள்ளங்கை கீழ் வயிற்றில் என்றும் பாடபேதம்.

(இ-ள்.) உள்ளங்கால், உள்ளங்கை, தொடையிடுக்கு, நெற்றி, மார்பு, கழுத்து, புருவம், மூக்கு, நவத்வாரங்கள், (தலையில்7, மூத்திரத்வாரம், மலத்வாரம் ஆக 9) தொப்புள் முதலான ஏதேனும் ஒரு இடத்தில் பாம்பு கோபத்துடன் கடித்தால் கருடபகவான் வந்தாலும் அவ்விஷத்தைப் போக்க முடியாது.

### கடிவாயின் லக்ஷணம்

*காளியே காகபாதங் காளாத்திரி யெழு முக்கோணம்*
*நாளுடை1 யமனார் தோட்டி நாவருந்தூதன் வில்லாம்*
*வாளினை வென்றகண்ணாய்! வையகத்தவர்கள் மெய்யிற்*
*தோளுடையரவந்தீண்டிற்2 குறித்தவாய் கடியின்*
*கோலம். (23)*

### கடியில் ஸாத்யாஸாத்யம்

*தந்தமொன் றுகிலஞ்சஞ் சிறிதெனக் கிரண்டாந் தந்த*
*மந்திர மதனால் தீரும் மருந்தினால் மூன்றாந் தந்த*
*மிந்திரர் முதலாந் தேவர் யாவரு முனிவர் தாமும்*
*வந்தவர் பொழுதுந் தீரா வடுவுறும் நாலாம் பல்லே. (24)*

(இ-ள்.) ஒருபல் மாத்திரம் கடிவாயில் பதிந்திருந்தால் அஞ்சவேண்டாம். விஷம் சிறிது என்று உணரவும். இரண்டு தந்தங்கள் பதிந்திருந்தால் மந்திரத்தினால் விஷம் மீளும். 3 தந்தங்கள் கடிவாயில் அழுந்தியிருந்தால் மருந்தினால் தீரும். 4 பற்களும் கடிவாயில் அழுந்தினால் எந்த தேவர் முனிவர் வந்தாலும் விஷம் இறங்காது.

### கடிவாயின் அஸாத்ய லக்ஷணங்கள்

*கடித்தவாய் தடிக்கினுங் கடுத்தெரிந்து வீங்கினும்*
*நடுக்கணீர் மிகப்பரந்து நாவுலர்ந்து நிற்கிலுங்*
*குடித்தவாய் மருந்துவட்டி நெஞ்சினின்று கொட்டினும்*
*படித்த மந்தி ரங்களாற் பயன்க ளேது மில்லையே. (25)*

---

1. நீளிய யமன்துரட்டி நெடிய யமதூதன் வில்லாம் - என்றும்
2. கோளற வுயர்த்தகாலை கொண்டவாய் விடுவன் காலம் - என்றும் பாடபேதம்.

(இ-ள்.) பாம்பு கடிபட்ட புண்ணின் வாய் தடித்தாலும், கடுத்தல் எரிச்சலுடன் வீங்கிவிட்டாலும், அதிலிருந்து ஊன்நீர் வடிந்தாலும் விஷம் நீங்காது. நோயாளிக்கு அதிகமான நாவறட்சி ஏற்பட்டாலும், மருந்துகளைக் கொடுக்கும்போது அவை உட்செல்லாமல் வாந்தியானாலும் பயனில்லை. மந்திரங்களும் பலியாது.

***குறிப்பு:-*** *3* ஆவது வரியில் "குடித்திடும் மருந்துகள் குமட்டியங் கெடுப் பினுங்" எனும் பாடபேதம்.

**இதுவுமது**

கடித்தபோதே கண்சிவந்து பல்லுமுகமுங் கருத்திடினுங்
கடித்தபோதே யவர்கழுத்து வணங்கிவரினுங்
கலங்கிப்போய்
கடித்தபோதே மூத்திரமு மலமுஞ் சிவந்தே கழிந்திடினுங்
கடித்தபோதே யவர்தமக்குக் காலன் வரவென்றறிவீரே. *(26)*

(இ-ள்.) பாம்பு கடியுண்டவனின் கண்கள் சிவந்து, பற்கள், முகம் இவை கருநிறமாகி, கழுத்தும் நிலை நிற்காமல் இருந்தால் அவன் பிழைப்பதரிது. நோயாளி நிலை தடுமாறிப்போனாலும் மலமும் மூத்திரமும் சிவந்து இறங்கினாலும் அவன் இறப்பது நிச்சயம்.

**வேகமறிதல்**

வேறாநிற்கு முதல்வேகம் வியர்த்துவெதும்பு மிருவேகஞ்
சோராநிற்கு மூவேகம் சோற்றைக் கக்கும் நால்வேகம்
மாறாவஞ்சி லிக்கட்டா மாறாவேக மறிவழியும்
மேராமேழி விமைக்கொட்டு மெட்டாம் வேகம்
பட்டாரே. *(27)*

முதல் வேகம்-உடலும் மனதும் தனியாகும். இரண்டாம் வேகம்-வியர்வை உண்டாகும். உடம்பு கன்றிப்போம். மூன்றாம் வேகத்தில் உடல் சோர்வடையும்.

நான்காம் வேகத்தில் சாப்பிட்ட சோறு வாந்தியாகும். ஐந்தாம்வேகத்தில்உடல்நிலை கவலைக் கிடமாகும். ஆறாம் வேகமாகில் அறிவு பேதிக்கும். ஏழாம் வேகத்தில் கண்கள் ஒளியிழந்து கொட்டாது. எட்டாம் வேகத்தில் உயிர் பிரியும்.

***குறிப்பு:***- வேகம் என்பது உடலில் பாம்பு விஷம் பரவப்பரவ அதனாலுண்டாகும் குறிகள். இவை பாம்புகடி விஷத்தின் அளவிற்குத் தக்கபடி வெகு சீக்கிரத்திலோ அல்லது சிரமமாகவோ உண்டாகும்.

"மாறாவஞ்சிற் கண்ணிமையா மாறாவேக மறிவழிக்கும்
மேராவேழில் விரை விரைக்கும் எட்டாம் வேகம் பட்டாரே"
என்ற பாடபேதம்.

**அவைக்குறியறிதல்**

அண்டம் நான்றிடில் வாயகங் காந்திடில்
விண்ட கண்விழி மெய்நடு நின்றிடி
லுண்டு சீவனென் றோதி மயங்குவீர்
கண்டு கொள்ளிது காலனு மாகுமே. (28)

(இ-ள்.) அண்டகோசத்தில் புண்களுண்டாகி, உள்வாயும் வெந்துபோய், கண் விழியும் அசைவின்றி நின்றுவிட்டால் உயிர் போய்விட்டது என்று தெரிந்து கொள்ளவும். நோயாளி பிழைத்துவிடுவான் என்று மயங்கவேண்டாம்.

***குறிப்பு:***- இச்செய்யுள் அகஸ்தியர் சர்ப்பாரூடத்தில் கீழ்க்கண்டபடி காணப்படுகிறது.

"அண்டம் நான்றில் வாயுங் கருத்திடில்
விண்டகையும் விரலும் நிமிர்ந்திடிற்
உண்டுதா னுயி ரென்று லகோர் சொல்
கண்ட காரணங் காலனுமாகுமே."

### இதுவுமது

கருங்கண் ணிரண்டுஞ் சிவந்திடினுங்
சுரமுங் கழுத்துந் தாழ்ந்திடினு
மொருங்கு வாய்நீ ருலர்ந்திடினு
முகிரும் பல்லுங் கறுத்திடினும்
பொருங்கிண்ணரக்கன் சரந்துரக்கப்
போன்றுஞ் சேனையன்றுய்ய
மருங்கிலனுமன் கொண்டு வந்த
மருந்தே வரினு மீளாதே. (29)

(இ-ள்.) கண்கள் சிவந்து கையும், கழுத்தும் நிற்காமல் விழுந்து விட்டாலும், வாய்நீர் உலர்ந்துவிட்டாலும், எகிர், பற்கள் முதலானவை கறுநிறமானாலும், அவன் பிழைப்பது அரிது. அனுமான் கொண்டுவந்த (சஞ்சீவி) மருந்தாலும் மீளமாட்டான்.

### அடக்கமறிதல்

ஊன்றிடக் குடோரியாடி லுதிரமே வருவதேனு
மீன்ற மாசிரத்து ரோம மிழுத்திட முறியு மேனு
மான்ற கால் கைகள் நெட்டி யதுமிக வருவதேனும்
தோன்றினு மாயுளுள்ளே வுண்டெனத்துணிந்து சொல்லே.

(இ-ள்.) தலையில் குடோரி செய்யும்போது (கீறும்போது) இரத்தம் வெளியானாலும் சிரத்திலுள்ள மயிரை இழுக்கும்போது அது முறிந்தாலும், கை, கால்கள் நெட்டி வந்தாலும் (இழுக்கும்போது சொடுக்கினாலும்) ஆயுள் (உயிர்) இருக்கின்றதெனக் கண்டுகொள்ளவும்.

### இதுவுமது

மேலதே சுடரதாகில் மேலதே யாவியென்கச்
சாலவே சுடர் கீழாகிற் றகுதிசே ருயிருங்கீழாங்
கோலமாம் பக்கமாகிற் குறித்திடு முயிரும் பக்கம்
நீலமாம் விழியாய் நேரே சீவனும் நேரதாமே. (31)

(இ-ள்.) தீபத்தின் ஒளிச்சுடரே நோக்கும்போது அச்சுடர் மேலாகத் தெரிந்தால் உயிரும் மேல் நோக்கியும், தலைகீழாகவும், பக்கவாட்டில் தெரிந்தால் உயிரும் பக்கவாட்டில் இருப்பதாகவும், நேராகத் தீபச்சுடர் தெரிந்தால் உயிரும் நேராக இருப்பதாகத் தெரிந்துகொள்ளவும்.

### இதுவுமது

பிரம்புகொண் டடித்திடிற் பிரம்புபோல வீங்கினும்
பீதமேறி வாயுவுள் ளடக்கி மெய் வெதும்பினுங்
குரும்பைபோ லுடம்பெலாங் குணம்படச்சி வக்கினுங்
கும்பநீர் சொரிந்திடக் குளிர்ந்து கூசுமாகினும்
நிரம்பு நாடி யொன்பதும் திறம்படச்சி வக்கினும்
நீண்டநீரில் விட்டிட நிலத்தளவு தாழ்கினு
முரம்பெறு விடங்களாவி யுண்டதில்லை யென்னவா
முள்ளடங்கி நின்றதாவி யென்னலாகு முண்மையே.

(இ-ள்.) பிரம்பால் பாம்பு கடியுண்டவனை யடிக்கையில் அந்த இடம் வீங்கினாலும் உடல் மஞ்சணித்து வாயுவுள்ளடங்கினாலும், உடல் சிவந்தாலும், வியர்வையரும்பிக் குளிர்ந்து கூசினாலும் 9 நாடிகளும் சிவந்தாலும் உயிர் போகவில்லை என்று கொள்ளவும்.

### விரியன் முதலான பல பாம்பின் குணம்

வழலை கடித்த வாயுதிரஞ் சொரிந்து நாவி வழுவழுக்கும்
நிழல் சேர் விருமல் குருதியுடன் நிணமுஞ் சேருங்
கற்றடியே
யழலே யெயிரு படுங் கடிவா யழன்று நோகும்
பெருஞ்செய்யான்
சுழலாஞ் சிறுநீர் மஞ்சளென்னச் சோரச்சோரச்
சோர்ந்திடுமே. (33)

(இ-ள்.) வழலை கடித்த வாயிலிருந்து இரத்தம் விடாமல் சொரியும் நாக்கும் வழவழப்பாகும். விரியன்

பாம்பு கடித்தால் இரத்தத்துடன் துர்நீரும் கசியும், கண்ணாடி விரியன் கடித்தால் கடிவாயில் தாங்கவொண்ணாத அழற்சியுண்டாகும். பெருஞ்செய்யான் கடித்தால் சிறுநீர் மஞ்சளாக இறங்கும்.

இந்த சர்ப்ப விஷத்தையும் நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு வியாதியுடனே சேர்த்தார்கள். ஆதலால் அறிவோர்களறிவாலறியவும்.

**சர்ப்பவிஷ நிதானம் முற்றும்.**

## காச நிதானம்

அரசரோ கந்தனக்கே யமைச்சராங் காசரோகம்
தரை மிசை மாந்தர் தம்மைச் சார்ந்திடும் வகையோதன்னி
லுரமிசை கிலேசந் தங்கு முறுதுய ராலு மாதர்
தருமயலாலுந் தூமஞ் சார்துகள் முகர்தலாலும். *(1)*

இயங்கிய பிராணவாயு மேனோக்கி இருமலுண்டாய்
தியங்கிய வாதகாசம் பயித்தியஞ் சேர்ந்த காசந்
தயங்கிய சிலேற்ப காசஞ் க்ஷதகாசஞ் சயகாசந்தான்
பயன்பெறுங் காசமஞ்சும் பிறந்திடும் பகுதிதானே. *(2)*

(இ-ள்.) ரோகங்களுக்கு அரசனான க்ஷயரோகத்திற்கு மந்திரியாகக் காசரோகத்தை எண்ணவேண்டும். அந்நோய் வரும் விதமாவது: மனதில் ஏற்படும் தீராத கவலையினாலும், அதிகமான ஸ்திரீ சம்போகத்தினாலும், புகை, தூசி முதலானவைகளை அடிக்கடி முகர்வதனாலும், தேகத்திலுள்ள பிராணவாயு மேல்நோக்கி இருமலைக் கொடுத்து 1. வாதகாசம், 2. பித்த காசம், 3. கபகாசம், 4.க்ஷதகாசம், 5. க்ஷயகாசம் என்ற 5 வகைக் காசநோய்களை உண்டாக்குகின்றன.

### காசரோகத்தின் பூர்வரூபம்

அக்கினி மந்தந் தொண்டை யரிகுர லனம்வெ றுத்தல்
கக்கிய விருமல் தொண்டை காந்துதல் தினவுண்டாதல்
தொக்கினிற் சுரமுண்டாதல் சூடுள பதார்த்தந்தேட
லிக்குண காசரோக வுற்பவ மென்னலாமே. (3)

(இ-ள்.) பசியின்மை, தொண்டைக்கம்மல், ஆகாரத்தில் வெறுப்பு, இருமல், தொண்டையில் புகைச்சல், வலி, அரிப்பு, உடம்பில் சூடு, சூடான பதார்த்தங்களில் இச்சை முதலானவைகள் இந்நோயின் பூர்வரூபங்களாகும்.

### வாத காசக் குறிகள்

வாதகாசத்தின் செய்கை வகுத்துநான் சொல்லக்கேளீர்
சீதமாம் பதார்த்தமின்றி யுட்டின பதார்த்தந் தேடும்
ஏதாமாஞ்சென்னி நெஞ்சு பாரிச மிவை நோவுண்டாம்
போதமாம் பலமுமாய்ந்து போசனம் பகையுமாமே. (4)

(இ-ள்.) உஷ்ணமான பதார்த்தங்களின்மேல் ஆசை, தலைவலி, நெஞ்சில் வலி, பக்கங்களில் வலி, உடம்பில் பலக்குறைவு, ஆகாரத்தில் வெறுப்பு முதலான குறிகள் வாதகாசத்தில் காணப்படும் குறிகளாகும்.

### பித்த காசக் குறிகள்

பித்தகா சத்தின் செய்கை பெய்வளை மயிலே! கேளாய் !
ஒத்தவுட்டினமிகுந்த தாகம்வாயுலர்தல் நாவு
கைத்தல்சத் தித்தல் பித்தங் கக்கிட லுடம்பு காய்த
லித்தனைக் குணமு முண்டாந் தேகமும் வெளுக்கு
மென்றே. (5)

(இ-ள்.) உடலில் சூடு அதிகரித்து, நாவறட்சி, வாயுலர்தல், நாக்கில் கைப்புச்சுவை, வாந்தி, பித்த வாந்தி, காய்ச்சல், தேகம் வெளுத்துப்போதல் முதலான குறிகள் காணும்.

**கப காசக் குறிகள்**

சீரிய சிலேத்மகாசஞ் சென்னி நோஞ் சிலேற்பம் வீழு
மூறிடு மருசி வாய்நீ ரொழுகிடு மிரும லுண்டாம்
மீறிய சுவாச முண்டா மிணரது தினவு முண்டாங்
கூறிய குணங்க டன்னைக் குயில்மொழி!
யறிந்துகொள்ளே. (6)

(இ-ள்.) தலைவலி இருமலுடன் கபம் விழுதல், அருசி, வாயிலிருந்து உமிழ்நீர் சுரத்தல், இருமல், மேல்மூச்சு, அரிப்பு முதலான குறிகள் காணப்படில் அது "கபகாசம்" என்ற நோயாக அறிந்துகொள்ளவும்.

**க்ஷதகாசக் குறிகள்**

க்ஷதகாச குணஞ் சுவாசஞ் சந்துநொந் துடம்பு காய்த
விதமான அனம் வெறுத்தல் சிலேற்பனம் விளைந்து கக்கல்
அதுநாற லிருமல் தண்ணீ ரபேட்சித்தல் மூர்ச்சையாத
லிது காணல் நயன மூர்த்தித் திட்டியாய் விழிக்கு
மென்னே. (7)

(இ-ள்.) மேல்மூச்சு, மூட்டுகளில் வலி, ஜ்வரம், ஆகாரத்தில் வெறுப்பு, கபமாக வாந்தியெடுத்தல், வாயில் துர்நாற்றம், அடிக்கடி தண்ணீர் பருகல், மயக்கம் உண்டாதல், கண்விழி மேல் நோக்கிப்போதல் முதலான குறிகள் க்ஷதகாசத்திலுண்டாகும்.

**க்ஷயகாசக் குறிகள்**

சயகாச குணத்தைக் கேளாய் தாகமோ கங்கள் தேகம்
பயம்வாக் கிளைத்தல் நோகல் பலப்படச் சுரமே காய்தல்
சுயமான வுடம்பு தன்னில் நிறங்கெடல் சுவாசங் காணல்
நயமான கண்மேனோக்கல் யிக்குணம் நவிலுமாமே. (8)

(இ-ள்.) தீராத தாகம், அடிக்கடி மூர்ச்சை, உடல் இளைத்துப்போதல், பீதி, பேச இயலாமை, உடம்புவலி,

அடிக்கடிச் சுரம் உண்டாதல், உடம்பின் இயற்கை நிறம் மாறுபடல், மேல்மூச்சு, கண்விழி மேல்நோக்கல் முதலான குறிகள் காணப்படில் அவை "க்ஷயகாசத்தின்" குறிகளாம்.

### தொந்த காசம் ஐந்தின் குறிகுணங்கள்

இருமியே சீயுமுண்டாயிடையிடை சுரமுந்தோன்றி
மருவியவ சனந்தானு மசத்துலர்ந் தாழும்வற்றி
கருவியை குறைத்து வாடுங் கசரோகக் காசமாமே. (9)

(இ-ள்.) இருமலுடன் சீழும் இடையிடையே விழும். ஜ்வரம் அடிக்கும். ஆகாரம் வெறுத்துப்போம். தாடை இளைக்கும். உடம்பும் இளைத்துப்போம் . இவைகளும் "க்ஷயகாச" லக்ஷணங்களாம்.

### மந்தார காசக் குறிகள்

தூயதோர் நாசி தன்னில் தும்மல்தான் மிகவுமுண்டாம்
நோயநீர் விழுந்து நெஞ்சு நொந்தடைத் தீளை வாங்கு
மாயு மந் தார காசத்தடவிது தானே யென்ன
மாயமா முனிவன் சொன்ன வளமையை யறிந்துகொள்ளே.

(இ-ள்.) அடிக்கடி தும்மல் உண்டாகும். சளி ஒழுகும். நெஞ்சில் வலி ஏற்பட்டு மேல் மூச்சு உண்டாகும். இவை மந்தாரகாச லக்ஷணங்களாம்.

### வேக காசம்

விண்ணிற் சுழன்று தலைகனத்து வெளுத்து வற்றித் திமிர்த்
தெங்கும்
கண்ணைப் பார்க்கில் மஞ்சணித்துக் கமல முகமும்
வெளுவெளுத்து
எண்ணிக் கரும மொன்று செய்யி லிளைப்பு முட்டித்
துயருண்டாய்
நண்ணிப் பெரியதாது கெடும் நவிலும் வேக காசமிதே. (11)

(இ-ள்.) தலை கனத்து மயக்கம் உண்டாகும். உடல் வெளுத்துப்போம். உடலில் மதமதப்பும் ஏற்படும். கண்கள் மஞ்சள் நிறமாகும். முகம் வெளுத்துப்போம். ஒரு வேலையைச் செய்ய ஆரம்பிக்கையில் மேல்மூச்சு அதிகமாகித் துன்பத்தைத்தரும். தாதுக்கள் கெடும். இவை வேககாச லக்ஷணங்களாம்.

### பக்க மந்தாரகாச லக்ஷணங்கள்

இக்கணந் தன்னிலொக்க யிருமியே யிளைப்பு முண்டாய்
சிக்கென நெஞ்சைக்கட்டி சீறிடு மிருத யத்தை
மிக்கதோர் வயிறு தானு மிகுந்து தான் பொருமுமாகில்
பக்கமந் தாரகாச மிதுவெனப் பகரலாமே. (12)

(இ-ள்.) இருமல், மேல்மூச்சு முதலானவைகளுடன் நெஞ்சைக்கட்டி இருதயத்தில் வலியைக்கொடுக்கும். வயிறு பொருமும். இவை பக்கமந்தாரக்காசக் குறிகளாகும்.

### ஜ்வரக் காசக் குறிகள்

அங்கத்திற் சுரமுமுண்டா யறவுலர்ந் தாளும் வற்றித்
தங்குற்றப் பீனிசந்தான் றலையில்நீ ருவாதையுண்டாய்
பொங்குற்ற இருமலுண்டாய் போசனம் செல்லாதாகி
லிங்குற்ற தோஷந்தன்னைச்சுரகாச மென்னலாமே. (13)

(இ-ள்.) தேகத்தில் ஜ்வரம் உண்டாகும். உடலும், தாளும் இளைக்கும். ஜலதோஷம், தலையில் நீர்கோர்வை, இருமல் ஏற்படும். ஆகாரம் உட்செல்லாது.

## சய நிதானம்

கங்கைசேர்சடையான் சென்னி கலந்தவ னம்ருத ரூபந்
தங்கிய கதிரோன் மற்ற சராசரச் சொர்க்கந் தீர்ப்போ
னிங்கிதன் குபேரனிந்து வென்பவன் றனையு மங்க
பங்கமே கொண்டோ னிந்தப் பார்மிசை யுறையுஞ்
சொல்லாம். (1)

சீரிய தொன்மை செய்த தீவினை தந்தையாகப்
பாரிலிப் பிறப்பிற் செய்த பாவமே தாயதாகப்
பேரியச்சயக்குமாரன் (விறந்திலா கிறமத்தப்பே)
காரிய செவிலித் தாயாய் கனம் பெற வளரும்
நாளில். (2)

(இ-ள்.) கங்கையைச் சடையிலணிந்தவன் தலையில் இருப்பவனும், அம்ருத மயமான கிரணங்களை யுடையவனும், மற்ற உலகங்களின் களைப்பை நீக்குகின்றவனும் எல்லோருக்கும் ஹிதமானவனும், குபேரனை யொத்தவனான இந்து (சந்திரன் என்பவனை மானபங்கம் செய்த க்ஷயராஜாவின்) பிறப்பைச் சொல்ல ஆரம்பிப்போம்.

முன்செனமங்களில் செய்த தீவினைகளைத் தந்தையாகவும் இப்பிறப்பில் செய்யும் தீவினைகளைத் தாயாராகவும் அடைந்து க்ஷயக்குமாரன் செனிக்கிறான்.

## சய வரலாறு

துணையெனப் பித்தமான தோழரோ டிணங்கி ஈசன்
கணில்வரு சுரராஜாவைக் கண்டுமந் திரிப்பேர் கட்டி
யிணைபெறப் பாண்டுவான நாரியை யொத்திருந்து
குணமிகு மிரத்தமான குமாரரை யீன்றெடுத்தே. (3)

(இ-ள்.) க்ஷயக்குமாரன் பித்தமான தோழருடன் சேர்ந்து ஈசனின் கண்களிலிருந்து உண்டான ஜ்வர ராசாவைக் கண்டு, மந்திரியாகிப் பாண்டு வென்ற ஸ்திரீயை மணந்து இரத்த பித்தம் என்கிற குமாரரைப் பெற்றான்.

## இதுவுமது

குலவிய பீனிசத்தின் கூடார வாசல் தன்னில்
பெலவிய அருசி சத்திப் பிரதானத் தொழில்கள் செய்யக்
கலை பெரு கட்டியங்கள் கழியதிசாரங் கூற
நிலைபெரு சுவாசவாசி நடுங்கிமென் மேலுஞ் செல்ல. (4)

புவிமிசை இராசரோகம் பொருந்திடும் வாலரோகம்
சவிபெரு தருணமிக்கக் கணிகமே தபின மங்க
மவிதரு சயமே மற்ற வராத்தமரா★ சேடசிமாவோ
டிவையிரு நான்குபேத மிசைகுணங் கூறுவேனே. (5)

(இ-ள்.) பீனிசம் என்ற கூடாரத்திற்குள் அரோசகம், வாந்தி என்ற இருவர்களும் முக்கியமான வேலைகளைச் செய்ய, அதிசாரம் க்ஷயரோகத்திற்குக் கட்டியங்கள் கூறச் சுவாசம் நடுங்க (க்ஷயரோகம்) ராஜ்யபாரம் செய்கிறான். இவை எட்டுவகைப்படும்.

| | |
|---|---|
| வால க்ஷயம் | தபன க்ஷயம் |
| வீர க்ஷயம் | க்ஷயம் |
| தருண க்ஷயம் | ஆர்தம் ? |
| கணிக க்ஷயம் | லட்சமம் ? |

## வாலரோகம்

பித்தமே பிரகோபித்துப் பேதமாஞ் சரீரமெல்லா
மெத்தவே யிளைத்துமோக மிகுதியாய்ச் சுவாசமுண்டாய்
சித்தமா யிருமலுண்டாய்ச் சீறிடில் வாலமாமே. (6)

(இ-ள்.) தேகத்தில் பித்தம் பிரகோபமடைந்து சரீரத்தை மெலிவடையச் செய்யும். மேல்மூச்சு அதிகமாக வாங்கும். இருமலும் அதிகமாயிருக்கும். இவை வாலக்ஷயத்தின் குறிகளாகும்.

## வீரக்ஷயக் குறிகள்

கண்டத்தில் குத்துண்டாகுங் கபாலத்தில் வலியுண்டாகுந்
திண்டித்த வுடலிளைக்குஞ் சிலேற்பன மிகுதியுண்டாம்
பண்டுத்த சுரம் பேதிக்கும் படர்ந்தரோசகமுமுண்டாம்
வண்டுற்ற குழலாய்! வீர லக்ஷணம் வகுக்குங் காலே. (7)

★ இவ்விரு வகைகளும் சரியாக விளங்கவில்லை.

(இ-ள்.) கழுத்தில் குத்துவலி, தலைவலி, உடம்பு இளைத்தல், அதிகமாகக் கோழை வெளிவரல், ஜ்வரம், அரோசகம், இவை வீரக்ஷயத்தின் லக்ஷணங்களாம்.

### தருணக்ஷய லக்ஷணங்கள்

இடதுபா ரிசத்தில்வாயு வேறீடு மிருமலுண்டாந்
திடமுறு சுரம் பேதிக்கும் சிலேற்பனஞ் சுவாசமுண்டா
மடமயி லனையாய்! இந்தக் குணங்களே வநாதபோது
விடமுறு தருணரோக மிதுவென விளம்ப லாமே. (8)

(இ-ள்.) இடது பக்கத்தில் வாயு அதிகரிக்கும். இருமல் உண்டாகும். ஜ்வரம் அடிக்கும். கபத்துடன் மேல்மூச்சு ஏற்படும். இவை தருணரோகக் குறிகளாகும்.

### கணிக ரோக லக்ஷணங்கள்

உரத்தினிற் குத்துண்டாகும் வாந்திக்குஞ் சுவாசம் வாங்கும்
இரைத்திடு மிருமலுண்டா மிளைத்திடுஞ் சரீர மெல்லாம்
வருத்திடுந் தாகமுண்டா மகாகட்டங் கணிகரோகந்
திருத்திடுங் களபக்கொங்கைத் தேன்மொழித்திருவே
யன்னாய் ! (9)

(இ-ள்.) மார்பில் வலியுண்டாகும். வாந்தி ஏற்படும். மேல்மூச்சு வாங்கும். இரைப்புடன் இருமல் ஏற்படும். சரீரம் இளைக்கும். தாங்கமுடியாத தாகம் உண்டாகும். மிகவும் கஷ்டத்தைக் கொடுக்கவல்ல கணிக ரோகம் என்பதன் குறிகள் மேற்கூறியவைகளாகும்.

### தபனக்ஷயக் குறிகள்

சந்துகள் தோறும் குத்தும் தளர்ச்சியா மிருமலுண்டாம்
நொந்திடு மங்கமெல்லாம் நுவல் குணங்கண்டபோது
இந்த நோய் தபன மென்ன விசைத்தி டீரிதற்குச் செய்யுந்
தந்திரஞ் சொல்வே னிந்தத் தரணியிற் பெரியோர் முன்னே.

(இ-ள்.) மூட்டுகளில் குத்துவலி உண்டாகும். உடலும் தளரும், இருமலும் அதிகரிக்கும். பொதுவாகவே தேகத்தில் வலியுண்டாகும். இக்குறிகளினால் தபனக்ஷயம் என்று கண்டுகொள்ளவும்.

### சயரோகத்தின் குறிகள்

*பீனிசமுண்டாந் தொண்டை பேதிக்கும் நெஞ்சு பேசு*
*மானதோர் சிலேத்ம முண்டா மலகெல்லாம் வலிக்கும் வாசந்*
*தானது தெரியாதென்னுந் தன்மையுண் டானபோது*
*தேனமலர் குழலாய்! கேளாய் சயமெனச் செப்பலாமே. (11)*

(இ-ள்.) மூக்கினின்றும் நீர், சளி இவை வெளிவரும். தொண்டைக் கம்மல் உண்டாகும். நெஞ்சில் சளி கட்டும், கபமும் கட்டும். இரு விலாப்புறங்களில் வலியுண்டாகும். மூக்கில் வாசனையறியுஞ் சக்தி நீங்கும். இக்குறிகள் ஏற்பட்டால் க்ஷயரோகம் உண்டாகியது என்று தெரிந்து கொள்ளவும்.

### க்ஷயத்தில் சாத்யாசாத்யம்

*★(ஆறாதமுடனேறா லெட்சிமமிவை யிரண்டு மாகா)*
*வீரமாங் கணிகமாகில் மிகுகட்ட ரோகமாகும்*
*தாரணி குழலாய்! சொன்ன சாத்தியா சாத்தியங்கள்*
*பாரினிற் கண்டு செய்யப் பகர்கின்றோ மறிகுவீரே. (12)*

(இ-ள்.) ஆற்தம், லட்சிமம் இவ்விரண்டும் அசாத்யம். கணிகக்ஷயம் கஷ்ட சாத்யமாகும். பாக்கி வகைகள் சாத்யமாகும்.

## உளமாந்தக் குறிகள்

மாதர் மயக்கில் மருந்தீட்டில் வந்த இருமல் புலால் நாறும்
சீதமிகுந்தே பத்தியமுஞ் செரியா தெரித்தே யேப்பமிடும்

★ இச்செய்யுளின் முதல் அடி விளக்கமாக இல்லை.

வாதை மிகுந்து சுரமுமுண்டாம் வருந்து மீளை
யிருமலுண்டாம்
நீதி பயிலுஞ் சிரங் கனக்கும் நினைவு மறதி தோன்றிடுமே.

நெஞ்சது நழுக்கி நொந்து நினைவழிந் திருமலுண்டாய்
பஞ்சுபோற் சுரமுந் தோன்றிப் பழுத்துள்ளே சீயுங்கட்டி
அஞ்சவே அய்யும் பித்தும் அசனமு மொறுத்து வந்தா
லொஞ்சிடா துண்மை சொன்னோ முளைமாந்த
மென்னலாமே. (2)

(இ-ள்.) அதிகமான ஸ்திரீ போகத்தாலும், மருந்தீடுகளினாலும் இருமல் உண்டாகும். வாயிலிருந்து துர்நாற்றம் வீசும். சாப்பிட்ட ஆகாரம் சீரணியாமல் புளித்த ஏப்பமுண்டாகும். அதிகமாகத் துன்பத்தைக் கொடுத்துச் சுரமும் அடிக்கும். இருமும்போது கோழை வெளியாகும். தலை வலிக்கும். அடிக்கடி மறதியும் உண்டாகும். பின்னர் நெஞ்சில் வலி ஏற்படும். மார்பில் சீழ் கட்டும். கபமும், பித்தமும் அதிகரித்து ஆகாரத்தைத் தள்ளும். இவை உளமாந்தத்தின் குறிகளாகும்.

## சுவாசரோகக் குறிகள்

வாயுவுடனே சிலேற்பனமு மருவி நயன மேனோக்கி
யாயுசுவாச மிகவுண்டா யறிவு மயங்குங் கண்சுழலும்
மேய வேர்வை கபமிளைப்பு மேவுமலமூத் திரஞ் சிறுக்குந்
தோயு மூர்ச்சை மிகநீளுஞ் சுவாசகுணமென் றறிவீரே. (1)

(இ-ள்.) வாயுவும் கபமும் அதிகரிக்கும் கண்கள் மேனோக்கும். மேல்மூச்சு அதிகரிக்கும். அறிவும் மயங்கும். கண்கள் சுழலும். வியர்வை அரும்பும். தேகம் இளைக்கும். மலம் மூத்திரம் முதலானவை குறையும். அடிக்கடி மூர்ச்சையடைவான். இவை சுவாசரோகக் குறிகளாகும்.

## சுவாசத்தின் செயலும், பெயரும்

மூலவா தாரந்தன்னில் மூண்டெழு மசைவை தோன்றி
மேலிடை பிங்கலாதி மேல்கொண்டு விரவி நாக
தூலசூக் குமத்தைப் பற்றிச் சுவாதியாய்ச் சுழினை முட்டிச்
சாலவே பன்னிரண்டா மங்குலந் தகைமை தானே. (2)

(இ-ள்.) மூலாதாரத்தில் ஒரு அசைவு ஏற்பட்டு அது இடை, பிங்கலை என்ற நரம்பின் மூலமாக மேல்நோக்கி எழுந்து, ஸ்தூல சூக்ஷ்மதேகத்தைப் பற்றிச் சோதி ஸ்வரூபமாகி ஸுஷும்னா நாடியின் மூலமாகச் சென்று 12 அங்குல நீளமுள்ள சுவாசமாகப் பரிணமிக்கிறது.

## சுவாசங்களின் எண்ணிக்கை

தகையுடன் பன்னிரண்டா மங்குலந் தனிமேலோர் நாலும்
பகையுறப் பாழ்போ மட்டும் பரிவுடன் மீளுமீதாந்
துகையொரு நாழிகைக் கெண் சுவாதியா யெழுமுன்னூறு
வகையுறு மறுபதாக வளர்ந்திடும் போது ரண்டில். (3)

வளர்கதிர் மாலையென்ன வயங்குநா ளொன்றினுக்குத்
தளருட னிருபத்தோரா யிரத்தறு நூறாதாகி
யெழுப(ம)து சுவாச மேழா யிரத்திரு நூறும் பாழாய்
விளைவுடன் மீளும் பன்னாலாயிரத் தறுநூறென்றே. (4)

(இ-ள்.) 12 அங்குலமுள்ள சுவாசத்தில் 4 அங்குலம் வீணாகி 8 அங்குலமாகவே போய் வந்துகொண்டிருக்கும். நாழிகைக்கு 360 சுவாசங்கள் விதம் 1 நாளுக்கு (60 நாழிகைக்கு காலையிலும், மாலையிலுமாக) 21,600 சுவாசங்களாகப் பரிணமிக்கும். அவற்றுள் 7,200 சுவாசம் பாழாகும். பாக்கியுள்ள 14,400 சுவாசமே ஜீவனுக்குப் பயன்படும்.

***குறிப்பு:***- மீதியுள்ள சுவாசங்கள் 14,600 என்பது சரியாக இல்லை. 14,400 சுவாசங்களே கணக்கில் வருகிறது. தற்கால ரீதியிலும் சுவாசம் 1 நிமிசத்தில் சராசரி 15 முதல் 18 வரை சென்று வருகிறது. 15 முறை என்று வைத்துக்கொண்டால் 1நாளைக்கு 21,600 சுவாசம் கணக்காகிறது.

## 5வித சுவாசங்களின் பெயர்

ஏயென்ற பிராணநாடி யிலையந்தெழுஞ் சுவாசமஞ்சு
மேயபெய ரோதுங் காலை வினவு சூத்திரம் விசர்கம்
... ... ... ... ... ... ... .... .... ... ... .... ... ...
ஓய்விலாப் பகர்ந்தான் மூர்த்துவ மஞ்சின் பெயரே. (5)

(இ-ள்.) பொருள் சரியாக விளங்கவில்லை.

## சூத்திரச் சுவாசம் இரண்டாம் சுவாசத்தின் குறிகள்

பேர்பெறு சூத்திரந்தான் பிழையின்றி யெழும் சுவாச
சார்பெறு சுவாசஞ் செய்யுந் தகைமை நான் சாற்றக் கேளாய்
யேர்பெற விரைவினோடி யினைந்துமே லிளைப்பி
ளைக்கும்
நேர்பெற நரம்பிரண்டும் நெற்றியுற் புடைத்திருக்கும். (6)

புடையுறு விலாவிரண்டும் புருபுரென் றெடுத்துக் காட்டித்
திடமுற நெஞ்சு நொந்தே யுச்சியுஞ் சிறிது நோவாய்க்
கடியதோ ரிரும லுண்டாய் கழன்று வாய் நீர் சுழற்றும்
முடியுறு தாகமுண்டாய் மூக்குநீர் பாயு மின்னே. (7)

(இ-ள்.) உடம்பெங்கும் வாயு பரவி, உளைச்சலுடன் மேல்மூச்சு வாங்கும். நெற்றியின் இரு நரம்புகளும் புடைக்கும்.

வயிற்றின் விலாப்புறங்களிலும் வாயு "புர்புர்" என்று சத்தத்துடன் சஞ்சரிக்கும். நெஞ்சில் வலி ஏற்படும். தலை உச்சியிலும் வலியுண்டாகும். இருமலேற்படும். வாயில் உமிழ்நீர் ஊறும். தாகமும் ஏற்பட்டு, மூக்கிலிருந்து நீர் வடியும். இவை இரண்டாம் சுவாசத்தின் குறிகளாகும்.

## மூன்றாஞ் சுவாசக் குறிகள்

மின்னனா யுடல் பறக்கு மிவையிரண் டாஞ்சுவாசம்
பின்னைமூன் றாஞ்சுவாசம் பெறிலுடல் வருத்தமாகும்

தன்னில் நெட் டுயிர்க்கு மூக்குப் பொட்டிலுந் தானடுக்கு
மின்னங்கேள் பொருத்துதோறு மிடைந்துதா
னோவுதோன்றும். *(8)*

(இ-ள்.) உடலில் மிக்க வேதனையைத் தரும். மூக்கு, பொட்டு இவைகளில் தாங்கமுடியாதபடி நடுக்கமேற்படும். மூட்டுகளில் வலி ஏற்படும்.

## இதுவுமது

தோன்றுங்கேள் மலசலாதி சுத்தியில்லாதே விம்மி
யூன்றியே கழியவென்ன வோங்கிடுங் கழிய வொட்டா
ஆன்றதோர் கண் கலங்க லாகக்கீ ணோக்கிப் பார்க்கும்
போன்றதோர் கண்சிவக்கும் புரிதல்மூன் றாஞ்சுவாசம். *(9)*

(இ-ள்.) மலம், ஜலம் பிரியாமல் ஸ்தம்பித்துப்போகும். மலம் ஜலம், போகவேண்டுமென்ற உணர்ச்சி இருக்குமே யன்றி போனால் வெளியாகாது. கண்கள் கலங்கும். பார்வையும் கீழ்நோக்காகும். கண்களில் சிவப்பு நிறமும் உண்டாகும். இவை மூன்றாஞ் சுவாச லக்ஷணங்களாகும்.

## நான்காம் சுவாசத்தின் குறிகள்

வாதிக்கும் நீர்ச்சுவாசம் வகையெனிற் கரணமீது
காதிமற் போரிபுரிந்தோ ரென்னவே கனத்திளைக்குந்
தீதுறு சிலேற்பனந்தான் செருமியே குறுகுறுக்கு
மோது கண் சீறிப் பார்க்கு முதறியே விழுமென்றுற்று. *(10)*

உற்றுரை மருளரைப்போ லுரைத்திடுங் குழிய நெஞ்சைப்
பற்றியே வாங்கு முள்ள மலசலங்கழியப் பார்க்குங்
குற்றமே தினமுங் கூறும் கூப்பிடிற் பேதமில்லைச்
சிற்றிடை மயிலே! நாலாஞ் சுவாசமாய்ச் செப்புவாயே. *(11)*

(இ-ள்.) மற்போர் செய்தவன் மாதிரி மேல்மூச்சு வாங்கும். தொண்டையில் கபம் பற்றி "குர்குர்" என்று சப்தமிடும். கண்கள் ஒரு பக்கமாகப் பார்க்கும். மருண்ட நோக்கும் ஏற்படும். நெஞ்சு குழியும். மலம் ஜலம் போவதற்கான உணர்ச்சி உண்டாகும. வேதனையைத் தரும். இவை நாலாஞ் சுவாசக் குறிகுணங்கள்.

**ஐந்தாம் சுவாசக் குறிகள்**

செப்பிய சுவாச மைந்தின் செய்தியைப் பகரும்போது
கப்பெரு பெருமூச் செய்துங் கடைக்கண்ணீர் தானேபாயு
மொப்புறக் கண்மூடாமல் மேனோக்கு மொண்சீர் மாதே
மையப்படா விழிதுடிக்கும் வாய்பல்காற் பிளக்குந்தானே.

(இ-ள்.) பெருமூச்சுண்டாகும். கடைக்கண் வழியாகக் கண்ணீர் பாயும். கண்கள் மேல்நோக்கிய பார்வையாகும். விழிகள் துடிக்கும். வாய், பற்கள், கால்கள் முதலான இடங்களில் தாங்கமுடியாத வலியும் உண்டாகும்.

**சுவாச விக்ருதிக் குறிகுணங்கள்**

காலுமிக் குணங்கள் சேருங் காரணங் கருத்தில் கண்டு
மேலுரை விகுர்த்தி செய்யுங் குணந்தனை விளம்பில் மெய்தான்
சாலவே குளிர்தல் வெம்பல் சார்ந்திடுங் குளிர் விடுத்தா
லாலவாய் கைத்த லுச்சி யக்கினி யன்ன வெய்தல். (1)

எய்திய உடம்பு வெச்சேன் றிருப்பதை யொளித்தல் வியர்த்தல்
மைதிகழ் கண்ணினாளே! வாயது வெளுத்திருத்தல்
செய்தியா மெய்யே சோர்தல் சிலேற்பனங் குருகுருத்தல்
கைதவ றாகுமிந்தக் குணமின்றி மருந்தாற் காறே. (2)

(இ-ள்.) தேகத்தில் குளிர், குளிர் நின்றபின் வாயில் கைப்பு, தலையுச்சியில் தீயினால் சுடப்பட்டதைப் போன்ற உணர்ச்சி, உடம்பில் வியர்வை இக்குறிகள் உண்டாகும். வாயும் உலர்ந்து வெளுத்துப்போம். உடம்பு வாட்டமுறுதல், மார்பில் கபம் கட்டி "குர் குர்" என்ற சப்தத்தை உண்டாக்கல் முதலான குறிகளும் காணும்.

### சாத்ய லக்ஷணங்களாவன

*காத்திடா உச்சி வெச்சேன் றிருக்குங்கண் பஞ்சேறாது*
*தோத்திடும் பித்தநாடி வெதும்புதல் வாதச்சேற்பங்*
*கோத்திடா சேற்ப நாடி குடிகொளாதேயிருத்தல்*
*நீர்த்தடை யாதே யாதல் நிச்சயம் புரிந்துபாரே.* (3)

*புரிந்து மெய் சோர்ந்திடாதே போர்விழி சிவப் பேறாதே*
*வருந்திட வுடல் நாறாதே வரிவிழி நீர் மாயாதே*
*கரிந்து நா வறண்டிடாதே கபமிரை யாதேயாகில்*
*வருந்தியே பரிகாரஞ் செய் மாதுமை பாகரானே.* (4)

*(இ-ள்.)* தலையுச்சியில் சூடு இராமல், கண்கள் பஞ்சடையாமல், பித்த நாடி அதிகரிக்காமலும் வாதக:ப நாடிகளோ, கபநாடியோ அதிகமாகாமல் இருத்தலும், மூத்திரம் தடைபடாமலிருந்தாலும், உடலில் வாட்டம் இல்லாமலும், கண்களில் சிவப்பேறாமலும் உடலில் நாற்றம் இல்லாமலும், கண்ணீர் வழியாமலும், நாவறட்சி, கபத்தினால் உண்டாகும் குர்குர் என்ற சப்தங்கள் இல்லாமலும் இருந்தால் அந்நோயாளிக்கு மருந்துகளைக் கொடுக்கவும்.

### சாத்யக் குறிகள்

*பாகன் மொழியின் மாதே! பறையிலோ செவிகேளாதே*
*வாகுறு முடலந் தன்னில் மயக்கமில்லாதே யாதல்*
*தாகமா யிளைத்து நெற்றி தனில்வியர் வில்லாதாகி*
*யேகநற் பிராணனுண்டென் றெய்திநீ மருந்து செய்யே.* (5)

*(இ-ள்.)* தேகத்தில் மயக்கமில்லாலிருத்தல், தாகம், உடல் இளைப்பு, நெற்றியில் வியர்வை இவைகள் இல்லாமலும் இருந்தால் தேகத்தில் உயிர் இருக்கிறதென்று கண்டுகொள்ளவும்.

## கவலைக்கிடமான நிலைமை

செய்தியா யுறங்கில் நெஞ்சந் திடுக்கிடுங் கண்ணீர் பாயும்
மய்யல் வாத சிலேற்ப மஞ்ஞைபாம் பென்னவோடும்
மெய்யது துடிக்கும் நெற்றி வியர்திடுங் கண்பஞ்சாகுங்
கையது நாடி சேற்பங் கார்த்திடுங் கவலையாமே. (6)

(இ-ள்.) நன்றாகத் தூங்கிக்கொண்டிருக்கையில் திடீரெனத் திடுக்கிட்டு எழுவான். வாதகப நாடிகள் மயிலைப்போலும் பாம்பைப்போலும் ஓடும். உடல் துடிக்கும். நெற்றியில் வியர்வை அரும்பும். கண்கள் பஞ்சடையும். கையில் கபநாடி மிகுந்து நிற்கும். இக்குறிகள் கண்டால் கவலைக்கிடமான நிலை என்று தெரிந்து கொள்ளவும்.

## மரண லக்ஷணம்

பல்லைக் கடிக்கும் நெட்டிவிடும் பற்றிப் பிடுங்குஞ்
செவிகேளாதே
வலைதனிற்றான் கிடவாதே யெழுந்து மிருந்து முருண்டு
வரும்
வில்லைப்போல விரை விரைக்கும் மேனி குளிரு
மிளைப்பெடுக்குந்
தொல்லைப் படாதே வைத்தியரே தூதன் வந்தான்
விட்டகலே. (7)

(இ-ள்.) அடிக்கடி பற்களை நெற நெற என்று கடிப்பான். கை கால்களை சொடக்கிக்கொள்வான். காது கேளாது. படுக்கையிலும் புரளுவான். அடிக்கடி எழுந்திருப்பான். ஆண் குறியும் விறைக்கும். உடலில் குளிர் ஏற்படும். மேல்மூச்சு வாங்கும். இக்குறிகள் காணப்பட்டால் யமதூதன் வந்துவிட்டதாகத் தெரிந்து கொள்ளவும்.

# உதரரோக நிதானம்

உற்றிடு முதரந் தன்னி லுற்றநூற் றெட்டு ரோகம்
பற்றிய குணங்கடன்னைப் பரமனாரருளிச் செய்யச்
சொற்றமிழ் நூலதாகச் சுருதி நூற் கெல்லைகண்ட
மற்று மா மலையிலுள்ள மாமுனி யருளிச் செய்தார். (1)

(இ-ள்.) வயிற்றிலுண்டாகும் 108 ரோகங்களின் குறிகுணங்களை சிவபெருமான் அருள வேதார்த்தங்களை அறிந்த பொதிகை மலையிலுள்ள மாமுனிவர் (அகஸ்தியர்) அவைகளைத் தமிழில் அருளிச்செய்தார்.

### உதரநோய்க்குக் காரணங்கள்

கருவுறு மீனின் முள்ளுங் கலந்துமி நெல்லின் வாலு
மருவிய கல்லெலும்பு மங்கையர் மருத்திலீடும்
பருகுசொற் றாமலாலும் பழமலம் நிற்கையாலு
மருவிநேர் மயிர்களாலும் வந்திடும் நோய்கள் தானே. (2)

(இ-ள்.) மீன்முள், உமி, நெல்லின் வால், கல், எலும்பு முதலான பொருள்கள் ஆகாரத்துடன் உட்செல்லுவதனாலும், ஸ்திரீகள் கொடுக்கும் வசிய மருந்துகளினாலும், ஆகாரங்கள் சரியாக சீரணிக்காமையினாலும், குடலில் பழைய மலம் தங்குவதனாலும், ஆகாரத்துடன் மயிர் உட்செல்லுவத னாலும் வயிற்று நோய்கள் சம்பவிக்கின்றன.

### இதுவுமது

புறையற வுண்கையாலும் பொருமநீர்க் கொள்கையாலும்
சுருளவே முடக்கிக்கொண்டு சுகமுறக் கிடக்கையாலும்
மருளவே மேடுதாவு மனமுமுன் நடக்கையாலும்
பெருகவுண் டோடினாலும் பெய்திடும் நோய்கள்தானே. (3)

(இ-ள்.) புறை ஏறும்படி ஆகாரங்களை உட்கொள்ளுவதனாலும், வயிறு பொருமல் உண்டாகும்படி தண்ணீரை உட்கொள்ளுவதனாலும், கைகால்களை முடக்கிக்கொண்டு தூங்குவதனாலும், சாப்பிட்டவுடன் ஓடினாலும், உதரரோகம் சம்பவிக்கும்.

### இதுவுமது

மனமுறவுண்கையாலு மகிழ்ந்த வூண் குறைதலாலும்
கனமலஞ் செரிந்து நின்று கழற்றுத லிலாமலாலுந்
தன்மிகத் தேடலுற்றுத், தானுரு மோகத்தாலுஞ்
சினமிக வுருகையாலுஞ் சேர்ந்திடு முதரநோயே. (4)

(இ-ள்.) இஷ்டம்போல் அதிகமாகச் சாப்பிடுவதனாலும், வேண்டிய அளவு சாப்பிடாமல் பட்டினி கிடந்தாலும், வயிற்றில் மலம் சேர்ந்து வெளியாகாமல் தங்குவதனாலும், பொருளை அதிகமாகத் தேடுவதற்கான பிரயத்னங்களைச் செய்வதனாலும், பொருளின்மேல் அதிகமான ஆசையினாலும், அடிக்கடி கோபித்துக் கொள்ளுவதனாலும் வயிற்றுநோய்கள் சம்பவிக்கின்றன.

### இதுவுமது

செறிந்துறங் காலதன்றித் திகழவே யுண்கையாலுந்
தறிப்புறக் கிடப்பதன்றித் தாழ்ந்து கீழ் கிடக்கையாலு
மருத்திடுங் கிருமியாலு மலசல நிற்கையாலும்
பெருத்துள வுதரந்தன்னில் பேணிநோ யாகுங் காணே. (5)

(இ-ள்.) காலந்தவறி ஆகாரம் உட்கொள்ளுவதனாலும், விரிப்பில்லாமல் வெறும் தரையில் படுத்துக்கொள்ளுவதனாலும் , வயிற்றிலுண்டாகும் கிருமிகளின் உபத்திரவத்தினாலும், மலம், சலம் சரியானபடி பிரியாததனாலும் உதரநோய் உண்டாகின்றது.

### இதுவுமது

இப்படி உதரநோய்க ளியம்பிடிலொரு நூற்றெட்டு
மெய்ப்படு ரோகமாக விளங்கியே தோன்றுமென்கச்
செப்புவ ரிதற்கு மேலுந் திகழுநோய்க் குணங்கடன்னை
யொப்பொடு முனிவன் றானு முறைமுறை
யுரைக்கின்றாரே. (6)

(இ-ள்.) மேற்கூறிய காரணங்களினால் வயிற்றில் 108 ரோகங்கள் உண்டாகின்றன என்று தெரிந்துகொள்ளவும்.

### வயிற்றுநோய் 108ன் வகைகள்

அனிலத்தா லெழுந்தரோக மன்பத்தாறாகுமென்கத்
தனிவரு பயித்தியத்திற் றானொரு முப்பதென்க
கனிபடு கபங்க டன்னிற் கலந்திரு பத்திரண்டா
மெனுமிவை முறையே யெண்ணி யிறைவ
னருளிச்செய்தான். (7)

(இ-ள்.) அவை வாதத்தினால் 56ம், பித்தத்தினால் 30ம், கபத்தினால் 22ம் ஆக 108 ரோகங்களாகின்றன.

## குன்மரோக நிதானம்

திருந்திய வுதரந்தன்னிற் சேரும்நோயொரு நூற்றெட்டிற்
பொருந்திய குன்மமெட்டின் பெயர்குணம் புகலலுற்றா
மருந்தினாற் றீருங் குன்ம மொருநான்கு மற்றநான்கு
மருந்திய மருந்தாற்றீரா தசாத்திய மென்னலாமே. (8)

(இ-ள்.) வயிற்று வியாதிகள் 108க்குள் குன்மரோகம் 8 வகைகளின் குணங்களையும், பெயரையும் ஆராய்வோம். அவற்றுள் 4வித குன்ம நோய்கள் மருந்தினால் தீரும். மற்ற நான்கு வகைகளும் மருந்துகளினால் தீராது.

### சாத்யா சாத்ய வகைகள்

என்றதில் வாதகுன்மம் வலிகுன்மம் சத்திகுன்மம்
துன்றிய சூலகுன்மஞ் சொல்லுமீ தசாத்தியந்தான்
கன்றிய பித்தகுன்மங் கபகுன்மங் குன்மசூரை
யொன்றெரி குன்மம் நான்கு முண்மையாய்த்
தீருங்காணே. (9)

(இ-ள்.) வாதகுன்மம், வலிகுன்மம், சத்திகுன்மம், சூலைகுன்மம் இந்நான்கும் அசாத்யங்களாகும். பித்தகுன்மம், கபகுன்மம், குன்மசூரை, எரிகுன்மம் இந்நான்கும் சாத்யங்களாகும்.

### வாத குன்மக் குறிகள்

உடம்பு கால் கரமுமோயு மூதையா லுதரம் விம்ம
நுடங்கிடை மயிலே யீரல் நுதல்தனிற் றிரண்டுநோவா
மிடம்பட விலாவிரண்டு மேறிவே தனையு முண்டாந்
திடம்பட வாதகுன்மஞ் செய்குண மறிந்து கொள்ளே. (10)

ஈரலும் நெஞ்சும்பற்றி யெரித்திடு முளையும் பக்கங்
கார்செறி கபாலந்தானுங் கனத்திடுங் குடற் புரட்டும்
நேர்படக் கிறுகிறுக்கும் நினைவரக் குடல் வலிக்கு
வார்முலைமானே! வாத குன்மத்தின் மகிமைதானே. (11)

(இ-ள்.) உடம்பு கை, கால்கள் ஓய்ந்துபோம். மலம் போகாமல் வயிறு பொருமும். ஈரல் குலைப்பக்கத்தில் உருண்டையாகப் புடைத்து வலியுண்டாகும். விலாவின் இரு பக்கங்களிலும் வேதனையுண்டாகும். இவைகளுடன் ஈரல், நெஞ்சு முதலான இடங்களில் வாயு அதிகரித்து விலாப் புறங்களிலும் வலியை உண்டாக்கும். தலை கனக்கும். குடல் புரட்டும். மயக்கம் உண்டாகும். நினைவு தடுமாறும். குடலிலும் வலியுண்டாகும். இவைகளே வாதகுன்மக் குறிகளாகும்.

### வலிகுன்மக் குறிகள்

மறந்திடு மன்னத்தன்னை வயிற்றினில் வலியுந் தோன்றுஞ்
சிறந்திடுங் கஞ்சித்தண்ணீர் தேடிடுஞ் செரியாதாகு
மிறந்திடுந் துயரமுண்டா மெழிலுடல் தளர்ந்து காணு
முறைந்திடு மலமுந் தீயும் வலிகுன்ம மிதுவென்றோதே. (12)

வந்தேயுதரந் தனில் வலிக்கும் வயிறு பொருமும்
வாந்திக்கும்
நொந்தே மேனி வறண்டுலர்ந்து நோவுமிகுந்து தலைநடுக்குந்
தந்தால் மருந்து தனை மீறுந் தளர்வுந் துயர மிகவுண்டாம்
வெந்தே விழுந்து போமளவும் விடாதேயம்மா
வலிகுன்மம். (13)

(இ-ள்.) சாப்பிடமுடியாதபடி வயிற்றில் வலி யுண்டாகும். கஞ்சி சாப்பிட்டால்கூட செரிக்காது. மிகவும் வேதனையைத் தரும். உடலும் தளர்ச்சியுறும். மலச்சிக்கலும் ஏற்படும். இதையன்றி வயிற்றில் வலி, வயிற்றில் பொருமல், வாந்தி முதலானவைகளும் உண்டாகி உடல் வறண்டுபோய் வேதனையதிகரிக்கும். தலை நடுக்கும். மருந்துகள் சாப்பிட்டாலும் குணமடையாமல் ஆயுள் உள்ளவரையில் வேதனையைக் கொடுக்கக்கூடியது. வலிகுன்மம் என்ற இந்நோயாகும்.

**சத்திகுன்மக் குறிகள்**

சோறு செரிக்கில் வயிறுநொந்து டர்ந்து வாய்நீருறிவரு
மேறுஞ் சத்தி வரும்போலே யிருக்கு மெடாது
நெஞ்செரிக்கும்
வேறு துரும்பிட் டெடுத்தக்கால் வேதனை மாறுமுடல்
வற்றுந்
தேறுஞ்சத்தி குன்மத்தின் செய்தி யிதெனத் தேர்ந்திடுமே. (14)

மயங்கிடும் வெளுக்குமேனி வாய்வு மிகுந்தூன் வற்றுஞ்
செயங்கெடச் சத்திபண்ணுஞ் செரிந்திடா தெரிக்கு நெஞ்சு
பயன்கெட வுணவு கொள்ளிற் பகைத்திடும் பித்தமிஞ்சித்
தயங்கிடுஞ் சத்திகுன்மந் தாமெனுந் தடங் கண் மாதே. (15)

(இ-ள்.) ஆகாரம் சீரணிக்கும்போது வயிற்றில் வலியுண்டாகும். வாயில் உமிழ்நீர் ஊறும். அடிக்கடி வாந்தியெடுக்கும். உணர்ச்சி உண்டாகும். ஆனால் வாந்தி வராது. நெஞ்சு எரிச்சலும் ஏற்படும். தொண்டையில் துரும்பையிட்டு சுரண்டி வாந்தி எடுத்தால் வேதனை மாறும். உடல் இளைக்கும். இவைகள் சத்திகுன்மக் குறிகளாகும்.

தேகத்தில் மயக்கம் உண்டாகும். உடல் வெளுத்துப்போம். வாயு தேகத்தில் அதிகரிக்கும். மாமிச பாகங்களும் வற்றிப்போம். வாந்தியுண்டாகும். ஆகாரம் சீரணியாது. நெஞ்சுக்கரிப்பும் உண்டாகும். ஆகாரத்தைச் சாப்பிட்டால் பித்தம் அதிகரிக்கும். இவைகளும் சத்தி குன்மக்குறிகளாகும்.

### சூலை குன்மக் குறிகள்

*திரளும் வாயுக் குலைமீது சிக்குமலமு முடம்பெங்கு*
*முருளுங் குத்து முதரத்துள் ளுலையுங் கருவி முனைபோலப்*
*புரளும் வலியு மாறாது பொருமுமேப்பம் புலால் நாறும்*
*வரளு முடம்பு சூலை குன்மம் காவேல் விழியின்*
*மடமானே! (16)*

*(இ-ள்.)* வாயு ஈரல்குலையைப் பற்றும். மலச்சிக்கலுண்டாகும். உடல் முழுவதிலும் குத்துவலியேற்படும். வயிற்றில் குத்துவலி உண்டாகும். வயிற்றில் உளைச்சலும் ஏற்படும். வாயுவும் புரண்டுவரும். புளியேப்பம், புலால் நாற்றமடித்தல், உடம்பு வறட்சி முதலான குறிகளும் உண்டாகும்.

## சாத்தியமான குன்ம வகைகளின் லக்ஷணங்கள்

### *பித்த குன்மக் குறிகள்*

*மலமதுலர்ந்து வாய்வுண்டாய் வாய்நீர் சுழற்றி*
*நெஞ்செறிக்கும்*
*குலவுமசனங் கொண்டக்காற் குடலுட்பொருமி*
*புளித்தேக்கா*
*யுலையும் புண்போல் நாற்றமுண்டா யுழலைமிகுந்து*
*வலியுமுண்டாய்*
*நிலையுங் கெடவே சத்திக்கும் பித்தகுன்ம*
*மெனநிகழ்த்தே. (17)*

*(இ-ள்.)* மலச்சிக்கலேற்பட்டு வாயு அதிகரிக்கும். வாய்நீர் ஊறும். நெஞ்சில் எரிச்சலுண்டாகும். ஆகாரம் உட்கொண்டால் குடலில் பொருமலேற்பட்டுப் புளித்த ஏப்பமும் ஏற்படும். வாயில் துர்நாற்றம், அழற்சி முதலானவைகளுடன் வயிற்றுவலியும் ஏற்படும். வாந்தியும் அடிக்கடி ஏற்படும். இவை பித்தகுன்மக் குறிகளாகும்.

## இதுவுமது

தேகவரண்டு தாகமுண்டாய் திறமும் வாயுக்குலைமீதே
நேகுந்துயர மிகுந்திருக்கும் நோக்குக்கெட்டு மஞ்சணிக்கும்
தாகமிகவாய் வாய்நீருந் தத்தும் பொருமும் வாந்திக்குந்
தோகையனையாய்! கூறக்கேள் தோன்றும்
பித்தக்குன்மமிதே. (18)

(இ-ள்.) தேகத்தில் வறட்சி ஏற்படும். தாகமும் உண்டாகும். வாயு ஈரல் குலையைப் பற்றி நிற்கும். மிகுந்த வேதனையைத் தரும். பார்வை குறையும். உருவங்களும் மஞ்சளாகத் தெரியும். வாயில் உமிழ்நீர் ஊறும். வயிறுப் பொருமல் உண்டாகும். அடிக்கடி வாந்தி எடுக்கும். இவைகளும் பித்த குன்மக் குறிகளாகும்.

## இதுவுமது

பண்டுமுன் வயிற்றைப்பற்றி பலப்பட வலிக்கலாலும்
கொண்டுநின் றகாரத்தைக் குமட்டியே யெடுக்கலாலும்
மண்டியே காயம்வற்றி மயங்கிட வருதலாலும்
விண்டுதான் பித்தகுன்ம மிதுவென விளம்பலாமே. (19)

தலையுங் கனத்து மோக்காளம் தானேயெடுக்கும் வாயூறும்
நிலையுங் கெடுக்குங் கிறுகிறுக்கும் நிரம்ப வியர்க்கும்
நெஞ்செரிக்குங்
குலையும் படுத்தும் பித்தகுன்மக் குறியும் குணமுமிது
வென்றே
மலையஞ் சிறக்குந் தமிழ்முனிவன் வகுத்த முறைமை
யிதுவாமே.

(இ-ள்.) வயிற்றில் குத்துவலியுண்டாகும். ஆகாரத்தை உட்செல்லவிடாமல் குமட்டி வாந்தியெடுக்கும். தேகம் க்ஷீணமாகும். மயக்கம் உண்டாகும். தலைகனக்கும். வாயில் நீரூறும். ஈரல் குலைவலியும் ஏற்படும். இக்குறிகள் பித்தகுன்மத்தில் உண்டாகும்.

## இதுவுமது

ஒண்டொடி கேளாய்! வாய்நீ ரூறியே வழுவழுக்குந்
தொண்டைநொந் திருமலுண்டாந் துடயென வடிக்கு
நெஞ்சு
கொண்டிடு மசனம் நின்று குமட்டியே வாந்திசெய்யுந்
திண்டிறல் வயிற்றினுள்ளே வலித்திடுஞ்
சிலேத்மகுன்மம். (21)

கரித்திடும் நெஞ்சு நொந்து கவ்விடுங் குலையைப்பற்றி
யெரித்திடு முடம்பு வியர்க்கு மிடருற வயிறு நோவாம்
பொருத்திடு மசைவெல்லாந்தான் புண்படக் குத்திநோவாம்
வரிக்கயல் விழியாய்! சேற்பகுன்மத்தின்
வகையிதென்னே. (22)

(இ-ள்.) வாயில் உமிழ்நீர் சுரக்கும். வழவழப்பும் ஏற்படும். தொண்டையில் நோக்காடு உண்டாகும். இருமல் உண்டாகும். நெஞ்சு தொட தொட என்று அடிக்கும். சாப்பிட்ட ஆகாரம் சீரணிக்காமல் குமட்டி வாந்தியெடுக்கும். வயிற்றுவலியும் உண்டாகும்.

நெஞ்சுக்கரிப்பு ஈரல்குலையில் கவ்வும்படியான வலி, உடம்பில் வியர்வை, வயிற்றுவலி, முட்டுகளிலெல்லாம் புண்போன்ற குத்துவலி முதலான குறிகளும் கபகுன்மத்தில் காணும்.

## சூரைக் குன்மக் குறிகள்

சாலவே யுதரந் தன்னிற் றப்பளைப் போற்றிரண்டு
யேலவே யுடம்பு வற்றி யிடுப்புளைந் திரையும் வாயு
காலொடு கரமு மோயுங் கருதிடு மன்னஞ் செல்லாக்
கோலவார் குழலின் மாதே! குணஞ் சூரைக் குன்மமாமே. (23)

(இ-ள்.) வயிற்றில் தவளையைப் போன்ற திரட்சி உண்டாகும். உடம்பு இளைக்கும். இடுப்பில் வலியேற்படும். வாயு வயிற்றில் இரையும். கால் கைகளில் ஓச்சலுண்டாகும். சாப்பாடு உட்செல்லாது. இவை சூரைக் குன்மத்தின் குறிகளாகும்.

### *எரிகுன்மக் குறிகள்*

*வயிற்றை யெரிக்குங் குடல் புரட்டி வாய்நீர் சுழற்றித்*
*தலைகனமா*
*முயிர்ப்பை யழிக்கக் கிறுகிறுக்கு மோங்காரிக்கு*
*மேப்பமுண்டா*
*மயிர்க்கால் வழியே வியர்வரும்பி வயிறு பொருமி யகன்*
*றிடுகி*
*லியற்றி யெரிக்குங் குன்மமென யிமையோர் சொன்ன*
*முறையாமே. (24)*

(இ-ள்.) வயிற்றில் எரிச்சல் உண்டாகும். குடல் புரட்டும். வாயில் உமிழ்நீர் ஊறும். தலைப்பாரமேற்படும். மயக்கம் ஏற்படும். ஓக்காளம் உண்டாகும். ஏப்பம் அதிகரிக்கும். மயிர்க்கால்கள் தோறும் வியர்வை அரும்பும். வயிறுப்பொருமலும் ஏற்படும். இவை எரிகுன்மக் குறிகுணங்களாம்.

# *சூரை நிதானம்*

*உற்றதோர் கீழ்வயிற்றி லுருண்டுதான் வளையம் போலப்*
*பற்றியே திரண்டுருண்டு பகர்ந்திடா வலியு முண்டாய்*
*மற்றதிற் பொரும லுண்டாய் முதுகினில் வலியுமுண்டாங்*
*கற்பெருஞ் சூரையொன்று கருத்திலே கண்டு கொள்ளே. (25)*

(இ-ள்.) கீழ் வயிற்றில் வளையம்போல உருண்டையான திரட்சி உண்டாகும். தாங்கமுடியாத வலியும் உண்டாகும். வயிற்றுப் பொருமலும் ஏற்படும். முதுகினில் வலியும் உண்டாகும். இவை பெருஞ்சூரையின் குறிகளாகும்.

### **இரத்தச் சூரைக் குறிகள்**

*திரண்டு புரண்டு கீழ்வயிற்றிற் றிறமாய் மாதவி டாய்போது*
*மருண்டு குருதி குறுகிவரும் வாய்நீர் பெருத்து மயங்கி*
*வரும்*
*திரண்டு சிலநாட் சிக்கி நிற்கும் திறமாங் கருவை யழிப்பிக்கு*
*முருண்ட விரத்த சூரையென்று முறுக்கு ணங்கண்*
*டுரைப்பீரே. (26)*

*(இ-ள்.)* இது ஸ்திரீகளுக்கு உண்டாகும் ரோகமாகும். அடிவயிற்றில் கனமாகத் திரண்டு தீட்டாகும்போது தீட்டு சரியாக வெளிப்படாமல் வாயில் நீரூரும். மயக்கமேற்படும். உதிரச் சிக்கலுடன் கர்ப்பத்தையும் அழிப்பிக்கும். இவை இரத்த சூரைக் குறிகளாகும்.

**சுரச்சூரைக் குறிகள்**

*செப்பிய வுதரந்தன்னிற் றிரண்டது புரண்டு நோவாம்*
*வெப்புறு சுரமுமுண்டாம் மிகுந்துவாய் நீரு முண்டாந்*
*தப்பறை மறதியுண்டாஞ் சார்ந்த நெஞ்செரிப்பு முண்டா*
*மிப்படிக் குணங்கள் காணிற் சுரசூரை யென்னலாமே. (27)*

*(இ-ள்.)* வயிற்றில் வாயு திரண்டு உருண்டு வலியுண்டாகும். ஜ்வரம் ஏற்படும். வாயில் உமிழ்நீர் சுரக்கும். அதிகமாக மறதி ஏற்படும். நெஞ்செரிச்சல் காணும். இவை சுரச் சூரைக் குறிகளாகும்.

**பித்த சூரைக் குறிகள்**

*உந்தியை யெரிந் துளைந்தே யுற்றுடல் மருகி நோகுஞ்*
*சிந்துர.வாய்நீ ரூறித் தியங்கியே யிருக்கு நெஞ்சு*
*முந்திய வயறு காலும் முகங்குரு வெற்புக் கொள்ளும்*
*இந்த நோய் பித்தசூரை யென்றுதா னியம்பலாமே. (28)*

*(இ-ள்.)* வயிற்றில் எரிச்சல் ஏற்பட்டு உளைச்சலும் உண்டாகும். தேகத்தில் வலியும் ஏற்படும். வாயில் உமிழ்நீர் சுரக்கும். நெஞ்சு, வயிறு, கால்கள், முகம் முதலான இடங்களில் சூடு அதிகரிக்கும். இவை பித்த சூரைக் குறிகள்.

**நிதம்ப சூரைக் குறிகள்**

*பிள்ளைபெற்றபொழுது தன்னிற் பெருத்தவாயு வதுமீறி*
*யுள்ளே யடங்கிச் சீயிரத்த மொதுக்கிப் புனல்போல்*
*நோவுண்டாய்*

தள்ளிச் சலமலம் போகாமற் றடைப்பட்
டுடலினிடைப்பட்டு
மெள்ளக் கனத்துப் புறத்தோடு மிகுந்த நிம்பசூரையிதே. *(29)*

(இ-ள்.) இதுவும் ஸ்திரீகளுக்கு வரும் ரோகமாகும். பிள்ளை பிறந்த பின்னர் வயிற்றில் வாயு அதிகரித்து சீயும் இரத்தமும் கருப்பையிலிருந்து விழும். கடுமையான வலியும் உண்டாகும். மலம் சலம் அடைக்கும். குடலில் மலம் சேர்ந்து உடலும், பின்பாகமும் கனக்கும். இவை நிதம்ப சூரைக் குறிகளாகும்.

## பக்க சூரைக் குறிகள்

ஒக்கு மேற் சுரமுங் காணு முதரமு முளைவு காணு
மிக்கதோர் திரட்சிகாணு விதனமு மிகுந்து காணு
மைக்குழல் மயிலே! சொல்லுங் குறிகுணம் வருமேயாகிற்
பக்கமாஞ் சூரையென்று பகர்ந்தனர் முனிவர் தாமே. *(30)*

(இ-ள்.) உடலில் ஜ்வரம் உண்டாகும். வயிற்றில் உளைச்சல் ஏற்படும். வயிற்றில் திரட்சியும் வேதனையும் உண்டாகும். இவை பக்கசூரையின் குறிகளாகும்.

## பேய்ச்சூரைக் குறிகள்

நாபியை விரலால்சுற்றி நடுவினில் வலியுண்டாகும்
பாவிவாய் சரீரமெல்லாம் பதைத்திட வருத்தமுண்டாய்
கோபமாய் கிருமிக்கூடு கொண்டிடும் வாந்திசெய்யும்
லோபமாங் குடல்புறட்டு முயர்ந்தபேய்ச் சூரைதானே. *(31)*

(இ-ள்.) தொப்புளைச் சுற்றிலும், நடுவிலும் வலியுண்டாகும். சரீரத்தில் வேதனையும் ஏற்படும். வயிற்றில் கிருமிகளும் ஜனிக்கும். வாந்தியும் அதிகமாக எடுக்கும். குடலும் புரட்டும். இவை பேய்ச்சூரையின் குறிகளாகும்.

### கூர்ம சூரை லக்ஷணங்கள்

ஊறுமே யுதரந்தன்னி லுயர்ந்தெழுந் தாமைபோலாய்
சேருமே லொருக்காலன்னோய் சிதைந்துகா
ணாமலும்போம்
வார்முலை மானே! யாங்கு வலியுண்டா மயக்கமுண்டாங்
கூர்மமாஞ் சூரைசெய்யுங் குணமென வறிகுவீரே. (32)

(இ-ள்.) ஆமைபோன்ற ஒரு எழுச்சி வயிற்றில் எழும்பும். சிற்சில வேளைகளில் அது போய்விடும். வலியும் மயக்கமும் அதிகமாகக் காணும். இவை கூர்மசூரைக் குறிகள்.

## சூலை நிதானம்

நாபிக்கீழ் கடிகையுற்று நடுவிலா வூடேயோடித்
தாபுகைக் குழியிற்குத்தி தயங்குகைப் பிச்சிற்புக்குக்
கோபமா யுயிரைவாங்குங் கொடுக்குலைச் சூலமென்று
சாபமாய் முனியுகந்து தமிழினாற் சாற்றினாரே. (33)

(இ-ள்.) நாபியின் கீழ் குத்துவலி ஏற்பட்டுப் பின்னர் உடல் முழுவதும் ஓடும். பின்னர் கைக்குழியிலும் குத்துவலி உண்டாகும். அதன்பின் கையில் தாங்கமுடியாத வலிகாணும். உயிரைப் போக்கும்படியான குத்துவலி ஏற்படும். இது சூலைச்சூலை நோயின் லக்ஷணங்களாகும்.

### மெதிமூரி சூலத்தின் குறிகள்

ஆண்குறி யடியாயுற்றங் கழன்றுகீழ் முதுகைப் பற்றிப்
பாண்கடைக் குடலைச்சுற்றிப் பரவியே வலிக்கும்போது
நாண்படு நாபிதன்னை நடுவுறச் சுழித்துவாங்கு
மேண்படு மிதனைநீயு மெதிமூரி சூலமென்னே. (34)

(இ-ள்.) ஆண்குறியின்கீழ் அழற்சி ஏற்படும். பின்னர் முதுகில் வலி ஏற்படும். குடலில் வாயு குடைந்து வலியுண்டாகும். நாபியைச் சுழித்துவாங்கும்.

***குறிப்பு:*** - மெதிமூரி என்பதன் பெயர் விளங்கவில்லை.

### கெற்ப சூலைக் குறிகள்

நாபிக்கீழ் புறமிரண்டும் நற்பதத்துடனே பற்றிக்
கோபமா யுடம்பதெங்கும் குடைந்திடும் வலித்துக்குத்துஞ்
சோபமாங் கர்பந்தன்னைத் துடைத்திடுந் தடித்துக்காணுந்
தாபமாங் குணங்களாகிற் றான்கெர்ப்ப சூலமென்னே. *(35)*

*(இ-ள்.)* கற்பிணிகளுக்கு உண்டாகும் ரோகமாகும். வாயு நாபிக்குக் கீழ் இருபுறங்களையும் பற்றிப் பின்னர் உடலெங்கும் குத்துவலியை உண்டாக்கும். கருவை வெளியாக்கும். உடலில் தாபத்தையுண்டாக்கும். இவை கர்ப்பசூலைக் குறிகள்.

### நாபிச்சூலக் குறிகள்

நாபியைச் சூழ்ந்துளைந்து நடுவயிறது வலித்துச்
சோபமா யுன்னிவாயுச் சொறுகியே வயிறுங்காலும்
லோபமாய்ப் புளித்தேக்கிட்டு வுடலது வெளுத்துதாகிற்
றாபமாய் நாபிசூல மிதுவெனச் சாற்றலாமே. *(36)*

*(இ-ள்.)* வாயு வயிற்றைப் பற்றி உளைச்சலைக் கொடுத்து வலியை உண்டாக்கும். வயிற்றிலும் காலிலும் வீக்கத்தையுண்டாக்கும். புளித்த ஏப்பம் உண்டாகும். உடல் வெளுத்துப்போம். இவை நாபிச் சூலைக் குறிகளாகும்.

### பக்கச் சூலைக் குறிகள்

துக்கமாம் வலியுண்டாகுந் துரத்தியே விலாவிற்குத்துஞ்
சிக்கென மலத்தைக்கட்டுஞ் சீறியே நெஞ்சுநோவாம்
புக்கிய வன்னந்தண்ணீர் புசிப்பது மறுக்குமுந்திப்
பக்கமே நோகுமென்னிற் பக்கசூ லந்தானென்னே. *(37)*

*(இ-ள்.)* பக்கங்களில் தாங்கமுடியாத வலி ஏற்படும். வாயு விலாப் புறங்களில் குத்தும். மலத்தைக்கட்டும். நெஞ்சில் வலியுண்டாகும். சாப்பாடு தண்ணீர் முதலானவைகளைத் தள்ளிவிடும். வயிற்றிலும் வலி ஏற்படும்.

### இரத்தச் சூலைக் குறிகள்

மூலமேயாதியாக முரண்டெழுந்துந்திதன்னிற்
சாலவே பொருமிநெஞ்சு தடுக்கிமே லேப்பமுண்டாஞ்
சீலமா மலத்தைக்கட்டுஞ் தீபன மந்தமாகு
மோலமாங் குணங்களிரத்த சூலமென் றுரைக்கலாமே. (38)

(இ-ள்.) வாயு மூலத்தில் குத்திப் பின்னர் வயிற்றில் பொருமலைத் தரும். ஏப்பம் உண்டாகும். மலச்சிக்கலும் உண்டாகும். பசி மந்திக்கும். இக்குறிகள் இரத்த சூலை நோயில் காணும் குறிகளாகும்.

**குறிப்பு:-** இதில் ரத்தம் வெளியாதலைப் பற்றிக் குறிப்பிடப்படவில்லை. மூலச்சூடு அதிகரிக்கும்போது சிற்சில சமயங்களில் இரத்தம் வெளியாதலுமுண்டு.

### உதரச்சூலைக் குறிகள்

கோதுசேர் வயிறுதன்னிற் குழிபெறச் சுழியுமுண்டாம்
வாதையா யுதரம்நொந்து வலித்திடு மந்தமுண்டாந்
தாதுசேர் குழலின்மாதே! தரணியி லாயுள்நூலோ
ரோதிய குணங்களாகி லுதரத்திற் சூலமென்னே. (39)

(இ-ள்.) வயிற்றில் குழியுண்டாகும்படியாக சுழித்து வயிற்றுவலி ஏற்படும். மந்தம் உண்டாகும். இது உதர சூலக் குறிகளாகும்.

### உறுப்புச் சூலைக் குறிகள்

கான்றிடு மன்னந்தன்னைக் கையடி விலாவிற்குத்து
மேன்றிடும் பசியைமாற்று மிகவியே யுதரந்தன்னி
லூன்றியே வலித்துநோவா முறுகுணங் கண்டபோது
தோன்றிடுங் கோளுறுப்பு சூலமென் றுரைக்கலாமே. (40)

(இ-ள்.) வயிற்றில் சேர்ந்த ஆகாரத்தை அழற்சியுறச் செய்யும். கையின் அடிப்புறம், விலாப்புறம் முதலான இடங்களில் குத்துவலியையுண்டாக்கும். பசி மந்தமாகும். வயிற்றில் வேதனையைத் தரும். இவை உறுப்புசூலக் குறிகளாகும்.

### வாதசூலைக் குறிகுணங்கள்

*உந்தியிற் சுழன்றழன்று வாதியா யுதரந்தன்னில்*
*வெந்துயர் விதனமுண்டாய் மேனியுங் குளிர்ச்சியுண்டாய்*
*சந்துதாள் முதலாயுள்ள தானங்க ளுளைந்துகுத்தி*
*வந்திடில் வாதசூல மிதுவென வகுக்கலாமே. (41)*

*(இ-ள்.)* வயிற்றில் உளைச்சலுடன் அழற்சியும் ஏற்படும். மிக வேதனையையளிக்கும். உடலில் குளிர்ச்சியுண்டாகும். மூட்டுகள், தாடைப் புறங்கள் முதலான இடங்களில் வலியுண்டாகும். இவை வாதசூலக் குறிகளாகும்.

### கோபசிங்கச் சூலைக் குறிகள்

*முகில்பெறு மேகம்போல முழங்கியோ ரிடத்தில்நில்லா*
*திகலுறு முதரந்தன்னி லெய்திடுங் குத்துண்டாகும்*
*நகில்பெறு களபக்கொங்கை நளினமென் றிருவே! கேளாய்!*
*சுகமது கோபசிங்கச் சூலமி தென்றுசொல்லே. (42)*

*(இ-ள்.)* இடியைப்போல் வயிற்றில் சப்தமுண்டாகி வாயு ஓரிடத்திலும் நில்லாமல் தேகமுழுவதும் சஞ்சரிக்கும். வயிற்றில் குத்துவலியையும் உண்டாக்கும். இவை கோபசிங்கச்சூலைக் குறிகளாகும்.

### மூலச்சூலைக் குறிகள்

*நல்லியல் முதுகந்தண்டு நாளத்தி னடியில் தோன்றி*
*எல்லையில் விதனமாகி யெழுந்துளைந் திருக்குங்கண்டாய்*
*முல்லையங் கோதைமாதே! முகங்குறு வியர்வுகொள்ளுஞ்*
*சொல்லிய குணங்கள் மூலச் சூலமென் றுரைக்கலாமே. (43)*

*(இ-ள்.)* முதுகந்தண்டின் அடியில் வலியுடன் உளைச்சலும் உண்டாகித் தாங்கமுடியாத வேதனையைத் தரும். முகத்திலும் வியர்வை அரும்பும். இது மூலச்சூலக் குறிகள்.

### அத்திசூலைக் குறிகள்

பொங்குற்ற வாயுத்தானே வுதரத்திற் பொருமி நொந்து
தங்குற்ற பழுவெலும்பு தாரையூ டோடியேறி
மங்குற்ற மயக்கமுண்டாய் மலசலம் பிடித்துக்காணும்
அங்கத்தை வருத்தஞ் செய்யு மத்திசூலந்தா னென்னே. *(44)*

(இ-ள்.) வாயு வயிற்றில் சேர்ந்து பொருமும். பின்னர் வலியையும் கொடுக்கும். பழுவெலும்புகள் வழியாக இருதயத்தின் பக்கங்களில் வந்து அடிக்கடி மயக்கத்தைத் தரும். மலசலம் வெளியாகாது. தேக உறுப்புக்களையும் வருத்தும். இவை அத்தி சூலத்தின் குறிகளாகும்.

### சதிரச்சூலைக் குறிகள்

நோக்கிடு மீரல்தன்னில் நோவுடன் விலாவிலேறும்
போக்கிடு முந்திக்கீழும் புறத்திலு மொருக்காற் குத்துந்
தேக்கமாய் நெஞ்சடைக்குஞ் சிதறியே யுதரந்தன்னி
றாக்கிடுஞ் சதிரசூல மிதுவெனச் சாற்றலாமே. *(45)*

(இ-ள்.) ஈரல் குலையில் வலி ஏற்படும். விலாப்புறங்களிலும் வலியுண்டாகும். வயிற்றின் அடிபாகத்திலும் இருபுறங்களிலும் குத்துவலியுண்டாகும். நெஞ்சையடைக்கும். உதரத்திலும் வாயு தாக்கும். இவை சதிரச்சூலத்தின் குறிகளாகும்.

# கிராணி நிதானம்

### வாதக்கிராணி குணம்

பொருமல் விரைச்சல் செரியாமை புளித்தே யேப்ப மிகவிடுத
லிரும லரைசோ றதுகழித லிளகி மலமே கழிந்திடுதல்
பெருகு மபான வாய் வாயுப் பேசல் வயிறு வலித்திடுதல்
வரிசைக் குறிய பலங் குறைதல் வாதக்கிராணி யெனலாமே.

(இ-ள்.) வயிற்றுப் பொருமல், இரைச்சல், உண்ட ஆகாரம் சீரணிக்காமை, புளித்தேப்பம், இருமல், அரைத்த சோறுபோல் கழிதல், அபானவாயு மிகுந்த சப்தத்துடன் வெளியேறல், வயிற்றில் குத்துவலி, உடல் பலம் குன்றிப்போதல் முதலான குறிகள் காணப்படில் அது வாதக்கிராணியாம்.

## வாத பித்தக் கிராணி

அன்னமருந்தி லருசியதா மடுக்குந் தாகம் நாவறட்சி
துன்னுங் கழிச்சல் நெஞ்செரிப்புத் துயரம் பெருகும்
கண்டூங்கும்
பன்னுங் கழிச்சல் பொறுத்து நின்று பதரக்கழியும் பதம்
வீங்கும்
என்னுங் குணங்கள் வாதபித்தக் கிராணி யெனவே
யியம்பிடுமே. (47)

(இ-ள்.) சாதம் சாப்பிடமுடியாமல் அரோசகம் ஏற்படும். தாகம் எடுக்கும். நாவறட்சியுண்டாகும். கழிச்சல், நெஞ்சுக்கரிப்பு முதலான துன்பம் உண்டாகும். கண்கள் தூங்கும். கழிச்சல் நின்று நின்று உண்டாகும். கால்கள் வீங்கும். இவை வாதபித்தக் கிராணிக் குணங்களாகும்.

## பித்தக் கிராணிக் குறிகள்

உடம்பு வெதும்பி சிறுசுரமா யுழலைத் தண்ணீர் தாகமதாய்
அடங்கு மக்கினி மந்தமதா யருசி வாந்தி நெஞ்செரிப்பா
விடங் கொள் கழிச்ச லிரைச்சலுமா யிசையுமபானங்
கடுத்தெரிகிற்
றடங்கொள் விழியாய்! இதுபித்தக் கிராணி யெனவே
சாற்றிடுமே. (48)

(இ-ள்.) உடம்பு அழற்சியுறும். லேசாகச் சுரமடிக்கும். தண்ணீர் தாகம் உண்டாகும். அக்னி மாந்த்யம் ஏற்படும்.

வாந்தி, நெஞ்சுக்கரிப்பு இவைகளுடன் வயிறு கழிச்சல், இரைச்சல், ஆசனக்கடுப்பு முதலான குறிகளும் கண்டால் அது பித்தக் கிராணி என்று தெரிந்துகொள்ளவும்.

## இதுவுமது

கையுங் காலுங் கனன் றெரிந்து கபமும் சுரமு முண்டாகு
நையுஞ் சரீர முதரத்தை நறுங்க வலித்துக் கழிச்சலுண்டா
மெய்யும் வியர்க்கும் அனம் வெறுக்கும் விக்கலெடுக்கும்
வாந்திக்கும்
செய்யுங் குணங்களிது பித்தக் கிராணி யென்று
சாற்றிடுவாய். (49)

(இ-ள்.) கை, கால்களில் எரிச்சலெடுக்கும். கபம் அதிகரிக்கும். சுரம் அடிக்கும். உடல் நோகும். வயிற்றுவலியுடன் கழிச்சலும் ஏற்படும். உடலில் வியர்வை அரும்பிநிற்கும். சாப்பாட்டில் இச்சையிராது. விக்கலும் வாந்தியும் உண்டாகும். இவைகளும் பித்தக்கிராணியின் குறிகுணங்களாம்.

## சிலேத்மக் கிராணி குணம்

உண்டசோறு செரியாதே யுதரம் பொருமும் வேதனையாங்
கண்டந்தனிலே கபமிரையும் கைகாலயர்ந்து
வியர்வையுண்டா
மண்டுங் கழிச்சல் மாக்கரைத்தாப் போலே கழியும்
வலியுமுண்டாய்க்
கொண்டசிலேத்மக் கிராணி செய்யுங் குணத்தை யுரைத்தோ
மறிவீரே. (50)

(இ-ள்.) சாப்பிட்ட ஆகாரம் சீரணிக்காமல் வயிற்றில் வாயு சேரும். வயிற்றில் வலியும் உண்டாகும். தொண்டையில் சளி குர்குர் என்று சப்தமிடும். கைகால்கள் ஓச்சலுண்டாகும். வியர்வையும் அரும்பும். மாக்கரைத்தாப் போல் வயிறு பேதி உண்டாகும். வயிற்றில் வலியும் ஏற்படும். இவை கபக்கிராணிகளின் குறிகள்.

## ஆமவாதக் கிராணிக் குறிகள்

ஆமவாதக் கிராணிவகை யறியி லொருநாள் விட்டொருநாள்
சாமம் கழிந்து பகல்மாறித் தானே பொறுத்து நாலாறில்
மேவிக்கழியும் சீதலமலம் வெளுப்புத்தண்ணீர் விதவிதமாய்
நோவு பொறுக்குஞ் சந்துளையும் நுவலிலபான
மெடுத்திடுமே. *(51)*

*(இ-ள்.)* ஒருநாள்விட்டொருநாள் காலை நேரங்கள் கழிச்சல் ஏற்படும். பகல் கழிந்தவுடன் நின்றுபோம். மலம் தண்ணீரைப்போலும், சீதத்துடன், வெண்ணிறமாகவும் அல்லது பற்பல நிறமாகவும் கழியும். மூட்டுகளில் வேதனையேற்படும். அபானம் அடிக்கடி பிரியும்.

## மூலக்கிராணிக் குறிகள்

இடுப்புக் கடுத்து வயிறுளையு மிளகுஞ்சீத மிற்றிற்று
முடுக்கிற் துயர மிகுதியுமாய் மூலங் கடுத்துக் கழிந்தடங்கு
மடுத்தே யன்னந் தனைத்தேடாதபானம் பேசிக்
கழிந்தழற்றுந்
தொடுக்கும் மூலக்கிராணியிது சொல்வார் வயிற்றுக்
கடுப்பென்றே. *(52)*

*(இ-ள்.)* இடுப்பில் கடுப்புவலி, வயிற்றில் உளைச்சல், சீதம் வெளியாதல், அதிகமான வேதனை, மூலம் கடுத்துக்கழிச்சல் உண்டாகும். ஆகாரத்தில் விருப்பமிராது. வாயு பிரியும். இவை மூலக்கிராணியின் லக்ஷணங்களாகும்.

## சங்கிரகக் கிராணிக் குறிகள்

செப்பிய வாதபித்தச் சிலேற்பன மிம்மூன்றான
ஒப்புறு கிராணிதன்னில் லொவ்வொரு குணமுந்தோன்றி
வெப்புறு மிரத்தஞ்சீத மிகவலி யெரிவு தாக
மிப்படிக் குணங்களாகுங் கிராணிசங் கிரகமென்னே. *(53)*

(இ-ள்.) மேற்கூறிய வாத, பித்த, கபம் இவைகளில் காணும் குறிகுணங்கள் தோன்றுவதுடன் இரத்தமும் சீதமும் கலந்து அதிகமான வலி, எரிச்சல் தாகம் இவற்றுடன் மலம் கழிந்தால் இது சங்கிரகக்கிராணியின் குறிகள் எனத் தெரிந்துகொள்ளவும்.

## அதிசார நிதானம்

### *வாதாதிசாரக் குறிகள்*

மலந்தான் கறுத்து வயிறழியும் வாயு மிகுதி யுண்டாகும்
கலந்தான் காய்ந்தாற் போல்காயுங் கருது முதர மந்திக்கும்
நலந்தானன்றி மெய்யுளைந்து நலிந்து மயங்கி
யிளைப்புமுண்டாஞ்
சொலுந்தான் வாத வதிசார மென்றே சொல்லுந்
தோகையரே. *(54)*

(இ-ள்.) மலம் கறு நிறத்துடன் வெளியாகும். வாயு அதிகரிக்கும். உடலில் ஜ்வரமடிக்கும். பசி மந்தமாகும். உடலில் குத்துவலியுடன் மேல் மூச்சும் உண்டாகும். இவை வாதாதிசாரக் குறிகளாகும்.

### *பித்தாதிசாரக் குறிகள்*

நானாவிதமாய் மலங்கழியும் நடுவே வலித்து நோவுமுண்டா
மூனே யொழுகி நொந்திருக்கு முன்னேயழத்தி மிகக்காயுந்
தானே கைகால் வெச்செனவாந் தண்ணீர் வேண்டுந்
தசையெய்தும்
பேனூர்வதுபோற் றலைசொறிவாம் பித்தசாரக்
குணமாமே. *(55)*

(இ-ள்.) பற்பல நிறமாகவும், விதங்களாகவும் மலம் கழியும், வயிற்றுவலி உண்டாகும். சுரம் அடிக்கும். கைகால்கள் வாட்டமுறும். தண்ணீர் தாகம் எடுக்கும். தலையில் பேனூர்வதைப்போன்ற உணர்ச்சியேற்படும். தலையையும் சொரிவான். இவை பித்தாதிசாரக் குறிகள்.

## கபாதிசாரக் குறிகள்

அய்யதிசாரக் குணங்களோ யறவே பொருமி
யுடல்வெளுத்துப்
பொய்யேயல்ல மெய்வியர்க்கும் பொருந்திக் கபமு
மிகவுண்டாம்
நையும் குடற்போற் சீதம் விழும் நாக்கும் நீறி வழுவழுக்கும்
மெய்யே யறிவு குன்றிவரும் விக்கலெடுக்கும் மீளாதே. *(56)*

(இ-ள்.) வயிற்றுப்பொருமல், தேகம் வெளுத்து விடுதல், உடலில் வியர்வை முதலானவைகள் உண்டாகும். கோழை அதிகரிக்கும். குடல் நைந்தாப்போல் சீதம் மலத்துடன் வீழும். நாக்கில் வழவழப்பு ஏற்படும். அறிவு குன்றும். தீராத விக்கலும் எடுக்கும்.

## ரத்தாதிசாரக் குறிகள்

உரத்திடு முதரந்தன்னி லுளைவுடன் வலியுமுண்டாய்
வருத்தமாய் கிறுகிறுத்து வறண்டுடல் மெலிந்து நோவாம்
முறுத்திடு மலத்தில் ரத்தமோடிரு முளைவுமுண்டாம்
மிரத்ததி சாரமென்றே யாயுள்நூ லியம்பும் வாறே. *(57)*

(இ-ள்.) வயிற்றில் வலியுடன் உளைச்சலும் உண்டாகும். தலைச்சுற்றல், உடல் வரண்டுபோய் வலி, மலத்தில் இரத்தம் போதல் முதலான குறிகள் காணப்படில் அது ரக்தாதிசாரமாகும்.

## ஆமாதிசாரக் குறிகள்

நாபிக்கீழ் கவ்விக்கவ்வி நலிவுற விதனமாகிப்
பாவிக்குஞ் சரீரமெல்லாம் பரதவித் திளைப்புமுண்டாஞ்
சீவிக்கும் பொசிப் பறாமற் சீதமே கழியுமாகி
லாவிக்கு ளமுதே சொன்னோ மாமாதி சாரமாமே. *(58)*

(இ-ள்.) வயிற்றனடியில் கவ்வுதலைப் போன்ற வலியுண்டாகும். சரீரம் நிலைகொள்ளாமல் மேல்மூச்சும் உண்டாகும். ஆகாரத்தில் விருப்பமிராது. மலத்துடன் சீதம்

வீழும். இக்குறிகள் கண்டால் ஆமாதிசாரம் என்று தெரிந்துகொள்ளவும்.

### அதிசாரவாயுக் குறிகள்

*குடற்புரண்டிரைந்து நொந்து குறுக்கினில் விலாவிற்குத்தி*
*யுடற்பலங் கட்டுக் கைநா லோய்ந்து மேற் புளித்தேக்கிட்டுப்*
*பிடித்தன்னம் வேண்டாதாகில் பெருத்த சோற்றாக் கழிச்ச*
*லடிக்கடிக் காணுங் கண்டா யதிசார வாயுவாமே.* (59)

(இ-ள்.) குடல் புரண்டு, இரைச்சலுடன் வலியேற்படும். வாயு விலாப்புறங்களில் குத்தல் வலியையுண்டாக்கும். பலம் குறையும். கைகால்கள் ஓயும். புளித்தேப்பமுண்டாகும். ஆகாரத்தில் இச்சையிராது. சாப்பிட்ட ஆகாரம் அப்படியே கழியும். இவை அதிசார வாயுவின் குறிகளாகும்.

### கஷ்ட சாத்யமான அதிசாரக் குறிகள்

*பாலனில் விருத்தந்தன்னிற் பழகிய முதுமை தன்னிற்*
*கோலமாங் கிராணி சேரும் புருடர்க்குக் கொம்பன்னார்க்கு*
*வாலையிற் கருப்பந் தன்னிற் வளர்ந்தசூ திகையிற் சேருங்*
*காலமீ தந்தரோகங் கட்டசாத் தியமென்றோதே.* (60)

(இ-ள்.) கிராணி அதிசாரம் புருஷர்களுக்குப் பாலவயதிலும் விருத்த வயதிலும் வரும். பெண்களுக்குப் பாலவயதிலும், கர்ப்பகாலத்திலும், பிரசவித்த பின்பும் வரும். இதில் புருஷர்களுக்கு விருத்தாதிசாரமும் பெண்களுக்குச் சூதிகாதிசாரமும், கஷ்டசாத்யம் என்று தெரிந்துகொள்ளவும்.

### கர்ப்ப ரோகம்

*வஞ்சனை தன்னினாலும் மருந்தீடு தன்னினாலும்*
*மொஞ்சிடு சரீர வேட்கை யுறுதிசெய் தண்டிப்பாலும்*
*அஞ்சலாம் பிள்ளைப் பேறி லடங்கிய இரத்தத்தாலும்*
*மிஞ்சிய வாயுவாலுங் கருப்பநோய் மேவுமென்னே.* (61)

(இ-ள்.) வஞ்சனைகள் செய்வதனாலும், பெண்களின் கை விஷத்தினாலும், காமவேட்கை அதிகரிப்பதனாலும், பிள்ளைப் பிறக்கும்போது காணும் இரத்தம் உள்ளேயே அடங்கிவிடுதலாலும், வாயு அதிகரிப்பதனாலும் கர்ப்பநோய் ஸ்திரீகளுக்குச் சம்பவிக்கின்றன.

## கர்ப்பச்சூரைக் குறிகுணம்

*பொருமித் திரண்டு கீழ்வயிற்றிற் புண்பட்டழுந்துஞ்*
*சீழ்கொண்டு*
*மருவிப் புணருங் காலத்தில் வலிக்கு மயக்க மாறாதே*
*யுருவிப் பிழிதல்போல் மேனி யுலர்ந்து தியங்கி*
*யொடுவுண்டாங்*
*கருவையழிக்குங் கொடியிடையே! கருப்பசூரை*
*யெனக்கருதே. (62)*

(இ-ள்.) ஸ்திரீகளின் வயிற்றில் திரண்டு ஒருகட்டி ஏற்பட்டுக் கீழ்வயிற்றில் சஞ்சரிக்கும். புண்ணைப்போல் வலிகொடுக்கும். சம்போக காலத்தில் குத்துவலியைத்தரும். மயக்கமும் உண்டாகும். உடம்பு வரண்டுபோம். இவை கர்ப்பசூரைக் குறிகள்.

## கர்ப்ப விப்புருதி

*திரண்டு புழுக்கையென வுருண்டு தீய்ந்துக்கருகி*
*மலம்வீழும்*
*வருந்தி யுடம்பு வறண்டெலும்பு வற்றுந்தாரை சீழ்வடியு*
*முருண்டு வலிக்குங் கர்ப்பத்தை யொடுக்குங் கெடுக்குந்*
*தாதுட்கும்*
*திரண்டகர்ப்ப விப்புருதி செய்யுங் குணமென் றறிவீரே. (63)*

(இ-ள்.) மலம் புழுக்கைபோல் திரண்டு உருண்டு, தீய்ந்து கருத்து வீழும். உடம்பில் வேதனையும் வரட்சியும் உண்டாகும். எலும்பு வற்றும். மர்ம ஸ்தானத்திலிருந்து சீழ் வெளியாகும். கர்ப்பாசயத்தில் வாயுதிரண்டு, உருண்டையாகிக் கர்ப்பத்தையொடுக்கும். தாது க்ஷீணமுண்டாகும். இவை கர்ப்பவிப்புருதிக் குறிகளாகும்.

## கர்ப்பச்சூலைக் குறிகள்

*திரண்டுகீழ் வயிற்றைப் பற்றி சிக்கிநின் றிரத்தம் வீழ்ந்து*
*புரண்டு தான் வலிக்கலாகும் போசனம் வெறுக்கலாகும்*
*வரண்டுட லத்தியாகி மயங்கெட வுலர்தலாகு*
*முருண்ட மூன்றுளைதலாகு முறுகெர்ப்ப*
*சூலையென்றே. (64)*

(இ-ள்.) வாயு திரண்டு அடிவயிற்றைப் பற்றி இரத்தத்தை மர்மஸ்தானத்தின் வழியே வெளியாக்கும். அப்போது வலியும் உண்டாகும். ஆகாரத்தை தள்ளும். உடல் வரட்சியாகி மெலிந்துபோம். வயிற்று உளைச்சலும் ஏற்படும். இவை கர்ப்பசூலைக் குறிகள்.

## இதுவுமது

*பொருமிப் புரளுங் கீழ்வயிறு புண்போல் நோகு*
*முடம்பெங்கு*
*முருவக் குத்துங் குடைவுண்டா முயருஞ்சுரமுந்*
*தலைவலியும்*
*பெருகப் பெருக வுண்டாகும் பேணுங் கருவையழிப்பிக்குந்*
*திருவைப் பொருதுஞ் சேயிழையே! சேரும்*
*கெர்ப்பசூலமிதே. (65)*

(இ-ள்.) ஸ்திரீகளின் அடிவயிற்றில் பொருமல் ஏற்பட்டு அது புரளும். கீழ்வயிறு புண்போல் நோகும். உடம்பில் குத்துவலியுண்டாகும். சுரம், தலைவலியும் அதிகரிக்கும். கர்ப்பத்தையும் அழிக்குந் தன்மையுள்ளது. இவை கர்ப்பச்சூலைக் குறிகளாகும்.

## கர்ப்பச்சுரோணிதம்

*திரண்டு புரண்டு கீழ்வயிற்றில் திங்கள் முழுக்கில் வலியுண்டா*
*மருண்டு குருதி குறுகிவரும் வாய்நீரூறு மயங்கிவருந்*
*திரண்டு சிலநாட் சிக்கிநிற்கும் திறமாங் கருவை யழிப்பிக்கு*
*முருண்ட கர்ப்பச்சுரோணிதமென் றுரைக்குங் குணங்கண்*
*டறிவீரே. (66)*

(இ-ள்.) ஸ்திரீகளின் கீழ்வயிற்றில் வாயு திரண்டு உருண்டையாகி மாதா மாதம் தீட்டாகும்போது தாங்கமுடியாத வலியைக்கொடுக்கும். தீட்டு அதிகமாக ஆகாது. வாயில் உமிழ்நீர் அதிகமாகச் சுரக்கும். மயக்கம் வரும். தீட்டு விட்டுவிட்டு வரும். கர்ப்பத்தையும் அழிக்கும். இவை கர்ப்ப சோணிதக் குறிகளாகும்.

## *கர்ப்ப வாயுக்குறிகள்*

பொருமி இரத்தந் தனைமரித்துப் போத வுதரம்
வலியுண்டாய்
குருதியழியில் வலிதீருங் கூடுங் கெர்ப்பந் தனையழிக்கும்
வருடி யிடுப்புக் குடைந்துளையு மலத்தை மிகவுமிறுக்கி
நிற்கும்
பெருகப் பணைக்குங் குவி முலையாய்! பேசுங் கெர்ப்ப
வாயுவிதே. *(67)*

(இ-ள்.) தீட்டு சரியாக ஆகாமல் வலியைத் தரும். தீட்டு நன்றாக வெளியானால் வலி நிற்கும். கருவைத் தரிக்கவிடாமல் செய்யும். இடுப்புவலி உண்டாகும். மலத்தைக் கட்டும். இவை கெர்ப்ப வாயுவின் குறிகள்.

## *சல கர்ப்ப வாயு*

சூத்திர வுதானவாயு வுதரத்திற் றுன்னி யொத்தும்
நீர்த்தடைப் பட்டு நொந்து நின்று நீர் சிறுத்து வீழ்ந்து
மாத்திரை முதுகந் தண்டு வலித்திடுங் கர்ப்பம் கேடாஞ்
சாத்திர மயிலே! கேளாய்! சலகர்ப்ப வாயுவாமே. *(68)*

(இ-ள்.) உதானவாயு வயிற்றில் சஞ்சரித்து, வலியையுண்டாக்கும். சிறுநீர் தடைப்பட்டுக் கொஞ்சமாக வலியுடன் வீழும். முதுகுத்தண்டில் வலி ஏற்படும். கர்ப்பத்தை அழிக்கும். இவை சலகர்ப்ப வாயுக் குறிகள்.

*(சலம்-சஞ்சரிக்கின்ற)*

## ஆமகர்ப்பவாயுக் குறிகள்

*மண்டு முதரத்துட் சீதம் வளர்ந்து வயிறு மடிப்புமுண்டாய்*
*பண்டை மலமுந் தடைப்பட்டுப் பலகால் வலித்து*
*வேதனையாய்க்*
*கொண்ட கர்ப்பங் கொள்ளாமல் குலைக்குஞ் சீதம் மலத்தில்*
*விழுங்*
*கெண்டை விழியாய்! ஆமத்திற் கெர்ப்ப வாயு வெனக்*
*கருதே. (69)*

(இ-ள்.) வயிற்றில் சீதம் அதிகரிக்கும். வயிற்றில் மடிப்பு உண்டாகும். மலச்சிக்கல் ஏற்படும். வயிற்றில் வலியும் உண்டாகும். கர்ப்பம் தரிக்காது. மலத்துடன் சீதமும் போம். இவை ஆமகர்ப்ப வாயுக்குறிகளாகும்.

*(ஆமம் - ஆகாரம் சீரணியாமை)*

## கர்ப்பக்கினிக் குறிகள்

*வந்தே யுதரந் தனில் வலித்து வளருஞ் சுரமுங் காந்தலுமாய்*
*நொந்தே மேனி வறண்டுலர்ந்து நோக்குங் கர்ப்பந்தனை*
*யழிக்கும்*
*தந்தேரிடையா! யிக்குணங்கள் சாரிற் கர்ப்பாக்கினியுன்ன*
*மந்தர் நிலஞ்சேர் பொதியமலை வாழுமுனிவ*
*னருள்செய்தான். (70)*

(இ-ள்.) வயிற்றில் வலியுண்டாகும். ஜ்வரமும், எரிச்சலும் உண்டாகும். உடல் வலியுடன் வறண்டுபோம். கர்பத்தை அழிக்கும். இவை கர்ப்பாக்கினி இலக்ஷணங்களாம்.

## கர்ப்பக் கிரிமிக் குறிகள்

*கடுக்கு முதரந் தனிற் கழற்சிக் காய்போல் மிதக்கு*
*மருவருக்குங்*
*கொடுக்கு மசனம் வாந்திக்குங் குறுகி வருநாள் மிகவலிக்கு*

மடுக்குங் குருதி நிறமாறு மருந்திக் கருவை நாடோறுங்
கெடுக்குங் கெடுக்குங் குயில்மொழியே! கெர்ப்பக்
கிருமியிவையாமே. (71)

(இ-ள்.) அடிவயிற்றில் வலியுண்டாகும். வயிற்றில் கழற்சிக்காய்போல் வாயு திரளும். சாப்பாட்டில் அருவருப்பு ஏற்படும். சாப்பிட்ட ஆகாரம் வாந்தியாகும். தீட்டாகும் போது வயிற்றுவலியும் உண்டாகும். தீட்டின் நிறமும் மாறும். கருவை அழிக்குந் தன்மையுள்ளது. இவை கர்ப்பக் கிருமியின் இலக்ஷணங்களாம்.

***குறிப்பு:-*** மேற்கூறிய லக்ஷணங்கள் கிருமி உடலில் சேர்வதனால் உண்டாவது போலும்.

## *வாயுத் திரட்சிக் குறிகள்*

*இருவிலாவதனின் நெஞ்சி னெலும்பின்கீழ் நடுவயிற்றிற்*
*றிருவுலாவுந்திக் கீழ்மே விடப்புறந் தன்னிற் செந்நீர்*
*பொருவுலா வாயுவோடு பொருந்தியே திரண்டு நொந்து*
*மருவிய நாளின் மேலும் வந்திடுங் குணத்தைச்*
*சொல்வாம். (72)*

*(இ-ள்.) வாயுத் திரட்சி ஸ்தானங்கள்:- ஸ்திரீகளின் இரு விலாபுறங்கள், நெஞ்செலும்பிற்குக்கீழ், நடுவயிறு, தொப்புளுக்கு மேல்புறம் அல்லது கீழ்புறம், இடப்புறத்திலும் வாயுப் பொருமி இரத்தத்துடன் கலந்து உருண்டையான வளர்ச்சி ஏற்படும். வலியும் உண்டாகும்.*

## *திரட்சிக் குறிகள்*

*நாமிண றுலரும் நாவு நற்சுவை யிரண்டு மாறு*
*மாவலாய் பசிக்குமன்றி மந்திக்கு மங்கங் காயு*
*மேவுகை யடியில் நெஞ்சில் விலாவினில் முதுகில் குத்துந்*
*தாவிய பொசிப்புக் கொண்டால் மாந்திடுஞ் சரீரம்*
*வற்றும். (73)*

கண்ணொளி குறைந்து காணுங் கனக்கவே வருத்தங் காணும்
பெண்ணிட மிந்தரோகம் பெருகவுண் டாகக் காணுந்
தண்ணிய விரத்தந்தன்னில் வாயுவே சேர்ந்தொன்றாகி
நண்ணிய திரட்சைகாணு மென்பது நவிலு நூலே. *(74)*

(இ-ள்.) நாக்கு உலர்ந்துபோம். சுவையும் வேறாகும். பசி ஏற்பட்டாலும் ஆகாரம் சீரணியாமல் மந்தித்துப்போம். உடம்பில் லேசாக ஜ்வரமடிக்கும். கையில் கீழ்புறம், நெஞ்சு, விலாப்புறங்கள், முதுகு முதலான இடங்களில் குத்து வலியுண்டாகும். சரீரம் இளைக்கும். கண்களில் பார்வையும் குறையும். மிக்க வேதனையைத் தரும். இது ஸ்திரீகளுக்கு ஏற்படும் ரோகமாம். இரத்தத்துடன் வாயு சேர்ந்து இந்த நோயையுண்டாக்கும்.

## *நீராம்பல் ரோக நிதானம்*

மார்பு கீழ் வயிறு தோன்றி வகைப்படா வீக்கமாகி
நேரொத்தக் காயம் வற்றி நிற்பது நாவும் பல்லும்
நீர்வற்றித் தண்ணீர் தேடும் நினைவற்றுப் பல்லுங்
கோர்க்கும்
வார்கட்டு முலையாய்! சொன்னேன் வயிற்றில் நீ
ராம்பலாமே. *(75)*

உடம்பதுவந்துள் ளிருமலுண்டா யுதரம் வீங்கி நாவறண்டு
தடங்கண் வெளுத்துப் புறங்காலுந் தடித்து வீங்கித்
தாகமுமாய்
அடர்ந்தே மூச்சுத் துடர்ந்தோடு மயதி மிகுவு முண்டாகு
மடந்தாய்! சொன்னோம் நீராம்பல் வருத்துங் குணத்தின்
வரலாறே. *(76)*

இயங்கும் கீழ்வயிறு தன்னி லிருந்திடுந் திரட்சி யீரல்
மயங்கி வாய்நீர் சுழற்றும் வாய்வழுவழுத்துக் காட்டும்
புயங்கிள ருடம்பு வற்றும் பொருத்து நொந் துளையுமாகில்
வயங்கொள்நீ ராம்பலென்று வளம்பெற வுரைக்கலாமே.

(இ-ள்.) மார்புக்குக்கீழே வயிற்றில் வீக்கமுண்டாகும். தேகம் இளைக்கும். நாக்கும் பல்லும் உலர்ந்து தண்ணீரைத் தேடும். அடிக்கடி மயக்கம் ஏற்படும். மேலும் இருமல் வயிறுவீக்கம், நாவறட்சி, கண்களில் வெளுப்பு, புறங்காலில் வீக்கம், தாகம், மூச்சுத்திணறல், சரீரவாட்டம் முதலானவைகளும் காணும். கீழ்வயிற்றில் திரட்சியான வீக்கம் வாயில் நீர்ஊறல், வாயில் வழவழப்பு, உடம்பு இளைப்பு, மூட்டுகளில் வலி இவைகள் உண்டானால்கூட அதுவும் நீராம்பலின் லக்ஷணங்களாகும்.

## பேராம்பலின் குறிகள்

வீங்குஞ் சலமும் மிகக் கோர்க்கும் மிகுந்தே பொருமு
முடம்பெங்கும்
வாங்கு முதசந் தனைத் தேடு மறுகித் துயர மிகுந்திருக்குந்
தூங்குங் கண்ணுமேல்மூச்சுஞ் சுவையிற் புளித்தாப்
போலிருக்கு
மேங்கு மிகவே பேராம்ப லிதுவே செய்யுங் குணமாமே. *(78)*

(இ-ள்.) உடலில் நீர்கோத்து வீங்கும். வயிற்றுப் பொருமல் ஏற்படும். தண்ணீர் தாகமேற்படும். அதிக வேதனையைத் தரும். தூக்கம் உண்டாகும். மேல்மூச்சு வாங்கும். வாயில் புளிப்புச்சுவையுண்டாகும். இவைகள் பேராம்பலின் குணங்களாகும்.

## வெப்புப் பாவைக் குறிகள்

குணமுள்ள குளிரால் வெற்பால் குறியுடனிடப்பாகத்தில்
நிணமுட நீருங்கூடி நிமிர்ந்தெழுந்து (வாமி) போலா
யுணவினைப் புறட்டி யேறு முயர் குடல் வலித்து நோகு
மணவிய வெப்புப்பாவை யிதுவென வறிகுவீரே. *(79)*

(இ-ள்.) அதிகமான குளிர், உஷ்ணம் இவைகளால் அடிவயிற்றின் இடது பக்கத்தில் ஊன் தண்ணீர் சேர்ந்து

வீங்கும். உணவைத் தள்ளும். குடல்வலியும் உண்டாகும். இவை வெப்புப்பாவையின் குறிகளாம்.

## அகுவை நோய்

உரைக்குமேல் வயிற்றைப்பற்றி யுருட்டியே
யீடிஞ்சில்போலத்
துரக்குமோர் திரட்சி யுண்டாஞ் சோத்திய மிகவுமுண்டாம்
நிரக்கவே மயிர்க்கா லெல்லாம் நெரித்துடல் சிலித்துக் காணு
மிறக்கமி லகுவை நோவா மென்றுதா னியம்பினோமே. (80)

(இ-ள்.) மேல் வயிற்றின் மேல் உருண்டு திரண்ட (பின்) அகலைப்போன்ற வீக்கம் உண்டாகும். மயிர்க்கால்கள் சிலிர்க்கும் நித்திரையும் அதிகமாகும். உடம்பு பலஹீனம் உண்டாகும். இவை அகுவை நோயின் குணங்களாம்.

## அட்டவீகை லக்ஷணங்கள்

பந்துபோல் நெய்யப்பம்போற் பருத்தெழுந்துதரந் தன்னில்
வந்து தாநெஞ்சி லேறும் வாய்தனிற் சுவையும் மாறும்
சந்துதா ளுழைந்து சீதம் மலத்தினைச் சார்ந்து வீழு
மிந்த நோய் சிலேற்பக் கட்டா லெழுமட்ட வீகை யென்றே.

(இ-ள்.) வயிற்றில் பந்தைப்போலவும், நெய்யப்பம் போலவும், வாயுப்பொருமல் உண்டாகி நெஞ்சில் ஏறும். வாயின் சுவையும் மாறும், மூட்டுக்கள், தாள் முதலியவிடங்களில் வலி ஏற்படும். மலத்துடன் சீதம் போகும். இது கபசம்பந்தத்தினாலேற்பட்ட அட்டவீகை என்ற நோயாகும்.

## கவுசை நோயின் குறிகள்

வருமனம் வெறுத்துக்காட்டி வளர்புனல் தாகங்காட்டி
வருமலஞ் செறுத்துக்காட்டி வாயினீரூறிக் காட்டி
யுருவுநற் பிடரிமட்டு மதைத்துயர் வயிறு வீங்குங்
கருவினை யழிக்குஞ் சொன்னோங் கவுசையென்
றறிகுவீரே. (82)

(இ-ள்.) மனம் வெறுத்துப்போம். தாகவறட்சி யுண்டாகும். மலச்சிக்கல் உண்டாகும். வாயில் நீரூறும். வயிறு முதல் பிடரிவரை வீக்கம் உண்டாகும். ஸ்திரீகளின் கர்பத்தையும் அழிக்கும் தன்மையுள்ளது. இவை கவுசை நோயின் குறிகளாகும்.

## *கவுசையில் ஆண், பெண் அறியும் விதம்*

உற்றிடும் வலப்பாகத்தி லூர்ந்ததுப் பதைக்கு மீரல்
பற்றியே தளர்ச்சி காட்டும் பதித்தவாண் கவிசையென்க
மற்றிடப் பாகந்தன்னில் மறுத்ததுப் புறட்டிநா நீர்
வற்றியே களைக்குமாகில் மருவுபெண் கவிசையாமே. *(83)*

(இ-ள்.) வலப்புறத்தில் வீக்கம் ஏற்பட்டு ஈரளைப் பற்றித்தேக அயர்வைக் கொடுக்கும். இது ஆண் கவுசை நோய்க்குறியாகும்.

இடப்புறத்தில் வீக்கம் ஏற்பட்டு நாவறட்சி ஏற்பட்டுக் களைப்புத் தோன்றினால் அது பெண் கவுசையின் குறியாகும்.

## *பீலிகைக் குறிகள்*

மலத்தையிறுக்கு மந்திக்கும் வலுவா யுதரந்தன்னிற்புரளும்
பலத்தைக் குறைக்கு மீரலொடு பெருகக் கனத்துத்
திரண்டேறு
முலர்த்து மசனங் குறைந்துவரு மோங்காரித் தேப்பம்
புளிக்குங்
குலத்திற்பெரிய பீலிகையெனக் கூறும் பொதிகைக்
குறுமுனியே. *(84)*

(இ-ள்.) மலச்சிக்கலுண்டாகும். ஆகாரம் சீரணிக்காது. வாயு வயிற்றில் புரளும். பலஹீனம் ஏற்படும். ஈரல் கனத்து வீங்கும். சாப்பாட்டையும் தள்ளும். ஓக்காளம், புளித்தேப்பம் முதலியவைகளேற்படும். இவை பீலிகை ரோகக் குறிகளாகும்.

### சோணிதத் திரட்சிக் குறிகள்

உந்திக்குளுதரம் புக்கி யுவாமியோன் றிருக்கு மோடிச்
சந்துக்கே விறுவிறுத்துத் தானுடல் நடுங்கி வியர்க்கும்
அந்தமா முட்டம் பழற்று மறுகியே சத்தி தோன்று
மிந்தநோய் சுரோணிதத்தின் திரட்சியென்
றியம்பலாமே. (85)

(இ-ள்.) வயிறு ஒட்டிவிடும். வாயு மூட்டுக்களில் வலியையுண்டாக்கி விறுவிறு என்று கடுக்கும். தேகத்தில் நடுக்கம், வியர்வை, உடம்பெரிச்சல், வாந்தி முதலான குறிகளும் காணும். இவை சோணித திரட்சியின் குறிகளாகும்.

# உதர தோஷ நிதானம்

### பெருவயிற்றின் குறிகள்

கருவியு மந்தம் பற்றிக் கையடி வுடம்பு வற்றிப்
பெருகிய வுதரந்தானும் பெறப்பெற பொருமி விம்மி
மருவிய வுணவு மாறி மலத்தையும் பிடித்துக் காணிற்
பெருகிய வுதர தோஷம் பெருவயி றென்னலாமே. (86)

(இ-ள்.) அக்கினி மந்தமாகி, கையின் கீழ்பாகம் உடம்பு முதலிய இடங்கள் வற்றிப்போய், வயிறு பெருக்கும். வயிற்றுப் பொறுமல், அரோசகம், மலச்சிக்கல் முதலான குறிகளும் காணும். இவை பெருவயிற்றின் லக்ஷணங்கள் ஆகும்.

### மகோதரக் குறிகள்

அங்கமு மடைக்க வீங்கி யுரமொலிந் தாகமாகி
மங்கிய வுதரந்தன்னில் வாயுவாஞ் சலமுங் கோர்த்துக்
கங்குல் சேர்நேரமானால் கடுகவே வாந்தி பண்ணு
மிங்கிதங் குலவு மானே! மகோதரமென்னலாமே. (87)

(இ-ள்.) உடல் முழுவதும் வீங்கி மார்புப்பக்கம் வற்றி தாகம் அடிக்கடி உண்டாகும். வயிற்றில் வாயுவும் நீரும் சேரும். இரவினில் அடிக்கடி வாந்தி பண்ணும். இவை மகோதரத்தின் லக்ஷணங்களாகும்.

### இதுவுமது

காலுடன் புறங்கால் மண்ணைத் துப்புடன் வயிறு கைகண்
சால நெஞ்சிடத்து முந்தித் தனத்திலும் வீங்கும் பின்னைச்
சீலமா மலங்கள் சிக்கி மூத்திரஞ் சிறுக்கு மாகில்
மாலிரு பதத்தினாணை மகோதர மென்னலாமே. (88)

(இ-ள்.) கால், புறங்கால், வயிறு, கை, கண், நெஞ்சு, தனம் முதலான பற்பலவிடங்களிலும் வீக்கம் ஏற்படும். மலச்சிக்கலேற்பட்டு மூத்திரம் சரியாக இறங்காது. இக்குறி மகோதரத்தில் காணும்.

### இதுவுமது

தடங்கண் சிவந்து நாவறண்டு தண்ணீர் வேண்டித் தகையெய்தி
விடிந்த பொழுதில் மிகவிம்மி மூச்சுவிடவே மிகவரிதாய்க்
கடந்த பதத்திற் கோசத்திற் கனத்து மலநீர் சிறுத்து தென்னிற்
றுடந்த குணங்கள் மகோதரத்தின் றொகுதி யெனவே யறிவீரே. (89)

(இ-ள்.) கண்கள் சிவந்து, நாவறட்சியேற்பட்டுத் தண்ணீர் தாகமெடுக்கும். மேல்மூச்சு வாங்கும். விடியற் காலையில் மார்பு கனத்துச் சுவாசிக்க முடியாது. கால்கள், ஆண்குறியின் அடிப்புறம் முதலான இடங்களில் வீக்கம் ஏற்பட்டு, மலம், நீர் இவைகளும் தடைபடும். இக்குணங்களும் மகோதர ரோகத்தில் உண்டாகும்.

### குண்டலவாயுக் குறிகள்

கண்டிக்கு முதரந் தன்னிற் கனத்திடும் கூப்பிட்டோடும்
விண்டிச்சைவிரும்பித் தின்னி மிகுந்திடு முருண்ட மூன்று
தெண்டித்துச்சிதறிப் பின்னுஞ் சிதைந்துடல் பரந்தடங்கிக்
கொண்டுற்ற குத்துண்டாகுங் குண்டல வாயுவாமே. (90)

*(இ-ள்.)* அடிவயிற்றில் கனமுண்டாகி வயிறு இரையும். ஆகாரத்தில் இச்சையதிகரிக்கும். சீரணம் ஆகாது. உடலில் வாயு அதிகரித்து குத்துவலியையும் ஏற்படுத்தும்.

### உதரவாதக் குறிகள்

*பொருந்திய வாயுத்தானே பூரித்து வயிறு விம்மி*
*வருத்த வுப் பிசமதாகி மலசலந் தன்னைக் கட்டுந்*
*திருந்திய சரீரந் தன்னிற் செயல் கெடு முணர்வு மாறு*
*மிருந்திடு முதரவாத மிவை யென வியம்பலாமே.* (91)

*(இ-ள்.)* வாயு தேகத்தில் அதிகரித்து வயிற்றுப் பொருமலைத் தரும். மலசலம் வெளியாகாது. அன்றாட வேலைகளைச் செய்யவியலாது. உணர்ச்சி குறையும். இவை உதரவாதக் குறிகளாகும்.

### அக்கினி மந்தத்தின் குறிகள்

*மலமுங் கழியும் கிறுகிறுக்கும் வறண்டே வயிறு*
*வலித்துழையுஞ்*
*சலமு மிகவே சிவந்திறங்குஞ் சிறுக விரத்தம் மலத்தில்*
*விழும்*
*பலமுங் குறைந்து நயன முகம் பேதப் படவே வலித்துவரு*
*மலையுங் குணங்களிது கண்டா லக்கினி மந்த மெனலாமே.*

*(இ-ள்.)* அடிக்கடி பேதியாகும். மயக்கமேற்படும். வறட்சியுடன் வயிற்றுவலியேற்படும். சிறுநீர் சிவந்து இறங்கும். மலத்துடன் இரத்தம் போம். பலம் குறைவடையும். முகம், கண்கள் இவைகள் மாறுதலடைந்து வலியும் ஏற்படும். இவை அக்கினி மந்தத்தின் குறிகளாகும்.

***குறிப்பு:-*** இச்செய்யுளில் ஜடராக்னி மந்திப்பதைப் பற்றிக் கூறப்படாவிட்டாலும், அஜீர்ண பேதிக்குக்காரணமாக இதனைக் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே பேதியிருந்தால் அக்கினி பலக்குறைவு ஏற்படுகிறது என்று தெரிந்து கொள்ளவேண்டும்.

### இதுவுமது

*உண்டியிற் பொருமலாகு முடன் விடு வித்தலாகுங்*
*கொண்டுதான் மலங்கழிந்து கொதித்திடும் வெடித்து நாறு*
*மண்டியே வெளுத்துக் காயம் மயங்கெட வுலர்தலாகு*
*மண்டர்முன் னுரைத்தார் மாதே! யக்கினி மந்த மென்றே.(93)*

(இ-ள்.) சாப்பிட்டால் வயிறு பொருமும். உடனே சூடாகப் பேதியாகும். மலம் துர்நாற்றமடிக்கும். உடல் வெளுத்துப்போம். இளைப்பும் உண்டாகும். இவைகளும் அக்கினி மந்தக் குறிகளாம்.

### அக்கினி மந்த வாயுக்குறிகள்

*வந்து மிகுந்து பசி யெழும்பும் வயிறுமழலு மந்திக்குஞ்*
*சிந்தை யதனில் நினைந்த தெல்லாஞ் செல்லுஞ்*
*செரிக்கவொட்டாது*
*நொந்து வயிறு மிகப் பொருமி நுரையா விரைந்துக்*
*கழிச்சலுண்டா*
*மிந்தக் குணமக் கினிமந்த வாயு வெனவே யியம்பிடுமே.(94)*

(இ-ள்.) பசி அதிகரித்து வயிற்றில் காந்தல் உண்டாகும். சிற்சில சமயங்களில் மந்தமும் ஏற்படும். வாய்க்குப் பிடித்தவைகளைச் சாப்பிட்டால் அவை செரியாது. வயிற்றுப்பொருமலுடன் வலியையும் உண்டாக்கும். நுரைத்துக் கழிச்சலேற்படும். இவை அக்கினி மந்த வாயுவின் குறிகளாகும்.

### அக்கினி வாயுக் குறிகள்

*நீண்டு பசி மிகுந்து நின்றுலயி றாலிலைபோல்*
*வேண்டினது தின்ன விரும்புமே - மீண்டுமது*
*சந்துகளெல்லா முளைந்து செரியாமற் சத்திக்கு*
*மந்திரமா மக்கினி வாயு. (95)*

(இ-ள்.) அதிகமான பசி உண்டாகும். வயிறு ஆலிலையைப் போலாகும். வாய்க்கு இஷ்டமானதைத் தின்னவாசைப்படுவான். மூட்டுகளில் வலியைத்தரும். உண்ட ஆகாரம் ஜீரணிக்காமல் வாந்தி செய்யும். இவை அக்கினி வாயுவின் குறிகளாகும்.

## குழந்தைகளுக்கேற்படும் மாந்த ரோகத்தின் குறிகள்

பொருமுங் கழியும் புரண்டு வலியுண்டா
மருவி முலை யுண்ணா தயரும் வெருவிமிகச்
சத்தி செய்யுங் கண்குழியுந் தான் மயங்கி யேவருந்து
மித்திரமா மாந்த மிது காண். (96)

(இ-ள்.) வயிற்றுப்பொருமல் ஏற்படும். கழிச்சல் உண்டாகும். வயிற்றில் உளைச்சலேற்படும். குழந்தை தாய்ப்பால் குடிக்காமல் சோர்வடையும். வாந்தி உண்டாகும். கண்கள் குழிவிழும். மயங்கும்.

## அற்றறு வாயுவின் குணம்

பத்தியம் கொண்டபோது பலப்பட மலமுந் தள்ளி
நித்தமும் புளித்தேக்கிட்டு நெஞ்சது கரித்துக் காணுஞ்
சத்தியும் தளர்ந்து காணுஞ் தருகிடாதபனம் பேசு
மத்தனைக் குணமுங் கண்டா லற்றறு வாயுவென்னே. (97)

(இ-ள்.) பத்தியமாக ஆகாரம் உட்கொள்ளும்போது அது சீரணமாகாமல் கழிச்சலெடுக்கும். தினமும் புளித்தேப்பம் உண்டாகும். நெஞ்சுக் கரிப்பும் ஏற்படும். வாந்தியெடுக்கும். சப்தத்துடன் அபானவாயு பிரியும். இவை அற்றறு வாயுவின் குறிகளாகும்.

***குறிப்பு:-*** அற்றறு வாயு - முற்றும் தீராத வாயு என்று பொருள்.

### குடல்வாயு லக்ஷணம்

*குடலில் வலிக்கும் காலுளையுங் குமுறு மிரையு மந்திக்கு*
*முடலிலடங்கி யோடி நிற்கும் மொருக்காலன்றிப்*
*புரண்டிருக்குங்*
*கடலிற் றாங்க மது போலக் கலக்கு மூடே வாதை செய்யுந்*
*திடனிற் பெருத்த வாரால் போலே சிதை (யுங்) குடலில்*
*வாயுவிதே. (98)*

(இ-ள்.) குடலில் வலியெடுக்கும். கால்களில் குடைச்சல் வலி ஏற்படும். வயிற்றில் பொருமலும், இரைச்சலும், மந்தமும் உண்டாகும். வாயு தேகம் முழுவதும் சஞ்சரிக்கும். வயிற்றில் அலை அடிப்பதைப்போன்ற ஆரவாரம் உண்டாகும். மிகவும் வேதனையைக் கொடுக்கும். வரால் மீனையொத்த பெரிய பொருமல் வயிற்றிலுண்டாகிப் பின்பு சிதையும். இவை குடல் வாயுவின் குறிகளாகும்.

### ஆமவாயு(துக்) குறிகள்

*குறுக்கொடு முதுகன்தண்டு குடைவிலா விருகைமூல*
*முறுப்புறுப் பாகவிட்டு உள்ளுள்ளே குடைந்து நொந்து*
*இறுகிமார் பினிற் பிடித்து யிரைந்துமே லேப்பமிட்டு*
*மறுப்படப் புறட்டியேறும் வளராம வாயுலாமே. (99)*

(இ-ள்.) முதுகந்தண்டு, இரு விலாப்புறங்கள், இருகைகளின் அடிப்புறம் முதலான உறுப்புகளில் விட்டுவிட்டு உள்ளுக்குள்ளேயே வேதனையைக் கொடுக்கும். பின்னர் வாயு மார்பில் ஏறி சப்தத்துடன் ஏப்பமாக வெளியாகும். வயிற்றுப் புரட்டலும் உண்டாகும். இவை ஆமவாயுவின் குறிகுணங்களாகும்.

### பாரிச வாயுக்குறிகள்

*சித்திரமாக வோற்பாற் சேர்ந்தகீழ் வயிற்றைப் பற்றி*
*குத்திர மாகவேமேற் கொண்டுவே தனைகளுண் டாய்ச்*
*சத்திரங் குடைதல் போலக் குடைந்திடுந் தளர்ச்சியுண்டாம்*
*பத்திர மாகச்சொன்னோம் பாரிச வாயுவென்றே. (100)*

(இ-ள்.) வாயு சிலசமயங்களில் கீழ்வயிற்றைப்பற்றி பின்னர் மேல்நோக்கி வேதனையைத் தரும். வயிற்றில் (ஆக்கர்) துளையிடும் கருவியினால் குடைவதைப் போன்ற குத்துவலி உண்டாகும். சரீரம் தளர்ச்சியடையும். இவை பாரிச வாயுவின் குறிகள்.

**குறிப்பு:-** இந்தரோகத்தை பார்ச்வ வாயு என்றுதான் கூறவேண்டும். அதாவது வயிறு, விலா இவைகளைப் பீடிக்கும் வாயுவாகும். பொதுவாகப் பாரிச வாயு என்று கூறினால் கைகால்கள் செயலற்றுப்போகும் நோயைக் குறிப்பிடுகின்றனர். அது சரியில்லை. ஆகவே இது தனியான வாதரோகமாகும். பக்ஷவாதம் என்று சொல்லப்படும் கை கால்கள் செயலற்றுப்போகும். நோயைக் குறிப்பிடும் சொல்லாகும்.

## குடல் வறட்சிக் குறிகுணங்கள்

*கடுப்போடிரத்தஞ் சீதமலங்கலந்து கழியு மதுவன்றி*
*யடுக்கு மபானங் கீழ்வயிறோ டரைதானதைத்துச்*
*சலங்கோர்க்குந்*
*நடுக்குஞ் சுழற்றுந் தலைகனக்கு நயனமிரண்டு*
*மஞ்சணிக்குந்*
*கொடுக்கு மசனம் வாந்திக்குங் குடல்சேர் வறட்சிக்*
*குணந்தானே. (101)*

(இ-ள்.) வயிற்றுக் கடுப்புடன், இரத்தம், சீதம், மலம் முதலியவைகள் கலந்து கழியும். அபானம், அடிவயிறு முதலான விடங்களில் வீக்கம் உண்டாகும். தேகத்தில் நடுக்கம், தலைமயக்கம், தலைகனம் முதலானவைகளுடன் கண்களும் மஞ்சள் நிறமடையும். சாப்பிட்ட ஆகாரம் வாந்தியாகும். இவை குடல் வறட்சியின் குணங்களாகும்.

## தீரை நோயின் குறிகள்

*உள்ளுடல் குடல் குமட்டி யுருண்டது திரண்டெழுந்து*
*மெள்ளவாய் நீர் சுழற்றி மேனியு மெலிந்து தோன்றுங்*

கள்ளமா யுதரந் தன்னை கவ்வியே வலிக்கு மாலுந்
தெள்ளிய முனிவர் சொன்னார் நீரையின் குண மீதென்றே.

(இ-ள்.) குடலில் புரட்டுடன் வாயு திரண்டு பொருமலைத்தரும். வாயில் நீரூறும். தேகம் இளைக்கும்.

**கிருமி தோஷக் குறிகள்**

(வலித்திடும்) மலம் விடாதே நாடோறுந்தங்கி யாங்கே
கலித்திடுஞ் சிறுபுழுத்தான் காயத்தை மிகக்கெடுக்கும்
நலித்திடு மபானமட்டும் நசநசென் றரித்து நோவா
மலத்தினிற் கிருமித்தோஷ மிவையென வகுக்கலாமே. (103)

(இ-ள்.) வயிற்றில் வலியுண்டாகித் தினந்தோறும் மலம்போகாமல் குடலில் தங்கும். குடலில் சிறு சிறு புழுக்கள் சேர்ந்து உடலை வருத்தும். ஆஸனவாயில் நசநசவென்று அரிப்பைத்தந்து வலியையும் கொடுக்கும். இவை கிருமி தோஷக்குறிகளாகும்.

**சுக்கில வாயுவின் குறிகள்**

உடம்பினிற் றடிப்புமுண்டா யுதரத்தி லுதை யுண்டா
யிடம்படு தாதுநட்ட மெய்தியே சங்கந் தன்னிற்
திடம்படு தொழிலுமன்றிச் சுக்கிலம் தேயுமாகிற்
வடம்பெறு கொங்கை மின்னே! சுக்கில வாயுவாமே. (104)

(இ-ள்.) உடம்பில் தடிப்புகள் உண்டாகும். வயிற்றில் வலி ஏற்படும். தாதுக்கள் க்ஷீணமடையும். சம்போகம் செய்யவியலாமற் போய்ச் சுக்கிலமும் குறைவடையும். இவை சுக்கில ரோகத்தின் குறிகளாகும்.

**சோணித வாயுவின் குறிகள்**

மாதநாள் சங்கை யன்றி மற்ற நாள் கர்ப்ப நாளி
வீதல்ல நாலிலாறி லிற்றிற்றுத் துவாலை காணுஞ்
சீதமா முடம்புதன்னில் வாயுவுஞ் சேர்ந்து காணுஞ்
சூதிலா முலையாய்! கேளாய்! சோணித வாயுமாமே. (105)

(இ-ள்.) மாதாமாதம் சரியாகத் தீட்டாவதைத்தவிர 4அல்லது 5 நாட்களுக்கொருமுறை விட்டுவிட்டு உதிரக்கசிவு காணும். உடம்பு குளிர்ச்சியாகும். வாயுவும் அதிகரிக்கும். இவை சோணிதவாயுவின் லக்ஷணங்களாகும்.

### மலஸ்தம்ப வாயுவின் குறிகுணங்கள்

காமமாங் கலவிக் கின்பங் காட்டிய மருந்தினாலும்
ஏமமாம் வழி நடந்து பசியி லூணில்லை யாலுஞ்
சேமமா மபானவாயுச் சீறியே மலத்தைக்கட்டும்
வாமமே கலையாய்! கேளாய்! மலத்தம்ப வாயுவாமே. (106)

(இ-ள்.) கலவி இன்பத்தைவேண்டி மருந்துகள் உட்கொள்ளுவதனாலும், வெகுதூரம் வழிப்பிரயாணஞ் செய்து, பசித்திருக்கையில் சாப்பிடாமலிருப்பதாலும், அபானவாயு கோபித்து மலத்தைக்கட்டும். இவை மலத்தம்பக் குறிகுணங்களாகும்.

### உஷ்ணவாயுவின் குறிகள்

வயிறது பொருமும் வாடு மந்தமாம் பசியுமில்லைந்
துயில்வது சுகமு மில்லைச் சோர்ந்துடல் முறிக்கும் நெட்டி
இயல் தரு தாதுநாட்ட மெய்தி நீர் சிவந்து வீழு
மயிலியல் மானே! உஷ்ணவாயுவின் குணமிதென்றே. (107)

(இ-ள்.) வயிறுப் பொருமல் உண்டாகிப் பின்னர் குறைவடையும். பசி மந்திக்கும். தூக்கம் வராது. உடல் சோர்ந்துபோம். அடிக்கடி நெட்டி முறிப்பான். தாது நஷ்டமேற்பட்டு மூத்திரம் சிவந்து இறங்கும். இவை உஷ்ணவாயுவின் குறிகளாகும்.

### வாதவாயுக் குறிகள்

மண்டிய வுதரந் தன்னி லக்கினி தனை மறைத்துக்
கொண்டிடு மாகாரத்தைக் குழப்பியே யருமையாக்கி
உண்டியும் புளித் தேக் காகி யுடனுடன் மலமுந் தள்ளுந்
திண்டிறல் வாத வாயு யிவை யெனச் செப்பலாமே. (108)

(இ-ள்.) வயிற்றிலுள்ள ஜடராக்னி குறைந்துபோம். சாப்பிடும் ஆகாரம் சீரணமாகாமல், புளித்தேப்பமுண்டாகும். உடனே ஒருதடவை மலமுங் கழியும். இவை வாதவாயுவின் லக்ஷணங்களாகும்.

### பித்தவாயுக் குறிகள்

பண்டுள்ள மலத்தைச்சிக்கிப் பயித்தியம் நெஞ்சிற் கட்டிக்
கொண்டுநின் றாகாரத்தைக் குமட்டியே யெடுத்துத் தட்டி
மண்டிய சரீரம் வற்றி வயிற்றையும் வலிக்குமாகில்
ஒண்டொடி! கேளாய் பித்த வாயுவென் றுரைக்கலாமே. *(109)*

(இ-ள்.) மலச்சிக்கலேற்படும். பித்தம் அதிகரிக்கும். ஆகாரத்தை நெஞ்சிலேயே இறுத்திக்குமட்டி வாந்தி செய்விக்கும். சரீரம் இளைக்கும். வயிற்றுவலியேற்படும். இவை பித்தவாயுக் குறிகளாகும்.

### சேற்பவாயுக் குறிகள்

விளங்கிய வுதரந் தன்னில் விரைந்திரைந் துருட்டி யேறிக்
களங்கமாய் மலம்போம் நேரங் கடுத்ததிற் சீதங் காணு
துளங்கிள நீர் சம்பீரஞ் சொல் புளிப் புவமை யாகும்
உளம் பெரிதுடையீர் சேற்ப வாயு வென்
றுரைக்கலாமே. *(110)*

(இ-ள்.) வயிற்றில் உளைச்சலேற்பட்டு இரைச்சலுடன் பந்துபந்தாக உருண்டு மேலே ஏறும். மலம் குழம்பாகப் போகும். ஆசனக்கடுப்புடன் சீதமும் வீழும். வாயில் இளநீர், எலுமிச்சம்பழம் இவைகளைச் சாப்பிட்டால்போலச் சுவையுண்டாகும். இவை சேத்மவாயுக் குறிகளாகும்.

### அன்னாசய வாயுக் குறிகள்

பசியெனமெரிவு காணும் பசியின்றி மந்தங்காணு
மிசைதரு மந்தந் தன்னிற் பொசித்திடி லிதமுங் காணுஞ்

சுசிபெறச் செரிக்கும்போது துயரமும் வலியுங் காணு
மசைபெறு குணங்களன்னாசயவாயு வாகுங் காணே. *(111)*

(இ-ள்.) பசி எடுக்கையில் வயிற்றில் எரிச்சலேற்படும். பசியில்லாத நேரங்களில் மந்தமேற்படும். மந்தமாயிருக் கையில் சாப்பிட்டால் இதமாக இருக்கும். ஆனால் ஆகாரம் சீரணிக்கும்போது வலியும், வேதனையும் அதிகரிக்கும். இவை அன்னாசய வாயுவின் குறிகளாகும்.

## சூசிகா வாயுக்குறி குணங்கள்

மங்கையர்க்குக் கர்ப்பமுற்ற பத்தாமாதம்
வாயுமிகவாகியதிற் பித்தஞ் சேர்ந்து
தங்குகர்ப்பப் பிரவேசங் கண்டாலங்கந்
தனில் வியர்வை பலவீனந் தாதுநட்ட
மங்க கம்ப மயிர்க்கூச்சம் பிரலாபித்த
லங்கைகால் குளிர்ந்தயர்ந்து மூர்ச்சையாதல்
துங்கவிழி யுறங்கலுறங் காதல்கண்டா
சூசிகா வாயுவெனச் சொல்லலாமே. *(112)*

*(இ-ள்.)* ஸ்திரீகளுக்குக் கர்ப்பம் ஏற்பட்ட பின்னர் 10மாதம், தேகத்தில் வாயுவதிகரித்துப் பித்தமுங்கோபித்து, வியர்வை, பலஹீனம், தாதுநஷ்டம், நடுக்கம், மயிர்க்கூச்சல், பிதற்றல், கைகால்கள் சில்லிட்டு மூர்ச்சையாதல், தூக்கம் அதிகமாதல் அல்லது தூக்கமின்மை முதலான பற்பல குறிகளும் காணும்.

## அஜீர்ண வாயுக் குறிகள்

கொண்டிடும் பொசிப்பறாது குளிர்ந்துடல் வெதும்பிக்
காயும்
பண்டியில் மலம்போகாது பசியின்றித் தண்ணீர் தேடும்
விண்டிடு முடம்பு சந்தி வியர்வையுங் கடுப்பு முண்டா
மண்டரு மறியச் சொன்னோ மசீர்ண வாயுவென்றே. *(113)*

(இ-ள்.) ஆகாரம் சீரணியாது . உடல் குளிர்ச்சியாகும். சிலசமயங்களில் ஜ்வரமடிக்கும். மலச்சிக்கலுண்டாகும். பசியிராது. தண்ணீர் தாகம் தாகம் ஏற்படும். உடம்பு, மூட்டுகள் இவைகளில் வலியுண்டாகும். வியர்வையும் ஏற்படும். இவை அஜீர்ண வாயுவின் குறிகளாகும்.

## விஷூசி, நீர்ப்பாண்டுவின் குறிகள்

மந்தமா யுதரந்தன்னை வலித்து நெஞ் செரித்து வாந்தி
சிந்தியே யுடல் குளிர்ந்து சீறியே மலங் கழிந்து
நொந்து கால் கையுளைந்து நுவலருந்தாக முண்டா
மிந்த நோய் விஷூசி நீர்ப்பாண் டெனமுனி
யியம்பினாரே. (114)

(இ-ள்.) வயிற்றில் மந்தம் ஏற்பட்டு வலியைக் கொடுக்கும். நெஞ்சுக் கரிப்பும், வாந்தியும் ஏற்படுவதுடன் உடலும் குளிர்ந்து அடிக்கடி பேதியாகும். கைகால்களில் உளைச்சலேற்படும். தாகம் உண்டாகும். இவை விஷூசி நீர்ப்பாண்டு ரோகத்தின் குறிகளாகும்.